பன்னாட்டுக் குற்றங்கள்
International Crimes

இராமநாதன் நாகமணி
ஸ்ரீஞானேஸ்வரன்
DIPFM(UK), ACMA(UK), CGMA, CPA,
MBA(Rjt.SL) HNDA, B.Sc. Accountancy, MAAT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுக் குற்றங்கள்

இராமநாதன் நாகமணி

ஸ்ரீஞானேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுக் குற்றங்கள் ⊛ ஆய்வு ⊛ ஆசிரியர்: இராமநாதன் நாகமணி ஸ்ரீஞானேஸ்வரன் ⊛ முதல் பதிப்பு : ஜுலை 2022 ⊛ © ஸ்ரீஞானேஸ்வரன் ⊛ வெளியீடு : ஸ்ரீராம் பதிப்பகம், இல 159 A, கடல்முக வீதி, திருகோணமலை, இலங்கை. 31000 ⊛ பக்கங்கள் 287 ⊛ விலை 950.00

Pannaattu Kutrangal (International Crimes) ⊛ Research
⊛ Author : Dr. R. Shrignaneswaran ⊛ First Edition July 2022
⊛ © R.Shrignaneswaran ⊛ Size Demy 1 x 8 ⊛ Paper Ivery 70 gsm
⊛ Pages: 287 ⊛ Published by: Shriram Publications, No.159 A, Sea View Road, Trincoamlee, Sri Lanka,31000. ⊛ Price: 950.00

Contact : 00 94 777 555 738
00 94 26 3126 333
shriramprinters0001@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிற்கு...!

அம்மையார் மேரி கொல்வின்

தமிழினப் படுகொலையை உலகறியச் செய்வதில் முன் நின்று உழைத்த சர்வதேச ஊடகவியலாளரான அமரர் மேரி கொல்வின் அம்மையார் 16.04.2001 அன்று ஓமந்தை இராணுவ முன்னரங்கைக் கடந்து வரும்போது இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தனது இடது கண்ணை எம் தேசத்து மண்ணில் இழந்தார்.

சிரியாவில் குரலற்ற மனிதர்களின் குரலாக ஒலித்த அவரது குரல் அப் போர்க்களத்தில் நிரந்தர அமைதிக்குச் சென்றது. தமிழின அழிப்பில் - வெள்ளைக்கொடி - படுகொலை தொடர்பான ஒரு பன்னாட்டுச் சாட்சியும் இவராவார்.

பேராசிரியர் பிரான்சிஸ் ஏ.போய்லி

தமிழினம் இனப்படுகொலைக்கு உள்ளாகிக் கொண்டிருக் கிறது என என்றென்றும் குரலெழுப்பும் பேராசிரியர் பி.ஏ. போய்லி ஆவார்.

இவர் எழுதிய "The Tamil Genocide by Sri Lanka" என்ற பொத்தகமானது பல்வேறு ஒப்பீடுகள் மற்றும் ஆதாரங் களின் ஊடாக நடந்த இனப்படுகொலையின் வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது.

கலம் மக்கரே – சனல் 4

சனல் 4 என்ற சர்வதேச ஊடகத்தின் பணிப்பாளரான கலம் மக்கரே தனது இடைவிடாத முயற்சியின் ஊடாக வெளிப் படுத்திய "No fire Zone", "Sri Lanka - The Search for justice", "Sri Lanka Killing Fields", "Sri Lanka Killing Fields - War Crimes Unpunished" போன்ற ஆவணப்படங்களின் ஊடாக, தமிழினம் இனப்படுகொலையை எதிர்கொண்டுள்ளதனை ஆவணமாக்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையாகிய துளசியின் நினைவுகளுடன்!

என் இனிய நண்பனே!

....

......

.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் -

முகவுரைகள்.. 9-18
மொழியாக்கம் 19-20
அத்தியாயம் -1
பன்னாட்டுக் குற்றங்கள்.. 23
மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்.. 33
போர்க்குற்றங்கள்.. 45
இனப்படுகொலை.. 53
ஆக்கிரமிப்பு.. 79

பன்னாட்டு நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும்
பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம்.. 85
நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம்
நீதிக்கான பன்னாட்டு நிரந்தர நீதிமன்றம்........................ 91
கலப்பு நீதிமன்றங்கள்.. 95
பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள்.. 98
உசாத்துணை - விசேடமானது..101-104

அத்தியாயம் - 2 நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள்
ஐக்கியநாடுகள் மனித உரிமை சபை தீர்மானங்கள்
தீர்மானம் 46/1 – 23 மார்ச் 2021.. 109
தீர்மானம் 34/1 – 23 மார்ச் 2017 118
தீர்மானம் 30/1 – 01 ஒக்டோபர் 2015.. 121
தீர்மானம் S-11/1 – 27 மே 2009.. 133
கனடா, ஒன்ராறியோ மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட
தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரமுன்மொழிவு 141
நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் 147
இந்தியா, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில்
நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 229-238
வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட
இனப்படுகொலைத் தீர்மானம் 241
நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் 3 ஆவது அமர்வு முகவுரை............ 273

சொற்திரட்டு 275
உசாத்துணை - பொதுவானது.. 285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கு வணக்கம்

காலத்தாலும், தேவைகளாலும் தவிர்க்கமுடியா, மேன்மை மிகு பதிப்பொன்றுடன் மீளவும் உங்களைச் சந்திப்பதில் பெருமைகொள்கிறோம்.

திரு. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களது கடின உழைப்பினாலும், தமிழ்மண்ணின் மீதான பெருவிருப்பின் விளைவாகவும் வெளிவந்திருக்கும் இப் புதிய படைப்பானது இன்னொரு தளத்திற்கு எமது நகர்வினை இட்டுச்செல்லும் என்பதை நாம் உளப்பூர்வமாக உணர்கிறோம்

இவர் போன்ற அறிவார்ந்தவர்களை ஒருமுகப்படுத்தி, அவர் களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களினால் எமது எதிர்காலம் சிறக்கும் என்பது இத்தால் உறுதி செய்யப் படுகிறது.

நன்றியுடன்

VOICE

உலகத்தமிழர் உரிமைக்குரல்

Voice of Global Tamils' Right

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் ரத்தம் கேட்கின்றது :

செல்வந்தர்களும் சட்டமும்
எப்படி எந்த வலுவான இரும்பு நெசவினால்
பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள்?

எப்படி நீதிமன்றங்களுக்குள் ஏழைகள்
வீழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள்?

"நீதி நடுவர்கள்" – பாப்லோ நெருடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தேவையான நியாயத்தின் குரல்

பேராசிரியர். சி. ரகுராம்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழினத்தின் நீண்டகால விடுதலைப்போராட்டம் சர்வதேச, பிராந்திய வல்லரசுகளின் துணையுடன் மிக நுட்பமாக முடக்கப்பெற்றுள்ள நிலையில், போருக்குரிய ஒழுக்கவிதிகளையும் அறக்கோட்பாடுகளையும் புறந் தள்ளி, வேதனைகளும் வலிகளும் நிரம்பிய, முறை தவறி முன்னெடுக்கப்பட்ட அந்தக் கொடூர யுத்தத்திற்கு எதிரான நியாயக்குரலை அறிவுசார்ந்து மக்கள் விழிப்புணர்விற்கு முன்வைப்பதாக இந்த நூலாக்கம் வெளிவந்திருக்கிறது.

நியாயத்தையும் நீதியையும் வேண்டிநிற்கும் எந்தவொரு போராட்டமும் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பிலிருந்தான முழுமையான பங்கேற்புடன் முன்னகர்த்தப்படும்போதே அதன் வீரியமும் வேணவாவும் காலத்தடைகளையும் கடந்துநிற்கும், கனன்று எரியும்.

அந்தவகையில், இறுதிப்போரில் நடைபெற்ற தமிழின அழிப்பு என்பது ஓர் திட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை உலகின் முன் ஒரே குரலில் சாட்சியங்களுடன் எடுத்துரைப்பதற்காக முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டாலும், அந்த முயற்சிகள் மக்கள் மயப்படுத்தப் படுவதில் நிலவும் தயக்கங்களும், தாமதங்களும், தாயகத்தின் ஒருமித்த குரலை உலகின் நியாயந்தேடும் அரங்குகளுக்கு எடுத்துச்செல்வதில் இன்னமும் வேகங் கொண்டதாக மாறவில்லை என்பதும் கவலைதரும் நிதர்சனமான உண்மையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு, தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகத் தம்மை காட்டிக்கொள்ளும் அரசியல்சக்திகள் ஆக்கபூர்வமான, காலப் பொருத்தம் கருதிய குறிப்பிட்டுச்சொல்லும் நடவடிக்கைகளில் இறங்காதது மாத்திரமல்லாது, அதனை அலட்சியப்படுத்தும், வலுவிழக்கச் செய்யும் கைங்கரியங்களில் கூட ஈடுபட்டிருப்பது தமிழ்மக்களுக்கு எதிராக, மனிதகுலத்திற்கு எதிராக நடைபெற்ற கொடூரங்களை மூடிமறைக்கும் செயல் மாத்திரமல்லாது, அந்தக் குற்றங்களுக்கு தமது ஆதாயங்களின்பால் துணைபோவற்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல என்றே கூறமுடியும்.

இவ்வாறான சூழலில், நியாயத்தை வேண்டி நிற்கும் தமிழ்மக்களை அறிவுபூர்வமான விழிப்புணர்வுக்கு வழிநடாத்தத் துணையாகக் கூடிய ஆவணமொன்றை செயற்பாட்டாளர் இராமநாதன் நாகமணி ஸ்ரீஞானேஸ்வரன் "பன்னாட்டுக் குற்றங்கள்" என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கிறார்.

இயலுமான விளக்கங்களுடன், எளிமையான மொழிநடையில் மக்களால் மிக இலகுவாக உள்வாங்கக்கூடிய இலக்குடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணம், இனப்படுகொலைதான் நடைபெற்றது என்பதை நிரூபணம் செய்வதற்காக நீதி தேடும் மக்கள் குரலை இன்னமும் புரிதலுடன் முன்னகர்த்த உதவும் என்பதில் சந்தேகமில்லை.

மக்களை திரட்சியுறச் செய்வதில், தமக்கிழைக்கப்பட்ட அநீதி களுக்கான பொறுப்புக்கூறலை மனிதகுல, இயற்கை நியதிகளின் பால் வேண்டிநிற்பதில், அவர்களையும் தமக்கான விடுதலை அரசியலின்பால் அக்கறைகொண்டவர்களாக மாற்றுவதில் இந்த ஆவணமும் தனது வரலாற்றுக்கடமையை செய்யும்.

காலத்தேவை கருதிய ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களின் முயற்சி திருவினையாகட்டும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழினத்தின் சொத்தாகப் பரிணமிக்கும்

பொ.கஜேந்திரகுமார்
செ. கஜேந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் ஈழத்தில் வாழ்ந்தாலென்ன புலம்பெயர்ந்து வாழ்ந்தாலென்ன "பொறுப்புக்கூறல்" என்பதே ஒரு இனமாக, சமூகமாக எமக்கு மிக அத்தியாவசியம் மிக்கதாக இருக்கின்றது.

அரசியல் தீர்விற்கு எந்தளவிற்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அதேயளவு முக்கியத்துவத்தை தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர்க்குற்றம், மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் போன்ற பன்னாட்டுக்குற்றங்கள் விசாரிக்கப்பட்டு அவ்வகையான குற்றங்களை ஈழத்தமிழ் மக்களின் மீது நடாத்தியவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும் என்பதற்கும் நாம் வழங்குகின்றோம்.

அந்தவகையிலே தமிழ் மக்கள், பாதிக்கப்பட்ட தரப்பாக நடைபெற்ற விடயங்களை முன்கொண்டு சென்று தமக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள என்னென்ன வழிகள் இருக்கின்றன, எவ்வகையான தடைகளைச் சந்திக்கவேண்டி இருக்கின்றன, என்னென்ன கோணங்களில் ஏனைய பாதிக்கப்பட்ட மக்கள் தமது விடயத்தை அணுகி இருக்கின்றார்கள், அவர்களுடைய பாதை எந்த வகையிலே வெற்றியை நோக்கி நகர்ந்திருக்கின்றது, சில சந்தர்ப்பங்களில் சட்டம் அனுமதிக்காது என்று நினைத்திருந்த இடங்களில் கூட பாதிக்கப்பட்ட மக்கள் அச்சட்டங்களில் உள்ள வாய்ப்பான இடங்களைப் பயன்படுத்தி தங்களுக்கான பொறுப்புக் கூறலை எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளார்கள், ஏன் பொறுப்புக்கூறலில் வெல்ல முடியாமல் போனது போன்ற அனைத்திற்கும் உலகிலுள்ள உதாரணங்களை பாதிக்கப்பட்ட மக்களாக பொறுப்புக் கூறலைத் தம் தாகமாக வைத்திருக்கின்ற ஈழத்தமிழ் மக்கள் அறிந்து கொள்வது மிக அத்தியாவசியமானது.

எங்களுடைய அறிவை முழுமைப்படுத்துவதன் ஊடாக மட்டுமே நாம் அறிவுபூர்வமான முடிவுகளையும் எடுக்கலாம். விடயத்தை முழுமையாக விளங்கிக்கொண்டு முயற்சிகளை முன்னெடுத்தால் மட்டுமே அவை வெற்றிகரமானதாக அமையும். அந்தவகையில் இன்றைய உலகின் உதாரணங்களை தமிழ் மக்கள், பாதிக்கப்பட்ட எம் மக்கள் படித்து அறியக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்மையிலேயே மிகவும் குறைவே! ஏனெனில் அனேகமாக இந்த அறிவை கொடுக்கக்கூடிய புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள் அனைத்தும் வேறு மொழிகளிலேயே இருக்கின்றன.

எனவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அறிந்து கொள்ளத் தக்கவகையில் அவையனைத்தையும் தமிழிலே, எம்மக்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

அந்தவகையிலே ஸ்ரீஞானேஸ்வரனின் இம் முயற்சியினை உண்மையிலேயே ஒரு மிகப் பெரியதொரு வெற்றிடத்தை நிரப்புகின்ற உன்னத செயலாகத்தான் நாமும் எமது அமைப்பும் கருதுகின்றோம்.

அவர் எமது அமைப்பின் ஒரு சிரேட்ட உறுப்பினர் என்பதற்காக நாம் கூறுகின்ற விடயமாக இதனைப் பார்க்கமுடியாது. மாறாக எமது அமைப்பிற்கும் அவர் எடுத்திருக்கின்ற இத்தனிப்பட்ட முயற்சிக்கும் இடையிலே எதுவித தொடர்பும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏனென்றால் அந்தளவு தூரத்திற்கு அவர் தன்னுடைய சுய முயற்சியில் ஈடுபட்டுச் சாதித்திருக்கின்ற இவ்விடயம் எமக்கும் எம் அமைப்பிற்கும் பெருமை சேர்க்கின்றது என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எமது மக்கள் சார்பாகவும் ஸ்ரீஞானேஸ்வரனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அவருடைய இந்த முதல் முயற்சி ஒரு ஆரம்ப முயற்சியாக இருக்க வேண்டும். இன்னும் எத்தனையோ விடயங்கள் சம்பந்தமாக எங்களுடைய தமிழ்மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அவற்றையும் அவர் தன்னுடைய பணியாகக் கொண்டு, தற்போது மிகமுக்கிய வெற்றிடம் ஒன்றினை நிரப்பியதைப் போல, ஏனைய வெற்றிடங்களாக உள்ளவற்றையும், தமிழ் மக்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றவையுமான விடயங்களிலும் ஈடுபட வேண்டும்.

இம்முயற்சிகள் அனைத்தும் இறுதியில் ஈழத்தமிழ் இனத்தின் சொத்தாகவே பரிணமிக்கும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இனத்தைப் பாதுகாக்கும் தீராக்காதலுடன்...

இ.நா.ஸ்ரீஞானேஸ்வரன்

ஈழத்தமிழர்களாகிய நாம் இனப்படுகொலை செய்யப் பட்டோமா? என்ற மிகப் பெரிய கேள்விக்கு பதிலளிப் பதற்கான அறிவுத் தேடலாக அமைந்ததே "பன்னாட்டுக் குற்றங்கள்" என்ற இந்தப் பொத்தகம்.

1833 இல் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் "சிலோன்" ஒன்றிணைக்கப்பட்ட நாளில் தம்தேசத்தில் சுதந்திரமாக தலைநிமிர்ந்து வாழ்ந்த ஈழத்தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமை பறிபோனது. 1945 இல் ஆங்கிலேயர்களால் "சிலோன்" சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. என்றாலும் நாங்கள் இழந்த சுயநிர்ணய உரிமையை எங்களால் மீட்டெடுக்க முடியாது போனது.

சுயநிர்ணய உரிமையை மீட்டெடுக்கும் முயற்சிகளைத் தொடங்கிய நாளில் இருந்து தமிழினம் இன்றுவரை இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகின்றது. ஆனால் தமக்கு நிகழ்ந்து கொண்டிருப்பதுதான் இனப்படுகொலை என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக நாம் உள்ளோம்.

இத் துயரார்ந்த நிலைக்கு இனப்படுகொலை தொடர்பான சர்வதேச நியமங்கள் மற்றும் அவை சார்ந்த தகவல்கள் யாவும் வேறுமொழியில் இருப்பதையும் அவை இலகு தமிழுக்கு மாற்றப்படாது இருப்பதையும் மிகமுக்கிய காரணங்களாக நான் கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தமிழ் மகனொருவன் தனக்கும் தனது இனத்திற்கும் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை தான் என்பதைச் சரியாக உணர்ந்தால் மட்டுமே தமிழினத்திற்கான தீர்வு நோக்கிய பயணத்தில் எம்மால் தடைகளைக் கடக்க முடியும்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐக்கிய இராச்சியத்தின் அன்றைய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் பிபிசி சர்வதேச வானொலிச் சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றில் "நடந்த குற்றத்திற்கொரு பெயர் தெரியாமல் அக்குற்றம் நிகழ்ந்த காலத்தில் நாம் வாழ்கின்றோம் - We are in the presence of the crime without a name" என்றார் . அச்சொற்றொடரில் வெளிப்படுத்தப்பட்ட நிலையே எமது தமிழினத்தின் நிலையாக இன்றுள்ளது. எமக்கிழைக்கப்பட்ட குற்றத்தினை வெளிப்படுத்தும் மிகச்சரியான வார்த்தை எது? என்பது எமது மக்களுக்குப் புரியாமல் போய்விடும் ஆபத்துள்ளது.

இனப்படுகொலை என்றால் என்ன? தமிழர்களாகிய எம்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் இனப்படுகொலை தானா? என்பதனை அறிந்துகொள்வதற்குப் பன்னாட்டு விதிமுறைகளின் கீழ் இனப்படுகொலை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப் பட்டுள்ளது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு குறித்துக்கூறப்பட்டவை எமக்கும் நிகழ்ந்துள்ளதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னரே எமக்கு நிகழ்ந்துகொண்டிருப்பது இனப்படுகொலைதான் என்பதை உறுதியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதிபயங்கரமான நிலை யாதெனில் தமிழ் தலைமைகளில் அறிவுத் திறன் கொண்டவர்கள் என தமிழ்மக்கள் நம்பிய ஒரு சாரார் முரண் நகையுடன் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக வில்லை என நிரூபிக்க முயற்சிக்கும் அவலத்தையும் நாம் காண்கின்றோம்.

இனப்படுகொலையின் உச்சம் நிகழ்ந்தேறி ஓர் தசாப்தம் நிறைவடைந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றித்த இந்த நாட்டுக்குள் தேசவிடுதலைக்கான அரசியல், அறிவுசார் நுட்பமுறைகளின் ஊடாக கட்டியெழுப்பப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அறிவு என்பது அறிதல் என்ற வார்த்தையை தளமாகக்கொண்டு உருவானது. அறிதலிற்கான தடைகளில் ஒன்றாக இருப்பது சொந்த மொழியில் மிக இலகுவாக அறியக்கூடிய அறிவைப் பெற்றுக்கொள்ள இருக்கும் தடைகளே.

1948 ஆம் ஆண்டு தொடங்கிய ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட இனப்படுகொலைத்திட்டத்திற்கு உள்ளாகி 2009 ஆம் ஆண்டில் அவ் இனப்படுகொலையின் உச்சத்தை தமிழ் இனம் எதிர்கொண்டது என்பதை பல ஆவணங்கள், சான்றுகள் நிரூபித்திருப்பதை இப் பொத்தகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தேசமொன்றின் உருவாக்கம் மட்டுமே தமிழினத்தை இவ் இனப்படுகொலைக் கூறுகளிலிருந்து பாதுகாக்கும் என்பது திண்ணம். இம்முடிந்த முடிபை மனதிலிருத்திக்கொண்டு அம் முடிவை எட்டுவதற்கான பயணத்தைத் தமிழினம் தொடர வேண்டும்.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ்த்தேசத்தை நோக்கிய பயணத்தை 2009 இன் தொடர்ச்சியாகவே தமிழர்கள் மேற்கொள்ள வேண்டும். மாறாக புதிய பயணங்களை ஆரம்பிப்பதென்பது மீண்டும் ஏழு தசாப்தங்கள் பின்தங்கிப் பூச்சியப்புள்ளியில் இருந்து ஆரம்பிப்ப தாகவே அமையும். எனவே இத் தேச விடுதலைப் பயணத்தில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப்படு கொலையின் வகிபாகம் என்ன என்பதைத் தேசப்பயணத்தினை முன்நகர்த்துபவர்களின் சிந்தனைக்குக் கொண்டுவரும் சிறு உதவியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டது இனப்படுகொலைதான் என்பதை எனக்கும் இன்னும் பலருக்கும் முதன்முதலில் தெளிவுபடுத்தியவர் கௌரவ.பொ.கஜேந்திரகுமார் அவர்கள். அவருடைய அந்தத் தெளிவுபடுத்தலே என்னுள் தேடலை உருவாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு.பொ. கஜேந்திர குமார் மற்றும் திரு.செ. கஜேந்திரன் ஆகியோர் இணைந்து தமது முன்னுரையை இங்கு பதிந்திருக்கின்றனர். பேராசிரியர். ரகுராம் அவர்கள் பொத்தகம் தொடர்பாகத் தன் பார்வையை மிகக் காத்திரமாக வெளிப்படுத்தியுள்ளார். இவர்களுக்கு என்றும் என் அன்பும் நன்றியும்.

இந்நூலில் யாதேனும் குறைபாடுகளை நீங்கள் உணர்ந்தால் அவற்றைத் தயவுசெய்து எனக்குத் தெரிவிப்பதன் ஊடாக அடுத்த பதிப்பு வெளிவரும் போது அக்குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள உதவும் என்பதைத் தயைகூர்ந்து நினைவிற் கொள்க.

இ.நா.ஸ்ரீஞானேஸ்வரன்.
DIPFM(UK), ACMA(UK), CGMA, CPA(SL), MBA(Rjt.SL).
B.Sc. Accountancy, HNDA, MAAT

இல. 159 ஏ, கடல்முகவீதி, திருகோணமலை.
No.159 A, Sea View Road, Trincomalee.
0094 777 555 738, shriramanathan@hotmail.com

July 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக்கம் :

நேரடிக் குற்றவியல் ஆய்வு முனைப்பு - Direct Criminalization Thesis

தேசிய குற்றவியல் ஆய்வு முனைப்பு –National Criminalization Thesis

பன்னாட்டுக் குற்றவியல் சட்டங்கள் - International Criminal Law

பன்னாட்டு நடைமுறைவரைபு – International Convention

கட்டளைப் பொறுப்புக் கோட்பாடு – Command Responsibility

ருவாண்டாவின் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயம் – International Criminal Tribunal For RWANDA - ICTR

ஐக்கிய நாடுகள் பட்டயம் – UN Charter

தனிமனிதக் குற்றப்பொறுப்பு - Individual Criminal Responsibility

பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்கள் - International Humanitarian Law

சொல்பெரீனோ போரின் ஞாபகங்கள் - A Memory of Solferino

மாபாதக விதிமீறல் - Grave breaches

பன்நாட்டுப் போர்களில் யுத்தக் குற்றங்கள் - War Crimes on International Armed Conflict

உள்நாட்டுப் போர்களில் யுத்தக் குற்றங்கள் - War crimes on domestic war

இனப்படுகோலைப் படிமுறை – Stages of Genocide

முன்னால் யூகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் - International Criminal Tribunal for the former Yougaslavia - ICTY

பன்னாட்டு விசாரணை அதிகார வரம்பு - Universal Jurisdiction

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் - Permanent People Tribunal

மனித உரிமை இல்லம் - Home for Human Rights

பன்னாட்டுக் குற்றச் சான்றுகள் திட்டம் - International Crimes Evidence Project

மனித உரிமைக் கண்காணிப்பகம் - Human Rights Watch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு மன்னிப்பு சபை - Amnesty International

பன்னாட்டு இனநெருக்கடி தொடர்பான குழு - International Crisis Group

ஐக்கிய நாடுகள் மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைக்கும் அலுவலகம் - United Nations Office for the Coordination of Humanitarians Affairs UNOCHA

ஸ்ரீலங்காவின் பொறுப்பளிதகமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்தினால் தேர்வுசெய்யப்பட்ட வல்லுனர்கள் குழு - Secretary- General's Panel of Experts on Accountability in Sri Lanka

சர்வதேசச் சட்ட ஆணையகம் – International Law Commission

சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களை ஆராய நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் வல்லுனர்களின் ஆணைக்குழு

A United Nations Commission of Experts mandated to look into violations of international humanitarian law

பன்னாட்டு பிரிமன் சட்டவியற் கழகம் – Internationaler Menschenrechtsverein Bremen

எல்லைகளில்லா மருத்துவர் அமைப்பு – medicine scans frontiers

ஸ்ரீலங்காவில் சமாதானத்திற்கான அயர்லாந்து மன்றம் – The Irish Forum for Peace in Sri Lanka

பன்னாட்டுக் குற்றவியல் தீரப்பாயத்தின் வதிவிடப் பொறிமுறை - International Residual Mechanism for Criminal Tribunals (UNMICT)

கடற்சட்டத்திற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம் – International Tribunal for the Law of the Sea

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

பன்னாட்டுக் குற்றங்கள்

INTERNATIONAL CRIMES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அரசு பெருமளவு நிதியை சமூகத்தின் வளர்ச்சிக்கு ஒதுக்காமல் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து பாதுகாப்புக்கும் இராணுவத்துக்கும் ஒதுக்கிவருமாயின் அந்த நாடு நாளடைவில் தானாகவே தகர்ந்து விழும்.

மார்ட்டின் லூதர் கிங்
(மகன்)

"A nation that continues year after year to spend more money on military defense than on programs of social uplift is approaching spiritual death"

Martin Luther King (Jr)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நடைபெறும் நிகழ்வொன்று பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் குற்றமாக பரிணமிக்குமாயின் அந்நிகழ்வினூடாக நடாத்தி முடிக்கப்பட்டவை யாவும் பன்னாட்டுக்குற்றங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

"பன்னாட்டுச் சட்டத்தினை மீறுகின்ற குற்றத்தினை புரிந்தவரின் மீது பன்னாட்டு சட்டத்தினைப் பிரயோகித்து குற்றவியல் பொறுப்பை நேரடியாக சுமத்த முடியுமாயின் அச்செயல் பன்னாட்டுக் குற்றம்'' என தகைசார் பேராசிரியரும் கொசோவா விசேட அமர்வு நீதிபதியுமான கினியல் மெட்டராஸ் கூறுகின்றார்.[1]

இவ்வாறு பன்னாட்டுச் சட்டங்களால் குற்றங்கள் என குறித்துரைக்கப்பட்டவைக்கும் மேலதிகமாக தனித்தனி நாடுகள் சிலவும் தமது சட்ட பரிபாலன முறைகளின் கீழ் பன்னாட்டுக் குற்றங்களுக்கான பொதுவான சில வரைவிலக்கணங்களைக் கொண்டிருக்கின்றன.

அவற்றுற் சில வருமாறு:[2]

உலகளாவியரீதியில் கண்டணங்களுக்கு உள்ளாகுபவை

– பெலாரஸ்

உலகளாவிய ரீதியில் வெறுக்கப்படுபவை

– இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலத்தின் மனச்சாட்சியை உலுக்குபவை
- பிரேசில்

மானுடப்பண்பிற்கு எதிரான குற்றங்கள்
-தென் ஆபிரிக்கா

குற்றம் செய்கின்ற நோக்கத்தையும் அதற்கேற்ற குற்றவியல் மனோநிலையும் ஒருசேரக்கொண்டிருக்கும் செயல்களே குற்றச் செயற்பாடுகள் என சட்டம் வரையறுக்கின்றது.[3]

ஆகவே தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவது மட்டும் குற்றவியல் பொறுப்பை ஏற்படுத்தப்போதுமானது அல்ல. மாறாக தடை செய்யப்பட்ட செயற்பாடொன்றை குற்றவாளிக்கு உரிய மனநிலையுடன் நிகழ்த்தும்போதே அச்செயற்பாடு குற்றமாக பரிணமிக்கின்றது.

என்றாலும் சர்வதேச சட்டங்கள் சில குற்றங்களை மட்டும் எவ்வாறு பன்னாட்டுக் குற்றங்களாக வகைப்படுத்துகின்றன என்பதை யிட்டான ஹாவேர்ட் பல்கலைக்கழக ஆய்வானது இரண்டு முனைப்புக்களைப் பட்டியலிட்டுள்ளது.

அதன்படி சில குற்றங்கள் இயல்பாகவே பன்னாட்டுக் குற்றங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு இயல்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பன்னாட்டு குற்றங்களை, பிரயோகத்திலுள்ள உள்நாட்டுச் சட்டங்கள் ஓர் குற்றமாக கருதுகின்றனவா அல்லது இல்லையா என்பதனை கருத்திற்கொள்ளாது அவை பன்னாட்டுச் சட்டத்தினுள் குற்றங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும், இவ்வாறு இயல்பாகவே சில குற்றங்களை பன்னாட்டுக் குற்றங்களாக ஏற்றுக்கொள்ளும் குற்ற வரையறுப்பு முனைப்பை "நேரடிக் குற்றவியல் ஆய்வு முனைப்பு"[4] எனவும் இவ் ஆய்வு வகைப்படுத்தி யுள்ளது.

மாறாக உள்நாட்டுச்சட்டங்களின் ஊடாக பன்னாட்டுக் குற்றங்களாக சில குற்றங்களை வகைப்படுத்திக் கொள்ளும் முனைப்பைத் "தேசிய குற்றவியல் ஆய்வு முனைப்பு"[5] என அவ் ஆய்வு தெளிவுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி நேரடிக்குற்றவியல் ஆய்வு முனைப்பு மற்றும் தேசிய குற்றவியல் ஆய்வு முனைப்பு ஆகிய இரு முனைப்புக்களின் ஊடாகவும் குற்றங்களாக வகைப்படுத்தப்படுபவை பன்னாட்டுக் குற்றங்கள் என வரையறுத்துக்கொள்ளலாம்.

உலகத்தில் வாழும் சமூகங்களிடையே நிகழ்த்தப்படும் அதி முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்கள் தொடர்பாகவே "பன்னாட்டுக் குற்றவியல் சட்டம்" தனது பங்களிப்பை நல்கின்றது என ஓப்பின் சொசைட்டி பௌண்டேசன்[6] என்ற அமைப்பின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவ் அதிமுக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களை வரையறை செய்யும் முயற்சி 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பமானது. போர்க்களத்தில் படையினர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை வரையறை செய்த "ஹேக் பன்னாட்டு நடைமுறை வரைபை"[7] அம்முதலாவது முயற்சியாக குறிப்பிடலாம்.

"ஹேக்" பன்னாட்டு நடைமுறைவரைபானது பன்னாட்டுக் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் மட்டுமே அக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற வரையறையை தாண்டி பன்னாட்டுக்குற்றத்தை நிகழ்த்த எண்ணங்கொண்டிருந்தவர்கள், நிகழ்த்தத் திட்டமிட்டவர்கள், அனுமதியை வழங்கியவர்கள், இறுதியாகக் குற்றத்தை தலைமைதாங்கி நடாத்தி முடித்தவர்கள் என அனைவரையும் குற்றப்பொறுப்புடையவர்களாக்கியது.

<u>கட்டளை பொறுப்பு கோட்பாடு</u>

பேரழிவும் படுகொலையும் நிகழ்த்தப்பட்ட நிலையில் அப்பேரழிவை முன்னின்று நடாத்தி முடித்தவர்கள் சிலவேளைகளில் அப் பேரழிவையும் படுகொலையையும் திட்டமிட்டவர்களாகவோ அல்லது தூண்டியவர்களாகவோ இல்லாதிருக்கலாம்.

படுகொலைகளை சாதாரண படைவீரன் நிகழ்த்தினாலும் அதனைச் செய்யச்சொல்லி திட்டமிட்டு, உத்தரவிட்டவர் மேல் நிலைப் பணியாளராக இருக்கலாம். இங்கு கொலை செய்தவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக மட்டும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் முன்னெடுக் கப்படுமாயின் அக்குற்றத்தின் மூலகாரணத்தைக் கண்டறிய முடியாது போய்விடும். இதனை நிவர்த்தி செய்யும் கோட்பாடாக கட்டளைப் பொறுப்புக் கோட்பாடு முன்வைக்கப் பட்டது.

"தன்கீழ் பணியாற்றுபவர்கள் நிகழ்த்துகின்ற குற்றங்கள் அனைத்திற்கும் அப்பணியாளர்களுக்கு தலைமை ஏற்றிருப்பவர் பொறுப்புடையவராக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு நிகழ்ந்த குற்றங்களை தடுக்காமல் இருந்தமை மற்றும் குற்றத்தை நிகழ்த்தியதற்கான தண்டனையை வழங்காமல் இருந்தமை ஆகியவற்றிற்கான பொறுப்புக்களையும் அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்"

என்பதைக் கட்டளைப் பொறுப்புக் கோட்பாடு நிறுவுகின்றது.

இங்கு படுகொலையினை நிகழ்த்தும் கட்டளையைத் தலைமை தாங்கியவர் வழங்காது விட்டாலும் படுகொலை நிகழ்வதைத் தடுக்காமலிருத்தல் மற்றும் அப்படுகொலையை நிகழ்த்தியவர் களை விசாரித்துத் தண்டனை வழங்காமல் இருத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் தலைமையேற்றவர் நிகழ்ந்த குற்றங் களுக்குப் பொறுப்பாக்கப்படுகின்றார் என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

இதன்படி நீண்டுசெல்லும் கட்டளைப் பொறுப்புச் சங்கிலி சிப்பாய் ஒருவர் மேற்கொள்ளும் படுகொலைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவராக அதியுயர் மட்டத்தில் இருப்பவரைப் பொறுப்பாக்கி விடும் என்பதே கட்டளைப் பொறுப்புக் கோட்பாடாகும்.

இதனடிப்படையிலேயே ருவாண்டாவின் பன்னாட்டுக்குற்றத் தீர்ப்பாயம் தனிமனிதக் குற்றப் பொறுப்பை வரையறை செய்தது.

பன்னாட்டு மனிதாபிமானச்சட்டங்களை மீறி ருவாண்டாவில் இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை நடாத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவென ஐக்கிய நாடுகள் பட்டயம் VII இன் கீழ் பெறப்பட்ட தத்துவத்தைக் கொண்டு ஐ.நா பாதுகாப்புச் சபையின் 955 ஆவது தீர்மானத்திற்கு அமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயம் நவம்பர் 1994 இல் உருவாக்கப்பட்டது. அத்தீர்ப்பாயத்தின் அகவிதி 6 தனி மனிதக் குற்றப் பொறுப்பு ' என்ற தலைப்பின் கீழ் பன்னாட்டு குற்றப் பொறுப்புக்களை யார் மீது சுமத்த முடியும் எனப் பின்வருவோரை அடையாளப்படுத்தியது

1. இத்தீர்ப்பாயத்தின் அகவிதி 2 தொடக்கம் 4 வரை பட்டியலிடப்பட்ட குற்றங்களை (அகவிதி 2 தொடக்கம் 4 வரை பட்டியலிடப்பட்ட குற்றங்கள் உரிய குற்றத் தலைப்புக்களின் கீழ் தரப்பட்டுள்ளன) நிகழ்த்துவதற்கு திட்டமிட்டு, தூண்டி, தயார்ப்படுத்தி, கட்டளையிட்டு, நிறைவேற்றி முடித்தவர் அல்லது இவற்றை நிறைவேற்றத் தேவையான ஆதரவையும் உதவிகளையும் வழங்கிய நபர்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் நாட்டின் அதியுயர் பதவியில் அல்லது ஒரு நாட்டின் தலைவராக இருந்தாலும் அப்பதவி நிலையினை கருத்திற் கொண்டு அவரை பன்னாட்டுக் குற்றப்பொறுப்பில் இருந்து நீக்கிவிடவோ அல்லது தண்டனையின் அளவைக் குறைத்துவிடவோ இடமளிக்கக் கூடாது.

3. தனது அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஒருவர் ருவாண்டா பன்னாட்டுக் குற்றத்தீர்ப்பாயத்தின் அகவிதி 2 தொடக்கம் 4 வரை வெளிப்படுத்தப்பட்ட குற்றங்களை செய்வதற்கு துணிந்துள்ளார் என்பதைத் தெரிந்து கொண்ட ஓர் உயரதிகாரி அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வாளாவிருந்தாலும், அக்குற்றங்களைச் செய்தவனை விசாரித்துத் தண்டனைக்கு உட்படுத்தாது வாளாவிருந்தாலும் அவ் உயர்அதிகாரியும் பன்னாட்டுக் குற்றப்பொறுப்புடையவராக்கப்படுதல் வேண்டும்.

4. பன்னாட்டுக் குற்றம் புரிந்துள்ளதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ள ஒருவர் அக்குற்றத்தை தனது மேலதிகாரியின் அல்லது அரசின் கட்டளைக்கு அமைய நிகழ்த்தியதாக இருந்தாலுங்கூட அவரும் குற்றப்பொறுப்பில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிக்கப்படக்கூடாது.ஆனாலும் இவ்வாறு கட்டளைக்கு அமைய செயற்பட்டுக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்குத் தண்டனை வழங்கும்போது குறைத்து வழங்குவதே நீதியானது எனத் தீர்ப்பாயம் கருதினால் அவ்வாறே நடவடிக்கை எடுக்கலாம்.

எனவும் தெளிவாக வரையறுத்துள்ளது.

பன்னாட்டுக் குற்றச் சட்டப்படி :

1. மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்
2. போர்க்குற்றங்கள்
3. இனப்படுகொலை

ஆகிய மூன்றும் பன்னாட்டுக் குற்றங்களாக ஆரம்பத்தில் வகைப்படுத்தப்பட்டன.

பின்னரான காலப்பகுதியில் நிகழ்ந்தவொரு பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் மீளாய்வுக்கூட்டத்தொடரில் பன்னாட்டுக்குற்றங்கள் தொடர்பான ரோம் நடைமுறை வரைபில் இணைப்பொன்றை செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கமைய:

4. ஆக்கிரமிப்பு

ஓர் பன்னாட்டுக் குற்றமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மேலும்

1. சர்வதேச போதைப்பொருள் வர்த்தகமானது ஒரு நாட்டினுடைய வரையறைக்குட்படாமல் பல நாடுகளின் எல்லைகளை தாண்டிச்செல்வதால் பன்னாட்டுக் குற்றமாக வகைப்படுத்தப்படவேண்டும் என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பயங்கரவாத நடவடிக்கைகள் பன்னாட்டுப் பின்னணி களைக் கொண்டவர்களால் இயக்கப்படுவதால் அதனையும் பன்னாட்டுக்குற்றமாக வகைப்படுத்தப்பட வேண்டும் என்றும்,

3. அணு ஆயுதங்களைப் பிரயோகித்தல் அல்லது அணு ஆயுத அச்சுறுத்தல்கள் ஓர் பன்னாட்டுக்குற்றமாக வகைப் படுத்தப்பட வேண்டும் என்றும்

நாடுகளால் பேசப்பட்ட போதிலும் அவை தற்போது வரை பன்னாட்டுக் குற்றங்களாக வகைப்படுத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்

CRIMES AGAINST HUMANITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலச் சிந்தனை அழிவதும் பொறுப்புக் கூறவேண்டிய தேவை
இல்லாமற் போவதும் மனச்சாட்சியின்றி நடப்பதும்
மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதற்கும் பன்னாட்டுச்
சட்டங்களை மீறுவதற்குமே வழிவகுக்கும்

நெல்சன் மண்டேலா

The collapse of good conscience and the absence of accountability and public scrutiny have led to crimes against humanity and violations of international law.

Nelson Mandela

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தனது நவீன அத்தியாயத்தை ஆர்மேனியப் படுகொலைகளுடன் உலகில் தொடங்கியதாகக் கருதலாம்.

ஒட்டோமான் பேரரசின் குடிமக்களாகிய சுமார் பதினைந்து இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொடுங் கொலை செய்து அழித்ததே உலகில் மனிதகுலத்திற்கு எதிராக நிகழ்ந்த குற்றமாக முதன்முதலில் பதிவாகியது.

எனினும் ஆர்மேனியப் படுகொலைகள் போரின் போது நிகழ்ந்தவை அல்ல.

போர்க்குற்றமல்லாத இக்குற்றத்தை தனியாகப் பிரித்து வரையறுக்க வேண்டிய தேவை போர்க்குற்றங்களை ஆராயவென உருவாக்கப்பட்ட நியூரம்பேர்க் இராணுவத் தீர்ப்பாயத்தின் முன் உருவாகியது.

இரண்டாம் உலகப்போரின் போது நாஸிப் படைகளால் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களை பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதற்காகவென நியூரம்பேர்க் இராணுவத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டது.

இத்தீர்ப்பாயமே "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்"[9] என்றால் எவ்வாறு வரையறுத்துக்கொள்ள வேண்டும் என்பதனை முதன்முதலில் வியாக்கியானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முதலாவது பன்னாட்டு இராணுவத்தீர்ப்பாயத்தின் வரைவிலக் கணப்படி

> "அரசியல், இன அல்லது சமயக்குழுக்களின் மீது மேற் கொள்ளப்படும் கொலை, அடிமைப்படுத்துதல், நாடு கடத்துதல் மற்றும் விடாத்துயரளித்தல் ஆகியவை மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்" என வரையறை செய்யப் பட்டது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் தோற்றுவாயாக சூழிசைவு (சூழல்) காரணிகள் மற்றும் சேர்ந்துருவாக்கும் காரணிகள் காணப்படுகின்றமையை ஆதாரமாகக்கொண்டு மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விளங்கிக்கொள்வதற்காக "இரு பரிமாண கோட்பாட்டினை"[10] நியூரம்பேர்க் தீர்ப்பாயக் கலந்துரையாடல்கள் உருவாக்கின.

இவ் இருபரிமாணக் கோட்பாட்டின் அடிப்படையில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முதலாவது வரைபானது:

> "அரசியல், இனம் அல்லது மதம் சார்பாக மக்கட் குழுவை அடையாளப்படுத்தி அம்மக்களை விடாத் துயரளிப்பிற்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் பொதுமக்களின் மீது மேற்கொள்ளப்படும் கொலைகள், நிர்மூலமாக்குதல், அடிமைகளாக்குதல், இடம்பெயர்த்தல், சித்திரவதை, வன்புணர்வு உட்பட ஏனைய மனிதாபிமானமற்ற செயற் பாடுகள் நிகழும், அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டங்களை மீறுவதாகவோ அல்லது மீறாததாகவோ இருப்பினும், அவையே மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்"[11]

என வரையறுத்தது.

இவ்வரையறுப்பானது போரில்லாத சூழலிலும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழலாம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1954 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மனிதகுலத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்கள் தொடர்பான நகல் வரைபு தனியே தனிநபர்கள் மட்டுமன்றி அரசாங்கங்களும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை நிகழ்த்தும் வாய்ப்பிருப்பதை வெளிப்படுத்தியது.[12]

இவ்வெளிப்படுத்தலின் பயனாக அரசு புரியும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை தன்னால் உருவாக்கப்பட்ட சட்டங்களைக் கொண்டு அந்த அரசே விசாரணை செய்வது கேள்விக்குள்ளாக்கப் பட்டது. அத்துடன் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வரைபினுள் அரசொன்றின் பங்கையும் இணைத்தது.

அதன் விளைவாக மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் என்பது

> "அரசின் அல்லது அரச நிறுவனங்களின் ஆசீர்வாதத்துடன் அல்லது ஏற்புடன் தனியாட்களாலோ அல்லது அரசாலோ இன, மத, கலாசார, சமூகக்காரணிகளால் ஒன்றித்து வாழும் மனிதக்குழுக்களின் மீது மேற்கொள்ளப்படும் கொலைகள், அடிமைப்படுத்துதல், நிர்மூலமாக்குதல், இடம்பெயர்த்தல் மற்றும் விடாத்துயரளித்தல் போன்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகள்"

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என மீள்வரையறை செய்தது.

தொடர்ந்து 1991 ஆம் ஆண்டில் இந் நகல் வரைபில்

> "திட்டமிட்ட வகையில் அல்லது பெருமெடுப்பில் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்"

எனும் சொற்பதமும் இணைத்துக் கொள்ளப்பட்டது.[13]

பின்னர் 1996 ஆம் ஆண்டு மீண்டும் புத்தாக்கப்பட்டு மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பதனைப் பின்வருமாறு விரிவாக வரையறுத்தது.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திட்டமிட்ட வகையிலோ அல்லது பெருமெடுப்பிலோ அரசி னால், நிறுவனங்களால் அல்லது குழுக்களால் நேரடியாக அல்லது தூண்டப்பட்டு நிகழ்த்தப்படும்

1. கொலைகள்.

2. நிர்மூலமாக்குதல்.

3. சித்திரவதைகள்.

4. இனம், மதம், சாதி அல்லது அவை சார்ந்த அரசியல் ஆகியவற்றினை முன்னிறுத்தி விடாத்துயரளித்தல்.

5. அடிமைகளாக்குதல்.

6. இனக்குழுவொன்றின் ஒரு சாராரைத் தீவிரமாகப் புறந்தள்ளும் நோக்கத்துடன் அச்சாராரின் சுதந்திரத்தையும் அடிப்படை மனித உரிமைகளையும் மீறத்தக்கதாக சாதி, மத, இன அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பாகுபாடுகளை உருவாக்குதல்.

7. எழுந்தமானமாக இடம்பெயர்த்தல் அல்லது வலுக் கட்டாயமாக மக்களை இடமாற்றுதல்.

8. கொடுங்கோன்மையான சிறையிடல்கள்.

9. வலுக்கட்டாயமாகக் காணாமலாக்குதல்.

10. வன்புணர்வு, வலுக்கட்டாயமாக விபச்சாரத்திற்கு உள்ளாக்குதல் உட்பட ஏனைய அனைத்து வகையான பாலியல் வன்கொடுமைகள்.

11. உள மற்றும் உடல் மீது தீவிரப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய, மனிதாபிமானமற்ற, பௌதீக மற்றும் மனோநிலைத் தாக்குதல்கள்.

ஆகியன மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என நிறைவாக வரையறை செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுக் குற்றங்களை வரையறை செய்யும் பணியைத் தொடர்ந்த ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபு தன் அகவிதி 7[15] இன் கீழ் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பவை

"பல்வேறு வகையான நடவடிக்கைகள் ஊடாக யாராயினும் சாதாரண குடிமக்கள் மீது நன்றாகத் தெரிந்து கொண்டே பரவலாகத் தாக்குவது அல்லது திட்டமிட்டவகையில் குறித்துத் தாக்குவது"

என வரையறுத்தது. அவ்வரைபில் பின்வரும் குற்றங்கள் மனிதகுலத்திற்கு எதிரானவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. கொலை

2. நிர்மூலமாக்குதல்

3. அடிமைகளாக்குதல்

4. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகளாக வழங்கப்பட்டுள்ளவற்றை மீறும் வகையில் சிறையிலிடுதல் மற்றும் தனது உடலின் மீது தனக்கிருக்கும் சுதந்திரத்தை இழக்கச்செய்து வாட்டுதல்.

5. பொதுமக்களை வலிந்து இடம் பெயர்த்தல் அல்லது நாடு கடத்துதல்

6. சித்திரவதை

7. வன்புணர்வு, பாலியலடிமையாக்குதல், கட்டாயப்படுத்தி விபசாரத்திற்கு தள்ளுதல், கட்டாயக் கருவேற்றல், கட்டாயக் கருவழிப்பு உட்பட அவற்றிற்குச்சமனான பாலியற் கொடுமைகள்.

8. அடையாளங்காணத்தக்க அல்லது அரசியல் கொள்கை யினால் இணைந்த இனமொன்றாக, தேசத்தவராக, குலத்தினராக, கலாசாரப் பிரிவினராக, சமயப் பிரவினராக, ஒரு பாலினத்தவராக அல்லது வேறுயாதாயினும் அடிப்படையில் கூட்டாக அடையாளங்காணத்தக்கவரின் மீது சட்ட பரிபாலனத்தின் கீழ் குற்றமாக கருதப்படுவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுச் சட்டப்படி அனுமதிக்கபபடாததுமான குற்றங்களை தொடர்ந்து இழைத்து அவர்களுக்கு விடாத்துயரளித்தல்.

9. வலிந்து காணாமலாக்குதல்

10. நிறவெறி நடவடிக்கைகள்

11. கடுந்துன்பத்தை மனதிற்கிழைக்கும் நடவடிக்கைகள் அல்லது பெருவலியை உடலுக்கோ மனதிற்கோ இழைக்கும் மிருகத்தனமான நடவடிக்கைகள்

ஆகியவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் வகைகளாகக் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு குற்றங்களின் மீதும் விரிவான பார்வையைச் செலுத்தியுள்ள ரோம் பன்னாட்டு வரைபு அக் குற்றவகைப்படுத்தல்கள் ஒவ்வொன்றினையும் மேலும் தெளிவாக வரையறுத்துள்ளது.

2.1 அரசோ அல்லது தாக்குதலை மேற்கொள்வதைத் தமது கொள்கையாக வரித்துக் கொண்ட நிறுவனமோ பல்வேறு வகையான நடவடிக்கைகள் ஊடாக இலக்கம் 1 இல் கூறப்பட்ட தாக்குதல்களை பொதுமக்களின் மீது மேற்கொள்வதனை "பொதுமக்கள் மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்கள்" குறித்து நிற்கின்றது.

ரோம் வரைபானது "யாராயினும் பொதுமக்கள் மீது தாக்குவது" என்னும் வார்த்தைப் பிரயோகத்தினை "பொதுமக்களுக்கு எதிராக பலதரப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளை நடத்தக்கூடிய நடத்தையை அரசு அல்லது வேறு ஒரு நிறுவனம் தனது கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருப்பது" என்று வியாக்கியானிக்கின்றது. இதன் மூலம் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை முன்னெடுக்கக் கூடியவர்களாக அரசும் ஏனைய நன்றாக கட்டமைக்கப்பட்ட ஆயுதக் குழுக்களும் அடையாளப் படுத்தப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 நிர்மூலமாக்குதல் என்பது சனத்தொகையில் ஒரு பகுதி நிச்சயமாக அழிக்கப்படும் என்பதைக் கணக்கில் எடுத்து திட்டமிட்டு அம்மக்கட்கூட்டத்தின் வாழ்வியலுக்குள் ஊடுறுத்தல். வேறுவிதமாக கூறினால் உணவு மற்றும் மருத்துவ வசதிகளை அம்மக்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டு அவர்களின் வாழ்வியலைக் குலைத்தல் என்பதாகும்.

2.3 அடிமையாக்குதல் என்பது தனிமனிதனுக்கு உரித்தான அதிகாரங்களை தமது கைகளுக்கு எடுத்துக்கொள்தல், அவ்வாறு கையகப்படுத்திய அதிகாரங்களைக் கொண்டு விசேடமாக பெண்களையும், சிறுவர்களையும் கடத்துதல்.

2.4 நாடு கடத்துதல் அல்லது வலிந்து மக்களை இடம் பெயர்த்தல் என்பது பன்னாட்டுச்சட்டங்கள் மக்களை இடம் பெயர்த்துவதற்காக அனுமதிக்கும் தேவைகள் எவையும் எழாத போது அவர்களது வாழ்நிலத்திலிருந்து வலுக் கட்டாயமாக அம்மக்களை வெளியேற்றுதல் அல்லது அதற்குச் சமமான நடவடிக்கைகளைக் கருதும்.

2.5 சித்திரவதை செய்தலானது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவரின் மீது அல்லது தடுத்துவைக்கப் பட்டுள்ளவரின் உடல் மற்றும் மனநலனின் மீது கடுமையான வலியை ஏற்படுத்துவது. எனினும் சட்டத்தினால் விதிக்கப் படும் தடைகளினால் இவ்வலி ஏற்படுத்தப்படுமாயின் அதனை சித்திரவதை எனலாகாது.

2.6 வலிந்து கருவேற்றல் என்பது சட்டத்தை மீறிப் பெண்ணொருவரை வலுக்கட்டாயப்படுத்தித் தாய்மை அடையச் செய்வதன் ஊடாக இனப்பரம்பலைப் பாதிக்க முடியும் என்பதைக் தமது கருத்திற்கொண்டோ அல்லது பன்னாட்டுச் சட்டங்கள் சொல்லும் மாபாதகக்குற்றங்களை நிகழ்த்தமுடியும் என்ற நோக்கிலோ வலுக்கட்டாயப்படுத்தி தாய்மை அடையச் செய்தல். எனினும் தாய்மையடைதல் தொடர்பான உள்நாட்டுச் சட்டமொன்றுக்கு எதிராக மேற் கூறப்பட்ட விடயம் கருத்தில் கொள்ளப்படக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.7 விடாத்துயரளிப்பு என்பது தமக்கென அடையாளம் ஒன்றைப் பிரதிபலிக்கும் நபர்களுக்கு அல்லது அவ்வாறு பிரதிபலிக்கும் குழுக்களிற்குப் பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளைப் பிடுங்கிக் கொள்ளுதலைக் கருதும்.

2.8 இனவெறி அல்லது தீண்டாமை என்பது குறித்த இனமொன்றின் மீதான ஆட்சியை தொடர்ந்து பேணும் எண்ணத்தில், ஆளுகைக்குட்படும் இனமொன்றின் மீது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் ஊடாக ஆளும் இனம் அல்லது இனங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தி அவ்வெறுக்கப்பட்ட இனத்தின் மீது மேலே இலக்கம் 1 இன் குற்றங்களுக்கு ஒப்பான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

2.9 வலிந்து காணாமலாக்கப்படுதல் என்பது அரசின் அல்லது அரச நிறுவனமொன்றின் அங்கீகாரம், உதவி அல்லது உடன்பாட்டுடன், சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து மிக நீண்ட நாட்களுக்கு அப்புறப்படுத்தி வைத்திருக்கும் எண்ணங்கொண்டு நபரொருவரை கைது செய்தல், தடுத்து வைத்தல் அல்லது கடத்துதல், அதன் பின் அவரது சுதந்திரத்தை பிடுங்கிக்கொள்தல் அல்லது அவரது விதி (நிலை என்ன என்பது) தொடர்பாகத் தகவல்களை வழங்க மறுத்தல் அல்லது அவர்கள் எங்கே இருக்கின்றனர் என்பதைத் தெரிவிக்க மறுத்தல் என்பவையாகும்.

3. இந்நடைமுறை வரைபானது "பாலினம்" என்பதனுள் ஆண் மற்றும் பெண் எனும் இருபாலானவர்களை மட்டும் கருத்திற்கொள்கின்றது.

என மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை ரோம் நடைமுறை வரைபு தெளிவாகப் பிரித்து ஆராய்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவாண்டாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம் தனது அகவிதி 3 - மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் - இன் கீழ் பின்வரும் குற்றங்கள் தண்டனைக்குரியவை எனச் சட்டமாக்கியது.[16]

1. கொலை.

2. அழித்தொழிப்பு.

3. அடிமையாக்குதல்.

4. நாடு கடத்துதல்.

5. சிறையிடுதல்.

6. சித்திரவதை.

7. வன்புணர்வு.

8. இன, மத, அரசியல் காரணங்களுக்காக துன்புறுத்துதல்.

9. ஏனைய மனிதாபிமானமில்லாச் செயல்கள் .

இப்பன்னாட்டுத் தீர்ப்பாயத்தின் அகவிதி - 4 ஆனது 1949 ஒகஸ்ட் 12 ஆம் திகதியில் செயலுருப்பெற்ற நடைமுறை வரைபான போர்க் குற்றத்திற்கு உள்ளானவர்களைக் காக்கும் ஜெனீவாப் பன்னாட்டு நடைமுறை வரைபு மற்றும் 1977 ஜூன் 08 இல் செயலுருப்பெற்ற ஜெனீவா பன்னாட்டு நடைமுறைவரைபின் மேலதிக நடபடிமுறை II என இணைக்கப்பட்டவற்றில் கூறப்பட்ட குற்றங்களுக்கும் மேலதிகமாக பின்வரும் குற்றங்களையும் இணைத்துச் சட்டம் இயற்றியது.[17]

1. மரணத்தைத் தரத்தக்க கொடுஞ் சித்திரவதைகள் மற்றும் சிதைத்தல்கள் போன்ற கொடுமைகளின் ஊடாக உயிர், உடல், உள மற்றும் தேகாரோக்கியத்தின் மீது தொடுக்கப் படும் வன்முறைகள்.

2. கூட்டாக வழங்கப்படும் தண்டனைகள்.

3. பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பயங்கரவாத நடவடிக்கைகள்.

5. வன்புணர்தல், வலுக்கட்டாயமாக்கி விபச்சாரத்தை திணித்தல் போன்ற கீழ்த்தரமான கண்ணியக் குறைவான செயல்கள் ஊடாக தனிமனிதப் பெறுமதிகளை அழித்தல்.

6. கொள்ளையடித்தல்.

7. நாளாந்தம் கூடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீதிமன்றினாலன்றி சாதாரண மனிதருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்ட உறுதிப்பாடுகளை தவிர்த்து ஏனைய வகைகளில் சிறையிடுதல் மற்றும் மரணதண்டனைக்கு உள்ளாக்குதல்.

8. மேற்தரப்பட்டுள்ள எச்செயலையும் புரியப்போவதாக பயமுறுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் குற்றங்கள்

WAR CRIMES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு தேவையாக இருந்தாலும் அதனை எந்தளவிற்கு நியயப்படுத்த முடிந்தாலும் போர் என்பதே குற்றம் தான்

ஏர்னஸ்ட் ஹெமிங்வே

Never think that war, no matter how necessary, nor how justified, is not a crime

Ernest Hemingway

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்குற்றங்கள்

பன்னாட்டுச் சட்டங்களால் பாதுகாப்பைப் பெற்றுள்ள மானுடனின் மீது அச்சட்டங்களையும், காலாதிகாலமாக பின்பற்றப்பட்டுவரும் யுத்த விதிகளையும் புறந்தள்ளி, போர்களின் போது மேற்கொள்ளப்படும் தீவிர மீறல்கள் போர்க்குற்றங்கள் எனப்படுகின்றன.

ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபின் அகவிதி 8 இன் பிரகாரம்:[18]

> *"பன்னாட்டு மற்றும் உள்நாட்டு ஆயுத முரண்பாடுகளின் போது பிரயோகிக்கத்தக்க சட்ட நடைமுறைகளையும், மரபையும் உடைத்தெறிந்து அவற்றை மீறும் நடவடிக்கைகள் அனைத்தும் போர்க்குற்றங்கள்"*

என வரையறுக்கப்பட்டுள்ளன.

> *"பன்னாட்டு மனிதாபிமானச்சட்டத்தினைப் போர்க் குற்றங்கள் தீவிரமாக மீறுவதனால் பாதுகாப்பு வழங்கப்பட்ட மானுடனினதும், பொருட்களினதும் மீதான பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் அல்லது மானுடப் பெறுமதியினை அறவே அற்றுப் போகச் செய்யும் செயல்கள் போர்க்குற்றங்கள்"*

என Henckaerts J-M Doswaldngf. L. *குறிப்பிடுகின்றார்.*

பன்னாட்டு மனிதாபிமானச்சட்டங்களினை மீறும் பொழுதே போர்க்குற்றங்கள் தோற்றம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அக்குற்றங்கள் பன்னாட்டுக்குற்றவியல் சட்டங்களின் கீழேயே விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இரண்டு நாடுகளுக்கிடையே நிகழும் போரின் போது பின்பற்றப் படவேண்டிய நடைமுறைகள் எவையென்பதைப் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்கள் பேசுகின்றன.

அதேவேளை பன்னாட்டுக்குற்றவியல் சட்டமானது போரின் போது நிகழ்த்தப்பட்ட கூட்டு மற்றும் தனிமனிதக்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பவையாக உள்ளன.

1859 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சு மற்றும் ஒஸ்ரிய இராணுவத்திற்கிடையிலான போரினை அடிப்படையாகக் கொண்டு ஹென்றி டுணான்ட் எழுதிய "சொல்பெரீனா போரின் ஞாபகங்கள்" புத்தகத்தில் போரின் போதும் அதன் பின்னரும் போரில் ஈடுபட்டவர்கள் படும் மனித அவலங்களை வெளிப்படுத்தி யிருந்தார்.[19]

1862 இல் ஜெனீவாவில் வெளியிடப்பட்ட இப்புத்தகத்தினை அடியொற்றி சுவிட்சர்லாந்திலும் பின்னர் உலகெங்கிலும் போரில் காயப்படுபவர்களையும் துன்பப்படுபவர்களையும் காப்பதற்காக பக்கச்சார்பற்ற அமைப்புக்கள் பணியாற்ற வேண்டும் என்ற கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அக்கலந்துரையாடல்களின் பயனாகவே 1864 இல் "போர்க் களத்தில் காயமுற்ற இராணுவத்தினரை பண்டுவம் செய்தல்" தொடர்பான பன்னாட்டு நடைமுறை வரைபு உருவாகியது.[20]

இவ்வரைபானது போரில் காயப்பட்டவர்களை எவ்விதப் பாகுபாடும் காட்டாது பண்டுவத்திற்கு உட்படுத்துவதை வலியுறுத்தியது. எனினும் போரின் போது பின்பற்றப் படவேண்டிய பன்னாட்டு சட்ட திட்டங்களைப் பற்றிக் குறித்த நடைமுறை வரைபானது எதனையும் குறிப்பிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறை ஆகஸ்ட் 12, 1949 இல் இறுதியாக உருவாக்கப்பட்ட ஜெனீவா பன்னாட்டு நடைமுறை வரைபின்[21] ஊடாகத் தீர்க்கப் பட்டது. அதன்படி போரில் ஈடுபடும் தரப்புக்கள் போரின் போது பின்பற்றவேண்டிய சட்ட திட்டங்கள் எவையென இவ்வரைபில் வகுக்கப்பட்டன.

தொடர்ந்து ஜூன் 8, 1977 இல் இந்நடைமுறை வரைபில் மேலதிக நெறிமுறைகள் சில சேர்க்கப்பட்டன. அம் மேலதிக நெறிமுறை II இல் பன்னாட்டுப் போர்கள் அல்லாத போர்களின் போதும் (உள்நாட்டுப் போர்கள்) பாதிப்படைபவர்களைப் பாதுகாக்கும் தீர்மானங்கள் உள்வாங்கப்பட்டன. இதன்படி ஜெனீவாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பன்னாட்டு நடைமுறை வரைபும் அதன் மேலதிக இணைப்புக்களான நெறிமுறைகளும் போர்க்குற்றங்களை இரண்டு வகையாகப் பிரித்து நோக்கின. அவை முறையே:

1. பன்னாட்டு ஆயுத மோதல் குற்றங்கள்
2. பன்னாடல்லாத ஆயுத மோதல் குற்றங்கள் என்பனவாகும்.[22]

பன்னாட்டு ஆயுத மோதல் குற்றங்கள் :

பன்னாட்டுப்போர்களின் போது பன்னாட்டு மனிதாபிமானச் சட்டத்தை மிகத்தீவிரமாக மீறி நிகழ்த்தப்படுகின்ற குற்றங்கள் "மாபாதக விதிமீறல்" என்ற சிறப்புச் சொல்லாடலால் ஜெனீவா நடைமுறை வரைபு வெளிப்படுத்தியுள்ளது. பாதுகாக்கப்பட்ட மனிதன் மற்றும் ஆதனங்களின் மீது நிகழ்த்தப்படும் அவ்வகை மாபாதக விதிமீறல் களாக –

1. வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் கொலைகள்

2. மனிதாபிமானமற்ற பராமரிப்பு, சித்திரவதைகள், மற்றும் உயிரியல் ஆயுதப்பரீட்சிப்பு

3. உளநிலை மற்றும் மனிதவுடல் மீது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் படுகாயங்கள், தாங்கொணா துன்பப் படுத்துதல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆதனங்களை சட்டத்திற்கு புறம்பாகக் கையகப் படுத்தல், அழித்தல்.

5. போர்க்கைதிகளையும், பாதுகாக்கப்பட்ட மக்களையும் கைதிகளாக்கி பணிக்கமர்த்துதல்.

6. போர்க்கைதிகளையும், பாதுகாக்கப்பட்ட மனிதர்களையும் நீதிப்பொறிமுறைக்குள்ளாக்கும் உரிமையை வேண்டு மென்றே மறுத்தல்.

7. சட்டத்திற்கு புறம்பாக இடம்பெயர்த்தல், இடமாற்றுதல் மற்றும் வலுக்கட்டாயமாக தடுத்து வைத்தல்.

8. பிணைக்கைதிகளாக்குதல்.

இவற்றிற்கு மேதிகமாக மேலும் இருபத்தைந்து யுத்த மீறல்கள் பன்னாட்டு ஆயுத மோதல்களின் போது குற்றங்களாக கொள்ளப் படத்தக்கவை என ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபு வகைப் படுத்தி உள்ளது.

பன்னாடல்லாத ஆயுத மோதல் குற்றங்கள்

பன்னாட்டுப் போர்கள் அல்லாத (உள்நாட்டு) ஆயுத மோதல்களின் போது போர்க்குற்றங்களாக கருதத் தக்கவைகளாக நான்கு பிரதான விடயங்களை ஜெனீவா பன்னாட்டு நடைமுறை வரைபு வகுத்துள்ளது.

அவையாவன:

1. மனித வாழ்விற்கும் மனிதனுக்கும் எதிரான தாக்குதல்கள். விசேடமாக எல்லா வகையான கொலைகள், குரூர நடத்தைகள், சித்திரவதைகள் மற்றும் அங்கவீனப்படுத்துதல்.

2. மானிடப்பண்புக்கு ஒவ்வாததும் அருவருக்கத்தக்கவையுமான செயல்களைச் செய்யத் தூண்டுதல்.

3. பணயக்கைதிகளாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்காத தடுத்து வைத்தல் மற்றும்கொல்லும் தண்டனைகளைப் பிரயோகித்தல்.

ரோம் நடைமுறைவரைபானது உள்நாட்டுப்போர்களின் போது நிகழும் யுத்த மீறல்களில் பின்வரும் குற்றங்களைத் தீவிரமான போர்க்குற்றங்களாகக் கருத வேண்டும் என வரையறுத்துள்ளது.

1. போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத பொதுமகன் அல்லது பொதுமக்கட் தொகுதியொன்றின் மீது உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள்.

2. பொதுமக்கள் பாவிக்கும் கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், மருத்துவச்சாலைகள். பொருட்கள் மற்றும் ஜெனீவா வரைபுக்கமைவாக விசேட குறியிடப்பட்டவற்றின் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கம் கொண்ட தாக்குதல்கள்.

3. போர்ப்பிரதேசத்திலுள்ள மக்களைப் பாதுகாப்பதற்காக பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்களின் அங்கத்தவர்கள், வாகனங்கள் மற்றும் அவர்களுக்கு சொந்தமானவற்றின் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கமுடைய தாக்குதல்கள்.

4. இராணுவ நிலைகளெனக் கொள்ளப்படாத சமய நிலையங்கள், கல்வி நிலையங்கள், கலை, விஞ்ஞான. கலாசார நிலையங்கள், வரலாற்றுச்சின்னங்கள், வைத்திய சாலைகள் உட்பட காயமடைந்தவர்களை பராமரிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிலையங்கள் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கங்கொண்ட கொடுந் தாக்குதல்கள்.

5. சாதாரண நடவடிக்கைகளின் உடாகச் சொத்துக்களைச் சூறையாடுதல் அல்லது வலிந்த தாக்குதல்களை முன்னெடுத்து சொத்துக்களைச் சூறையாடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அகவிதி 7 இன் பந்தி 2(f) இன் பிரகாரம் மேற்கொள்ளப் படும் கட்டாயக் கருவேற்றல், வன்புணர்வு, பாலியல் அடிமையாக்குதல், மற்றும் கட்டாயக்கருக்கலைப்பு உட்பட நிகழ்த்தப்படும் பாலியல் அத்துமீறல்கள்.

7. பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளை போர் நடவடிக்கையில் ஈடுபடுத்தும் முயற்சிகள்.

8. தவிர்க்க முடியாத இராணுவ காரணங்களுக்காக அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அல்லாமல் உள்நாட்டு யுத்தத்தை காரணம் காட்டி மக்களை இடம்பெயர்த்தல்.

9. போராளியொருவரை துரோகத்தனத்தால் கொல்தல்.

10. கருணைகாட்ட மறுத்தல்.

11. மருத்துவத்துறைக்குரியதெனவோ அல்லது ஏனைய எந்தவொருவகையிலுமோ நியாயப்படுத்த முடியாத பரிசோதனைகளின் ஊடாக மனிதர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தல் அல்லது உயிராபத்தை உருவாக்கும் தீவிரமான காயங்களை ஏற்படுத்துதல்.

12. யுத்தத்தின் போது சொத்துக்களை அழிக்க அல்லது கையகப்படுத்த தேவையில்லாத போதும் அவற்றை அழித்தல் அல்லது கையகப்படுத்துதல்.

ஜெனீவா மற்றும் ரோம் நடைமுறை வரைபுகளின் ஊடாக மேற்கூறப்பட்ட விடயங்களே உள்நாட்டு போர்களின் போதான போர்க்குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை

GENOCIDE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசத்தவரை, இனக்குழுமத்தை, குலத்தவரை அல்லது சமயத்தவரை முழுமையாக அல்லது பகுதியளவில் இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் எச்செயலும் இனப்படுகொலையாகும்

ஐக்கிய நாடுகள் சபையின்
இனப்படுகொலை பன்னாட்டு வரைபு

"acts committed with intent to destroy, in whole or in part, a national, ethnical, racial or religious group"

The United Nations
Genocide Convention

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை

"A coordinated plan of different actions aiming at the destruction of essential foundations of the life of national groups, with the aim of annihilating the groups themselves."

Raphael Lemkin

இனப்படுகொலை என்ற சொல் 1944 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்திலேயே பிரபலமானது.

போலந்தின் யூத சட்டவாளரான "ரபேல் லெம்கின்" (Raphael Lemkin) என்பவரே இனப்படுகொலை எனும் வார்த்தைப் பிரயோகத்தை உலகிற்கு அன்று அறிமுகம் செய்தார்.

தேசிய இனங்கள் மற்றும் இனக்குழுமங்கள் மீது ஜெர்மானிய நாசிப்படைகள் மேற்கொண்ட பேரழிவைப் புத்தகமாக்கும் (Axis Rule in Occupied Europe) போதே இனப்படுகொலை என்ற வார்த்தையை அவர் தனது படைப்பில் பிரயோகித்தார்.[23]

இவ்வார்த்தையானது முறையே ஜெனே என்ற கிரேக்க வார்த்தையையும் சைட என்ற இலத்தீன் வார்த்தையையும் இணைத்து லெம்கினால் பயன்படுத்தப்பட்டது.

Geno - *தேசிய இனம் அல்லது இனக்குழுமம்*
Cide - *கொலை*

நேரடியாக பொருள்கொள்ளப்படுமிடத்து தேசிய இனமொன்றை கொலை செய்தலே இனப்படுகொலை எனப் புரிந்து கொள்ள முடிகின்றது. எனினும் வெறுமனே கொலை செய்வது மட்டும் இனப்படுகொலையாகக் கருதப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கொலைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் காரணிகளே கூட்டுக்கொலையொன்று இனப்படுகொலையாக உருவாக்கம் பெறுவதற்கான அடிப்படைகளாக அமைகின்றன.

இக்கருத்தையே எல்லைகளில்லா மருத்துவர் குழு என்ற பிரான்ஸ் பன்னாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மேனாள் பொதுச்செயலர் பிரதிபலித்துள்ளார்.

ஏனைய அனைத்துக் குற்றங்களிலிருந்தும் இனப்படுகொலை தெளிவாக வேறுபடுத்தப்படுவதற்கு காரணம் அக்கொலை களுக்குப் பின்னாலிருந்து ஊக்குவிக்கும் காரணிகள் என அவர் தெரிவித்தார். அத்துடன் மனிதகுலத்திற்கு எதிரான ஏனைய அனைத்துக் குற்றங்களையும் விட இனப்படுகொலையானது மிக வித்தியாசமான அளவுகோள்களைக் கொண்டது எனத் தெரிவித்த அவர் தெரிவு செய்யப்பட்ட குழுவை முற்றாக அழித்துவிடும் எண்ணங்கொண்டே இனப்படுகொலை நிகழ்த்தப்படுகின்றது என்றும் இனப்படுகொலை என்ற வார்த்தை அதனது உண்மைப் பெறுமதியைத் தற்போது இழந்து வருகின்றது என்பதுடன் அவ்வார்த்தை மிகப் பயங்கரமாக பொதுமைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலையென்ற வார்த்தை மலினப்படுத்தப்பட்டு அதன் உண்மைப்பெறுமதியினை இழந்து வருவதனை ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைக் கொள்கைகளுக்கான அமையத்தின் பணிப்பாளர் திரு. மைக்கல் இக்னலிவ் அவர்களும் ஆமோதித்திருந்தார்.

> "இனப்படுகொலையென்ற வார்த்தையை பாவிப்பவர்கள் தமது நாக்கிலிருந்து அவ்வார்த்தை தவறிவிழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தவறிவிழும் பட்சத்தில் இனப்படுகொலைக்கு உள்ளானவர்களின் காலத்தைத் தாம் அற்பமானதாக்கிவிடுவதை அவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளட்டும்"

என்றும் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலையென்றால்

> "தேசிய இனமொன்றின் வாழ்வை தாங்கி நிற்கும் முக்கிய மூலாதாரங்களைச் சிதைப்பதால் அந்த இனம் தாமாகவே துடைத்தழிந்து போய்விடுவதை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகள்" [24]

என லெம்கின் இனப்படுகொலையை வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

அத்துடன் இனப்படுகொலை என்பது வெறுமனே இனத்தின் வாழ்வை துடைத்தழித்துவிடுவது மட்டுமல்ல, வாழத்தடுப்பதும் (பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்) வாழ்வையும் சுகாதாரத்தையும் அழிக்கத்தக்க சாதனங்களை ஏவுதலும் (செயற்கைத் தொற்று, வதைமுகாம்களில் சாகும்வரை வேலை, குடும்பங்களைப் பிரித்து விடுவதால் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல்) இனப்படுகொலைதான் என்கிறார் லெம்கின்.

மேலும் கலாசாரத்தை அழித்து அதனை இழக்கச்செய்து விடுவதும் இனப்படுகொலை என்றார் லெம்கின்.

கலாசாரப் பின்புலத்தை எடுத்து நோக்கினால்

> "குறித்த ஒரு இனம் ஓர் தேசத்தவராகவோ அல்லது இனக்குழுவாகவோ ஒன்றித்து வாழாதவிடத்து அவர்களின் கலாசார பங்களிப்பின் காரணமாக உருவாகும் நாகரீகமும் பண்பாடும் உருவாகாமலேயே அழிந்துவிடும்"

எனக் கூறிய லெம்கின் நாகரீகமும் பண்பாடும் இல்லாத அல்லது அவை அழிந்துவிட்ட இனம் தனது தேசிய இனம் என்ற தகுதியை இழந்துவிடும் என்பதைச் சரியாகக் கணக்கிலெடுத்து திட்டமிட்டு கலாசாரத்தை இழக்க செய்வதனை இனப்படுகொலை என்றே வரையறுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் லெம்கினால் முன்மொழியப்பட்ட இக்கலாசார இனப்படு கொலை நுட்பமானது இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபைத் தீர்மானிக்கும் போது கருத்திற் கொள்ளப்படவில்லை என லியோரா பில்ஸ்கி (Leora Bilsky) மற்றும் ரேச்சல் க்லாஸ்பேர்ன் (Rachel Klagsbrun) ஆகியோர் சர்வதேச சட்டங்கள் தொடர்பாக ஐரோப்பிய நாளேட்டின் இருபத்தியொன்பதாவது பதிப்பிற்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளனர்.[25]

இக் கட்டுரையில்

> இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபானது பௌதீக மற்றும் உயிரியல் விடயங்களுடன் இனப்படுகொலையின் வரையறுப்பை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளது எனவும்
>
> இனப்படுகொலைக்கான கூறுகளில் ஒன்றாகத் திட்டமிட்ட கலாசார அழிப்பை இனப்படுகொலை எனப் பன்னாட்டு வரைபு நிறுவத்தவறியுள்ளது என்றும்
>
> பௌதீக, உயிரியல் காரணிகளுடன் மட்டுமன்றி அரசியல் பொருளாதார, கலாசார பிரிவுகளையும் இனப்படுகொலை தன்னகத்தே கொண்டிருப்பதாகவும்
>
> எவ்வாறாயினும் பௌதீக அழிப்பே இனப்படுகொலையின் அச்சாணியாக இருக்கும் எனவும்

குறிப்பிட்டுள்ளனர்.

கலாசார இனப்படுகொலையை விரிவாக ஆராய்ந்ததொரு அமைப்பாக கனேடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காணப்படுகின்றது. கனடாவின் பழங்குடியினருக்கு நிகழ்ந்த கொடுமைகள் இனப்படுகொலையா? என்பதனைக் கண்டுபிடிக்க அமைக்கப்பட்ட இக் குழு பழங்குடி மக்களுக்காக கனடாவில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்ட தங்கிப்படிக்கும் கட்டாயக் கல்விப் பாடசாலைகளில் கலாசார இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது[26] என அறிக்கையிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்

> பௌதீக இனப்படுகொலை என்பது குறிவைக்கப்படும் குழுவின் அங்கத்தவர்களைப் பெருமெடுப்பில் கொலை செய்வது என்றும்
>
> உயிரியல் இனப்படுகொலை என்பது குறித்த குழுவின் இனப்பெருக்க ஆற்றலைக் கட்டுப்படுத்துவது என்றும்
>
> தனித்துவ அடையாளங்களைக் கொண்ட குழுவொன்று தமக்குரித்தான உன்னத அடையாளங்களுடன் தம்மை அடையாளப்படுத்தக்க வகையில் தொடர்ந்திருப்பதைத் தாங்கி நிற்கும் பிடிமானங்களையும் பழக்கங்களையும் அழித்துவிடுதல் கலாசார இனப்படுகொலை என்றும்
>
> கலாசார இனப்படுகொலையானது குறித்த குழுவின் அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களை அழித்துவிடும் செயற்பாடுகளாக வெளிவரும் என்றும்
>
> அக்குழுவிற்கு உரித்தான காணிகளைக் கையகப்படுத்தி, வலுக்கட்டாயமாக இடம்பெயர்த்தி, சுதந்திர நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, அவர்களது மொழியினைத் தடை செய்வதும் அந்த மக்களின் ஆன்மீகத் தலைவர்களைச் சிறையிட்டு அவர்களின் ஆன்மீகப் பெறுமதிகளை வலுவிழக்கச் செய்து அழித்து விடுவதையும் உள்ளடக்கும்

என வரையறுத்துள்ளது.

> இவற்றின் ஊடாக கலாசார இனப்படுகொலையின் மிக முக்கிய வடிவமாகப் பரிணமிப்பது யாதெனில் குடும்பங்கள் தமது தற்போதைய தலைமுறையின் தொடர்ச்சியாகப் பெருகும் அடுத்த தலைமுறைக்குத் தமது தனித்துவ அடையாளங்கள் மற்றும் கலாசாரப் பெறுமதிகளை கடத்த முடியாமல் தடுக்கப்பட்டுவிடும்

என அறிக்கையிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலைக்கான ஜெனீவா பன்னாட்டு வரைபின் அகவிதி 2 நிர்மூலமாக்கும் பௌதீக அழிப்பையே இனப்படுகொலை என மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது. அவ்வரையறுப்பின்படி நிர்மூலமாக்குவதற்கான மிகப் பொதுவான நடவடிக்கையாக ஒரு குழுவின் அங்கத்தவர்களை கொல்வதைக் கருதலாம் என தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.[27]

முன்னால் யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற மானுட குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஜெனீவா பன்னாட்டு வரைபு மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென 24 மே 1994 இல் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூத்திரஸ் பூத்திரஸ் காளி (Boutros BOUTROS-GHALI) இனால் நியமிக்கப்பட்ட ஐவர் குழுவின் அறிக்கையை பாதுகாப்புச்சபையின் தலைவருக்கு முன்னிலைப் படுத்தும் ஆவணத்தில் (S/1994/674/பந்தி 97)[28]

> "பெருமெடுப்பில் நிகழும் படுகொலைகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை புரிவதன் ஊடாக ஒரு அடையாளப்படுத்தப்பட்ட குழுவை முற்றாக அல்லது பகுதியளவில் அழிக்கும் எண்ணம் கொண்டிருத்தல் இனப்படுகொலைக்கான நடவடிக்கையாகவே கருதப்படும். கூட்டுவாழ்வு அல்லது சுபாவம் அல்லது இயலுமை போன்ற காரணிகளின் அடிப்படையில் கூட்டாக அடையாளப் படுத்தப்படுபவர்களின் மீது தனித்தனியாக நிகழ்த்தப்படும் குற்றங்கள் கூட இனப்படுகொலைக்கென உருவாக்கப்பட்ட பன்னாட்டு வரைபின் தத்துவங்களின் கீழ் இனப்படுகொலை ஆகும்"

எனக் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இனப்படுகொலையின் சமூகப்பயிற்சியானது எவ்வாறு இனப்படுகொலையை முன்னெடுக்க உதவும் என்பது ஜேர்மனியில் பிரீமன் நகரில் கூட்டப்பட்ட ஸ்ரீலங்காவிற்கான நிரந்திர மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்ப்பாயத்தின் முடிவுகளின்படி:

"இனப்படுகொலையின் சமூகப்பயிற்சியானது தனியே தனிமனிதனை மட்டும் அழித்துவிடத்துடிக்கும் ஓர் பயிற்சி மட்டுமல்ல. அம்முயற்சியானது மனிதக்குழுவொன்றின் ஒட்டுமொத்த அடையாளத்தையும் அழித்து, அதன் முன்னைய வரலாற்றில் இருந்தும் பட்டறிவில் இருந்தும் அந்நியப்படுத்தி, அக்குழு தனது கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்காலங்களின் மீது கொண்டுள்ள கட்டுப்பாடு களிலிருந்தும் அக் குழுவை அகற்றிவிடத் துடிக்கும் ஓர் பயிற்சியாகும் என்பதனையும் புரிந்துகொள்ள வேண்டும்."[29]

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும் 'இனப்படுகொலையின் சமூகப்பயிற்சி' என்பதனை:

"திட்டமிடப்படாமலும் திடீரெனவும் நிகழ்கின்ற கொலைகள் அல்லது கூட்டுக்கொலைகளில் இருந்து தெளிவாகப் பிரித்து வேறுபடுத்தக்கூடியவாறு இனப்படுகொலையை ஓர் சமூகச் செயன்முறையாக ஒழுங்குபடுத்தி, பயிற்சி கொடுத்து, ஒத்திகை பார்த்து, கருத்தொருமிக்கச் செய்து, சட்டபூர்வமாக்கி, அதனைச் சமூகப்பழக்கவழக்கமாக மாற்றிக்கொள்ளத் தொடர்ந்து அதனை நிகழ்த்துவதுடன், நிரந்தரமான நடவடிக்கையாக அச் செயற்பாடுகளைக் கொண்டேக முயல்வது இனப்படுகொலையின் சமூகச் செயன்முறையாக அமைகின்றது"

என இத்தீர்ப்பாயம் வரையறுக்கின்றது.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு நடைமுறை வரைபானது தனது 260 ஆம் இலக்கத் தீர்மானத்தின் ஊடாக "இனப்படுகொலையை ஓர் பன்னாட்டுக் குற்றம்" என உறுதிப்படுத்தியது.

அதன் பின்னரே இனப்படுகொலை என்ற வார்த்தைக்கான சட்டவலு உருவாகியது.[30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வந்த இவ்வரைபின் 2 ஆம் அகவிதியானது இனப்படுகொலையினைப் பின்வருமாறு வரைவிலக்கணஞ் செய்கின்றது.[31]

"ஒரு தேசிய இனத்தை, இனக்குழுமத்தை, குலமரபினரை (சாதியினரை) அல்லது சமயத்தவரை முழுமையாக அல்லது பகுதியளவில் நிர்மூலமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும்

- அக்குழுவின் அங்கத்தவர்களைக் கொல்லுதல்.

- அக்குழுவின் அங்கத்தவர்களிற்கு கடுமையான உடல், உளக்காயங்களை ஏற்படுத்துதல்.

- பௌதீக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதனைக் கணக்கிலெடுத்து அக்குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டே ஊடுறுத்தல்.

- அக்குழுவின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்திவிடும் உள்நோக்கம் கொண்டு தடுப்புக்களை பிரயோகித்தல்.

- அவ்வினத்தின் குழந்தைகளை அவர்களின் விருப்பம் இன்றியே மற்றொரு இனத்தவரிடம் கையளித்தல்.

ஆகியனவே இனப்படுகொலை என வரையறுத்தது.

மேலும் இப்பன்னாட்டு வரைபின் அகவிதி 3 இன் படி

இனப்படுகொலையினை நிகழ்த்துவதற்காக ஒன்றுகூடிச் சதியாலாசனைகளை மேற்கொள்வதும் இனப்படுகொலை எனக் கொள்ளப்படவேண்டும்[32]

என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச்சட்டத்தினுள் உள்வாங்கப்பட்டதும், 2007 ஆம் ஆண்டில் தனது தீர்ப்பை வெளிப்படுத்தியதுமான ருவாண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் பின்வரும் நடவடிக்கைகள் யாவும் தண்டனைக்குரியவை என சட்டமாக்கியுள்ளது.[33]

இனப்படுகொலை.

இனப்படுகொலைக்கான சதியாலோசனை.

இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கு வெளிப்படையாகவும் நேரடியாகவும் தூண்டுதல்.

இனப்படுகொலையை நிகழ்த்த முயற்சித்தல்.

இனப்படுகொலை நிகழ்த்துவதை நோக்கமாகக்கொண்டு சட்ட விரோதமாக கூடுதல்.

மேலும் இத்தீர்ப்பாயத்தின் அகவிதி 3 ஆனது திட்டமிட்ட வகையிலும் பரவலாகவும் மேற்கொள்ளப்படும் பின்வரும் குற்றங்கள் அனைத்தும் தண்டனைக்குரியவை எனச் சட்டமாக்கி உள்ளது.[34]

கொலை.

அழித்தொழிப்பு.

அடிமைகளாக்குதல்.

நாடுகடத்துதல்.

சிறையிடுதல்.

சித்திரவதைசெய்தல்.

வன்புணர்வு.

அரசியல், இனத்துவ, சமய காரணிகளின் அடிப்படையில் துன்புறுத்துதல்.

ஏனைய மனிதாபிமானமற்ற குற்றங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பௌதீக அழிப்பு தொடர்பாக ருவாண்டா பன்னாட்டுக் குற்றவியல் தீரப்பாயத்தின் நீதிபரிபாலத்தில் கூறப்பட்டுள்ளது யாதெனில்:

> "பௌதீக அழிவானது ஒரு அழிவாக கட்டாயமாகக் கொள்ளப்படுவதுடன், அவ்வழிவை ஏற்படுத்துவதற்கு முனைபவர்கள் குழுவொன்றின் அங்கத்தவர்களை உடனடியாக கொலை செய்யாமலிருந்தாலும் அக்குழுவின் அங்கத்தவர்கள் அழிந்து போய்விடுவதை இறுதியில் வேண்டுபவர்களாக இருப்பர். அதற்கமைய குழுவொன்றின் அங்கத்தவர்களின் நாளாந்த உணவை குறைத்தல், ஒழுங்கு முறையொன்றுக்கு அமைவாக அவர்களைத் தமது வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்துதல், சாதாரண தேவைக்கும் மிகக்குறைவாக மருத்துவ வசதிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கலாம்"

எனத் தெரிவித்துள்ளது.

ருவாண்டாவில் இனப்படுகொலைதான் நிகழ்கின்றது என்பதை மிக ஆரம்பத்திலேயே வெளிப்படுத்திய அமைப்பாக எல்லைகளற்ற மருத்துவர் குழு தன்னைப்பதிந்துள்ளது.

அதன் அக்காலச் செயலாளர் நாயகமான அலெய்ன் டெஸ்டெகி (Alain Destexhe)

> இனப்படுகொலை சம்பந்தமான எமது பார்வையானது இரண்டாம் உலக மகாயுத்தத்தில் நிகழ்ந்தவற்றைத்தான் அடிப்படையாகக் கொண்டமைந்து இருக்கின்றது. இதன் விளைவாக ருவாண்டாவில் இனப்படுகொலை நிகழ்ந்து கொண்டிருக்கும் போது அது இனப்படுகொலைதான் என்பதை ஏற்பதற்கு சர்வதேச சமூகத்தினால் முடியாது போய்விட்டது[35]

என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இனப்படுகொலை சம்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வரைபு இனப்படுகொலையென்றால் என்ன என்பதை மிகச்சுருக்கமாகவே வரையறுத்திருப்பதால் கிட்டிய ஆண்டுகளில் நடைபெற்ற படுபயங்கரமான விடயங்கள் எவ்வித முக்கியத்துவமும் அற்றுப்போயிருக்கின்றன என்றார். அதற்கு உதாரணங்களாக உகண்டாவில், கம்போடியாவில், ஈராக்கில் (குர்திஸ் மக்களுக்கு) நிகழ்ந்த படுகொலைகளை குறித்துக் காட்டியுள்ளார்.

இனப்படுகொலையென்பது

> இனமொன்று தாங்கிநிற்கும் தனித்துவ அடையாளத்தை அழித்துவிடுதல்

என தனது இரண்டாவது அமர்வில் பிரீமனில் கூடிய ஸ்ரீலங்கா விற்கான சுதந்திர மக்கள் தீர்ப்பாயம் தெரிவித்ததுடன் தனது தீர்ப்பில்

> ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டு, வன்முறைகளைக்கு உள்ளாகிப் படுகொலை செய்யப் பட்டமையானது வெறுமனே அவர்கள் தனிமனிதர்கள் என்பதனால் அல்ல, அவர்கள் ஒரு குழுவாக தமது தனித்துவ அடையாளங்களுடன் இருந்ததனால்தான். இதனை, அந்த அடையாள அழிப்பினை, இனப்படுகொலை நோக்கத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, அடிப்படையாகக் கொள்வதுடன், இனமொன்று தமது சுயநிர்ணய உரிமையை கோருவதற்கான உரிமையாகவும் இவ் அடையாள அழிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்[39]

என வலியுறுத்தியுள்ளது.

இனப்படுகொலை தொடர்பான பன்னாட்டு நடைமுறைவரைபின் படி "உள்நோக்கம்" என்பதை நிரூபிப்பது மிகச்சிக்கலானது என்னும் வாதம் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. நிரூபிப்பதற்குச் சிக்கலான இந்த விடயத்தை வரையறுத்துக்கொள்வது எவ்வாறு என்பது பொதுவான கேள்வியாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவ்வாறு நிரூபிப்பதற்கு உள்நோக்கம் என்பதை பன்னாட்டு நியமங்கள் எவ்வாறு வரையறுத்துள்ளன என்பதைக் கருத்திற் கொள்வது முக்கியமானது.

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமானது குற்றத் தத்துவங்கள் தொடர்பாக வரையறுக்கும் போது:

> நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட புலச்சூழ்நிலைகளில் இருந்து இனப்படுகொலைக்கான உள்நோக்கம் இருந்தது என்பதை அனுமானிக்கக் கூடியதாக இருக்கும்[36]

என வரையறுத்துள்ளது.

முன்னால் யூகோஸ்லாவியாவிற்கான குற்றவியல் தீர்ப்பாயமானது

> வெளிப்படையானதும் நேரடியாகத் தெரியக்கூடியதுமான சான்றுகள் இல்லாதவிடத்து சூழ்நிலைச் சான்றுகளைக் கொண்டு உள்நோக்கத்தை அனுமானிக்க முடியும். இவ்வாறு அனுமானிக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டு நிரூபிக்க முயலும் போது கிடைக்கக்கூடிய பொருத்தமான சான்றுகளுள் நியாயமான சான்றுகளை மட்டும் முன்வைத்து இனப்படுகொலைக்கான உள்நோக்கத்தை அனுமானித்துக் கொள்ள வேண்டும்

என வரையறுத்தது.[37]

ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயமானது "உள்நோக்கம்" தொடர்பாக மேலும் பரந்த முறையிலான பார்வையை வெளிப்படுத்தியிருந்தது.

அதன்படி:

> இனப்படுகொலைக்கான உள்நோக்கம் இருந்ததென்பதை நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் மற்றும் குறியீடுகளின் அடிப்படையில் அனுமானிக்க கூடியதாக இருப்பதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கீழே தரப்படுபவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல், இந்த நடவடிக்கைகளும் உள்நோக்கம் இருந்தது என்பதை நிரூபிக்கப் போதுமானவை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்

எனத் தெரிவித்துள்ளது.[38]

1. குற்றத்தை நிகழ்த்திய குறித்த நபராலோ அல்லது ஏனையவர்களாலோ குறித்த குழுவின் மீது நுட்பமாக நிகழ்த்தப்பட்ட ஏனைய குற்ற நடவடிக்கைகளின் பொதுப் பண்பைக் கொண்டோ

2. நிகழ்த்தப்பட்ட கொடுமைகளின் பரவலான அளவு

3. அக் கொடுமைகளின் பொதுப் பண்பு

4. அக் கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட பிராந்தியம் அல்லது நாடு

5. குறித்த குழுவின் உறுப்பினர்கள் என்பதைக் கணக்கிலெடுத்து அவர்களைத் திட்டமிட்ட வகையிலும் நுட்பமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை

6. ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களை இத் தேர்விற்கு ஏற்றவகையில் புறக்கணித்திருக்கும் முறை

7. இக்கொடுமைகளை ஊக்குவித்த அரசியல் தத்துவக் கோட்பாடு

8. மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட அழித்தொழிக்கும் மற்றும் பாகுபடுத்திப் பார்க்கும் நடவடிக்கைகள்

9. குறித்த குழுவின் ஆதாரங்களைச் சிதைக்க முனையும் நடவடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனச்சுத்திகரிப்பு இனப்படுகொலையில் இருந்து முற்றாக வேறுபடுகின்றது.

இனப்படுகொலைக்கும் இனச்சுத்திகரிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டை 'இனமொன்றை இல்லாதொழிக்க முற்படுபவரின் நோக்கத்தைக்' கொண்டே பிரித்தறிய முடியும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒரே இனத்தவரைக்கொண்ட தூயதேசமொன்றைக் கட்டிக் கொள்ளவிரும்பும் தேசியவாதிகள் அதனை செயற்படுத்து வதற்காக தமது கைகளில் எடுக்கும் முதலாவது வன்முறை ஆயுதமே இனச்சுத்திகரிப்பாகும்.

இனச்சுத்திகரிப்பானது சர்வதேசச் சட்டங்களின் கீழ் தனியொரு பன்னாட்டுக் குற்றமாகக் கருதப்படுவதில்லை. இதனால் இனச்சுத்திகரிப்பென்றால் என்ன என்பது மிகத் தெளிவாக நடைமுறைவரைபுகளில் எங்கும் வரையறுக்கப்படவில்லை.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர்களின் ஆணைக்குழு வொன்றே முதன்முதலில் இனச்சுத்திகரிப்பை வரையறை செய்தது.

முன்னால் யூகொஸ்லாவியக் குடியரசில் நிகழ்ந்த சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களை ஆராய நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் வல்லுனர்களின் ஆணைக்குழு தனது இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகளில் இனச் சுத்திகரிப்புத் தொடர்பாக வியாக்கியானங்களை வரைந்தது.

> "ஒரு பிரதேசத்தை ஓரினமக்கள் வாழும் பிரதேசமாக மாற்றும் பொருட்டு அப்பிரதேசத்தில் வாழும் அடையாளப் படுத்தப்பட்ட ஏனைய மக்கள் குழுக்களை அதிகாரத்தினால் அல்லது அச்சுறுத்தலினால் அகற்றுதல்"[40]

என தனது இடைக்கால அறிக்கையில் (S/25274) இனச் சுத்திகரிப்பை வரையறை செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தனது இறுதி அறிக்கையில் (S/1994/674)

> சில புவியியற் பிரதேசங்களில் வாழும் இன அல்லது மதக் குழுவை சார்ந்த மக்களை வன்முறைகளைக் கட்ட விழ்த்தோ, அல்லது அவர்களுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை எழுச்சியுறச்செய்தோ அப்புவியியற் பிரதேசங்களில் இருந்து அவர்களை அகற்றும் நடவடிக்கை யைத் தமது திட்டமிட்ட கொள்கையாக மற்றொரு இன அல்லது மதக்குழுவைச் சார்ந்தவர்கள் கொண்டிருத்தல் [41]

இனச்சுத்திகரிப்பு என தனது ஆரம்ப வரையறுப்பை மேலும் புத்தாக்கியது.

இனச்சுத்திகரிப்பின் போது சுத்திகரிக்கப்படும் இனத்தில் உள்ள பெறுமதிமிக்கவர்களை கொன்றுவிடுதலின் ஊடாக அவ் இனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சி நடைபெறுவதைக் காணலாம்.

ஓரினப் பிரிவைக் கொண்ட தேசமொன்றை கட்டியெழுப்ப விரும்பும் தேசியவாதிகள் தமது தேசத்தில் சிறுபான்மையாக வாழும் ஏனைய இனக்குழுக்களை ஒட்டு மொத்தமாக துடைத்தழிக்க விரும்பு வார்களாயின் அந்நடவடிக்கை பன்னாட்டுக் குற்றவரம்புக்கு உள்ளாகிவிடும்.

எனவே துடைத்தழிக்கும் நடவடிக்கையினைக் கைவிட்டு அச் சிறுபான்மையினத்தவர்களில் பெரும்பாலானவர்களை கொன்று விடுவதன் ஊடாக அவ்வினத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்ற சாத்தியம் காணப்படும்போது நிகழ்த்தப்படும் படுகொலைகள் இனச்சுத்திகரிப்பாகக் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வகையில் இனச்சுத்திகரிப்பிற்கான மிகச்சிறந்த உலக உதாரணமாக பொஸ்னியப் படுகொலைகளை கருதலாம். ஏனெனில் முதன்முதலில் பொஸ்னியப் படுகொலைகளின் போதே இனச்சுத்திகரிப்பு என்ற வார்த்தை சங்கேதச் சொல்லாக அங்கு பயன்படுத்தப்பட்டது என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூகொஸ்லாவியக் கூட்டமைப்பின் கீழ் பொஸ்னியா, குரோசியா, ஸ்லோவேனியா, மேசிடோனியா, சேர்பியா மற்றும் மொன்ரநீக்ரோ குடியரசுகள் 1980 ஆம் ஆண்டு வரை அப்போதைய யூகோஸ்லாவிய அரச அதிபரான ஜொசிப் புரொஸ்டிட்டோவின் ஆட்சியின் கீழ் ஓர் கூட்டமைப்பாக இருந்தன. எனினும் டிட்டோவின் மரணத்தின் பின்னர் அக்கூட்டமைப்பில் இருந்த நாடுகள் யாவும் தம்மைத் தனித்தனியான இறையாண்மை கொண்ட நாடுகளாக 1992 இல் சுதந்திரப் பிரகடனம் செய்தன.

அதனையடுத்து சுதந்திர நாடான பொஸ்னியாவின் அதிபர் ஸ்லொபோடன் மிலோசெவிக் "உன்னத சேர்பியா" (Greater Serbia) எனும் ஓரினப்பிரிவைக் கொண்ட தேசியவாதக் கருதுகோளை பொஸ்னியாவில் முன்வைத்தார். இக்கருதுகோளை ஏற்றுக் கொள்ள மறுத்த பொஸ்னியாவில் உள்ள குரோசியர்கள், கொசோவர்கள், அல்பேனியர்கள் மற்றும் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பிற்கு உள்ளாகினர்.

உண்மையிலேயே "இனச்சுத்திகரிப்பு" என்னும் வார்த்தையை முதன்முதலில் பிரயோகித்தவர் ஸ்லொபோடன் மிலோசெவிக் தான். ஸ்ரபிரனிக்காவில் படுகொலைகளை நிகழ்த்த முதல் சேர்பியத் தளபதிகள் பாவித்த சங்கேதச்சொல் "பிரதேசத்தைச் சுத்திகரித்தல்" என்பதாக இருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச சட்டப்பேராசிரியர் வில்லியம் ஸ்கபாஸ் - *Prof. William* Schabas- இனச்சுத்திகரிப்பை இனப்படுகொலையில் இருந்து வேறுபடுத்திப் பேசுகின்றார்.[42]

> இனமொன்றின் சனத்தொகையினை இடம்பெயர்க்க முனைவது இனச்சுத்திகரிப்பாக இருக்கும் பொழுது அச்சனத்தொகையினை முற்றுமுழுதாகத் துடைத்தழிக்க முற்படுவது இனப்படுகொலையாக இருக்கும். எனினும் தர்க்கரீதியாக எம் சிந்தனைக்கு எட்டாதவகையில் இவ்விரு கோட்பாடுகளும் ஒருங்கிணைந்தவையாக இருக்கும் என்பதே உண்மை என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனச்சுத்திகரிப்பானது இனப்படுகொலை நிகழப் போகின்றது என்பதற்கான அபாய எச்சரிப்பு என்பதுடன் இனப்படுகொலையே இனச்சுத்திகரிப்பை செய்ய எண்ணங்கொண்டவரின் இறுதி நடவடிக்கை என்றும்

தெரிவித்தார். இனப்படுகொலைச் செயன்முறையின் ஓர் படியாக இனச்சுத்திகரிப்பு காணப்படும் என்பதையே பேராசிரியர் வில்லியம் ஸ்கபாஸ் இதன் மூலம் எதிர்வு கூறுகின்றார்.

இனப்படுகொலைப் படிமுறை

இனப்படுகொலையை இல்லாதொழிக்கும் சர்வதேசக் கூட்டமைய மான ஜெனோசைட் வோச் என்ற அமைப்பின் தலைவர் கலாநிதி. கிறகோரி எச். ஸ்டான்டன் - Dr. Gregory H. Stanton- ஐக்கிய அமெரிக்க இராசாங்க திணைக்களத்திற்கு 1996 இல் இனப்படு கொலை தொடர்பான அறிக்கையொன்றை தாக்கல் செய்தார்.

இந்த அறிக்கையில் "இனப்படுகொலை படிமுறை" என்பது எட்டு படிமுறை செயற்பாடுகளூடாக நிகழ்வதாக அவர் அடையாளப் படுத்தினார். அவையாவன:[43]

1. வகைப்படுத்துதல்

இனமொன்றை அல்லது இனப்படுகொலைக்கு உள்ளாக் கப்பட வேண்டியவர்களை, யாதாயினும் பொதுஅடையாள த்தின் கீழ் ஒன்றுதிரட்டிக்கொள்ளுதல் வகைப்படுத்தலாக அமைகின்றது. உலகில் காணப்படும் பல்வேறுபட்ட கலாசாரங்களின் கீழ் வாழுபவர்கள் தாம் சார்ந்த கலாசாரத்தின் பால் இயற்கையாகவே தனியாக வகைப்படுத்தப்படுவதற்கு உரியவர்களாகவே இருப்பதை இங்கு அவதானிக்கலாம்.

2. குறியிடல்

வகைப்படுத்தப்படும் குழுவைப் பொதுப்பெயர் அல்லது சின்னமொன்றால் அடையாளப்படுத்த முடியுமாயின் அதனை குறியிடல் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மனித மாண்பை மறுத்தல்

குறியிடப்பட்ட மனித தொகுதியொன்றின் மனித மாண்பினை புறந்தள்ளி அம்மனிதத் தொகுதியை மிருகங்களுக்கு, விலங்குகளுக்கு, உண்ணிகளுக்கு அல்லது நோய்களுக்கு சமப்படுத்த முனைவது மனித மாண்பை மறுத்தலாகும்.

இவ்வாறு மாண்பை மறுக்கும் உணர்வூட்டத்தினால் மற்றொரு இனம் இம்மிருகங்களிலிருந்து தப்பிக் கொள்வதற்கான உபாயமாக மாண்பு மறுக்கப்பட்ட இனத்தை படுகொலை செய்வதே சரியானது என்ற எண்ணப்பாட்டை ஊக்குவித்தலும் இதனுள் அடங்கும்.

படுகொலைக்கான சரியான நேரம் வரும் பொழுது இனத்துவேச பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

4. ஒழுங்குபடுத்தல்

இனப்படுகொலையானது எப்போதுமே ஒழுங்குபடுத்தப் பட்டதாகவே இருக்கும். ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையின் போது வளங்களைத் திரட்டி இனப்படுகொலைக்கென அவற்றைத் தயார்ப்படுத்துதல் நிகழும்.

அரசுகளே இவ்வொழுங்குபடுத்தும் நடவடிக்கைகளைப் பெரும்பாலும் முன்னெடுக்கின்றன. இனப்படுகொலைக்கு தேவையான மிக முக்கிய வளங்களான ஆயுததாரிகளைப் பயிற்சியளித்து, பாதுகாத்து அவர்களை தயார்ப்படுத்தும் அரசுகள் தாம் அப்பணியை செய்வதில்லை என்ற மாயையை உருவாக்குவதற்காக மேலும் பல வகையான அணிகளை பயிற்சி கொடுத்து தயாராக்கி வைத்திருக்கும்.

அத்துடன் முறைசாரா முறையிலும் உருவாக்கப்படும் ஆயுததாரிகள் பரவலாக்கப்பட்ட அதிகார வரம்புகளுடன் செயற்படவும் அனுமதிக்கப்பட்டிருப்பர். அத்துடன் பலவிதமான விசேட இராணுவ அணிகளும் ஒட்டுக் குழுக்களும் இனப்படுகொலைகளை நிகழ்த்த ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிரித்து எதிரியாக்குதல்

ஒற்றுமைப்பட்டிருப்பவர்களை பிரித்து கூறுகளாக்கி அவர்களை தம்மிடையே எதிரிகளாக உருவாக்கும் நடவடிக்கை அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படும். ஒற்றுமையைக் குலைக்கும் விதமாக வெறுப்பையுமிழும் குழுக்கள் தமது வெறுப்புப் பிரசாரங்களை மேற்கொள்ளத் தொடங்கும்.

சட்டங்கள் சிலவேளைகளில் சமூக ஒன்றுகூடலை தடை செய்வதுடன் கலப்புத்திருமணங்களையும் தடைசெய்யும். இனப்படுகொலை அணிகள் தம்முடனுள்ள மிதவாதிகளை குறிவைத்து அவர்களது குரல்களை அடக்க முயற்சி செய்வர். ஏனினல் தமது அணியில் உள்ள மிதவாதிகள் ஒருபோதும் இனப்படுகொலை திட்டத்தை அனுமதிக்க மாட்டார்கள் என்பதை தெரிந்துகொள்ளும் தீவிரவாதம் தமது பக்கத்திலுள்ள மிதவாதிகளை கைது செய்யவும் கொலை செய்யவும் தொடங்கும்.

6. தயாராகுதல்

இனப்படுகொலைக்கு உள்ளாக வேண்டியவர்கள் தாம் பின்பற்றும் தனித்துவ கலாசாரத்தினாலோ அல்லது இனத்துவத்தினாலோ அல்லது மதத்தினாலோ பிரித்து அடையாளப்படுத்தப்படுவர்.

இனப்படுகொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியல் தயாராக்கப்படும். அவர்களை அடையாளப்படுத்தக்கூடிய குறிகளை எவ்வேளையிலும் கொண்டிருக்குமாறு அவர்கள் கட்டளையிடப்பட்டிருப்பர்.

அவர்களது வளங்களைச் சூறையாடிக்கொண்டு தமது பகுதிக்குள் கொண்டு வருதல் அல்லது அவர்களைத் தனியாகப் பிரித்து ஒரு குறித்த முகாமுக்கு கொண்டு செல்லல் அல்லது அவர்கள் வாழும் பிராந்தியத்தை பஞ்சம் பீடிக்கக் கூடிய பிராந்தியமாக்கி அவர்களைப் பட்டினிச் சாவடையச் செய்யும் முயற்சிகளைத் தந்திரோபாயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளல் என நடவடிக்கைகள் தொடரும். இவ்வகை நடவடிக்கைகளின் ஊடாக இனப்படுகொலையின் இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்த்துதல் தயார்ப்படுத்தல் படிநிலை எனலாம்.

7. நிர்மூலமாக்குதல்

இனப்படுகொலையின் இறுதிக்கட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையாக பெருமெடுப்பில் மிகவேகமாக கூட்டுக்கொலைகள் நடைபெறத்தொடங்கும். இந்நிலை நிர்மூலம் செய்யும் நிலையெனவும், இச்செயற்பாடே இனப்படுகொலை என்றும் கொள்ளப்படும்.

“இனப்படுகொலைக்குள்ளாகுபவர்கள் கொல்லப்பட வேண்டியவர்களே - அவர்கள் மனிதர்கள் அல்ல” என்ற மனநிலை ஏற்கனவே கொலைஞரிடையே உருவாக்கப் பட்டிருப்பதால் அவர்கள் மிக வேகமாக படுகொலைகளை அரங்கேற்றுவர். அரசொன்று இனப்படுகொலையினை முன்னெடுக்குமாயின் தான் உருவாக்கிப்பாதுகாத்து வைத்திருக்கும் ஆயுததாரிகளைக் கொண்டு கட்டுப்பாடுகள் எவையுமின்றி கொலைகளை மேற்கொள்ள அனுமதிக்கும்.

அதேவேளை இனப்படுகொலைக்கு உள்ளாகும் இனத்தவரின் மீது வெஞ்சினம் கொண்ட அதே இனத்தை சேர்ந்த ஆயுததாரிகளையும் “பழி தீர்க்கும் கொலைகள்” என்ற பெயரில் இனப்படுகொலையை நிகழ்த்த அரசு அனுமதிக்கும்.

8. மறுத்தல்

இனப்படுகொலையின் இறுதிப்படிமுறையாக இனப்படு கொலை நிகழ்ந்த பின்னர் அதனை மறுப்பதும் தொடர்ந்து நிராகரிப்பதும் நடைபெறும். இனப்படுகொலையைச் செய்தவர்கள் அதனை மறைக்க மனிதப் புதைகுழிகளை உருவாக்குவர், உடலங்களை தீயூட்டுவர், ஆதாரங்களை இல்லாமல் செய்வர், சாட்சிகளை அமைதியாக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் தம்மீது சுமத்தப்படும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்களை மறுதலிப்பதுடன் அதனை கொல்லப் பட்டவர்களின் மீதே சாட்டவும் செய்வர். படுகொலை யாளிகள் ஒருபோதும் தம்மீதான விசாரணைகளை அனுமதிப்பதில்லை. தாங்களே தொடர்ந்தும் அதிகாரம் மிக்கவர்களாக கோலோச்சுவதை எவ்வகையிலேனும் அவர்கள் செயற்படுத்த முனைவர். அவர்கள் அந்நாட்டில் இனப்படுகொலைகளைச் செய்து விட்டு நாட்டின் ஆட்சியில் அமர்ந்து அனைத்து முன்னுரிமைகளுடனும் வாழத் தலைப்படுவர்.

இனப்படுகொலையைத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றுவதுடன் இனப்படுகொலையாளிகள் தம்மைப் பாதுகாத்தும் கொள்ள இவ் எட்டுப் படிமுறைகளை பயன்படுத்துகின்றனர் என்பதை கலாநிதி. கிறகோரி எச். ஸ்டான்டன் வெளிப்படுத்தினார்.

அத்துடன் 20 ஆம் நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை களாக அவர் நான்கு இனப்படுகொலைகளைப் பட்டியலிட்டார்.

1. துருக்கியரால் நடாத்தப்பட்ட பதினைந்து இலட்சம் ஆர்மேனியப் படுகொலைகள். *1912 – 1915*

2. ஜெர்மனிய நாஸிப்படையினரால் ஜிப்ஸி நாடோடிகள், அரசியல் எதிரிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சுமார் இருபது மில்லியன் படுகொலைகள். *1933 – 1945*

3. கம்போடிய கெமரூஜ் தரப்பால் அரச எதிரிகளாக கருதப் பட்டவர்களின் மீது நடாத்தப்பட்ட முப்பத்து மூன்று இலட்சம் படுகொலைகள். *1975 – 1979*

4. ருவாண்டாவில் டுட்சி இனமக்கள் மீது ஹூட்டு இன மக்கள் மேற்கொண்ட எட்டு இலட்சம் படுகொலைகள். *1994 – 1994*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை பன்னாட்டு நடைமுறைவரைபின் வரைவிலக்கணமானது மிகக் குறுகியது என்றும் "இனப்படுகொலை" என்னும் வார்த்தை அந்நிகழ்வின் உண்மைப் பெறுமதியை எடுத்துரைக்கப் போதுமானதல்ல என்றும் எழுந்துள்ள பிரதிவாதங்களுக்கு மேலதிகமாக:

1. இப்பன்னாட்டு நடைமுறை வரைபானது இனப் படுகொலைக்குள்ளாகும் அபாயத்தை எதிர்கொள்ளக் கூடிய அரசியற் சமூகக்குழுக்களை தவிர்க்கின்றது.

2. இந்நடைமுறை வரைபானது இனமொன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதியின் மீது நிகழ்த்தப்படும் படுகொலை தொடர்பாக மௌனம் சாதிக்கின்றது.

3. ஒரு இனக்குழுமம் வாழும் சூழலை அழிப்பதன் ஊடாக அவ்வினக்குழுமத்தை இல்லாது ஒழித்துவிடும் நிலை காணப்படும் நிலையில் "சூழல் அழிப்பு" தொடர்பாக இப்பன்னாட்டு நியமம் அமைதி காக்கின்றது.

4. இனப்படுகொலைக்கான விசேட உள்நோக்கத்துடன் கொலைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதைச் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிப்பது மிகக்கடினமானது.

5. இப்பன்னாட்டு நியமத்தில் "பகுதியளவில்" என்பதன் உண்மை அளவுகோள் எது? அல்லது எண்ணிக்கையில் எத்தனை மரணங்கள் அல்லது கொலைகள்? நிகழ்ந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்கும் என்பது திட்டவட்டமாகக்கப்படவில்லை.

6. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் மற்றொரு உறுப்பு நாட்டை தனிமைப்படுத்த விரும்பாமையும் அந்நாட்டு விவகாரத்தில் தலையிட விரும்பாமையும் இப்பன்னாட்டு வரைபின் பிரயோகத்தன்மையின் மீது நம்பிக்கை இன்மையை உருவாக்குகின்றது

போன்றவையே எதிர்வாதங்களாக முன்வைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இங்கு குறிக்கப்பட்ட நான்காவது மற்றும் ஐந்தாவது எதிர்வாதங்களான விசேட உள்நோக்கத்தைச் சந்தேகமற நிரூபிப்பது, எண்ணிக்கையில் எத்தனை மரணங்கள் அல்லது கொலைகள் இனப்படுகொலையை நிரூபிக்கத் தேவையானவை ஆகியவை தொடர்பாக, பொஸ்னிய இனப்படுகொலை வழக்குகளை விசாரித்த "முன்னால் யூகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம்" வழங்கியுள்ள தீர்ப்புக்கள் கருத்திற்கொள்ளத்தக்கதும் முடிந்த முடிபுகளானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

1. இனப்படுகொலைக்கான உள்நோக்கத்தை நிரூபிப்பது:"

கொலைகளின் போது இனப்படுகொலைக்கான விசேட உள்நோக்கம் இருக்கின்றது என்பதை வெளிப்படையான சான்றுகளுடன் நிரூபிப்பது உண்மையில் கடினமானதே. ஏனெனில் இனப்படுகொலையானது நுணுக்கம் மிகு தந்திரோபாயமாக திட்டமிடப்பட்டு நிகழ்த்தி முடிக்கப் படுவதாலும் அத்திட்டத்திற்கு பின்புலமாகப் பலம் வாய்ந்த அரசுகள் இருப்பதாலும் படுகொலைகளை சாதாரண படுகொலைகளாக அல்லது பன்னாட்டுக் குற்றங்களின் ஏனைய வகைகளுக்குள் அடங்கக்கூடிய குற்றங்களாக வெளிக்காட்டும் வகையில் கொலைகள் நிகழ்த்தப் பட்டிருக்கும் வாய்ப்புக்களே உள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு முன்னால் யூகொஸ்லாவியா இற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம்:

"விசேட உள்நோக்கம் இருந்தது என்பதை நிரூபிப் பதற்கான நேரடிச்சாட்சிகள், சான்றுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அனுமானிக்கக் கூடிய சான்றுகள் மற்றும் நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு, பொதுவாகத் தெரியுமிடத்து திட்டமிட்ட வகையில் குறித்த குழுவின் மீது மேற்கொள்ளப்பட்ட ஏனைய குற்ற நடவடிக்கைகள், நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களின் அளவினைக் கொண்டு, குறித்த குழுவின் மீது, அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அங்கத்தவர்களின் மீது திட்டமிட்ட வகையில் அழித்தொழிப்பு நடவடிக்கைகள் அல்லது பாரபட்சமான குற்ற நடவடிக்கைகள் நிகழ்ந்ததாக கொள்ள முடியும்"

எனத்தீர்ப்பளித்து.

2. இனப்படுகொலைக்குத் தேவையான கொலைகளின் எண்ணிக்கை[45]

முன்னால் யூகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் இனப்படுகொலைக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்த ஜெனரல் ரடோவன் கரட்சிக் (Radovan Karadžić) தனது வாதமாக சுமார் 7000 தொடக்கம் 8000 வரையான முஸ்லிம் ஆண்கள் மற்றும் இளைஞர்களை கொன்றதற் காகவே தன்மீது இனப் படுகொலைக்குற்றம் சாட்டப் பட்டுள்ளது என்றும் இவ் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகச்சிறு அளவிலான கொலைகள் எனவும் எனவே இதனை இனப்படுகொலைக் குற்றமாகக் கருத முடியாது என்றும் வாதிட்டார்.

எண்ணிக்கையில் மிகக்குறைவான இக்கொலைகள் ஒரு இனத்தை முழுவதுமாகவோ அல்லது பகுதியளவிலோ துடைத்தழிந்து போகச்செய்யாது என்பதால் இப்படுகொலை இனப்படுகொலை அல்ல என்பதே அவரது பிரதான வாதமாக இருந்தது.

இனப்படுகொலையை நோக்கமாகக்கொண்டு கொலைகள் நிகழ்த்தப்படுமாயின் அங்கு கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை என்பது முக்கியமற்றது என முன்னால் யூகொஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தனது தீர்ப்பை வெளிப்படுத்தியது.

அத்தீர்ப்பின் படி இனப்படுகொலையில் "எண்ணிக்கை" என்பது "முக்கியமற்றது அல்லது அற்பமானது" என்பதுடன் கொலைகளுக்கான நோக்கமே முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பது வலுவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்பு

AGGRESSION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோம் நடைமுறை வரைபையும் உலக ஒழுங்கையும் பலப்படுத்துவதை நோக்கமாக கொண்டு பன்னாட்டுக் குற்றங்களின் நான்காவது வகையினை பிரயோகத்திற்கு கொண்டுவர உழைத்த அனைவருக்கும் இக்குழு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றது.

வில்லியம் ஆர். பேஸ்,
ஒழுங்கமைப்பாளர், பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்திற்கான குழு.

The Coalition congratulates all those who have striven for this fourth ICC crime to be activated and looks forward to a strengthened Rome Statute system and global order based on the rule of law

William R. Pace,
Convenor of the Coalition for the ICC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்பு

பன்னாட்டுக் குற்றங்களுள் இறுதியாக இணைத்துக் கொள்ளப்பட்ட குற்றமாக ஆக்கிரமிப்புக் குற்றம் அமைந்துள்ளது.

ரோம் பன்னாட்டு நடைமுறைவரைபின் அகவிதி 8 ஆக்கிரமிப்பு என்பதனை பின்வருமாறு வரையறை செய்கின்றது:

> ஆக்கிரமிப்புக்குற்றத்தை நிகழ்த்தத்தக்கவாறு கட்டுப்பாட்டை பிரயோகிக்கத்தக்க வலுவைக் கொண்ட ஒருவரையோ அல்லது அரசையோ அல்லது இராணுவத்தையோ சரியாக திட்டமிட்டு உருவாக்கி ஆக்கிரமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும் அல்லது நிகழ்த்தி முடிக்கும் செயற்பாடு அவற்றின் பண்புகள், அளவு அல்லது பரிமாணத்தினால் ஆக்கிரமிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பட்டயத்தை வெளிப்படையாகவே மீறுமாயின் அவை ஆக்கிரமிப்புக் குற்றங்களாகும்"[46]

என வரையறை செய்தது.

இவ் வரையறைக்கு அமைவாக ஆக்கிரமிப்புச் செயற்பாடு களானவை:

> ஒரு நாட்டின் இறைமைக்கு எதிராக அல்லது அந்நாட்டின் ஆள்புல கட்டுப்பாட்டிற்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக மற்றொரு நாடு தனது படைவலுவை பிரயோகஞ் செய்வது அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பதாக அமைகின்றன.

டிசம்பர் 14, 1974 இல் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானம் 3314 (XXIX) படி பின்வரும் நடவடிக்கைகளை ஆக்கிரமிப்பு குற்றங்களாக பதிவிட முடியும் என ஐ.நா வரையறுக்கின்றது.[47]

ஒரு நாட்டினது அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நிலத்தினைக் கைப்பற்றும் முகமாக வேற்றுநாட்டு இராணுவம் அத்துமீறிப் பிரவேசித்தல், தாக்குதலைத் தொடுத்தல் அல்லது அவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் ஊடாகத் தற்காலிகமாகவேனும் அந் நிலப்பரப்பில் இருத்தல்.

ஒரு நாட்டிற்குரிய நிலப்பரப்புக்குள் இருந்து கொண்டு அந்நாட்டிற்கு எதிராகவே குண்டுகளை வீசுதல் அல்லது வேறு எவ்வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துதல்.

ஒரு நாட்டினது கடற்கரை மற்றும் துறைமுகங்களின் பாவனையை மற்றொரு நாட்டின் ஆயுதப்படை தடுத்தல்.

ஒரு நாட்டின் ஆயுதப்படையின் மீது நிலத்திலோ, கடலிலோ, வானிலோ அல்லது கடற்படைக் கப்பல்கள், வான்படை விமானங்களின் மீதோ மற்றொரு நாட்டின் ஆயுதப்படை தாக்குதலை நடாத்துதல்.

ஓர் ஒப்பந்தத்தின் பேரில் ஒரு நாட்டின் கட்டுப்பாட்டு நிலப்பகுதிக்குள் அந்நாட்டின் அனுமதியுடன் வரவழைக்கப் பட்ட மற்றொரு நாட்டு இராணுவம் அவ் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்பும் அந்நாட்டின் நிலப்பகுதிக்குள் தங்கியிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நாட்டு நிலப்பகுதியை மற்றொரு நாட்டின் பாவனைக்கு வழங்கியுள்ள நிலையில் அவ்வாறு பாவனைக்குப் பெற்றுக்கொண்ட நாடு அந்நிலப் பகுதியில் இருந்து மூன்றாம் நாடொன்றின் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள்.

ஒரு நாட்டின் இராணுவ இசைக்குழுவை, இராணுவக் குழுக்களை, கூலிப்படைகளை மற்றொரு நாட்டின் எல்லைக்குள் இராணுவ நடவடிக்கைகளை அல்லது அதனோடிணைந்த நடவடிக்கைகளை நிகழ்த்த அனுப்புதல்.

என்பவையே ஆக்கிரமிப்புக் குற்றங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும்

INTERNATIONAL COURTS & TRIBUNALS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம்

International Criminal Court - ICC or ICCt

ரோம் பன்னாட்டு நடைமுறைவரைபின் சரத்துக்கு அமைய இயைந்தொழுகுவோம் என உறுதியளித்து, ஏற்றுக்கொண்ட பன்னாட்டு உறுப்பு நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டு நெதர்லாந்து நாட்டின் தலைநகர் ஹேக் நகரில் அமைக்கப்பட்ட நீதிமன்றமே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமாகும்.

இரண்டாம் உலகப்போரில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களான போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக் குற்றங்கள் தொடர்பாக குற்றஞ்சுமத்தப்பட்ட ஜெர்மானியத் தலைவர்களையும், ஜப்பானியத் தலைவர்களையும் விசாரணைக்கு உட்படுத்தும் பொருட்டு முறையே நியூரெம்பேர்க் மற்றும் டோக்கியோ பன்னாட்டு இராணுவத் தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இவ்விரண்டு தீர்ப்பாயங்களும் நிரந்தரமற்ற, அமைய அடிப்படையில் அமைந்தவையாக இருந்தன. அக்காலப்பகுதியில் ஐ.நா.சபையில் மனிதகுலத்திற்கு எதிரான மாபெரும் குற்றமான இனப்படுகொலைக்கான பன்னாட்டு நடைமுறைவரைபு ஏற்றுக்கொள்ளப் பட்டதனை அடுத்து நிரந்தர நீதிமன்றொன்றின் அவசியம் உணரப்பட்டு, இக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனியான நீதிமன்றை உருவாக்கும் கருத்துருவாக்கம் வலுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாகவே ரோம் நகரில் 1998 இல் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கும் பன்னாட்டுச் சட்டவரைபு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 2002 ஜூலை முதலாம் திகதி ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபானது இயங்குநிலைக்கு வந்த தினத்திலிருந்தே இந்நீதிமன்றமும் இயங்கத் தொடங்கியது.

பன்னாட்டு குற்றங்களான மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை, ஆக்கிரமிப்பு மற்றும் குற்றமிழைக்கத் தோதாய்ப் பகையை தூண்டல் ஆகிய யாதாயினும் ஒரு குற்றத்தின் கீழ் குற்றமிழைத்தவராக சந்தேகிக்கப்படும் "தனிநபரை" விசாரிக்கவும், விசாரணை ஊடாக குற்றம் நிரூபணமானால் தண்டனை வழங்கவும் அதிகாரங்கொண்ட அமைப்பாக பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் உள்ளது.

அதனது விசாரணைப் பரப்பளவானது:[48]

> அங்கத்துவ நாடொன்றின் நீதிமன்றமானது குற்றம் இழைத்தவர்களை தண்டிக்கும் எண்ணமில்லாமல் அல்லது தண்டிக்க முடியாத நிலையில் உள்ள போது பன்னாட்டு வழக்குத் தொடுனரால் விசாரணைகளை முன்னெடுப்பது
>
> ஐ.நா. வின் பாதுகாப்புச்சபை விசாரணைக்காக விடய மொன்றைப் பாரப்படுத்தும் போது
>
> நாடொன்று தன்முனைப்புடன் விடயமொன்றைப் பாரப் படுத்தும்போது

மட்டுமே அவ்விடயத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வரம்பை ஆரம்பத்தில் கொண்டிருந்தது.

இங்கு நாடொன்று தன்முனைப்புடன் விடயத்தை பாரப்படுத்தும் போது அந்நாடு "ரோம் உடன்பாட்டில்" கையெழுத்திட்டு, அவ்வுடன்பாட்டுக்கு அமைவாக ஏற்று நடப்பதை உறுதிப்படுத்திய நாடாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் தேசிய நீதிமன்றமானது பன்னாட்டுக் குற்றவழக்கு நடைமுறையை முன்னெடுக்க முடியாத நிலையிலோ அன்றேல் அவ்வாறு முன்னெடுக்கும் எண்ணம் கொண்டிருக்காத நிலையிலோ, அக்குற்றம் பன்னாட்டுக் குற்றமாக பரிணமித்திருப்பின் இந்நீதிமன்றத்தின் பன்னாட்டு வழக்குத்தொடுனரால் விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அத்துடன் ஒரு நாட்டின் நீதிப் பொறிமுறை வலுவற்று காணப்படும் போது அல்லது ஒரு நாட்டின் அரசாங்கமே மாபாதகங்களை செய்துள்ள போதிலும் பன்னாட்டு நீதிமன்றம் தனது நியாயாதிக்க நீதிப் பொறிமுறையின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபைப் பட்டயம் 7 இன் ஊடாக உலகின் சமாதானத்தை பாதுகாக்கும் பொறுப்பு ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.[49]

இவ்வதிகாரத்தின் கீழ் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையானது ரோம் உடன்படிக்கையில் ஒப்பமிட்டு இயைந்தொழுகாத நாடுகளைக் கூட விசாரணைக்கு உட்படுத்தும்படி பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றைக்கோரும் அதிகாரமான “பன்னாட்டு விசாரணை அதிகார வரம்பு”[50] இனைப் பெற்றுக்கொண்டது. இதனை மேலும் வலுப்படுத்தும் முகமாக சூடானின் டாபூர் பிராந்தியத்தில் சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்புச்சபையில் ஒகஸ்ட் 2006 இல் நிறைவேற்றப்பட்ட 1706 ஆவது தீர்மானம் அமைந்தது.[51]

இப்பன்னாட்டு விசாரணை அதிகார வரம்பை பயன்படுத்தியே “டாபூர் படுகொலைகள்” விசாரணையையும் 2011 இல் லிபிய உள்நாட்டு யுத்தம் தொடர்பான விசாரணையையும் பாதுகாப்புச் சபை மேற்கொண்டது.

ஒரு நபர் எந்நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும், எவ்வகை மேன்நிலைகளில் இருந்தாலும் அவரால் எந்தவொரு நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டுக்குற்ற வகையறாக்களுக்கு நீதி கோரி யாதாயினும் ஒரு அங்கத்துவ நாடு அல்லது பன்னாட்டு நிறுவனம், அந்நபரை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தும் கோரிக்கையை முன்வைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி எந்தவொரு அங்கத்துவ நாடும் பன்னாட்டுக்குற்றஞ் செய்த எவரின் மீதும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்ற சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கும் அதிகாரத்தை தனதாக்கி கொள்கின்றது. அத்துடன் குறித்த நபர் குறித்த நாட்டில் இருந்தால் அவரை தன் நாட்டிலேயே தடுப்பிலிடவும், வேறு நாடொன்றில் வதிவாராயின் "அந்நாட்டின் விருப்பத்துடன்" அவரை குறித்த நாட்டுக்கு நாடு கடத்தவும் கோர முடியும்.

பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தினை உருவாக்கும் ரோம் வரைபின் 15 ஆவது அகவிதியின் ஊடாக பன்னாட்டு வழக்குத் தொடுனர் ஒருவர் தானாகவே முன்வந்து விசாரணைகளை மேற்கொள்ளும் அனுமதியினை கோரக்கூடிய வசதி உருவாக்கப் பட்டுள்ளது.

அகவிதி 15 இன் 3 ஆம் பிரிவு

> விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் போதுமானதும் நியாயமானதுமான சான்றுகள் உள்ளதென வழக்குத் தொடுனர் உணரும்பட்சத்தில், பொருண்மையான சான்றாவணங்களுடன் விசாரணைகளை முன்னெடுக்கத் தனக்கு அனுமதி வழங்குமாறு நீதிபதிகளை கோர முடியும்[54]

என அதிகாரமளிக்கின்றது.

இவ் அதிகாரத்தின் படி மியன்மாரில் றொகிங்கியா இன மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட மாபாதகக் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கப் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் தானாக முன்வந்தமையானது அதன் வரலாற்றில் ஓர் மைல்கல்லாகப் பதிவாகியது.

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குத்தொடுனரான "படு பென்சுடா (Fatou Bensouda)" தானாகவே முன்வந்து மியன்மார் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் விசாரணைகளைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தார்.[52]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த வேண்டுகோளை ஏற்ற நீதிமன்றம் விசாரணைகளை முன்னெடுக்கும் அனுமதியை வழங்கியது.[53]

பன்னாட்டுக்குற்றவியல் நீதிமன்றத்தில் மியன்மார் அங்கத்துவ நாடாக இல்லை. என்றாலும் மியன்மாரில் இருந்து வலுக் கட்டாயப் படுத்தி வெளியேற்றப்பட்ட மக்கள் பன்னாட்டுக்குற்றவியல் நீதிமன்றத்தின் மற்றொரு அங்கத்துவ நாடான பங்களாதேஸ் நாட்டுக்குள் அகதிகளாக வரத்தொடங்கிய போதே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமானது இக்குற்றங்களை விசாரிக்கும் வலுவை பெற்றுக்கொண்டது.

சர்வதேச நீதிமன்றத்தின் மீதான விமர்சனங்கள் :

மேற்குலகின் அரசாட்சிப்பண்பு, பணபலம்மிக்கதும், வலுக் கொண்டவையுமான நாடுகளை விட்டுவிட்டு நலிந்த, சிறிய நாடுகளின் மீதே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் தனது வலுவை பிரயோகிக்கின்றது என ஆபிரிக்க நாடுகள் குற்றஞ் சாட்டுகின்றன.

அத்துடன் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றத் தேவையான அதிகாரங்கள் அதற்கு குறைவாகவே உள்ளது என அமெரிக்காவும் குற்றம் கூறியுள்ளது.

பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் முதல் பதினாறு வருட வரலாற்றில் பத்திற்கும் குறைவான குற்றவாளிகளே தண்டனை களை பெற்றுள்ளமையானது அதன் தண்டனையளிக்கும் ஆற்றலின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் விமர்சனஞ் செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம்
International Court of Justice

நீதிக்கான நிரந்தர பன்னாட்டு நீதிமன்றம்
Permanent Court of International Justice

ஐக்கிய நாடுகள் சபையின் நீதிக்கான மூல அமைப்பாக காணப்படுவது நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் ஆகும்.

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றமானது:

> *பன்னாட்டுச் சட்டத்தினை அடிப்படையாக கொண்டு நாடுகளால் முன்வைக்கப்படுகின்ற சட்டப்பிறழ்வுகளுக்கு உரிய தீர்வை வழங்குவது.*
>
> *ஐக்கிய நாடுகளின் மூலஅமைப்புக்கள் அல்லது விசேட முகவராண்மை அமைப்புக்களால் வினவப் படும் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு ஆலோசனைகளை வழங்குவது*

ஆகிய இரண்டு விடயங்களைக் கைக்கொண்டது.[55]

நாடுகளுக்கிடையில் எழும் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு இந் நீதிமன்றமே பன்னாட்டு அங்கீகாரத் துடன் செயற்படுகின்றமை தெளிவாகின்றது.

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் உருவாகுவதற்கு முன்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் நாடுகளுக்கிடையே நிகழ்ந்த பலசுற்றுக் கலந்துரையாடல்களை தொடர்ந்து அந் நாடுகளின் பங்களிப்புடன் நீதிக்கான நிரந்தர பன்னாட்டு நீதிமன்றம் உருவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நீதிமன்றம் உருவாகியதன் பின்னர் 1921 தொடக்கம் 1939 வரை, உலக நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளுள் முப்பது முரண்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு முடிவுறுத்தல்களை வழங்கியிருந்த நீதிக்கான நிரந்தர பன்னாட்டு நீதிமன்றம் பல நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு ஆலோசனைகளையும் வழங்கியிருந்தது.

எனினும் 1939 இல் உலகப்போர் மேகங்கள் சூழத்தொடங்கிய காலகட்டத்தில் இந்நீதிமன்றத்தின் பணி மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியது. அதன் விளைவாக 1939 டிசம்பர் 4 ஆம் திகதி நீதிக்கான நிரந்தர பன்னாட்டு நீதிமன்றம் தனது இறுதியமர்வை நிகழ்த்தி முடித்தது.

உலகப்போரின் பின்னர் ஒக்டோபர் 30, 1983 இல் சீனா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியராச்சியம் மற்றும் சோவியத் இரஸ்யக் குடியரசு ஆகியன "இறைமையுள்ள, சமத்துவ பண்புடைய சமாதான நாட்டமுள்ள நாடுகள்" என்ற அடிப்படையில் இணைந்து பன்னாட்டு நீதிக்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிக்கத்தக்க வகையிலான நிறுவனமொன்றை உருவாக்குவது தொடர்பான பிரகடனத்தை வெளியிட்டன.

இப்பிரகடனத்தின் பின்னரான செயற்பாடுகளை முடுக்க அமெரிக்க வோசிங்டனில் கூடிய நாற்பத்து நான்கு நாடுகளின் சட்டவாளர்கள் அவ்வாறான நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறவிருந்த கூட்டத்திற்கான நகல் வரைபை தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஐம்பது நாடுகள் பங்குபற்றிய சான்பிரான்சிஸ்கோ கூட்டமானது நீதிக்கான நிரந்தர பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் அனைவரையும் தாமாகப் பதவிதுறக்க வழிவகுத்ததுடன் அதே ஆண்டு எப்ரல் மாதத்தில் நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் உருவாகவும் வழிசமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத்தொடர்ந்து கொர்பு கால்வாய் (Corfu channel)[55] முரண்பாட்டைத் தீர்க்க அல்பேனியாவை ஐக்கிய இராச்சியம் நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தமை முதலாவது வழக்காக பதிவானது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் அனைத்தும் நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளாகும். இந்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடுகள் எதனையும் செய்ய முடியாது. அத்துடன் வழங்கப்படுகின்ற தீர்ப்பினை ஒரு நாடு நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் மற்றைய நாடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்குக் குறித்த விடயத்தைப் பாரப்படுத்துவதன் ஊடாக வழங்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப் படுத்தும் படி அழுத்தங்களைப் பிரயோகிக்கப் பாதுகாப்புச்சபை ஊடாக வழி செய்ய முடியும்.

குல்புகூஷன் யாதவ் வழக்கு[56]

இந்தியாவிற்காக பாகிஸ்தானில் உளவு பார்த்த குற்றத்திற்காக பாகிஸ்தானிய அரசால் குல்புகூஷன் யாதவ் கைது செய்யப்பட்டார். பலோசிஸ்தானில் கைதாகிய யாதவ் "ஹுசைன் முபாரக் பட்டேல்" என்ற துணைப் பெயரையும் கொண்டவர். பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் இந்திய உளவு அமைப்பான "றோ" வின் முகவராக செயற்பட்டமை என்பன தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட யாதவ், இந்தியக் கடற்படையின் ஓய்வுபெற்ற முன்னாள் அலுவலர் என இந்தியா ஒப்புக்கொண்டது.

பாகிஸ்தான் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி யாதவ் விற்கு மரண தண்டனை அறிவித்ததை அடுத்து இந்தியா மே 8, 2017 இல் இவ்விடயத்தை நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றில் பாரப் படுத்தியது.

இவ்விடயம் தொடர்பாகத் தனது விசாரணைகளை நிறைவு செய்துள்ள நீதிக்கான பன்னாட்டு நீதிமன்று ஜூலை 17, 2019 இல் "வியன்னா (ரோம்) பன்னாட்டு வரைபின் கடப்பாடுகளை குல்புசன் யாதவ் விடயத்தில் பாகிஸ்தான் மீறியுள்ளது" என தனது தீர்ப்பை அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியன்மார் மீது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காம்பியாவின் முறைப்பாடு[57]

மியன்மாரின் றெகினெய் மாகாணத்தில் வாழ்ந்த றொகிங்கியா இனத்தவரின் மீது மியன்மார் இராணுவமான "டட்மைடோவ்" மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பாக முறைப்பாடொன்றை நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் காம்பியா முன்வைத்தமை வரலாற்றில் ஒரு மைல்கல்லாகப் பதிவாகியுள்ளது.

இனப்படுகொலைப் பன்னாட்டு வரைபை ஏற்றுக்கொண்ட எந்தவொரு நாடும் அவ்வரைபை மீறும் மற்றொரு நாட்டின் மீது குற்றச்சாட்டைப் பதிவுசெய்ய முடியும் என்ற அகவிதி 9 இன் வாய்ப்பை முதன்முதலிற் பயன்படுத்திய நாடாக காம்பியா பதிவாகியுள்ளதாலேயே இம்முறைப்பாட்டை ஒரு வரலாற்றுப் பதிவாகப் பார்க்கவேண்டியுள்ளது.

றொகிங்கியா மக்களின் மீது நடாத்தப்பட்ட குற்றங்களுடன் எவ்வித நேரடித்தொடர்பையும் காம்பியா கொண்டிருக்கவில்லை. அத்துடன் அதனால் எவ்வித தாக்கத்தையும் அனுபவித்திருக்காத காம்பியா றொகிங்கியா இன மக்களுக்காக தனது அங்கத்துவத் தத்துவத்தைப் பயன்படுத்தி நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றில் மியன்மாருக்கு எதிராக முறைப்பாட்டை செய்துள்ளது.

இம்முறைப்பாட்டின் அம்சமாக றெகினெய் மாகாணத்தில் மியன்மார் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கான இடைக்கால தடையுத்தரவொன்றை பிறப்பிக்கு மாறும் வேண்டுகோளினை காம்பியா விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பு நீதிமன்றங்கள்
Hybrid Courts

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நீதி நியாயாதிக்கப் பொறிமுறையின் கீழ் செயற்படத்தக்க வகையில், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்களைக் கலந்து பெரும்பாலும் குற்றம் நடைபெற்ற பிரதேசத்திலேயே அமைக்கப்படும் நீதிமன்றங்களை கலப்பு நீதிமன்றங்கள் என மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் வரையறை செய்துள்ளது.[58]

கலப்பு நீதீமன்றங்கள் பின்வரும் நோக்கங்களை பூர்த்தி செய்யத்தக்க வகையில் உருவாக்கப் படுகின்றன.

முரண்பாடுகளின் பின்னரான காலத்தில் அரசின் உள்நாட்டு நீதிப்பொறிமுறையானது மனித உரிமைகளை மதித்தொழுகத்தக்க வகையிலும் சட்டவாட்சி மரபை மீளுயிர்த்துச் செயற்படுத்து கின்றது என்பதையும் வெளிப்படுத்தி, அந்நீதிப் பொறிமுறையின் மீது நல்லெண்ணத்தை உருவாக்குதல்.

உள்நாட்டின் சட்டஆட்சி மரபையும், இயலுமை விருத்தியையும் வினைத்திறனுடன் உருவாக்கு வதற்கு தேவையான அரசியல் ஆதரவையும், செயற்படத்தக்க பணிப்பாணையையும் உரிய நாட்டில் நிலவும் அரசியல் கலாசாரத்திலிருந்து எந்தளவு காத்திரமாக கலப்பு நீதிமன்றங்கள் பெற்றுக்கொள்கின்றன என்பதை கண்டறிந்து கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பு நீதிமன்றங்கள் உருவாக தொடங்கியதன் பின்னரான காலப்பகுதியில் முரண்பாடுகளை சந்தித்து மீளுயிர்த்த நாடுகளின் உள்நாட்டு நீதிப்பொறிமுறையானது நீண்டகால உறுதித் தன்மையுடன் நம்பிக்கை மற்றும் வினைத்திறன் கொண்டவையாக செயற்படுவதை காணமுடிகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கொடுங்குற்றமிழைத்த நபர்களாக அடையாளப் படுத்தப்பட்டவர்களில் பெயரளவிற்கானவர்களை (மிகக்-குறைந்தளவானவர்களை) மட்டுமே கையாளக்கூடிய வலுக் கொண்டவையாகவே கலப்பு நீதிமன்றங்கள் உள்ளன என்பதே இற்றைவரைக்குமான கலப்பு நீதிமன்றங்களின் வரலாறு.

இதனடிப்படையில் ஒரு நாட்டில் பெருமளவானவர்கள் பன்னாட்டுக் குற்றங்களை இழைத்திருப்பின் அவர்களை கையாள்வதில் கலப்பு நீதிமன்றங்களின் இயலுமை கேள்விக்குறியாவதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

உள்நாட்டு நீதிப்பொறிமுறையானது போதுமான சட்டங்கள் இன்றி, ஊழல் நிறைந்து, திறனற்று இருப்பதுடன் பாதிக்கப் பட்டவர்கள் நீதியை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளின்றி இருக்குங்கால் கலப்பு பொறிமுறையின் தேவை அங்கு இயல்பாகவே எழுவதை அவதானிக்க முடியும்.

அதற்கமைய ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட முதலாவது கலப்பு நீதிமன்றானது இரண்டாயிரமாம் ஆண்டளவில் கொசோவா இல் உருவாகியது. தொடர்ந்து கிழக்கு திமோர் இல் அதே ஆண்டிலும், பொஸ்னியா-ஹேர்சிகோவினா இல் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டிலும் கலப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும் 2002 இல் சியராலியோன், 2003 இல் கம்போடியா (கெமர்ருஜ் கிளர்ச்சி விசாரணை), 2006 இல் லெபனான் ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட கலப்பு நீதிமன்றங்களானவை அந்தந்த நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டன.[99]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் கலப்பு நீதிமன்றங்களால் மட்டும் வெற்றிகரமான உள்நாட்டு நீதிமரபை உருவாக்க முடியாது என்பதை ஐ.நாவின் செயலாளர் நாயகம் எடுத்தியம்பியுள்ளார்.

சட்ட நடைமுறை சீர்திருத்தங்கள், நீதிபரிபாலன மீளமைப்பு மற்றும் நிலைமாறுகால நீதிப்பொறிமுறைகள் ஆகியன உள்நாட்டு நீதி மரபில் உருவாக்கப்படுமிடத்து கலப்பு நீதிமன்றங்கள் பன்னாட்டுக்குற்றங்களைப் பக்கச்சார்பின்றி விசாரணைக்கு உட்படுத்துவது சாத்தியமாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள்
International Tribunals

பன்னாட்டுக்குற்றங்களால் பாதிக்கப்பட்ட உலக மாந்தருக்கு நீதியை வழங்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச் சபையானவை குறிப்பிட்ட தேவைக்கேற்ப விசேட நீதிமன்றங்களையும் தீர்ப்பாயங்களையும் உருவாக்கும் வலுவைக்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் அகவிதி 41 இன் பிரகாரம் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையானது தனது முடிவுகளை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான அமைப்புக்களை உருவாக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

அவ்வாறே ஐக்கியநாடுகள் பொதுச்சபைக்கும் எந்தவொரு நாட்டின் மீதும் பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் வலுவுள்ளது.

பாதுகாப்புச்சபை, தனது நிரந்தர அங்கத்துவ நாடுகளான சீனா, அமெரிக்கா, இரஸ்யா, பிரான்ஸ், மற்றும் ஐக்கிய ராச்சியம் ஆகியவை அவற்றிற்குரிய நிறைவேற்று அதிகாரமான வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி குறித்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யாதுள்ள வேளையில் தற்காலிக அங்கத்துவம் கொண்டுள்ள ஏனைய ஒன்பது அங்கத்துவ நாடுகளின் பெரும்பான்மை பலத்துடன் பன்னாட்டுக்குற்றவியல் தீர்ப்பாயமொன்றை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாதுகாப்புச்சபையால் உருவாக்கப்பட்ட இரண்டு தீர்ப்பாயங்களாக முறையே:

1. ருவாண்டாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம்

2. முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம்

ஆகியன அமைந்துள்ளன.

அத்துடன் இவ்விரு தீர்ப்பாயங்களின் செயற்பாட்டிற்கும் உதவும் வகையில் இரண்டு "பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்திற்கான வதிவிடப் பொறிமுறை" களையும் பாதுகாப்புச் சபை 2010 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 1966 ஆவது தீர்மானத்தின் படி உருவாக்கியது. இத்தீர்மானத்தின் படி இரண்டு வதிவிட அலுவலகங்கள் முறையே மேற்கூறிய இரண்டு தீர்ப்பாயத்திற்கும் உருவாக்கப்பட்டன.[60]

கடற்சட்டத்திற்கான பன்னாட்டு தீர்ப்பாயம்[61]

பன்னாட்டுக் கடற்சட்டத்தின் உருவாக்கத்திற்காகவும், அதன் பிரயோகத்திற்காகவும் ஐக்கிய நாடுகள் பட்டயத்தத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பன்னாட்டுத் தீர்ப்பாயமே இத் தீர்ப்பாயமாகும்.

கடற்சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் பட்டயத்தத்துவத்தினை வியாக்கியானம் செய்வதிலும் பிரயோகிப்பதிலும் எழும் முரண்பாடுகளைக் களைந்து சரியான பிரயோகம் மற்றும் முரண்பாடுகளுக்கான தீர்வு ஆகியவற்றிற்காகவே இப்பன்னாட்டு தீர்ப்பாயம் செயலாற்றி வருகின்றது.

சுதந்திரமான இருபத்தொரு அங்கத்தவர்களைகொண்ட இத் தீர்ப்பாயமானது பூகோளக்கடற்பரப்பு, அக்கடற்பரப்பின் பாவனை மற்றும் அக்கடற்பரப்பு கொண்டுள்ள வளங்களின் பாவனை தொடர்பான சட்ட வரைபுகளை விரிவாக தன்னகத்தே கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல் அவற்றின் மீது ஆய்வுகளை மேற்கொள்ளப் பாதுகாப்பான வழிமுறைகளை உருவாக்குதல், நாடுகளிடையே கடல்சார் தொழில் நுட்பங்களைப் பகிர்தல் போன்றவை தொடர்பாகவும் இப்பன்னாட்டுத் தீர்ப்பாயம் தனது செயற்பாடுகளைக் கட்டமைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Specific Reference:

1. International Crimes, Law and Practice, Volume 1: Genocide, GUENAEL METTRAUX, Chapter 1, Towards a Universal Law of International Crimes, 1.1 What are International Core Crimes, p. 1
2. What Is an International Crime? Volume 58, Number 2, Spring 2017, (A Revisionist History), II. UNIVERSAL CRIMINALITY, A. States, p. 357
3. The Fundamental Concept of Crime in International Criminal Law: A Comparative Law Analysis By Iryna Marchuk Chapter 1-Introduction, 2.1.1 Actus Reus, p. 8
4. What Is an International Crime? Volume 58, Number 2, Spring 2017, (A Revisionist History), B. The Basis of Universality, p. 354
5. Ibid., p. 355
6. Various Publications of Open Society Foundation, https://www.opensocietyfoundations.org
7. Hague Conventions IV and X (1907) and further references : First Geneva Convention, Article 49 (cited in Vol. II, Ch. 43, p 457); Second Geneva Convention, Article 50 (ibid., p 457); Third Geneva Convention, Article 129 (ibid., p 457); Fourth Geneva Convention, Article 146 (ibid., p 457); Hague Convention for the Protection of Cultural Property, Article 28 (ibid., p. 458); Second Protocol to the Hague Convention for the Protection of Cultural Property, Article 15 (ibid., p. 461).
8. STATUTE OF THE INTERNATIONAL TRIBUNAL FOR RWANDA, Article 6: Individual Criminal Responsibility, p. 47, https://legal.un.org/avl/pdf/ha/ictr_EF.pdf
9. Crimes Against Humanity: A Re-evaluation of Human Rights in International Law, A Term Paper Submitted by: Acuesta, Jorg Jan Justine, Asistio, Antonio Alexander, Austria Dan Louie, Runez, Jem, Sabino, Sean Carlo Submitted to: Prof. Kebart Licayan on December 2019, Chapter 1, Division 1.1. The Evolution of Tribunals and Courts and Definition of Concept, p. 2 https://www.academia.edu/41264330/IL_CRIMES_AGAINST_HUMANITY
10. The Fundamental Concept of Crime in International Criminal Law: A Comparative Law Analysis By Iryna Marchuk, Chapter 4- The Concept of Crime in International Criminal Law, 4.2 Typology of International Crimes, p. 83.
11. Mettraux (2005), p. 147. 12. Report of the International Law Commission to the General Assembly, Draft Code of Offences Against the Peace and Security of Mankind, U.N. GAOR, 9th Sess., Supp. No. 9, U.N. Doc. A/ 2691 (1954).
13. Report of the International Law Commission, Draft Code of Crimes Against the Peace and Security of Mankind, U.N. GAOR, 46th Sess., Supp. No.10, U.N. Doc. A/46/10 (July 19, 1991).
14. Report of the International Law Commission, Draft Code of Crimes Against the Peace and Security of Mankind, U.N. GAOR, 48th Sess., U.N. Doc. A/CN.4/L.532 (July 8, 1996).
15. PART 2. JURISDICTION, ADMISSIBILITY AND APPLICABLE LAW, p. 3 https://www.icc-cpi.int/resource-library/documents/rs-eng.pdf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. STATUTE OF THE INTERNATIONAL TRIBUNAL FOR RWANDA , Article 3: Crimes against Humanity, p. 45, https://legal.un.org/avl/pdf/ha/ictr_EF.pdf
17. STATUTE OF THE INTERNATIONAL TRIBUNAL FOR RWANDA, Article 4: violations of Common Article 3 of the Geneva Conventions and Additional Protocol ii, p. 46 https://legal.un.org/avl/pdf/ha/ictr_EF.pdf
18. Rome Statute of the International Criminal Court, Article 8 : War crimes, p. 4 https://www.icc-cpi.int/resource-library/documents/rs-eng.pdf
19. The Fundamental Concept of Crime in International Criminal Law: A Comparative Law Analysis By Iryna Marchuk, Chapter 4 The Concept of Crime in International Criminal Law, 4.2.1.1 Historical Origins of War Crimes, p.72
20. Bugnion (2009), document retrieved from the ICRC website http://www.icrc.org/web/eng/siteeng0.nsf/html/solferino-Article-bugnion-240409.
21. Geneva convention on 12 August 1949, https://www.icrc.org/en/doc/assets/files/publicatio.ns/icrc-002-0173.pdf
22. Protocol Additional to the Geneva Conventions of 12 August 1949, and relating to the Protection of Victims of International Armed Conflicts, 8 June 1977 (hereinafter—Additional Protocol I), Article 1(4).
23. Axis Rule in occupied Europe, Raphael Lemkin, preface, November 15, 1943
24. Axis Rule in occupied Europe, Raphael Lemkin, p. 79.
25. European Journal of International Law, Volume 29, Issue 2, May 2018
26. Honouring the Truth, Reconciling for the Future Summary of the final report of the Truth and Reconciliation Commission of Canada, Introduction, p. 1 https://irsi.ubc.ca/sites/default/files/inlinefiles/Executive_Summary_English Web.pdf
27. Convention on the Prevention and Punishment of the Crime of Genocide, Page 1. https://www.un.org/en/genocideprevention/documents/atrocity crimes/Doc.1_ Convention
28. LETTER DATED 24 MAY 1994 FROM THE SECRETARY-GENERAL TO THE PRESIDENT OF THE SECURITY COUNCIL, p.25 https://undocs.org/S/1994/674
29. Permanent Peoples' Tribunal, Peoples' Tribunal on Sri Lanka 07-10 December 2013, 5.1.2 Genocide as a Social Process, p. 15 - 17
30. The Convention on the Prevention and Punishment of the Crime of Genocide, A/RES/3/260, Background, p. 1 https://www.un.org/en/genocideprevention/genocide-convention.
31. Ibid., Article II
32. Ibid., Article III
33. STATUTE OF THE INTERNATIONAL TRIBUNAL FOR RWANDA, Article : Genocide, Section 3, p. 43 https://legal.un.org/avl/pdf/ha/ictr_EF.pdf
34. Ibid., Article 3: Crimes against Humanity , p. 45
35. Journal : Foreign Policy, No. 97 (Winter, 1994-1995), The Third Genocide by Alain Destexhe, p. 3
36. THE LEGAL CASE OF THE TAMIL GENOCIDE By UNROW Human Rights Impact Litigation Clinic1, p.2
37. Ibid., p. 2,3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. Ibid., p. 3
39. Permanent Peoples' Tribunal, Peoples' Tribunal on Sri Lanka 07-10 December 2013, 5.1.1. Why genocide?, p. 15 - 17
40. Letter dates 9 February 1993 From the Secretary General Addressed to the President of the Security Council, S/25274 Chapter II, Section D, Sub Section 6. p. 16 https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/N93/083/51/IMG/N9308351.pdf?OpenElement
41. Letter Dated 24 May 1994 From The Secretary-General To The President Of The Security Council, S/1994/674, Chapter III, Section B, p. 33 https://documentsddsny. un.org/doc/UNDOC/GEN/N94/200/60/ PDF/N9420060.pdf?OpenElement
42. Genocide. The Crime of Crimes - Presentation for the: United Nations Audiovisual Library of International Law, p. 16, Prof. William A. Schabas OC MRIA, Director, Irish Centre for Human, Rights National University of Ireland, Galway https://legal.un.org/avl/pdf/ls/Schabas_outline.pdf
43. THE EIGHT STAGES OF GENOCIDE By Dr. Gregory H. Stanton, President, Genocide Watch https://www.keene.edu/academics/ah/cchgs/resources/educational-handouts/the-eight-stages-of-genocide/download/
44. United Nations | International Residual Mechanism for Criminal Tribunals, ICTY, Judgement List https://www.icty.org/en/cases/judgement-list
45. Public Redacted version of judgement issued on 24 March 2016, Volume I of IV, https://www.icty.org/x/cases/karadzic/tjug/en/160324_judgement.pdf
46. Rome Statute of the International Criminal Court, Article 8 bis, Crime of aggression, Sub Section 1, p. 7 https://www.icc-cpi.int/resource-library/documents/rs-eng.pdf
47. Ibid, Sub Section 2, p. 7-8
48. Amnesty International, 2007-2008 Fact Sheet One, p. 1-2 https://www.amnestyusa. org/pdfs/IJA_Factsheet_1_International_Criminal_Court.pdf
49. Charter of the United Nations and Statute of the International Court of Justice Chapter VII, Action with respect to threats to the peace, breaches of the p*eace and* acts of Aggression, p. 9-11
50. Ibid., Chapter IV, The General Assembly, Article 22, p. 6
51. Resolution 1706 (2006) Adopted by the Security Council at its 5519th meeting, on 31 August 2006 https://digitallibrary.un.org/record/582107?ln=en 52. ICC Prosecutor, Fatou Bensouda, requests judicial authorisation to commence an investigation into the situation in Bangladesh/Myanmar https://www.icc-cpi.int/Pages/item.aspx? name=pr1465
53. ICC judges authorise opening of an investigation into the situation in Bangladesh/Myanmar https://www.icc-cpi.int/Pages/item.aspx?name=pr1495
54. Rome Statute of the International Criminal Court, Article 15 : Article 15, Prosecutor, p. 9 https://www.icc-cpi.int/resource-library/documents/rs-eng.pdf
55. International Court of Justice https://www.icj-cij.org/en/frequently-asked-questions 56. Ibid., https://www.icj-cij.org/en/cases 57. Ibid., https://www.icj-cij.org/en/case/168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. UNOHCHR, RULE-OF-LAW TOOLS FOR POST-CONFLICT STATES, Maximizing the legacy of hybrid courts, p. 1
59. International Justice Resource Centre, INTERNATIONALIZED CRIMINAL TRIBUNALS https://ijrcenter.org/international-criminal-law/internationalized-criminal-tribunals/
60. Resolution 1966 (2010), Adopted by the Security Council at its 6463rd meeting, on 22 December 2010 , S/RES/1966 (2010) https://digitallibrary.un.org/record/695418?ln=en
61. International Tribunal for the Law of the Sea https://digitallibrary.un.org/record/695418?ln=en

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 2

நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள்

Resolutions & Verdicts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. UNOHCHR, RULE-OF-LAW TOOLS FOR POST-CONFLICT STATES, Maximizing the legacy of hybrid courts, p. 3

60. International Justice Resource Centre, INTERNATIONAL AND HYBRID CRIMINAL TRIBUNALS https://ijrcenter.org/international-criminal-law/international-hybrid-criminal-tribunals/

61. Resolution 1966 (2010), Adopted by the Security Council at its 6463rd meeting, on 22 December 2010 ; S/RES/1966 (2010) https://digitallibrary.un.org/record/695418?ln=en

62. International Tribunal for the Law of the Sea https://digitallibrary.un.org/record/695418?ln=en

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியநாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

United Nations

General Assembly

The New York Times

An internal review of how the United Nations handled the bloody final months of Sri Lanka's civil war in 2009, when as many as 40,000 civilians were killed, has concluded that the response was "a grave failure of the U.N.," according to a leaked draft report. The panel, led by Charles Petrie, a former U.N. official, criticized what it called "a sustained and institutionalized reluctance" by staff members in Sri Lanka at the time "to stand up for the rights of the people they were mandated to assist." The report's executive summary says "many senior U.N. staff simply did not perceive the prevention of killing of civilians as their responsibility."

By: Robert Mackey
November 13, 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவில் நிகழ்ந்த உள்நாட்டு போரின் மிகக் கொடூர காலமான 2009 இன் இறுதி மாதங்களிலும் அக்காலப்பகுதில் கொல்லப்பட்ட சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட தமிழ் குடிமக்கள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு நடந்துகொண்டது என்பதனை அறிய நிகழ்த்தப் பட்ட உள்ளக ஆய்வுகளின் முடிவானது

"ஐக்கியநாடுகள் சபை அந்த விடயத்தைக் கையாண்ட விதமானது அதனது மாபாதகத் தோல்வியாக அமைந்தது"

என்பதை வெளியே கசிந்த அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அவ் உள்ளக ஆய்வுக்குழுவைத் தலைமைதாங்கிய முன்னால் ஐ.நாவின் அலுவலரான சாள்ஸ் பெற்றி தனது கண்டனத்தைப் பதிவு செய்த போது

"மக்களின் உரிமைக்காக முன்னின்று பணியாற்றும் பொறுப்புடன் ஸ்ரீலங்காவில் நிலைப்படுத்தப்பட்டிருந்த ஐ.நாவின் அலுவலர்கள் அப்பணியை நிறைவேற்ற ஒழுங்கமைக்கப்பட்ட நிரந்தரமான தயக்கத்தைக் காட்டியிருக்கிறார்கள்"

என்கிறார்.

அத்துடன் அவ் அறிக்கையின் பிரதான பொழிப்பில்

"கடமையில் இருந்த பல சிரேட்ட ஐ.நாஅலுவலர்கள் மக்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கான பொறுப்பைத் தாம் கொண்டிருக் கிறோம் என்பதைச் சாதாரணமாக உணர்ந்து கொள்ள வில்லை"

எனத் தரப்பட்டுள்ளது.

By: Robert Mackey
The New York Times
November 13, 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் 46/1 – 23 மார்ச் 2021

46/1 ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறுதலையும், மனித உரிமைகளையும் முன்னேற்றுதல்:

மனித உரிமைச்சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தின்படி தனக்குரித்தான தத்துவங்களையும் நோக்கத்தையும் மீள உறுதிப்படுத்திக்கொண்டு, மனித உரிமைகள் தொடர்பான பன்னாட்டு பிரகடனத்தின் படியும் ஏனைய பொருத்தமுடைய பத்திரங்களின் படியும்,

ஸ்ரீலங்காவில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மனித உரிமைச்சபையின் பிரேரணைகளான 19/2 - 20 March 2012, 22/1 -21 March 2013, 25/1 27 March 2014, 30/1 01 October 2015. 34/1 23 March 2017, 40/1 21 March 2019, *ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும்,*

அனைத்து சமய மற்றும் இனக்குழுக்களின் ஒருமித்த கருத்துடனும் சுயமரியாதையுடனும் நிலையான சமாதானத்தையும் விருத்தியையும் ஏற்படுத்தத்தக்க வகையில் ஓர் அரசியல் தீர்வொன்றைக் கொண்டு வருவதற்கான பரந்துபட்ட பேச்சுக்களை நிகழ்த்த ஸ்ரீலங்கா தயாராகி வருவதனை வரவேற்று,

நிறைவேற்றப்பட்ட S11/1 *தீர்மானத்தை மீளக்கருத்திற் கொண்டும், பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் மற்றும் மனித உரிமைச்சட்டம் ஆகியவற்றின் பிரயோகத்திற்கு இன்றியமையாததாக பொறுப்புக்கூறல் இருப்பதனைக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து 26 மே 2009 அன்று ஸ்ரீலங்கா சனாதிபதிக்கும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும் இடையே நிகழ்ந்த தொடர்பாடலை மீள உறுதிப்படுத்திக்கொண்டும்,

ஸ்ரீலங்காவின் இறைமை, சுதந்திரம், ஒற்றுமை மற்றும் ஆள்புலக் கட்டுறுதியை உறுதிப்படுத்திக்கொண்டும்,

அனைத்து மக்களுக்கும் முழுமையான மனித உரிமைகளை அனுபவிக்கவும், அடிப்படைச் சுதந்திரத்துடன் அவர்கள் வாழ வழிசமைக்கும் வகையிலும் நாடுகளுக்குள்ள பொறுப்பை மீளுறுதி செய்துகொண்டும்,

நவம்பர் 2019 மற்றும் ஒகஸ்ட் 2020 இல் நிகழ்ந்த சனநாயகம் மிக்கதும் வெளிப்படைத்தன்மையானதுமான தேர்தல்களை ஏற்றுக்கொண்டும்,

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் பிரயோகத்தில் இடப்பட்டதைக் கருத்திற்கொண்டு சனநாயகப் பண்புடைய அரசு மற்றும் பிரதான நிறுவனங்களின் சுதந்திரத்தன்மை ஆகியவற்றை வலியுறுத்திக்கொண்டும்,

ஸ்ரீலங்காவில் வாழும் அனைத்து மக்களும் தமதுரிமைகளை அனுபவிக்கவும் நல்லிணக்கத்துடன் வாழவும் இன்றியமையாததான அரசியல் அதிகாரத்தை பகிர்வது ஸ்ரீலங்கா அரசின் கடப்பாடு என்பதை தெரிவித்துக்கொண்டும்,

வடக்கு கிழக்கு மாகாணசபை உட்பட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் அனைத்தும் வினைத்திறனுடன் இயங்குவதை உறுதிப்படுத்திக் கொண்டு அவற்றுக்கான தேர்தலை நடாத்துவது உட்பட உள்ளக அரசாட்சிப்பண்புகளை அரசு மதிக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொண்டும்,

அனைவரும் அமைதியாகவும் ஒன்றிணைந்த நிலப்பகுதியில் மதம், நம்பிக்கை, இனம் போன்றவற்றால் பாரபட்சமின்றித் தமக்குரிய மனித உரிமைகளை அனுபவிப்பதை மீளுறுதிப்படுத்திக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கட்டுமானங்கள், கண்ணிவெடியகற்றல், காணிகளை மீள வழங்குதல், உள்ளக இடம்பெயர்விற்குள்ளானவர்களை மீளக்குடி யேற்றல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் உட்பட இந் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் மேலதிக முயற்சிகளை ஏற்றுக்கொண்டும்,

நிலையான சமாதானத்தை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முகவராண்மைகளுடனும், விசேடமாக மனித உரிமை ஆணையாளர்கள் மற்றும் வலுவிருத்தி, தொழில்நுட்ப உதவிகள் தொடர்பான நுட்பங்களைப் பெற்றுக்கொண்டு செயற்படும் ஸ்ரீலங்கா அரசின் கடப்பாட்டை வரவேற்றுக்கொண்டும்,

பெருமளவில் காயமடைந்தோரையும் மரணங்களையும் உருவாக் கிய ஏப்ரல் 2019 தாக்குதல் உட்பட அனைத்துப் பயங்கரவாத நடவடிக்கைகளையும், நுட்பங்களையும், முயற்சிகளையும் கடுமையாக கண்டிப்பதை மீளுறுதிப்படுத்திக் கொண்டு, இவ்வகை பயங்கரவாதச் செயல்களை தடுக்கத்தக்க நடவடிக்கைகளை அரசு உரியவகையில் முன்னெடுப்பது அதன் கடமையென்பதுடன், அவ்வகை நடவடிக்கைகள் பன்னாட்டுச்சட்ட விதிமுறைகளின் கீழ், விசேடமாக பன்னாட்டு மனித உரிமைச்சட்டம் மற்றும் பிரயோகிக்கக்கூடியதாக இருந்தால் பன்னாட்டு ஏதிலிகள் சட்டம், மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச்சட்டம் ஆகியவற்றின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை மீளுறுதிப்படுத்திக் கொண்டும்,

இன நல்லிணக்கத்தையும், ஆற்றுப்படுத்தலையும் முன்னெடுக்கும் வகையில் கடந்த காலத்தில் நடந்தவைகள் தொடர்பான நீதி பரிபாலன மற்றும் நீதிப்பரிபாலனமல்லா முறைகளின் கீழ் பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்திக்கொள்வது, நீதியினை வழங்குவது, பாதிக்கப்பட்டோருக்குத் தீர்வுகளை வழங்குவது, மனிதஉரிமை மீறல்கள் மீள நிகழாது தடுப்பது ஆகியவற்றை செய்யத்தக்கவகையில் பரந்துபட்ட செயன்முறையொன்றின் தேவையை வலியுறுத்திக்கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள், இளையோர், பல்மதக் குழுக் களின் அங்கத்தவர்கள், ஓரினமக்கள், பிரதேச மக்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் ஆகியோருடன் மட்டுமன்றி மேலும் பல பொருத்தமான மக்களையும் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொண்டு அவர்களின் பங்களிப்புடன், வெளிப்படையானதும், பக்கச்சார்பற்றதும், சுதந்திரமானதுமான பொறிமுறையே கடந்த காலத்தில் நிகழ்ந்த வன்பிறழ்வுகள் மற்றும் விதிமீறல்கள் தொடர்பாகச் சிறந்த தீர்வைத்தரும் என்பதை வலியுறுத்திக் கொண்டும்,

அரசிற்கிருக்கும் மனித உரிமைச்சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்டக் கடப்பாடுகளின் படி அவற்றை மீறுபவர்களைச் சட்டப்படி தண்டிக்க வேண்டியிருக்கின்ற கடப்பாட்டையும் மீள ஞாபகப் படுத்திக்கொண்டும்,

ஸ்ரீலங்காவில் மனித உரிமையின் பாதுகாப்பிற்கும் விருத்திக்கும் உழைப்பதுடன் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் நடவடிக்கைகளை பாராட்டிக் கொண்டும்,

1. 43 ஆவது அமர்வில் வழங்கப்பட்ட வாய்மொழி மூல அறிக்கை மற்றும் 46 ஆவது அமர்வில் வழங்கப்பட்ட எழுத்து மூல அறிக்கை களுக்காக ஐ.நா வின் மனித உரிமை ஆணையாளரை வரவேற்றுக் கொண்டும்,

2. விசேட நடவடிக்கைகளூடாக முன்மொழியப்பட்டவை மீது காத்திரமான கவனிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன் இவ் அலுவலகத்தால் முன்மொழியப்பட்டவற்றை செயற்படுத்துமாறும் கேட்டுக்கொண்டு ஸ்ரீலங்கா அரசு ஐ.நாவின் ஆணையாளர் மற்றும் விசேட நடவடிக்கையாளர்களுடன் இணைந்து ஒழுகுவதை வரவேற்பதுடன் தொடர்ந்தும் அவ்வாறு இணைந்தொழுக வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டும்,

3. காணாமற்போனோர் அலுவலகம், இழப்பீட்டிற்கான அலுவலகம் ஆகியவற்றின் முன்னேற்றங்களை ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதுடன் இவற்றிற்கான ஆதரவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், அவற்றின் சுதந்திரச்செயற்பாட்டுத் தன்மையை பாதுகாப்பது, அவற்றிற்குத் தேவையான வளங்கள் மற்றும் தொழினுட்பத்தேவைகளைக் கிடைக்கச் செய்வதனூடாக அவற்றின் வினைத்திறனை பெருக்குவது, பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கான இடைக்கால நிவாரணங்களைப் பாலினத்தைக் கவனத்திற்கொண்டு வழங்கத்தக்க வகையில் அவ் அலுவலகங் களை அனுமதிப்பது, அத்துடன் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் பிரச்சினைகளைக் கையாள அனுமதிப்பதன் ஊடாக அக்குடும்பங்கள் தமதுறவுகளின் நிலை மற்றும் நடந்தது என்ன? என்பதை தெரிந்துகொள்ள முடிவதனை ஊக்குவிப்பதுடன்,

4. ஸ்ரீலங்காவிற்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் விரிவான அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், பிறழ்வுகள் தொடர்பான விரிவான பொறுப்புக் கூறும் பொறிமுறையொன்றின் முக்கியத்துவத்தை அழுத்திக் கூறிக்கொண்டு,

5. உள்ளகப் பொறிமுறையில் பொறுப்புக்கூறலின் நிரந்தரமான குறையை குறித்துக்கொள்வதுடன், 22 ஜனவரி 2021 அன்று உருவாக்கப்பட்ட உள்ளக விசாரணை ஆணைக்குழுவானது சுதந்திரத்தன்மைக் குறைபாட்டைக் கொண்டிருந்ததுடன் கடந்த கால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளையும் முன்மொழிவு களையும் மீள்பார்வைக்கெடுக்கும் வலுவைக் கொண்டிருந்ததே யொழிய கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரதூரமான மனிதாபிமான மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறுதலை கணக்கிலெடுக்கவில்லை என்பதனையும் குறித்துக்கொண்டு,

6. பொறுப்புக்கூறுதலில் முன்னேற்றத்தினைக் காண்பதற்காக ஸ்ரீலங்காவில் நிகழ்த்தப்பட்ட மனிதஉரிமை மீறல்கள், பிறழ்வுகள் மற்றும் அதனுடன் இணைந்த குற்றங்கள் தொடர்பான சான்று களைத் திரட்டி பாதுகாப்பதுடன் அவற்றை ஆய்வுக்குள்ளாக்கும் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வதுடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப்பிழைத்தவர்கள் சார்பாக ஸ்ரீலங்காவில் நிகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை மீறல்கள், பிறழ்வுகள் மற்றும் பாரிய மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பான அடுத்தகட்ட பொறுப்புக்கூறும் நடவடிக்கைக்குத் தேவையான தந்திரோபாயங்களைக் கணித்துக் கொள்வதற்காகத் தகவல்களையும் சான்றுகளையும் சேகரித்து, ஒன்றிணைத்து, பகுப்பாய்ந்து பாதுகாப்பதற்குரிய வலுவை மனிதஉரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகத்திற்கு வழங்குவதை முடிவாக்கிக்கொண்டு, அதனூடாக அங்கத்துவ நாடுகளின் பிரயோகிக்கத்தக்க சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கும் ஏனைய சட்டம் சார் அல்லது வேறுவிதமான முன்னெடுப்புகளுக்கு உதவிகளை வழங்குவதற்கும், ஏற்ற வகையில் பேணுவதற்கும்,

7. கடந்த ஒரு வருடகால நடவடிக்கைகளால் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகளின் நிலை தலைகீழாகிவிடும் என்று எச்சரிக்கப் பட்டுள்ளதனை மிகத்தீவிரமாக கணக்கில் எடுத்துக்கொண்டு, பொது, அரசாங்க நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டின் அதிகரிப்பு, மனித உரிமைகளை பாதுகாக்கும், விருத்தி செய்யும் அமைப்புக்களினதும் நீதித்துறையினதும் சுதந்திரத்தன்மையில் ஏற்பட்டுள்ள அழிவு, முக்கியமான வழக்குகளில் அடையாளப் படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் மீது ஏற்படுத்தப்படும் அரசியல் தடைகள் மற்றும் தண்டனை விலக்களிப்புக்கள், நம்பிக்கை அல்லது சமயத்தினை அனுசரிக்கும் உரிமைகளின் மீது பாதக விளைவை ஏற்படுத்தும் கொள்கைப் பிரகடனங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் இன மக்களின் மீது காட்டப்படும் அதிதீவிர பாரபட்சம், சிவில் சமூகத்தின் மீதான மிரட்டல்கள், கண்காணிப்பு, ஊடக சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உட்பட சனநாயகத்தன்மையில் ஏற்பட்டுள்ள சுருக்கம், அழிக்கப்பட்ட வர்களை நினைவுகூர்வதற்கு மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் மற்றும் அழிக்கப்பட்ட நினைவாலயங்கள், எழுந்தமான மாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளமைகள், கொடூரமானதும் மானுடத்தன்மை அற்றதுமான சித்திரவதைகளுடன் கூடிய தண்டனைகள், பாலினக்கொடுமைகள், பாலியல் துன்புறுத்தல்கள் போன்றவற்றால் மிகச்சொற்ப அளவில் மீட்டெடுக்கப்பட்ட நன்மைகள் அற்றுப்போய்விடும் நிலை, இவைபோன்ற மீள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகிவரும் கொள்கைகள், கோட்பாடுகளால் கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்ற கொடும் விதிமீறல்கள் நிகழும் ஆபத்து போன்றவற்றைக் கவனத்திற் கொண்டும்,

8. கொரோனா தீநுண்மி (கோவிட் 19) இனைதடுக்கும் நடவடிக்கைகளென மேற்கொள்ளப்பட்டவை சமய நம்பிக்கைகளின் சுதந்திரத் தன்மையினை வெகுவாக பாதிப்புக்குள்ளாக்கியதையும், ஏலவே ஓரங்கட்டப்பட்டுள்ள முஸ்லிம் மக்களின் நிலைமைகளை மிக மோசமாக்கியதுடன் கோவிட் தீநுண்மி நோயால் மரணித்த உடலங்களை எரியூட்டியமையானது முஸ்லிம்களையும் ஏனைய சில மத மக்களின் நம்பிக்கைகளையும், சாவடைந்த உடலங்களின் மீது அவர்களுக்கிருந்த உரிமைகளையும் மறுத்ததுடன் மதச் சிறுபான்மையினரை சமத்துவமற்றமுறையிற் கையாண்டமை அவர்களுக்குப் பெருந்துன்பத்தையும் மனஉளைச்சலையும் மோசமாக்கியதை கருத்திற் கொண்டும்,

9. ஸ்ரீலங்கா அரசாங்கமானது கவனத்திற்கொள்ளத்தக்க முக்கிய வழக்குகள் உட்பட கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களை மீறி நிகழ்த்தப்பட்ட அனைத்தையும் மற்றும் மனித உரிமைச்சட்டங்களை மதிக்காது நிகழ்த்தப்பட்டவைகள் தொடர்பாக மிகத்தெளிவானதும் பக்கச் சார்பற்ற முறையிலும் விசாரணைகளை மேற்கொள்வதனையும், குற்றவாளியாக காணப்படுமிடத்து நீதிப்பொறிமுறையினை அவர்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதனை செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டும்,

10. ஸ்ரீலங்காவில் இயங்கும் மனித உரிமை ஆணைக் குழுவானது வினைத்திறனுடனும் சுதந்திரத்துடனும் இயங்குவதை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு எந்தத் தேவைக்காக காணமலாக்கப்பட்டோர் அலுவலகமும், நட்டஈட்டுக்கான அலுவலகமும் உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கத்திற்காக அவை இயங்குவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சிவில் சமூகக்குழுக்கள் எவ்விதமான கண்காணிப்பும் அச்சமும் இன்றி, பாதுகாப்பற்றதும், வெறுப்பேற்றத் தக்கதுமான செயல்கள் எவையுமின்றி சுதந்திரமாக இயங்கும் சூழலை உருவாக்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசானது மனித உரிமைப் பாதுகாவலர் களினதும் சிவில் சமூகச்செயற்பாட்டாளர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் மீது நடாத்தபட்ட யாதாயினும் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டும்,

12. பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வு செய்யுமாறு ஸ்ரீலங்கா அரசை கேட்டுக்கொள்வதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இயற்றப்படுகின்ற எந்தவொரு சட்டமூலமும் ஸ்ரீலங்கா அரசானது கடப்பாடுடையதாக்கப்பட்டுள்ள பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச்சட்ட வரையறைகளுக்கு இணங்கியொழுகும் வகையிலிருக்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொண்டு,

13. சமூகத்தில் சம அந்தஸ்த்தை பெற்றுக்கொள்ளும் வகையில் அனைத்து மதம்சார் நம்பிக்கைகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும் எனவும் பின்பற்றும் சமயங்களின் பன்முகத்தன்மையை பேணத்தக்க வகையில் சமயம்சார் அறிவூட்டலைச் செய்ய உரிய சமயத்தோர் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும் சமய நம்பிக்கைகளுக்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்திக்கொண்டும்,

14. ஆணைக்குழுவினால் விசேட வேண்டுகோள்கள் விடுக்கப் படுமிடத்து அவ்வேண்டுகோள்களை முறைசார் வழிகளில் நிறைவேற்றுவது உட்பட மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட நடவடிக்கைகளுடன் ஸ்ரீலங்கா அரசானது தனது ஒத்துழைப்பைத் தொடர்ந்து நல்குவதை ஊக்குவித்துக்கொண்டு,

15. மேற்கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீலங்கா அரசின் சம்மதத்துடனும் கலந்தாலோசனையுடனும் ஆணையாளர் மற்றும் விசேட தத்துவங்களைப்பெற்றவர்களின் ஆலொசனைகளையும் தொழினுட்ப உதவிகளையும் பெற்றுக் கொள்வதை ஊக்குவித்துக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஸ்ரீலங்காவின் மனித உரிமைகள் தொடர்பான மேற்பார்வை மற்றும் அறிக்கையிடுதலை ஆணையாளர் அலுவலகம் முனைப்பாக்கிக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் ஏற்படுகின்ற முன்னேற்றங்கள் உள்ளடங்கலாக வாய்மொழி அறிக்கையினை இச்சபையின் 48 ஆவது அமர்வினில் வெளிப்படுத்துவதுடன் 49 ஆவது அமர்வில் எழுத்து மூல அறிக்கையை வெளிப்படுத்த வேண்டும் எனவும், பொறுப்புக்கூறலில் மேலும் எவ்வாறு முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற விரிவானதொரு அறிக்கையினை 51 ஆவது அமர்வில் சமர்ப்பித்து இவை இரண்டும் ஓர் ஊடாடும் உரையாடற்சூழலில் விவாதிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் 34/1 – 23 மார்ச் 2017

34/1 ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறுதலையும், மனித உரிமைகளையும் முன்னேற்றுதல்:

மனித உரிமைச்சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தின்படி தனக்குரித்தான தத்துவங்களையும் நோக்கத்தையும் மீள உறுதிப்படுத்திக்கொண்டு, மனித உரிமைகள் தொடர்பான பன்னாட்டு பிரகடனத்தின் படியும் ஏனைய பொருத்தமுடைய பத்திரங்களின் படியும்,

ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தும் நோக்குடன் 01 ஒக்டோபர் 2015 அன்று நிறைவேற்றப்பட்ட மனித உரிமைச் சபையின் பிரேரணை 30/1 இனை மீள வலியுறுத்திக் கொண்டும்,

ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறலையும் மேம்படுத்தும் நோக்குடன் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மனித உரிமைச் சபையின் பிரேரணைகளான 19/2 - 20 March 2012, 22/1 -21 March 2013, 25/1 27 March 2014 ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும்,

அனைத்து மக்களுக்கும் முழுமையான மனிதஉரிமைகளை அனுபவிக்கவும், அடிப்படை சுதந்திரத்துடன் அனைத்து மக்களும் வாழ வழிசமைக்கும் வகையிலும் நாடுகளுக்குள்ள பொறுப்பை மீள உறுதிப்படுத்திக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவின் இறைமை, சுதந்திரம், ஒற்றுமை மற்றும் ஆள்புலக்கட்டுறுதியை உறுதிப்படுத்திக் கொண்டும்,

2016 பெப்ரவரி 6 தொடக்கம் 9 வரை ஐ.நா வின் மனித உரிமை உயர்ஸ்தானிகர் மற்றும் 2016 ஒகஸ்ட் 31 தொடக்கம் செப்டெம்பர் 2 வரை ஐ.நாவின் செயலாளர் நாயகம் ஆகியோர் மேற்கொண்ட ஸ்ரீலங்காவிற்கான பயணங்களை வரவேற்றுக்கொண்டும்,

2015 நவம்பர் 9 தொடக்கம் 18 வரையான காலப்பகுதியில் வலிந்து மற்றும் தன்விருப்பின்றி காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான தொழிற்பாட்டுக்குழு, ஆலோசனைகளை வழங்குவதற்காக வருகைதந்த உண்மை, நீதி, நட்டஈடு மற்றும் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தும் விசேட பதிவாளரின் வருகை, 2016 ஏப்ரல் 29 தொடக்கம் மே 7 வரை நிகழ்ந்த நீதிபதிகளினதும் சட்டவாளர் களினதும் சுதந்திரத்தன்மையை ஊக்குவிக்கும் விசேட பதிவாளர் மற்றும் சித்திரவதை, கொடூரங்கள் மற்றும் மனிதாபிமானமற்ற அல்லது கீழ்நிலைப்படுத்தும் செயல்கள் அல்லது தண்டனை களுக்கு பொறுப்பான விசேட பதிவாளர் ஆகிய இருபாலாரினதும் இணைந்த வருகைகள் மற்றும் 2016 ஒக்டோபர் 10 தொடக்கம் 20 வரை நிகழ்ந்த சிறுபான்மையினரின் விடயங்களுக்கு பொறுப்பான விசேட பதிவாளரின் வருகை ஆகியனவற்றை ஒரு சேர வரவேற்றுக்கொண்டும்,

ஸ்ரீலங்கா அரசானது பிரேரணை 30/1 இனை நடைமுறைப்படுத்து வதற்கு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்பதுடன், இந்நிலையில் தனிச்சிறப்பு வாய்ந்த முன்னேற்றத்தை மேற்படி விடயத்தில் வெளிப்படுத்த வேண்டிய தேவையையும் ஏற்றுக் கொண்டு,

1. தீர்மானம் 30/1 இல் கோரப்பட்டபடி ஐ.நா.வின் மனித உரிமை உயர்ஸ்தானிகரால் 34 ஆவது சபை அமர்வில் முன்வைக்கப்பட்ட விரிவான அறிக்கையை சிலாகித்துக்கொண்டு, 30/1 தீர்மானத்தின் படி இன்னமும் நிறைவேற்றப்படாமலிருப்பவற்றை நிறைவேற்ற ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விசேட நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் ஆகியோருடன் இணங்கி யொழுகும் ஸ்ரீலங்காவின் நடைமுறையை வரவேற்றபடி, ஸ்ரீலங்கா வில் மனித உரிமைகளையும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாக தொடர்ந்து ஸ்ரீலங்காவின் இணங்கியொழுகும் நடத்தையினை ஊக்கப்படுத்திக்கொண்டும்,

3. ஸ்ரீலங்காவில் மனிதஉரிமைகளையும் உண்மை, நீதி, நல்லிண க்கம் மற்றும் பொறுப்புக்கூறலை பாதுகாப்பதற்கும் மேம்படுத்து வதற்கும் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசுடன் கலந்துரையாடியும் அவர்களின் உடன்பாட்டுடனும் ஐ.நா.வின் மனித உரிமைச்சபையின் உயர்ஸ்தானிகரும் விசேட நடைமுறை களுக்குப் பொறுப்பானவர்களும் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டும்,

4. பொறுப்புக்கூறுதல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா.வின் மனித உரிமைச்சபையின் பரிந்துரைகள் மற்றும் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் எவ்வாறு அமுலாக்கப்படுகின்றன என்பதைத் தொடர்ந்து அவதானிப்பது டன் ஐ.நா.சபையின் 37 ஆவது அமர்வில் புத்தாக்கப்பட்ட தகவல்களை எழுத்து மூலமாக முன்வைப்பதுடன், தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு 30/1 தீர்மானத்தின் பரிந்துரைகள் அமுலாக்கப்படுவது தொடர்பாக விரிவான அறிக்கையினை சபையின் 40 ஆவது அமர்வில் முன்வைக்குமாறும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபையின் உயர்ஸ்தானிகரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

56 ஆவது கூட்டம்
23 மார்ச் 2017

(ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் 30/1 – 01 ஒக்டோபர் 2015

01 ஒக்டோபர் 2015 அன்று ஐக்கியநாடுகள் மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

30/1 – ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறுதலையும், மனித உரிமைகளையும் முன்னேற்றுதல் :

மனித உரிமைச்சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தின்படி தனக்குரித்தான தத்துவங்களையும் நோக்கத்தையும் மீள உறுதிப்படுத்திக்கொண்டு, மனித உரிமைகள் தொடர்பான பன்னாட்டு பிரகடனத்தின் படியும் ஏனைய பொருத்தமுடைய பத்திரங்களின் படியும்,

ஸ்ரீலங்காவில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தும் நோக்குடன் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மனித உரிமைச்சபையின் பிரேரணைகளான 19/2 - 20 March 2012, 22/1 -21 March 2013, 25/1 27 March 2014 ஆகியவற்றை கருத்திற்கொண்டும்,

ஸ்ரீலங்காவின் இறைமை, சுதந்திரம், ஒற்றுமை மற்றும் ஆள்புலக்கட்டுறுதியை உறுதிப்படுத்திக் கொண்டும்,

அனைத்து மக்களுக்கும் முழுமையான மனித உரிமைகளை அனுபவிக்கவும், அடிப்படை சுதந்திரத்துடன் அனைத்து மக்களும் வாழ வழிசமைக்கும் வகையிலும் நாடுகளுக்குள்ள பொறுப்பை மீள உறுதிப்படுத்திக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் சுதந்திரமாகவும் அமைதியாகவும் நிகழ்ந்த இரண்டு தேர்தல்களையும் அதனை தொடர்ந்து அமைதியான முறையில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தை வரவேற்பதுடன்,

தேசிய நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் மேம்படுத்தச் சனாதிபதிக்குள்ள அரசியலமைப்புக்கடமைகளை உள்ளடக்கி, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை அமுலாக்குவதுடன் இணைந்த பிரதான நிறுவனங்களின் சுதந்திரத்தன்மை மற்றும் சனநாயக நிர்வாகம் ஆகியவற்றின் பிரயோகங்களைக் கருத்திற் கொண்டும்,

சுதந்திரமான நிறுவனங்கள் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காகவும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் ஸ்ரீலங்கா அரசாங்கம் எடுத்துள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகளை பாராட்டியும்,

அதிகார பிறழ்வுகள், இலஞ்சம், ஊழல் ஆகியன தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுக்களை விசாரணைக் கெடுக்கும் ஸ்ரீலங்காவின் முயற்சிகளை பாராட்டுவதுடன், விலக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும் உரிமைகளை இல்லாது ஒழித்து நல்லாட்சியினை வலுப்படுத்த வேண்டுமாயின் மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணைக்குட்படுத்தி தண்டனை வழங்குதலை வலியுறுத்தியும்,

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுநிர்வாகத்தை உருவாக்கும் முன்னேற்றகரமான முயற்சிகளை வரவேற்றும், மீள்குடியேற்றம், உட்கட்டமைப்பு மற்றும் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசின் முற்போக்கு நடவடிக்கைகளை கருத்திற்கொண்டும், இந்நடவடிக்கைகளுக்கு மேலும் உதவுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையுட்பட சர்வதேச நிறுவனங்களை நோக்கி விடுக்கப்பட்ட அழைப்பை வரவேற்றுக் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசார் (சிவில்) சமூக அமைப்புக்களினதும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களினதும் செயற்பாடுகளுக்கேற்ற வகையிலான சூழல் அமைந்துள்ளதை கருத்திற்கொள்ளும் அதேவேளை நிகழ்ந்து கொண்டிருக்கும் மனிதஉரிமை பிறழ்வுகள் மற்றும் மீறல்கள் தொடர்பாக கரிசனையை செலுத்திக்கொண்டும், குடிசார் சமூக அமைப்பின் அங்கத்தவர்களையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் அச்சுறுத்தும், மிரட்டும் செயல்கள் உட்பட கடத்தல், பாலியல் மற்றும் பால்நிலைப்பட்ட வன்முறைகள் தொடர்பான ஸ்ரீலங்காவின் முயற்சிகளை ஏற்றுக்கொண்டும்,

ஸ்ரீலங்காவில் வாழும் அனைவரும் இன, மத, குல பேதமின்றி ஒன்றிணைக்கப்பட்ட நிலத்தில் அமைதியாக முழுமையான மனித உரிமைகளை அனுபவிக்கும் சூழலை மீள உறுதிப்படுத்திக் கொண்டும்,

பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை அரசானது பன்னாட்டுச்சட்ட திட்டங்களுக்கு அமைவாக, விசேடமாக பன்னாட்டு மனித உரிமைச்சட்டம், பன்னாட்டு அகதிகள் சட்டம் மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் ஆகிய சட்டங்கள் பிரயோகிக்கப்பட வேண்டிய இடங்களில் அவற்றின் பிரயோகங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதை மீள உறுதிப்படுத்திக் கொண்டும்,

வன்முறைகளால் மரணித்த மற்றும் துன்பப்படும் அனைத்து இன, மத மக்களினதும் இழப்புக்களை ஏற்றுக்கொண்டு அமைதியை பிரகடனப்படுத்திய பெப்ரவரி 4, 2015 பிரகடனத்தை வரவேற்றும்,

நீதி, மற்றும் நீதி சாராப்பொறிமுறைகளை முழுவதுமாக ஒருங்கிணைத்து செயற்திறன்மிகு வழிகளில் கடந்தகால நிகழ்வுகளைக் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தை அழுத்தமாகக் கூறிக்கொண்டும், அத்துடன் தனிநபர்களுக்குரிய தண்டனைகள், நட்டஈடு, உண்மைகளைக் கண்டறிதல், நிறுவனங் களைப் புனரமைத்தல், அரச ஊழியர்களினதும் அலுவலர் களினதும் பொருத்தப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் அல்லது யாதாயினும் ஒரு சிறப்பான வழியில் பொறுப்புக்கூறுவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தல், நீதியை வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல், நல்லிணக்கத்தையும் ஆற்றுப்படுத் தலையும் மேம்படுத்தல், பாதுகாப்பு முறைமைகளை சுதந்திரமாக கண்காணிப்பதை உருவாக்குதல், அரசின் மீதான நம்பிக்கையை மீளமைத்தல், சர்வதேச மனித உரிமைச் சட்டத்திற்கமைவாக சட்ட ஆட்சியை மேம்படுத்தி வன்முறைகளும், பிறழ்வுகளும் மீள நிகழாதவகையில் தடுத்தல், இவையாவற்றையும் நிகழத்தத்தக்க வகையில் அரசானது தனது முன்முயற்சியை வெளிப்படுத்தி நாட்டமுடையவர்கள் அனைவருடனும் பரந்த வகையில் கலந்துரையாடல்களையும் பேச்சுக்களையும் நிகழ்த்துவதை வரவேற்றும்,

கடந்தகால வன்முறைகளுக்கும் பிறழ்வுகளுக்கும் பரிசாரணையை வழங்கும் பொறிமுறையானது சிறந்த வகையில் இயங்க வேண்டுமாயின் அப்பொறிமுறையின் சுதந்திரத்தன்மை, பக்கஞ்சாராத வெளிப்படைத்தன்மை, தமது தொழிற்திறன்களிற் கறைபடியாத பண்பை மிக உயர்ந்த மட்டத்தில் பேணியவர்களினால் அப் பொறிமுறை தலைமைதாங்கப்படல், நாட்டமுடையவர்கள் அனைவரினதும் சிந்தனைகளையும் கருத்துக்களையும் உள்வாங் கத்தக்க வகையில் பங்குபற்றுதலுடன் கூடிய கலந்துரையாடல் களை உருவாக்கவும், அவ்வனைத்து நாட்டமுடையவர்களுக்குள் ஆகக்குறைந்தது பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள், இளையோர், மற்றும் பல்வேறு சமய, குல, பிரதேசம் சார்ந்தவர்கள், ஒதுக்கப்பட்ட மக்கள் ஆகியோரைச் சேர்த்துக் கொள்வதையும், உள்நாட்டிலுள்ள அல்லது உள்நாட்டு அறிவுடன் பன்னாட்டில் உள்ளவர்களின் திறன் மிக்க ஆலோசனைகளைப்பெற்று அப்பரிசாரணையை வழங்கும் பொறிமுறையினை சிறப்புற வடிவமைத்து செயற்படுத்துவதைக் கருத்திற்கொண்டும்,

மிகக்கொடும் வன்முறைகளிலும் பிறழ்வுகளிலும் ஈடுபட்டிருந்த போதிலும் தமது புகழினால் பாதுகாக்கப்பட்டுள்ள ஆயுதப் படையினர்களும் ஏனையவர்களும் நடைபெற்ற கொடுமைகளுக்காகப் பொறுப்புக்கூறவேண்டிய நம்பிக்கைதரும் பொறிமுறையினை உருவாக்குவதை கருத்திற் கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகளை மதியாது பெரும் வன்முறைகளில் ஈடுபட்ட வர்களையும், பன்னாட்டுச்சட்டங்களின் கீழ் குற்றமாக வரையறுக் கப்பட்டவையுட்பட பன்னாட்டு மனித உரிமைச் சட்டத்தினையும் மீறி நிகழ்த்தப்பட்ட வன்முறைகளுக்கு பொறுப்பானவர்களின் தண்டனைக்கு உட்படாத உரிமையை நீக்கி அவர்களை தண்டிக்க வேண்டிய பொறுப்பை அரசு கொண்டிருப்பதை மீள ஞாபகப் படுத்தியும்,

உயர்பாதுகாப்பு வலயங்களாக அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை கருத்திற்கொண்டும், உரிமை கொண்ட மக்களுக்கு அந்நிலங்களை மீள வழங்குவதற்கும், சாதாரண குடியானவர்கள் தமது நாளாந்த வாழ்வை மீளமைத்து அமைதியாக வாழ ஏற்படுத்தப்படும் வழிவகைகளுக்கு அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வச் செயற்பாடுகளை வரவேற்றும்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ள முன்னேற்றகரமான பரிந்துரைகளை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தும்,

2015 ஆம் ஆண்டின் மார்ச் 30 தொடக்கம் ஏப்ரல் 03 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த உண்மை, நீதி, நட்டஈடு, மேம்படுத்தல் மற்றும் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தும் செயலணியின் ஐ.நா. விசேட பிரதிநிதியின் ஸ்ரீலங்காப்பயணத்தினையும், நவம்பர் 2015 இல் நிகழவுள்ள விருப்பமின்றியும், வலிந்தும் காணாமலாக் கப்பட்ட ஐ.நா. செயலணியினரின் ஸ்ரீலங்காவிற்கு திட்டமிடப் பட்டுள்ள பயணத்தை வரவேற்றும்,

ஸ்ரீலங்கா முன்னெடுக்காதிருந்த, ஸ்ரீலங்காவில் நிகழ்ந்த பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப் பட்ட 25/1 பிரேரணைக்கு அமைவாக அரசானது பொறுப்புக் கூறுவதற்கான நம்பிக்கைதரத்தக்க தேசிய செயற்பாடொன்றினை ஆரம்பிக்க வேண்டியதை ஏற்றுக்கொண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஐ.நா. மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப்பட்ட 25/1 பிரேரணைக்கு அமைவாக, சபையின் 27 ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் உயர்ஸ்தானிகர் வழங்கிய வாய்மொழிச்சமர்ப்பணம் மற்றும் ஸ்ரீலங்காவில் நிகழ்த்தப்பட வேண்டிய விசாரணைகள் மற்றும் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறுதலையும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிக்கைதனில் கண்டறியப்பட்டவைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவற்றை கணக்கிலெடுத்துக்கொண்டும், ஸ்ரீலங்கா உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டிலும், நீதி, நட்டஈடு மற்றும் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடும் போது மேற்போந்த அறிக்கை சுட்டிக்காட்டியவற்றை கருத்திலெடுத்து செயற்பட வேண்டும் என உற்சாகமூட்டியும்,

2. ஜனவரி 2015 முதலாக ஸ்ரீலங்காவும் ஐக்கியநாடுகள் மனித உரிமைச்சபையின் உயர்ஸ்தானிகரும் ஒத்துழைத்துச் செயற்படுவதை வரவேற்பதுடன், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் தேவையான செயற்பாடுகளில் உண்மையை கண்டறிந்து நீதியை நிலைநாட்டுவதற்கு ஸ்ரீலங்காவுடன் சர்வதேசமும் இணைந்து செயற்படத்தக்க வழிவகைகளை கண்டறிவதை ஊக்கப்படுத்துவதுடன்,

3. பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகவும், அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களினையும் உள்ளடக்கக்கூடிய அரச சாரா நிறுவனங்கள் மற்றும் குடிசார் (சிவில்) சமூக அமைப்புக்கள் ஆகியோரை உள்ளடக்கி பரந்த அளவில் தேசிய ரீதியில் கலந்துரையாடல்களை நிகழ்த்தி உண்மையைக்கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, நட்டஈடு மற்றும் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தத் தக்கவகையில் ஸ்ரீலங்கா அரசு செயற்படுவதை ஆதரிப்பதுடன் அச்செயற்பாடுகளை வடிவமைப்பதிலும் அமுலாக்குவதிலும் சர்வதேச நிபுணத்துவ உதவி மற்றும் சிறப்புச்செயற்பாடுகளை பெறுவதை ஊக்கப்படுத்தியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நீதி, மற்றும் நீதி சாரா பொறிமுறைகளை முழுவதுமாக ஒருங்கிணைத்து செயற்திறன் மிகு வழிகளில் கடந்தகால நிகழ்வுகளைக் கையாள்வதற்கு முயலும் ஸ்ரீலங்கா அரசின் முயற்சிகளை வரவேற்பதுடன் உண்மையைக்கண்டறிதல், நீதியை நிலைநாட்டுதல், நட்டஈடு மற்றும் மீளநிகழாது இருப்பதை உறுதிப் படுத்துதல் தொடர்பான ஆணைக்குழு, காணாமற்போனோர் அலுவலகம், நட்டஈட்டு அலுவலகம் ஆகியவற்றை உருவாக்குதல், மேற்கூறப்பட்ட அமைப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் சுதந்திரமாக நிதியுதவி, ஆதன மற்றும் தொழிநுட்ப உதவிகளை ஐ.நா. மனித உரிமைச்சபை உட்பட, சர்வதேச நிறுவனங்களிடம் ஸ்ரீலங்கா பெற்றுக்கொள்வதை ஊக்குவித்தல், இக்கடப்பாடுகள் நிறைவேற்றப்படுமிடத்து, நல்லிணக்கத்தை உருவாக்குதல், நடாத்தப்பட்ட பாரிய அத்துமீறல்களுக்கான பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணமுடியும் என்பதை வலியுறுத்தியும்,

5. தமிழீழ விடுதலைப்புலிகளால் நிகழ்த்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் மீறல்கள் தொடர்பாக நல்லிணக்கத்திற்கும் பொறுப்புக்கூறலுக்குமான செயன்முறையொன்றின் தேவையை ஏற்றுக்கொண்டும்,

6. ஸ்ரீலங்காவின் நீதிப்பொறிமுறை மீது அனைத்து இன மக்களும் நம்பிக்கைகொள்ள வேண்டுமாயின் சட்ட ஆட்சியின் இயங்கு நிலை பொறுப்புக்கூறுதலுக்கு முக்கியமானது என்பதை ஸ்ரீலங்கா அரசானது ஏற்றுக்கொண்டுள்ளதை வரவேற்பதுடன், மனித உரிமை மீறல்கள் மற்றும் பிறழ்வுகள், சர்வதேச மனித உரிமைச்சட்ட மீறல்கள் போன்றவற்றை விசாரிக்கவென பிரயோகிக்கத்தக்க விடயங்களில் விசேட நீதிப் பொறிமுறை மற்றும் நீதிமன்றங்களை உருவாக்க முயற்சிக்கும் ஸ்ரீலங்கா அரச செயற்றிட்டங்களைக் குறித்து வாழ்த்துவதுடன், கடப்பாடுடைய, பக்கஞ்சாராதவர்களால் தலைமை தாங்கப்படும் நீதி மற்றும் வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையையும் நம்பத்தகுதன்மையையும் உறுதி செய்துகொண்டு, ஸ்ரீலங்காவின் நீதிப்பொறிமுறையில் அணிசேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் விசேட நீதிபதிகள் மற்றும் பன்னாட்டு நீதிபதிகள், பாதுகாப்புச்சட்டவாளர்கள், விசாரணையாளர்கள் மற்றும் அங்கீ கரிக்கப்பட்ட வழக்குத்தொடுனர்கள் ஆகியோரினது பங்களிப்பை பெற்றுக்கொள்வதை மேலும் உறுதி செய்துகொண்டும்,

7. தனது கடப்பாடுகளை நிறைவேற்றத்தக்கவகையில் ஸ்ரீலங்கா வின் உள்நாட்டுச்சட்டங்களில் மாற்றங்கள் செய்வதை ஊக்குவிப்ப துடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள், மற்றும் ஐ.நா. வின் மனித உரிமைச் சபையின் உயர்ஸ்தானிகரால் அறிக்கையிடப்பட்ட விடயங்கள், முக்கியமாக சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றத் தக்கவாறு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது விசாரணைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்ட காலப்பகுதியிலும் உள்நாட்டுப் பொதுச்சட்டம், சர்வதேச மனித உரிமைச் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டச் சரத்துக்களை மீறி முழுமொத்தக்குற்றங்களை நிகழ்த்திய வர்களை விசாரணைக்குட்படுத்தி தண்டனை வழங்குவதை ஊக்குவித்தும்,

8. நிலைமாறுகால நீதிச்செயன்முறையின் கட்டங்களில் ஒன்றான பாதுகாப்புக்கட்டமைப்பில் மீள்ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வ தற்கு ஸ்ரீலங்கா அரசை ஊக்குவிப்பதுடன், இச்செயற்பாடானது ஸ்ரீலங்காவின் படைத்தரப்புக்களின் புகழையும் திறனையும் விருத்தி செய்யத்தக்கது என்பதுடன், நம்பத்தகு நிர்வாக நடைமுறை யொன்றின் கீழ் மாபாதகக் குற்றங்களான மனித உரிமைகளை மீறிய, மனித உரிமைப் பிறழ்வுகளை மேற்கொண்ட அல்லது சர்வதேச மனித உரிமைச்சட்டத்தினை மீறியதாகக் கண்டறியப் பட்ட பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப்பிரிவினர் எவரொருவரும் பாதுகாப்புத்தரப்பினுள் இருப்பதற்கோ அல்லது தேர்வு செய்யப் படுவதற்கோ வாய்ப்பளிக்காமை, சகல ஸ்ரீலங்கா நாட்டவரினதும் மனித உரிமைகளை விருத்தி செய்வது மற்றும் பாதுகாப்பது தொடர்பான கருத்தாழம் மிக்க கவனத்தை ஊக்குவித்து பயிற்சிகளை வழங்குவதுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சாட்சியாளர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக மிகவும் அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஸ்ரீலங்காவின் சட்டத்தை வரவேற்பதுடன், இவ்வகையான அடிப்படை பாதுகாப்பு நுட்பங்களை வலுப்படுத்தத்தக்க வகையில் இச்சட்டத்தில் மேலும் சில விசேட உள்ளீர்ப்புக்களை செய்வதன் ஊடாக நீதிபதிகளையும் வழக்குத்தொடுனர்களையும், விசாரணையாளர்களையும், சாட்சிகளையும் மேலும் வினைத்திறனுடன் பாதுகாக்க வேண்டும் என ஊக்குவிப்பதுடன்,

10. கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீளவழங்க எடுக்கப் பட்டுள்ள ஆரம்பநிலை நடவடிக்கைகளை வரவேற்பதுடன், உரிமையுள்ள சாதாரண மக்களுக்கு அக்காணிகள் வழங்கப் படுவதை விரைவுபடுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா அரசை உற்சாகப் படுத்துவதுடன், சாதாரண மக்களின் நாளாந்த வாழ்வியலை வழமையானதாக்கவும், அவர்களது வாழ்வாதாரங்களை மீள் இயங்குநிலைக்குக் கொண்டு வரவும், சாதாரண மனித வாழ்வியலு க்குள் நிகழும் இராணுவப் பிரசன்னத்தை நீக்குவதற்கும், நிலத்தின் பயன்பாடு மற்றும் உரிமைகள் தொடர்பாக ஆற்ற வேண்டிய பெரும் பணிகளை ஆற்றி முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அவ்வகை நடவடிக்கைகளில் பொது மக்களின் முழுப்பங்களிப்புடன் விசேடமாக சிறுபான்மையினரின் குடிசார் (சிவில்) சமூகப்பிரதிநிதிகள் பங்குபற்றுதலின் முக்கியத்துவத்தை அழுத்திக்கூறிக்கொண்டும்,

11. ஊடகவியலாளர்கள், மனித உரிமைக்காப்பாளர்கள், சிறுபான்மைச்சமயக்குழுக்களின் அங்கத்தவர்கள், ஏனைய குடியார் (சிவில்) சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்களின் மீதும் வணக்கத்தலங்களின் மீதும் தனிநபர்களாலும் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதை ஊக்குவிப்பதுடன் அவ்வாறான தாக்குதல்களை நிகழ்த்தியவர்களை அத்தாக்குதல்களுக்கு பொறுப்பாக்கி நடவடிக்கை எடுப்பதுடன் இவ்வகையான தாக்குதல்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பயங்கரவாத தடுப்புச்சட்டம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை மீள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கடப்பாட்டை வரவேற்பதுடன் பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சர்வதேசத்தில் தற்போதுள்ள சிறந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு வரைய முற்பட்டுள்ளதையும் வரவேற்று,

13. வலிந்து காணாமலாக்கப்படுதலை தடைசெய்யும் பன்னாட்டு நடைமுறை வரைபை ஸ்ரீலங்கா அரசாங்கம் காலதாமதமின்றி ஏற்றுக்கொண்டும், ஒப்பமிட்டு அதனை நடைமுறைப்படுத்தவும் முனைந்துள்ள கடப்பாட்டை வரவேற்பதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்படுவதை குற்றவியலாக்கவும், காணாமலாக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாகச் சான்றிதழ் ஒன்றை வழங்கவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை களையும் வரவேற்று,

14 முன்னைய நாட்களில் உருவாக்கப்பட்ட சனாதிபதி ஆணைக் குழுக்களால் கையளிக்கப்பட்ட அறிக்கைகளை பொதுமக்களின் பார்வைக்கு விட ஸ்ரீலங்கா அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் வரவேற்று,

15. மனித உரிமை மீறல்கள், பிறழ்வுகள் மற்றும் சர்வதேச மனித உரிமைச்சட்ட மீறல்கள் போன்றவை தொடர்பான தகவல் திரட்டுக்களை அரச அமைப்பிலோ அல்லது தனியார் நிறுவனங்க ளிலோ சேமித்து வைப்பதற்கான விரிவான திட்டமிடலையும், பொறிமுறையையும் ஸ்ரீலங்கா விருத்தி செய்ய வேண்டும் என்பதை ஊக்குவித்தும்,

16. அரசியற்தீர்வுக்காக ஸ்ரீலங்கா அரசால் எடுக்கப்பட்டுவரும் அரசியலமைப்புச்சட்ட படிமுறைகளை வரவேற்பதுடன்அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தை நிகழ்த்துவதன் ஊடாக அரசு தனது கடப்பாட்டை நிறைவேற்றுவதை ஊக்குவித்து, இந்நடவடிக்கை யானது நல்லிணக்கத்தின் ஒரு பாகமாக இருப்பதுடன், அனைத்து குடிமக்களாலும் முழுச்சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்க வழிசமைப்பதுடன், ஸ்ரீலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 13 இன் படி அனைத்து மாகாண சபைகளும் முழு வினைத்திறனுடன் இயங்குவதை அரசு உறுதிப்படுத்துவதை ஊக்குவித்தும்,

17. பாலியல் பிறழ்வுகள், வன்புணர்வுகள், சித்திரவதைகள் உட்பட சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள், சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு பாதுகாப்புப் படைப்பிரிவுகள் அனைத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவ்வாறான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்படுவர் என்பதையும் அறிவுறுத்த ஸ்ரீலங்கா அரசு எடுத்துள்ள முயற்சிகளை வரவேற்பதுடன், சித்திரவதைகள், பாலியல், பால்நிலை வன்முறைகள் தொடர்பாக கிடைக்கும் அனைத்து அறிக்கைகள் தொடர்பாகவும் அரசு கவனத்திலெடுத்துச் செயற்படவேண்டும் என்பதை ஊக்குவித்தும்,

18. மனிதஉரிமை, பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் உட்பட மனித உரிமைச்சபையின் விதப்புரைகள் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளை அளவிடுமாறு மனித உரிமைச் சபையின் உயர்ஸ்தானிகரைக் கேட்டுக்கொள்வதுடன், 32 ஆவது ஐ.நா. மனித உரிமைச் சபை அமர்வுகளில் அவ்அளவீடுகள் தொடர்பாக வாய்மொழியறிக்கையொன்றை முன்வைக்குமாறும், பின்னர் தொடர் கலந்துரையாடல்களை நடாத்தி தற்போதைய பிரேரணையினை அமுலாக்கியுள்ளமை தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை 34 ஆவது அமர்வில் முன்வைக்குமாறும் கேட்டுக்கொண்டு

19. விசேட நடைமுறைகளுக்குப் பொறுப்பானவர்களின் வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து நடப்பதுடன் அவர்களுடன் ஒத்துழைத்து செயற்படுமாறு ஸ்ரீலங்கா அரசை ஊக்குவிப்பதுடன்,

20. மேற்கூறப்பட்ட விடயங்களை அமுலாக்கம் செய்வதற்கு தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஸ்ரீலங்கா அரசுடன் கலந்துரையாடியும் அவர்களின் உடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடனும் ஐ.நா வின் மனித உரிமைச்சபையின் உயர்ஸ்தானி கரும் விசேட நடைமுறைகளுக்குப் பொறுப்பானவர்களும் வழங்குவதை ஊக்குவிக்கின்றோம்.

40 ஆவது கூட்டத்தொடர்
1 ஒக்டோபர் 2015
(ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் S-11/1 - 27 மே 2009

S-11/1 *மனித உரிமைகளினை பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்குமான ஸ்ரீலங்காவிற்கான உதவிகள்*

மனித உரிமைச்சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தின்படி தனக்குரித்தான தத்துவங்களையும் நோக்கத்தையும் மீள உறுதிப்படுத்திக்கொண்டு, மனித உரிமைகள் தொடர்பான பன்னாட்டு பிரகடனத்தின் படியும் ஏனைய பொருத்தமுடைய பத்திரங்களின் படியும்,

அரசொன்றின் உள்நாட்டு சட்டவிடயதானங்களுக்குள் அடங்குகின்ற விடயங்களுக்குள் தலையிடுவதில்லை என்ற விதியுட்பட பட்டயத்தின் அகவிதி 1 மற்றும் 2 ஆகிய வற்றிட்கமைவாக ஐ.நா. சபையின் நோக்கத்தையும் குறிக்கோள்களையும் மீள உறுதிப்படுத்திக்கொள்வ துடன்,

15 மார்ச் 2016 இல் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட 60/251 *ஆம் இலக்க தீர்மானத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு,*

மனிதஉரிமைச்சபையில் அமைப்புக்களை உருவாக்குதல் தொடர்பாக இயற்றப்பட்ட 5/1 *மற்றும்* 5/2 *தீர்மானங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு,*

அனைத்து மக்களும் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளவும், இடம்பெயர்ந்துள்ள மக்கள் உட்பட அனைவருக்கும் பாரபட்சமின்றிய மனிதாபிமான உதவிகள் கிடைக்க வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டிய கடமையையும் பொறுப்பையும் அரசு கொண்டிருப்பதை மீள ஞாபகப்படுத்திக்கொண்டு,

இயற்றப்பட்ட பிரேரணைகள் 6/28, 7/7, 10/15 ஆகியவற்றின் பாற்பட்டு இயற்றப்பட்ட 2/112 இன் முடிவான தீர்மானத்தையும் கருத்திற் கொண்டும், பொதுச்சபையில் நிகழ்த்தப்பட்ட பிரேரணைகளான 57/219, 58/187, 59/191, 60/158, 61/171, 62/159 மற்றும் 63/185 ஆகியவற்றை மீளஞாபகப்படுத்திக்கொண்டு, ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகள் மனித உரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகளை விருத்தி செய்வதற்காற்றும் பங்களிப்புக்களை வரவேற்றுக் கொண்டும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மற்றும் மனித உரிமைச்சட்டங்களை நாடுகள் மதிப்பளிப்பதை மீள உறுதிப்படுத்திக்கொள்வதுடன்,

ஸ்ரீலங்காவின் இறைமை, சுதந்திரம், ஒற்றுமை மற்றும் ஆள்புலக் கட்டுறுதியை உறுதிப்படுத்திக்கொண்டும்,

தமிழீழ விடுதலைப் புலிகளால் குடிமக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் பொதுமக்களை பாதுகாப்புக்கவசங்களாக பயன்படுத்தும் நடத்தைகளையும் வன்மையாகக் கண்டிப்பதுடன்,

மனித உரிமைகளை விருத்திசெய்வதும் பாதுகாப்பதும் கூட்டிணை வுத் தத்துவத்தினடிப்படையில் அனைத்து மாந்தருக்கும் பயனளிக் கத்தக்க வகையில் அரசுகள் தமது மனித உரிமைக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நேர்மையான பேச்சுக்களில் ஈடுபடுவதை ஏற்றுக்கொண்டும்,

போர் நடவடிக்கைகள் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு, தமது விருப்பத்திற்கு மாறாக விடுதலைப்புலிகளால் பணயக் கைதி களாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த பல பத்தாயிரம் மக்களை மீட்டெடுத்த ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கையை வரவேற்பதுடன், அனைத்து ஸ்ரீலங்கா வாழ் மக்களினதும் பத்திரத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியதையும் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முயற்சிக்கும் நடவடிக்கைகளையும் வரவேற்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தீர்வே நிரந்தரத்தீர்வாக இருக்காது என்றும், நிரந்தரத் தீர்வாக அரசியல் தீர்வொன்றினை 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதன் ஊடாக நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக் கத்தையும் நாட்டில் உருவாக்கவிரும்புவதாக ஸ்ரீலங்காவின் சனாதிபதி வழங்கியுள்ள மீளுறுதியையும் ஒருங்கே வரவேற்று,

போர் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ள நிலையில் மனித உரிமையின் அடிப்படையில் முதன்மைபெறுவது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உட்படப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, நிவாரணமும் புனருத்தாரனமுமே என்பதை வலுவாக கூறிக்கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் உட்கட்டுமானங்களையும் மீளக்கட்டியெழுப்புவதையும் வலியுறுத்திக்கொண்டு,

ஸ்ரீலங்கா அரசு மற்றும் ஐ.நாவின் உதவி நிறுவனங்கள் மூலமாக அடிப்படை மனிதாபிமான உதவிகளான உணவு, மருத்துவம் கழிவகற்றல், சுத்தமான குடிநீர் மற்றும் மருத்துவக்கவனிப்பு போன்றவற்றை இடம்பெயர்ந்தோருக்கு வழங்குவதை ஊக்கப் படுத்திக்கொண்டு,

அடுத்துவரும் ஆறு மாதங்களுக்குள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மொத்தமாக மீளக்குடியேற்றுதல் என்ற ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்பை ஊக்கப்படுத்திக்கொண்டு, ஸ்ரீலங்காவின் கிழக்கு மாகாணத்தில் சிறுவர் போராளிகளை வெற்றிகரமாக புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைத்ததனை வரவேற்றுக் கொண்டு,

ஸ்ரீலங்கா அரசானது தொடர்ச்சியாகவும் வெளிப்படையாகவும் அங்கு நிகழும் மனித உரிமைகள் தொடர்பாக மனித உரிமைச் சபைக்கு வெளிப்படுத்துதற்காக ஒருங்கிணைந்து செயற்படுவதை ஏற்றுக்கொண்டு,

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளை நிறைவு செய்யச் ஸ்ரீலங்கா அரசானது எடுத்துள்ள நடவடிக்கைப் படிமுறை செயற்பாடுகளை மெச்சிக்கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எல்லா மனிதஉரிமைகளையும் பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் ஸ்ரீலங்கா தொடர்ந்து நிகழ்த்தும் கடப்பாடுகளை வரவேற்பதுடன், சர்வதேச மனித உரிமைச்சட்டத்தின் நியமங்களை கருத்திற்கொண்டு அரசானது தனக்கிருக்கும் மனித உரிமை கடப்பாடுகளைப் பற்றி நிற்பதை ஊக்குவித்துக் கொண்டு,

3. பொருத்தமுடைய ஐ.நா.வின் அமைப்புக்களுடன் ஸ்ரீலங்கா அரசினது கூட்டிணைந்த செயற்பாடுகளை மேலும் தொடர்வதை ஊக்கப்படுத்தி கொண்டு, அக்கூட்டிணைப்புச் செயற்பாட்டின் ஊடாக ஐ.நா. நிறுவனங்களின் முழுத் திறமையையும் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து அடிப்படை மனிதாபிமான உதவிகளுள் குறிப்பாக சுத்தமான குடிநீர், கழிவகற்றல், உணவு, மருத்துவம் மற்றும் மருத்துவக் கவனிப்பு போன்றவற்றை இடம்பெயர்ந்தோருக்கு கிடைப்பதை ஊக்கப்படுத்திக்கொண்டு,

4. அடுத்துவரும் ஆறு மாதங்களுக்குள் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதாக விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலை வரவேற்பதுடன் அவ்வாறு மீளக்குடியமர்த்தப்படும் மக்கள் தேசத்திற்குரிய, குலத்துக்குரிய, சமயத்திற்குரிய, மொழிச்சிறுபான்மையினர் உரிய மரியாதையுடன் மீளக்குடியமர்த்தப்படுவதை ஊக்கப்படுத்திக் கொண்டு,

5. உள்ளக இடப்பெயர்வுகளுக்க ஆளான மக்கள் உட்பட கடந்த காலமுரண்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உடனடி உதவிகளை வழங்கும் பொருட்டு பன்னாட்டு மனிதாபிமான உதவி நிறுவனங்கள் தமக்குத் தேவையான அளவு செயற்படுவதற்கு அனுமதியளித்த ஸ்ரீலங்கா அரசின் கடப்பாட்டினை ஏற்றுக்கொண்டு, மேலும் செயற்பாடுகளை எளிதாக நிகழ்த்தத்தக்க வகையில் ஸ்ரீலங்காவின் அதிகார அலகுகள் தமது செயன்முறைகளை முன்னெடுப்பதை ஊக்கப் படுத்திக்கொண்டு,

6. முன்னாள் சிறுவர் போராளிகள் மற்றும் அரசினால் உருவாக்கப்பட்ட அரச அங்கீகாரமற்ற ஆயுதக்குழுக்களின் அங்கத்தவர்கள் ஆகியோரை நிராயுதபாணிகளாக்கி, அவர்களது கூட்டிணைவை கலைத்து, அவர்களுக்கு அறிவூட்டுவதன் ஊடாகப் புனர்வாழ்விற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தி விசேடமாக பெண்களை அவர்களது இயலுமை மற்றும் உரிமைகள், தேவைகள் ஆகியவற்றை கணக்கிலெடுத்து, அவர்களை உள, உடல் ரீதியாக மீளெழுப்பி சமூகத்துடன் அவர்களை ஒன்றிணைக்கும் பணிகளில் ஐ.நாவின் பொருத்தமான நிறுவனங்களுடன் இணைந்து ஸ்ரீலங்கா செயலாற்ற முன்வர வேண்டும் என்பதை ஊக்குவித்தும்,

7. எவ்விதமான பாகுபாடுகளையும் இனச்சிறுபான்மையினருக்கு எதிராகக் காட்டாமல் அவர்கள் தடையின்றி அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிப்பதை உறுதிப்படுத்தத்தக்கவகையில் ஸ்ரீலங்கா அரசின் செயற்பாடுகளில் உறுதித்தன்மையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டும்,

8. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை பெற்றுக் கொள்வதில் ஸ்ரீலங்கா அரசு ஐ.நாவின் அமைப்புக்கள் மற்றும் சர்வதேசத்தின் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்றுவதை வரவேற்றுக்கொண்டு, ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து அனைத்து அமைப்புக்களும் இயங்க வேண்டும் என்பதை ஊக்கப்படுத்திக்கொண்டு,

9. மனிதாபிமான விடயங்கள் தொடர்பான ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமை விவகாரங்களுக்கான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி ஆகியோரின் ஸ்ரீலங்காவிற்கான அண்மைக்கால வருகைகளை வரவேற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடையின்றி கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக தொடர்ந்து கூட்டுறவை வழங்க வேண்டும் என ஊக்கப் படுத்திக்கொண்டு,

10. ஸ்ரீலங்கா சனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.நா செயலாளர் நாயகம் ஸ்ரீலங்காவிற்கான வருகையை நிகழ்த்த விருப்பதை வரவேற்றுக்கொண்டு, இப்பயணத்தின் முடிவில் இருதரப்பும் இணைந்து தம்மிடையே எட்டப்பட்ட உடன்பாடுகள் தொடர்பாக வெளியிட இருக்கும் அறிக்கையை ஏற்றுக்கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அனைத்து இன, மதத்தவரின் உரிமைகளை மதித்து, அவர்களிடையே நிரந்தர சமாதானத்தையும் அபிவிருத்தியையும் உருவாக்கக்கூடிய அரசியற் தீர்வொன்றைக் கண்டுகொள்ளும் முனைப்புடன் அனைத்துப் பகுதியினருடனும் ஸ்ரீலங்கா அரசானது பரந்த பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்ற தீர்மானத்தை வரவேற்றுக்கொண்டு, அனைத்து அக்கறையுடைய தரப்பினரும் இக்கலந்துரையாடல்களிற் கலந்துகொள்ளவேண்டும் என வரவேற்றுக் கொண்டு,

12. அபிவிருத்தியை நோக்கி நகரவும், வறுமைக்கு எதிராகப் போராடவும் தேவையான உத்தியோகபூர்வ உதவிகள் உட்பட நிதி உதவிகளையும் வழங்கி ஸ்ரீலங்கா அரசு தனது மீள்கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்த இணைந்து செயற்படுமாறு சர்வதேச சமூகத்தை வற்புறுத்துவதுடன், கலாசார, பொருளாதார, சமூக உரிமைகள் உட்பட அனைத்து மனித உரிமைகளினதும் விருத்தியையும் பாதுகாப்பையும் தொடர்ந்து உறுதிப்படுத்துமாறும் வற்புறுத்துகின்றது.

3 வது கூட்டம் - மே 27, 2019
வாக்கெடுப்பில் 29 வாக்குகள் ஆதரவாகவும் 12 வாக்குகள் எதிராகவும் 6 வாக்குகள் அளிக்கப்படாமலும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக - அங்கோலா, அசர்பைஜான், பஹ்ரென், சாம்பியா, பங்களாதேஸ், பொலிவியா, பிரேசில், புர்கினோபாஸோ, கெமரூன், சைனா, கியூபா, டிஜிபூட்டி, எகிப்து, கானா, இந்தியா, ஜோர்தான், மடகஸ்கார், மலேசியா, நிக்கரகுவா, நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பீன்ஸ், கட்டார், ருஸ்யக்கூட்டரசு, சவூதி அரேபியா, செனகல், தென்னாபிரிக்கா, உருகுவே, இந்தோனேசியா,

எதிராக - பொஸ்நியா, கனடா, சிலி, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மெக்சிக்கோ, நெதர்லாந்து, சலோவோக்கியா, சுலோவேனியா, சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்து.

வாக்களிக்காதவை - ஆர்ஜென்டீனா, கபோன், ஜப்பான், மாருட்டீஸ், கொரியக் கூட்டரசு, உக்ரேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா, ஒன்ராறியோ மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழினப்படுகொலை அறிவூட்டல் வார முன்மொழிவு - 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு ஆசியாவை விடுத்து உலகில் வேறு எங்கிலும் இல்லாத அளவு பெருமளவு ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் மாகாணமாக கனேடிய ஒண்டாரியோ மாகாணம் திகழ்கின்றது. இம்மாகாணம் முழுவதும் தமிழர்கள் பரவி வாழ்ந்தாலும் ரொரண்டோவில்தான் பெருமளவு தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் இம் மாகாணத்தின் சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

ஸ்ரீலங்காவின் வடக்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள தமது தாயகத்தில் வாழும் ஒண்டாரிய தமிழர்களின் குடும்பங்கள் சொல்லெணாத் துயரங்களைத் தற்போதும் அனுபவித்து வருகின்றனர். அவர்கள் தமது அன்புக்கு உரியவர்களை இழந்திருக்கின்றார்கள், தமக்கு எதிராக 1983 தொடக்கம் 2009 வரை நீடித்த உள்நாட்டுப்போரின் போது ஸ்ரீலங்கா அரசின் பின்புலத்துடன் நிகழ்த்தப்பட்ட, முக்கியமாக 2009 இல் உச்சம் பெற்ற இனப்படுகொலையினால் உளவியல் மற்றும் பௌதீக மனப்பிறழ்வைத் தாங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இனமொன்றின் அடையாளத்தை, அதன் கலாசாரத்தை, சமயக்குழுவொன்றை முற்றாக அழித்துவிடும் எண்ணங் கொண்டு திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி நடாத்திமுடிக்கப் படும் கொலைகளையே இனப்படுகொலை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை நடவடிக்கையானது 1948 இல் ஸ்ரீலங்கா தனது சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதில் இருந்து ஆட்சிக்கு வந்த சிங்கள - பௌத்த மேலாதிக்க கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், காணிப் பறிப்புக்கள், இனச்சுத்திகரிப்பு போன்றவற்றால் முன்னெடுக்கப்பட்டன.

மே 2009 இல் மட்டும் சுமார் 40,000 தொடக்கம் 75,000 வரையான தமிழ்ப் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஏனைய மதிப்பீடுகளோ 146,679 பேர் கொல்லப்பட்டவர்கள் எனத்தெரிவிக்கின்றன. இந்தத் தொகையானது 2009 ஆண்டில் மட்டும் மே 18 உடன் முடிவிற்கு வந்த உள்நாட்டுப்போரின் போது கொல்லப்பட்டவர்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதன்படி பல்லாண்டுகாலமாகத் தொடரும் இனப்படுகொலை நடவடிக்கைகளினால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்களின் எண்ணிக்கை இத்தொகையினை விட மிக அதிகமானது.

இதற்கும் மேலதிகமாக ஸ்ரீலங்கா அரசாங்கமானது மிகத் துல்லியமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளான வாக்களிப்புப் பறிப்பின் மூலம் தமிழ் மக்கள் தமக்குரித்தான வாக்களிப்புரிமையை இழக்கின்றதுடன் தங்களது மொழியை தக்கவைக்கும், கலாசார த்தை சமயத்தைப் பின்பற்றும் உரிமைகளையும் இழக்கின்றனர். உதாரணமாக 29 வீதமான தமிழர்கள் தமிழ் மொழியை பின்பற்றி வந்த நிலையில் 1956 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் சிங்களத்தை அலுவலக மொழியாகப் பிரகடனஞ் செய்தது. இதனால் ஸ்ரீலங்காவின் பொதுச்சேவையில் பங்குபற்று வதற்கான பெரும் இடர்பாடுகளை தமிழினம் எதிர்கொண்டது.

இனப்படுகொலையினை, மிகக்கொடூர நடவடிக்கைகள் மற்றும் கொலைகளின் ஊடாகவே மேற்கொள்ள முடிந்தது என்பதனை வெளிப்படையாக அங்கீகரிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

ஆனால் இவ்வாறு அங்கீகரிப்பது மட்டும் கொல்லப்பட்ட உயிர் களிற்கு ஈடாகாது என்றாலும் கூட அவ்விழப்புக்களால் பாதிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்களை ஆற்றுப்படுத்தவும் நல்லிணக்கத்திற்குள்ளாக்கவும் எடுக்கப்படும் முதலாவது முயற்சியாக இவ் அங்கீகரிப்பு இருக்கின்றது என்ற நம்பிக்கையை விதைக்க முடியும். மிகவும் முக்கியமாக, தமிழினப் படுகொலையை அங்கீகரிப்பதானது இவ் இனப்படுகொலை உட்பட உலக வரலாற்றில் நிகழ்ந்துள்ள அனைத்து இனப்படுகொலைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இவ்வாறான மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவுமான எமது கூட்டு முயற்சி என்பதை உறுதிப்படுத்தவே.

எனவே, மாண்புமிகு அரசியே, ஒன்டாரியோ மாகாணச்சட்டவாக்க சபையினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாகவும், அவர்களின் அனுமதியுடனும் பின்வருவன பிரயோகத்திற்கு உரித்தாகின்றன:

1. தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரம்-

1. வருடத்தின் மே 18 ஆம் திகதியுடன் முடிவடையும் அவ்வாரத்தை தமிழினப்படுகொலை அறிவுட்டல் வாரமாகப் பிரகடனஞ் செய்வது

2. அவ்வாரத்தில் அனைத்து ஒன்ராரியோ மக்களும் உலக வரலாற்றில் இடம் பெற்ற தமிழினப்படுகொலை உட்பட அனைத்து இனப்படுகொலைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளவும், விழிப்புணர்வைப் பெறவும் முயற்சிக்க வேண்டும் என்பதை ஊக்கப்டுத்துதல்.

2. பிரயோகத்திலிடப்படும் நாள்

மாட்சிமையின் அனுமதி கிடைக்கப்பெறும் நாளில் இருந்து இம் முன்மொழிவு பிரயோகத்திலிடப்படும்.

3. குறுந்தலைப்பு

"தமிழ் இனப்படுகொலை அறிவூட்டல் வார முன்மொழிவு - 2021" எனக் குறுந்தலைப்பு வழங்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் – ஜெர்மனி

2010 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் ஜெர்மனியின் டப்ளினில் கூடிய முதலாவது நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் ஸ்ரீலங்கா அரசானது போர்க்குற்றங்களையும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும் நிகழ்த்தியுள்ளது என்பதையும் அக்குற்றங்களை தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றது என்பதையும் தனது தீர்ப்பால் உறுதி செய்தது.

என்றாலும் இனப்படுகொலை சம்பந்தமாக இம் முதலாவது நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் குறிப்புக்கள் பின்வருமாறு அமைந்தன.

> தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு இத்தீர்ப்பாயத்திடம் கேட்டுக்கொள்ளப்பட வில்லை.
>
> என்றாலும் இத்தீர்ப்பாயத்திற்கு வாக்குமூலங் களை வழங்கிய சில நிறுவனங்களும் தனிநபர் களும் ஸ்ரீலங்காவில் தமிழினப்படுகொலை நடந்தது என்பதை அல்லது நடந்திருக்கலாம் என்பதை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தினர்.
>
> ஆனால் இத்தீர்ப்பாயத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள ஏனைய இரு குற்றங்களான போர்க் குற்றங்கள் மற்றும் மானுடகுலத்திற்கு எதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்கள் ஆகியவற்றுடன் இனப்படுகொலை நிகழ்ந்தது என்பதை ஆராய்ந்து அங்கீகரிப்பதற்கு போதுமான சான்றுகளையோ சாட்சிகளையோ இத்தீர்ப்பாயத்திற்கு முன்வைக்கவில்லை

என்றாலும் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக முற்றுமுழுதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இனப்படுகொலைக்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அவ்வகை விடயங்களாக:

- ஸ்ரீலங்கா அரசின் தடையற்ற உடன்பாட்டுடன் ஸ்ரீலங்கா இராணுவத்தாலும் இராணுவ ஒட்டுக்குழுக்களாலும் தமிழ் மக்கள் வலிந்து கடத்திக் காணாமலாக்கப்பட்டமைக்கான சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறு காணாமலாக்கப் பட்டவர்களுள் தமிழ் சமூகத்தின் முக்கிய அங்கத்தவர்கள் (ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், மருத்துவர்கள்) குறிவைக்கப்பட்டதற்கான நோக்கம் , லெம்கின் கூறியதைப் போன்று,
"ஒரு இனத்தின் தொடர்ச்சியை இல்லாதொழிப்பதே" (இங்கு தமிழ் இனத்தின்)

அத்துடன்

- உள்ளக இடப்பெயர்வு முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ள தமிழ் மக்களின் நிலை, தொடரும் சுடகலசச் சூடுகள், ஒழுங்கு முறையான பாலியல் வன்புணர்வுகளும் வலிந்து காணாமலாக்கப்படுதலும் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த நாட்டின் நிலப்பகுதிகளில் இருந்த உட்கட்டுமான ங்களைக் குறிவைத்து பரவலாக நிகழ்த்தப்பட்ட அழிவுகள் என்பவற்றுடன் உணவு, மருத்துவப்பொருட்கள் உள்ளிட்ட மக்களின் வாழ்வை தொடர்வதற்கான அடிப்படைத் தேவைகளில் உருவாக்கப்பட்ட வலிந்த பற்றாக்குறை"

ஆகிய மேலே தெரிவிக்கப்பட்டவை நடப்பு விடயங்களாக உள்ள போதும் எமக்கு போதுமான சான்றுகள் முன்வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> படாததால் அவற்றை முறைப்பாடுகளாகக் கொள்ளமுடிய வில்லை. இருப்பினும் தொடர்ந்து விசாரணைகளைச் செய்வதன் ஊடாக இனப்படுகொலை நிகழ்ந்ததற்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல் மிகவும் முக்கியமானது என்பதை இத்தீர்ப்பாயம் அங்கீகரிக்கின்றது"

எனக் குறித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து வந்த மூன்று வருடங்களாகத் திரட்டப்பட்ட சான்றுகளும், ஸ்ரீலங்காவில் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் தீவிரமான நிலைகளுக்குட்பட்டிருந்ததையும் கருத்திற்கொண்டு ஸ்ரீலங்காவில் சமாதானத்திற்கான அயர்லாந்து மன்றம், சர்வதேச பிரீமன் சட்டவியற் கழகத்துடன் இணைந்து ஸ்ரீலங்காவில் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் அதனை நடத்தி முடிக்க ஏனைய நாடுகள் வழங்கிய பங்களிப்புக்கள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுக்கத்தக்கவகையில் ஸ்ரீலங்காவிற்கான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வினை நடாத்தக் கோரின.

அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து, ஏற்கனவே போர்க்குற்றங்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் நடைபெற்றதை முதலாவது அமர்வு நிரூபித்திருந்ததை தொடர்ந்து பிரீமனில் இரண்டாவது அமர்வு இனப்படுகொலை தொடர்பாக தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் :

பன்னாட்டு பிரிமன் சட்டவியல் கழகத்துடன் இணைந்து ஸ்ரீலங் காவில் சமாதானத்திற்கான அயர்லாந்து மன்றம் பின்வரும் குற்றச்சாட்டுக்களை பிரீமன் தீர்ப்பாயத்தின் முன்வைத்தன:

1. ஸ்ரீலங்கா தீவின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த தமிழ் மக்களின் மீது இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது. இவ் இனப்படுகொலையானது படிப்படியாக நிகழ்த்தப் பட்டதுடன் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமுமே தமிழ் மக்களின் மீது இனப்படுகொலைக் குற்றத்தை நிகழ்த்திய குற்ற வாளிகள்

வடக்குக்கிழக்கில் தமது நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைச் சிதைக்க ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட பன்முகத்தன்மைவாய்ந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவும் வடக்குக்கிழக்கில் ஒரு தேசத்து மக்களாக வாழ்ந்த தமிழ் மக்களின் தேசிய வாழ்வுக்கான அடித் தளங்களை அழித்தொழிக்கும் நோக்கம் கொண்டி ருந்தன. தமிழ்த் தேசத்தின் மீது சிங்கள மேலாண்மை யைப் புகுத்துவதை அடிப்படையாகக் கொண்டே ஸ்ரீலங்கா அரசிற்கு இனப்படுகொலை எண்ணம் உருவாகியிருந்தது.

3. தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலையிற்கு உடந்தை யாகச் செயற்பட்டதாக பிரித்தானிய அரசு மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இந்திய கடல்வழிப்போக்குவரத்து பாதையின் மீதும் தமது இராச்சியத்தின் மீதும் (இந்தியன் ராஜ்) கட்டுப் பாட்டை கொண்டிருக்க வழிசெய்யும் தந்திரோபாயக் கண்காணிப்பு பிரதேசமாக இலங்கையை பிரித்தானியா தனது குடியேற்ற ஆட்சியின் போது வைத்திருந்தது. இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை ஆழ்கடற்துறைமுகம் (இத் துறைமுகத்தைத்தான் கோமான் நெல்சன் உலகின் மிகச்சிறந்த துறைமுகம் என வர்ணித்தார்) கிழக்கில் தமிழ் மக்களின் தேசத்தில் இயற்கையாய் அமைந்துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இறுக்கமானதும் உறுதி யானதுமான அரசியற் கலாசார உறவு காணப்படுவதற்கு இலங்கையின் பூகோள அமைவிடமே மிக முக்கிய காரணமாகும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலே வரலாற்றுக்காலத் தொடர்பு உருவாகக் காரணம் தென்இந்தியத் தமிழர்களுக்கும் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ் தமிழர்களுக்கும் முற்காலத்திலிருந்தே பேணப் பட்ட இவ் உறவாகும். ஆனால் இக்காரணிகளே இலங்கையைத் தமது தந்திரோபாய நிலையாக மாற்ற விரும்பிய பிரித்தானியாவிற்கிருந்த அச்சுறுத்தலாகவும் பிரித்தானியா கருதியது.

அதன் அடிப்படையில் இலங்கையைத் தமது தந்திரோ பாய இராணுவ நிலையாக மாற்றிக்கொள்வதற்குத் தென் இந்தியத் தொடர்புகளற்ற, தனித்துவமான அடையாளங்களைக் கொண்ட, ஒன்றாக்கப்பட்ட ஆட்சியினைக்கொண்டதொரு தீவாக இலங்கையை மாற்ற வேண்டிய தேவையை பிரித்தானியர் உணர்ந்தனர்.

அத்தேவையினை நிறைவேற்றத்தக்கவர்களாக சிங்கள மக்களை அவர்கள் அடையாளம் கண்டனர். 1833 இல் வரலாற்றுத் தமிழ்த் தாய்நாட்டினை தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக, வலுவைப் பிரயோகித்து சிங்கள தேசத்துடன் இணைத்து, சிங்களப் பெரும்பான்மையைக் கொண்டேகக்கூடிய ஒன்றாக்கப்பட்ட ஆட்சியை நிறுவினர். தொடர்ந்து தம்மிடமிருந்த வரலாற்று-எழுத்தாண்மை, தொல்பொருள்-இயல், மானுட-இயல் (மனித உடல் உளம் சார்ந்த முழு ஆராய்ச்சி) ஆகியவற்றின் தொழிற்பாட்டு அறிவைப்பயன்படுத்தி இந்தியாவை "எல்லைமீறி நுழைந்தவர்களாகவும்; தமிழர்களை எல்லை மீறி நுழைந்தவர்களின் பின்சந்ததி களாகவும்" எண்ணங்கொள்ளத்தக்க "சிங்கள பௌத்த ஆரிய" இனமொன்றை உருவாக்கினர். இந்தியர்கள் மீது கொடுங்கோன்மையை பிரயோகித்த பிரித்தானியர்கள் மாறாக சிங்கள அடையாளத்திற்கு மிகப்பெரும் முன்னுரிமையை கொடுத்து இலங்கைத்தீவு முழுவதற் கும் பெரும்பான்மையினராக அவர்களை எண்ணங் கொள்ள வைத்தனர். ஒரு தேசத்தவர்களாகத் தமிழருக்குள்ள கூட்டுரிமையை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை அரசியலமைப்பின் கீழ் உருவாக்கிக் கொள்வதே தம்மைப் பாதுகாக்கும் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவழிகளிலும் பிரித்தானியருக்கு தெரிவித்தும் அதனைக் கருத்திற்கொள்ளாது சிங்கள மேலாண்மை வாதிகளிடம் ஆட்சியதிகாரங்களைக் கையளித்ததுடன், ஈழத் தமிழர்களை "அன்னிய அச்சுறுத்தல்" என புரிந்து கொள்ளக்கூடிய, சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசின் கைகளில் விட்டுச்சென்றனர்.

இவையே, ஒற்றை அரசாட்சிக்கட்டமைப்பும், சிங்கள பௌத்த பேரினவாதமும் ஸ்ரீலங்காத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் மீது இனப்படு கொலையை நிகழ்த்த ஏதுக்களான இரண்டு முக்கிய அடிப்படைகளுமாகும்.

4. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையிற்கு உடந்தையாக செயற்பட்டதாக ஐக்கிய அமெரிக்க அரசு மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் பிரித்தானியாவிற்கு பதிலாக ஐக்கிய அமெரிக்கா பிராந்திய மேலாண்மை வலுவுடன் உலகில் உருவானது. பிரித்தானியாவின் பங்களிப்புடன் இலங்கைத்தீவில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஆதரிக்கவும் தொடர்ந்து பேணவும் தனது ஆதரவை ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கு தொடர்ந்து வழங்கியது.

70 களிலும் 80 களிலும் தமிழ் மக்கள் தம்மை காத்துக்கொள்ளவதற்காக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியற் கோரிக்கையாக முன்வைத்த தமிழீழக் கோரிக்கையானது இனப்படுகொலை படிமுறைக்கு எதிரான வடிவமாக மாற்றமடைந்த போது ஸ்ரீலங்கா அரசிற்கான அமெரிக்காவின் ஆதரவு மேலும் ஆழமாக வலுப்பட்டது.

ஒற்றையாட்சிக் கட்டமைப்பு சிதைவடையத்தொடங்கிய போது அமெரிக்கா தனது ஸ்ரீலங்கா சார்பு நிலையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு உடந்தையாகி, தனது அரசியல் மற்றும் ஆயுத உதவிகள் மேலும் தமிழினப்படுகொலையை தீவிரமாக நிகழ்த்த உதவும் என்பதை தெரிந்திருந்தும் வழங்கியது.

2002 பெப்ரவரியில் ஆரம்பமான பன்னாட்டுப் பின்புலத் துடன் கூடிய சமாதான முயற்சிகளின் போது பிரித்தானியாவின் பங்களிப்புடன் ஐக்கிய அமெரிக்கா மிகச்சரியாகக் கணக்கெடுத்து வேண்டுமென்றே தமிழர்களின் அப்போதைய நிழல் நிர்வாகத்தினருக்கும் சிங்கள அரசிற்கும் இடையிலான சமநிலை வலுவைக் குழப்பியது. அதன் மூலம் சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவதில் வெற்றி அடைந்ததன் ஊடாக இனப் படுகொலைக்கு ஒத்தாசை வழங்கியது.

இவ்அமெரிக்க பிரித்தானியக் கூட்டானது போருக்கான சூழலை உருவாக்கியதுடன் போரைத்தொடக்கவும் அதனைத் தொடர்ந்து நடத்தி தமிழர்களின் பாதுகாப்புத் தடைகளைப் பௌதீகரீதியாக அழித்தொழிக்கவும் இனப்படுகொலையை நிகழ்த்தி முடிக்கும் வரையும் தனது உதவிகளைத் தொடர்ந்தது. ஸ்ரீலங்காவினதும் அதனது பின்புலமாகச்செயற்பட்ட நாடுகளினதும் இனவழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக்கூடிய வலுவாகத் தமிழர்கள் அதுகாலவரை கொண்டிருந்த பௌதீக மற்றும் அரசியல் வல்லமையை இல்லாது ஒழித்த பின் மீண்டும் தமிழினப்படுகொலைச் செயன் முறையானது ஆரம்பமாகி முன்னெப்போதும் இல்லாத அளவு வீச்சங்கொண்டுள்ளன. ஆகவே ஈழத்தமிழ் மக்களின் தேசிய அடித்தளத்தை அழிக்கும் குற்றத்தை நிகழ்த்தும் முக்கிய சூத்திரதாரியான ஸ்ரீலங்கா அரசிடமிருந்து அக்குற்றத்தை பகிர்ந்து, இரவலாக அமெரிக்கா தானும் பெற்றுக்கொண்டுள்ளது. பூகோள இராணுவ வலுவை பெருப்பித்துக் கொள்வதற்காக இத்தீவைத் தனது தந்திரோபாய இராணுவச்சொத்தாக மாற்றிக்கொள்ளும் எண்ணம் கொண்டே அமெரிக்கா இந்த ஆதரவை நல்கியும் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையிற்கு உடந்தையாகச் செயற்பட்டதாக இந்தியா மீது குற்றஞ்சாட்டப் படுகின்றது.

தமக்கான தந்திரோபாயச் சொத்துக்களாக ஈழத் தமிழரை கருதிய இந்தியா, ஈழத்தமிழினத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக 1980 ஆம் ஆண்டுகளில் தலையீட்டினை மேற்கொள்ளத் தொடங்கியது. இத்தலையீட்டின் விளைவாகச் சுமார் 12,000 தமிழ்ப் பொதுமக்கள் சாவடைந்தனர்.

பின்னர் 1990 களில் அமெரிக்காவுடன் ஓர் இளைய பங்காளராக இணைந்து கொண்ட இந்தியா, அமெரிக்காவின் போர்க்கொள்கையை முன்நிறுத்தியே தனது நாட்டுக்கான தந்திரோபாய அரசியற்கொள்கையினை நகர்த்தத் தொடங்கியது. அந்நகர்வினால் இந்தியா ஸ்ரீலங்காவிற்குப் பங்களிப்புக்களை நல்கியதன் ஊடாக தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் பங்காளராகத் தானும் பொறுப்பேற்றுக்கொண்டது.

எதிர்வாதங்கள்:

மேற்கூறப்பட்ட நான்கு நாடுகளுக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் அமர்வுகளில் பங்குபற்றுமாறு குறித்த நான்கு நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட அழைப்பு அந்நான்கு நாடுகளாலும் நிராகரிக்கப் பட்டன.

அதனையடுத்து குறித்த நாடுகள் சார்பாக வல்லுனர் ஒருவரை நியமித்து குறித்த நாடுகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான எதிர்வாதங்களை முன்வைக்கும் ஏற்பாட்டைத் தீர்ப்பாயம் மேற்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கமைய டப்ளின் டிரினிடிக் கல்லூரியின் சர்வதேச சமாதானக் கற்றைகள் துறையின் உதவி விரிவுரையாளர் கலாநிதி. இயான் அடக் எதிர்வாதங்களை முன்வைக்கத் தேர்வுசெய்யப்பட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு நாடுகள் சார்பாகவும் அவர் பின்வரும் தொகுக்கப்பட்ட எதிர்வாதங்களை முன்வைத்தார்:

1. ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு :

1.1 ஸ்ரீலங்காவின் வடக்கையும் கிழக்கையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்காகவே போர் முன்னெடுக்கப்பட்டது.
(ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் வலைத்தளம்)

1.2 பொதுமக்கள் கொல்லப்பட்டமையானது தவிர்க்க முடியாத சேதமேயொழிய எவ்விதமான உள்நோக்கமும் கொண்டதல்ல.
(கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை)

1.3 விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நிலப் பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
(ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபையில் முன்னிலை யாகிய ஸ்ரீலங்கா அரசின் விசேட பிரதிநிதியின் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு அறிக்கை)

1.4 வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் நலனடையத்தக்க வகையில் அபிவிருத்திப் பணிகளை அங்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொள்கின்றது.

1.5 விசாரணைகள் ஏதுமிருப்பின் அதனை உள்ளகப் பொறிமுறையூடாக செய்யும் ஆற்றல் ஸ்ரீலங்காவுக்கு உண்டு. எனவே சர்வதேசப்பொறிமுறை அவசியமற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்திய அரசின் நிலைப்பாடு :

(இந்திய வெளிநாட்டு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா அவர்கள் ஒகஸ்ட் 4, 2012 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை)

2.1 இந்தியச்சட்டங்களின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாகும்.

2.2 இறுதிப் போரில் நிகழ்ந்த வன்கொடுமைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசே விசாரணையொன்றை முன்னெடுக்க வேண்டும்.

2.3 எந்தவொரு தீர்வும் பிரிக்கப்படாத, ஒன்றித்த ஸ்ரீலங்காவி ற்குள்ளேயே வழங்கப்பட வேண்டும்.

2.4 வடக்கு கிழக்கு மாகாணசபை தொடர்பாக 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

3. ஐக்கிய ராச்சியத்தின் நிலைப்பாடு:

(நவம்பர் 2013 இல் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மத்தியில் பிரதமர் டேவிட் கமரூன் ஆற்றிய உரை உட்பட ஆட்சி செய்த முன்னைய ஐக்கிய ராச்சிய அரசாங்கங்கள், ஐக்கிய ராச்சிய வெளிநாட்டு அமைச்சுக்கள், பொதுநலவாய அலுவலகம் ஆகியவற்றின் உரைகளிலிருந்து)

3.1 விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாகும்.

3.2 மார்ச் 2014 இற்கு முன் ஸ்ரீலங்கா அரசு விசாரணை யொன்றை முன்னெடுக்க வேண்டும்.

3.3 எந்தவொரு தீர்வும் பிரிக்கப்படாத, ஒன்றித்த ஸ்ரீலங்காவி ற்குள்ளேயே வழங்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஐக்கிய அமெரிக்காவின் நிலைப்பாடு:

(அமெரிக்க இராசாங்கத்திணைக்களத்தின் ஊடக அறிக்கைகள், 2009ஆம் ஆண்டு கொங்கிரஸ் கமிட்டியில் முன்வைக்கப்பட்ட இராசாங்கத்திணைக்களத்தின் அறிக்கை)

4.1 விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாகும். போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம்.

4.2 2009 இல் இறுதிப்போர்க்காலத்தில் நிகழ்ந்த வன்முறை தொடர்பாக பொருத்தமானதும் சுதந்திரமானதுமான உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

4.3 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட விதப்புரைகள் யாவும் அமுலாக்கப்பட வேண்டும்.

4.4 எந்தவொரு தீர்வும் பிரிக்கப்படாத ஒன்றித்த ஸ்ரீலங்கா விற்குள்ளேயே வழங்கப்பட வேண்டும்.

குற்றச்சாட்டுக்களையும் அக்குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட வாதங்களையும் கருத்திற்கொண்ட பிரீமன் தீர்ப்பாயம் தனது தீர்ப்பை பின்வருமாறு வழங்கியது.

5.1 – இனப்படுகொலைக் குற்றச்சாட்டு

5.1.1 – ஏன் இனப்படுகொலையாகின்றது?

2010 ஜனவரி மாதத்தில் ஜெர்மனியில் நிகழ்ந்த டப்ளின் தீர்ப்பாயத்தின் அமர்வில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும், போர்க்குற்றங்களையும் ஸ்ரீலங்கா அரசானது நிகழ்த்தியுள்ளது என வழங்கப்பட்ட தீர்ப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக ஏன் இந்த இரண்டாவது அமர்வுக்கான கோரிக்கையை பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களும், நிறுவனங்களும் வேண்டிக்கொண்டன என்பதை விளக்க வேண்டியுள்ளது.

இனப்படுகொலைக்குள்ளான போதிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களால் எந்தவிதமான நடவடிக்கை களும் எடுக்கப்படாமலிருக்கும் நிலையில் இனப்படுகொலை க்கு உள்ளானவர்களாக ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான முக்கியத்துவம் என்ன?

இவ்வினாக்களை விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், இனப்படுகொலையின் சமூகப்பயிற்சியானது தனியே தனிமனிதனை மட்டும் அழித்துவிடத்துடிக்கும் ஓர் பயிற்சி மட்டுமல்ல அம்முயற்சி மனிதக்குழுவொன்றின் ஒட்டு மொத்த அடையாளத்தையும் அழித்து, அதன் முன்னைய வரலாற்றிலிருந்தும் பட்டறிவில் இருந்தும் அன்னியப்படுத்தி, அக்குழு தனது கடந்தகால நிழ்கால, எதிர்காலங்களின் மீது கொண்டுள்ள கட்டுப்பாடுகளிலிருந்தும் அகற்றிவிடத் துடிக்கும் ஓர் பயிற்சியாகும் என்பதனை புரிந்துகொள்ள வேண்டும்.

இனப்படுகொலையின் பல்வேறு படிமுறைகள் தம்மிடையே கொண்டுள்ள தொடர்பினால், இனப்படுகொலைக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவொன்று பின்பற்றி வந்த வாழ்க்கை முறையினை அழித்து, நிலைமாற்றி எஞ்சியுள்ள அக்குழுவின் உறுப்பினர்களினது சமூகத்தொடர்புகளை மீளமைத்துக்கொள்ள வழிசமைத்துவிடும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை மறந்துபோகச் செய்து அக்குழுவின் வரலாற்று தொடர்ச்சியை இல்லாமற் செய்து மூடிவிடும் எத்தனிப்பையும் மேற்கொள்ளும்.

ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டு, வன்முறைகளுக்குள்ளாகிப் படுகொலை செய்யப் பட்டமையானது வெறுமனே அவர்கள் தனிமனிதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனால் மட்டும் அல்ல, அவர்கள் அடையாளம் மிக்க தொரு குழுவாகத் தமது தனித்துவ அடையாளங்களுடன் வாழ்வதனால் தான்.

இனப்படுகொலைக்கான நோக்கத்தினை ஒப்பிட்டு நோக்கும் போது இதனை, இவ் அடையாள அழிப்பினை அடிப்படையாகக் கொள்வதுடன், இனமொன்று தமது சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கான உரிமையாகவும் இவ் அடையாள அழிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5.1.2 – சமூகச் செயன்முறையாக இனப்படுகொலை :

திட்டமிடப்படாமல் அல்லது திடீரென நிகழத்தக்க கொலைகள் அல்லது கூட்டுக்கொலைகளில் இருந்து தெளிவாக வேறுபடுத்தக்கூடிய வகையில் இனப்படு கொலையை ஓர் சமூகச் செயன்முறையாக ஒழுங்குபடுத்தி, பயிற்சியளித்து, ஒத்திகை பார்த்து, கருத்தொரு மிக்கச் செய்து, சட்டபூர்வமாக்கி, அதனை சமூகப்பழக்கமாக மாற்றுவதற்கு தொடர்ந்து நிகழ்த்துவதுடன் நிரந்தரமான நடவடிக்கையாக அதனை நிகழ்த்தவும் முயல்வதே இனப் படுகொலைச் சமூகச் செயன்முறையாக அமைகின்றது.

இனப்படுகொலை என்ற பதத்தினை உருவாக்கிய 'ரபேல் லெம்கின்'

> எதிர்ப்புக்குழுவின் தேசிய அடையாளத்தை அழித்து, அவ் அழிப்பைச் செய்பவர்கள் தமக்குரிய தேசிய அடையாளத்தை எதிர்ப்புக்குழுவின் மீது சுமத்துவது இனப்படுகொலையின் சாரமாக விளங்கும்

என்கின்றார்.

இனப்படுகொலையை ஓர் செயன்முறையாக ஆய்வு செய்யும்போது சில செயற்பாடுகள், அவை இனப் படுகொலைக்கானவையாக இல்லாவிட்டாலும் இனப் படுகொலையைச் சாத்தியமாக்குவதற்குத் தேவையான அடிப்படைச் செயற்பாடுகளாக இருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவில் வாழும் தமிழ் மக்கட்குடியினை ஒன்றுபட்ட ஸ்ரீலங்கா அரசிலிருந்து அந்நியப்படுத்தும் நடவடிக்கைகள் மிக நீண்ட காலமாக நடந்து வருகின்றன. அந்நடவடிக்கைகளுள் அரசியல் மற்றும் சட்டத்தீர்மானங்கள், எண்ணிக் கணக்கற்ற கூட்டுக்கொலைகள், பாரபட்சம் பார்க்கும் செயன்முறைகள், ஆயுத முரண்பாடுகள் எனத் தொடர்ந்து இறுதியில் மொத்தமாக அழித்துவிடும் திட்டமொன்று நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்படி "இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கான நிபந்தனையை உருவாக்கும்" வகையில் கட்டமைக்கப்பட்ட உட்கட்டுமானங்கள் மற்றும் சமூகக்கட்டுமானங்கள் தொடர்பான சான்றுகளை தகவல் மூலங்களில் இருந்து செவிவழியாகக் கேட்டும், உரியவர்களிடமிருந்து வாய் மொழியாகவும் இத்தீர்ப்பாயம் பெற்றுக்கொண்டுள்ளது.

அதன்படி இனப்படுகொலைக்கான அடிப்படைகளை உருவாக்கும் செயற்பாடு 1833 ஆம் ஆண்டு வரலாற்றுக் காலத்தமிழின நிலப்பரப்புடன் சிங்கள இனநிலப்பரப்பையும் ஒன்றாக்கி ஆங்கிலேய ஆட்சியை நிறுவியதிலிருந்து ஆரம்பமாகியுள்ளது என்பது நிரூபணம் ஆகின்றது.

அதன் பின் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தம்மிடமிருந்த வரலாற்று- எழுத்தாண்மை, தொல்பொருள்- இயல், மானுட-இயல் (மனித உடல் உளம் சார்ந்த முழு ஆராய்ச்சி) தொழிற்பாட்டு அறிவைப் பயன்படுத்தி இந்தியாவை 'எல்லைமீறி நுழைந்தவர்களாகவும்' தமிழர்களை 'எல்லை மீறி நுழைந்தவர்களின் பின்சந்ததிகளாகவும்' எண்ணங் கொள்ளத்தக்க 'சிங்கள பௌத்த ஆரிய' இனமொன்று உருவாகியுள்ளது.

ஒவ்வொரு செயன்முறையும் ஒரு வரலாற்றைத் தம்மகத்தே கொண்டிருப்பினும் அது சமூகச்செயன்முறையாக மாற்றம் பெறுவதற்கான தொடக்கப்புள்ளியைக் கண்டுகொள்வது கடினமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும்

1956 இல் தனிச்சிங்களச்சட்டம் சிங்கள மொழியை மட்டும் உத்தியோகபூர்வ மொழியாக ஸ்ரீலங்காவில் அறிமுகம் செய்தமை மிகமுக்கிய தொடக்கப் புள்ளியாக அமைந்தது. அதனை தமிழர்கள் அகிம்சை வழியில் எதிர்க்கத் தொடங்கிய போது தமிழருக்கு எதிரான 'தமிழர்- எதிர்ப்பு திட்டங்கள்' நடைமுறைக்கு வந்துள்ளன.

1958 ஆம் ஆண்டு தமிழ் மொழியையும் உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளும் விசேட சட்டம் அமுலாகியது.

1961 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவின் அரச மொழிக் கொள்கைக்கு எதிராக வடக்கு கிழக்கில் ஆரம்பமான தமிழ்ச் சத்தியாக்கிரகப்போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் இராணுவம் வந்தேறியது.

1971 ஆம் ஆண்டு 'தரப்படுத்தல்' முறை அமுலாக்கப்பட்டு உயர்கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடந்தேறியது.

1972 ஆம் ஆண்டில் அறிமுகமான முதல் குடியரசு யாப்பில் சிங்களம் அரசியலமைப்பு மொழியாகவும் சிங்கள பௌத்த மதம் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிலைக்கும் உயர்த்தப் பட்டன.

1977 ஆம் ஆண்டு தனித்தமிழீழத்தை அமைக்கும் வட்டுக்கோட்டைத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனால் தமிழ்க்குடிகளுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிலும் சிங்கள மொழிக்கு அரசியல் அந்தஸ்து வழங்குவது நீடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கணத்திலிருந்து நிலைமைகள் மிகப்பாரதூரமான மட்டத்தையடைந்தன. அவற்றுள் 1981 ஆம் ஆண்டு யாழ் பொதுநூலக எரிப்பு, 1983 ஆம் ஆண்டின் 3,000 தமிழ் மக்களுக்கு மேல் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கறுப்பு ஜீலை நிகழ்வுகள் எனத் தொடர்ந்தன.

பல நூறாயிரம் தமிழர்கள் தெற்குப்பகுதியில் கொன்று குவிக்கப்பட்டமைக்கு மேலதிகமாக இத் தீர்ப்பாயத்திற்கு வழங்கப்பட்ட 300 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் வடக்கு கிழக்கில் வாழ்ந்த மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட பல கூட்டுக்கொலைகளுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

உதாரணத்திற்கு:

1983 ஜூலை இல் நிகழ்ந்த திருநெல்வேலி கூட்டுக் கொலைகளில் தொடங்கி 1987 மே இல் நிகழ்ந்த அல்வாய் கோவில் கூட்டுப்படுகொலைகள் வரை 44 கூட்டுப் படுகொலைகள் ஸ்ரீலங்கா அரச படைகளால் புரியப்பட்டு சுமார் 2109 ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை,

1990 மே இல் கிழக்குப்பல்கலைக்கழக கூட்டுப் படுகொலை களில் தொடங்கி 1995 மே நாகர்கோவில் படுகொலைகள் வரை 47 கூட்டுப்படுகொலை சம்பவங்களை அரச படைகள் நிறைவேற்றி 2,231 தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டமை

இப்படுகொலைச்சம்பவங்களில் ஓரிரு நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழகக்குடிமக்கள் கொல்லப் பட்டுள்ளனர். (கொக்கிளாய்- கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் 1984-12-15 அன்று 131 மக்களும், 23,24.05.1990 இல் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் 226 தமிழ்ப்பொது மக்களும் கொல்லப்பட்டமை, 09.07.1995 இல் நவாலி தேவாலயத்தில் 155 தமிழ்மக்கள் கொல்லப்பட்டமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கண்ட சாட்சியங்கள் உட்பட, ஆவணப்படுத்தப் பட்டுள்ள, மிகக்கவனமெடுத்து திரட்டப்பட்ட சான்றுகளில் இருந்து தனித்துவ அடையாளத்தைக் கொண்டிருந்த ஈழத்தமிழர்களின் அடையாளத்தையும் அவர்களது பௌதீக இருப்பையும் அழித்துவிடும் நோக்குடன் அவர்கள் மீது அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அவசரகால நிலையை எதிர்கொள்ளல் என்ற தத்துவத்தின் கீழ் இப்படுகொலைகளை நிகழ்த்தியவர்களுக்கு தண்டனை களிலிருந்து தப்பிக்கும் உரிமையை அரசு வழங்கியிருப்பதன் ஊடாக அரசே மிகச்சரியாக கணக்கிட்டு தமிழர்களை அழிக்கும் தனது கொள்கையின் ஒருபகுதியாக இதனை நிறைவேற்றியிருப்பதை உறுதி செய்ய முடிகின்றது.

அதற்கென பாவிக்கப்பட்ட முறைகளாக கிராமங்களை சுற்றி வளைத்தல், ஆயுதந்தரிக்காத ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைச் சுட்டுக்கொல்லுதல், அரச படைகளினால் உருவாக்கப்பட்டிருந்த வீதித்தடைகளில் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளில் தமிழர்களை மட்டும் தனியாக பிரித்தெடுத்து சுட்டுக் கொல்லுதல், காணாமலாக்கப் படுவதற்கு முன் உள்ளக இடம்பெயர்விற்குள்ளான தமிழ் மக்களை வலிந்து கடத்துதல் போன்ற செயற்பாடுகள் தெளிவாக அரசின் உள்நோக்கத்தையும் திட்டமிட்டே தமிழ்க் குடிகள் பலியிடப்பட்டதையும் வெளிப்படுத்து கின்றன.

சட்டத்திற்குப்புறம்பான கொலைகள் (திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்கள் மற்றும் மூதூரில் கொல்லப் பட்ட அக்சன் சென்ரர் லா பெய்ம் இன் 17 தொண்டுப் பணியாளர்கள் உள்ளடங்கலாக) மற்றும் தேர்ந்தெடுத்து கொலை செய்தல் (2004 இல் தொடங்கி 2006 வரையான காலத்தினுள் கொல்லப்பட்ட குருவானவர்கள், முன்னணி ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது சமூகத் தலைவர்கள் உள்ளடங்கலாக) ஆகியன மிகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் முன்னுரிமையின் பால் கிழக்கில் பெருமெடுப்பில் அரச இராணுவத் தாக்குதல் நிகழ முன் செய்து முடிக்கப்பட்டன. செம்டெம்பர் 1990 இல் நற்பிட்டிமுனையில், ஜூலை 1998 இல் செம்மணியில், டிசம்பர் 2000 ஆம் ஆண்டில் மிருசுவில் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப்புதை குழிகளில் புதைக்கப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கான தமிழரின் உடலங்கள் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கான வெளிப்படையான சில உதாரணங்களாகும்.

2010 ஜனவரியில் கூடிய டப்ளின் தீர்ப்பாய அமர்வுகளில் விலாவாரியாக தரப்பட்டிருந்த வாக்குமூலங்களும் சான்றுகளும், பரவலாகவும் மிக ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டதை உறுதி செய்வதுடன் அவை 2006 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவில் ஆரம்பிக்கப்பட்ட இறுதிப்போர் வரை பரந்து விரிந்திருப்பதை காணலாம்.

டிசம்பர் 2008 இற்குப்பின் போர்ப்பிரதேசங்களில் அமைந்திருந்த நிரந்தர மற்றும் நடமாடும் வைத்தியசாலைகளின் மீது நிகழ்த்தப்பட்ட சுமார் 30 தாக்குதல்களை சர்வதேச அமைப்பான மனித உரிமைக்கண்காணிப்பகம் ஆவணப்படுத்தியிருப்பது அதிர்ச்சியளிக்கின்றது.

இனப்படுகொலையின் இறுதி உச்சக்கட்டம் செப்டெம்பர் 2008 தொடக்கம் மே 2009 வரை நிகழ்த்தப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் துடைத்தழிப்பில் இன்றுவரை கணக்கில் இல்லாமல் போயுள்ள 146,679 மக்களில் 70,000 மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றனர்.
(இத்தொகை சில தகவல் மூலங்களில் அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது)

தரப்பட்டுள்ள கூட்டுக்கொலை பட்டியலில் இக்காலப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட இன்னும் பல கொலைகளும் வலிந்து காணாமலாக்கப்படுதல்களும் உள்ளடக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொலைகள் யாவும் மிகச்சரியாக ஒழுங்கமைக்கப்பட்டு பொதுச்சமூகத் தலைவர்களையும், ஊடகவியலாளர் களையும், அரசியற் தலைவர்களையும், அடிநிலையில் செயற்பட்ட அரசியற் செயற்பாட்டாளர்களையும், தேர்ந் தெடுக்கப்பட்ட தமிழ்க்குடிமக்களையும் இல்லாதொழித்தன. அவ்வாறு பலியிடப்பட்டவர்களின் எண்ணிக்கை தரப்பட்ட கொலைப்பட்டியலுடன் சேர்க்கப்படுமிடத்து கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் பின்னர், 2009 மே மாதத்திலிருந்து தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் வடக்குக் கிழக்கில் வாழத்தலைப்பட்டிருக்கும் தமிழ்மக்களின் மீது 'தொடரும் இனப்படுகொலை' என்ற பார்வையில் ஆராயப்பட வேண்டும்.

5.1.3 இனப்படுகொலைச் சமூகச்செயற்பாட்டின் வரலாற்றுப் பின்னணி:

இத்தீர்ப்பாயத்தின் அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டுள்ள இக்காலப்பகுதியில் மதிப்பிற்குரிய நெல்சன் மண்டேலா அவர்களினை உலகின் தனித்ததோர் அடையாளமாகவும் அரசியல் முக்கியத்துவம் சார்ந்தும் உலகம் நினைவு கூறுகின்றமை முக்கியமாக கவனத்திலெடுக்கவேண்டும்.

மண்டேலாவை போலவும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போலவுமே ஈழத்தமிழினம் தனது சுயநிர்ணய உரிமையை பாதுகாத்துக்கொள்ள காந்தியின் வழியில் வன்முறையற்ற போராட்டங்களை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இரண்டு தசாப்த காலமாக இவ் வகை வன்முறையற்ற போராட்டங்களே அரசியல் ரீதியாக ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டது. அரசியல் மற்றும் பாராளுமன்றத்தவிர்ப்புப் போராட்டமாக நடைபெற்ற போராட்டங்கள் பரவலான அரச வன்முறைகளை சந்திக்கத் தொடங்கியதை அடுத்து தமிழ் இளைஞர்கள் தம்மை கொரில்லாப் போராளிகளாக தகவமைத்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம் ஆண்டில் நடந்த கறுப்பு ஜூலை தமிழர் விரோத நிகழ்வுகள் ஆயுதம் தாங்கிய அமைப்புகளுக்கிடையே விடுதலைப்புலிகளை மிகப் பிரசித்தமானவர்களாக்கி தமிழர்களிடையே பெரும் ஆதரவைப் பெற்ற போராட்ட அமைப்பாகவும் மாற்றியது. ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறை நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் நிகழ்த்தியிருந்த போதிலும், அவ்வமைப்பை "பயங்கரவாத அமைப்பாக" கணித்தது தவறானதே.

சர்வதேசச்சட்டங்களின் கீழ் "பயங்கரவாதம்" என்றால் என்ன என்பது வரையறுக்கப்படவில்லை. அதற்கான வரையறையை தேடுமிடத்து மனித உரிமைகளின் உலகப் பிரகடனமே தோற்றுவாயாக இருப்பதைக்காணலாம்.

ஐக்கிய இராச்சியத்தினதும் அமெரிக்காவினதும் அதீத அழுத்தத்திற்குட்ட ஐரோப்பிய ஒன்றியம் நடைபெற்றுக் கொண்டிருந்த அமைதிப்பேச்சுவார்த்தைகளில் தாமும் ஒரு ஆதரவுத்தரப்பாக செயற்பட்டுக்கொண்டிருந்த போதிலும் விடுதலைப்புலிகளையும் ஓர் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்ததுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி பிளவை ஏற்படுத்தி இனப்படுகொலைச் செயன்முறை வேகமெடுக்க தானும் ஒத்தாசை நல்கியது.

நெல்சன் மண்டேலாவும் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் கூட பயங்கரவாதிகளாக முத்திரையிடப்பட்டவர்கள் தான். அரச பயங்கரவாதித்திற்கு எதிராகவும் கூட்டுரிமையினை அரசு மறுப்பதற்கு எதிராகவும் தீவிரமாகச்செயற்பட்டவர்கள்.

பின்னர் தம்மை விடுதலைப்போக்குடையவர்களிலிருந்து அரசியல் செயற்பாட்டாளர்களாக உருமாற்றிக் கொண்டனர்.

அதனையடுத்தே பன்னாட்டு அரசுகளின் அங்கீகாரத்தை அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.1.4 இனப்படுகொலைக்குற்றத்தின் சட்டக்கூறுகள்.

இனப்படுகொலையானது எவ்வாறு பல்வேறு கட்டங்களில் நிகழ்த்தப்படுகின்றது என்பதனை விளங்கிக்கொள்வதன் ஊடாக மிகத்தெளிவாக அதனைப் புரிந்துகொள்ள முடியும் என்பதனை கருத்திற்கொண்டு இத்தீர்ப்பாயமானது முதலிரண்டு குற்றச்சாட்டுக்களையும் இணைத்து ஆய்வு செய்ய முடிவெடுத்துள்ளது.

1. ஸ்ரீலங்காத்தீவில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் மீது இனப்படுகொலை நிகழ்த்தப் பட்டது.

2. தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக் குற்றத்தை ஸ்ரீலங்கா அரசும் அவ் அரசின் படையினரும் நிகழ்த்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் இனப்படுகொலைப் பன்னாட்டு வரைபின் பிரகாரம் இனப்படுகொலை என்பது

“ஒரு தேசிய இனத்தை, இனக்குழுமத்தை, குலமரபினரை (சாதியினரை) அல்லது சமயத்தவரை முழுமையாக அல்லது பகுதியளவில் நிர்மூலமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் அக்குழுவின் அங்கத்தவர்களை கொல்தல், அக்குழுவின் அங்கத்தவர்களிற்கு கடுமையான உடல் உளக்காயங்களை ஏற்படுத்துதல், பௌதீக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை கணக்கிலெடுத்து அக்குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டே ஊடுறுத்தல், அக் குழுவின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் உள்நோக்கம் கொண்டு தடுப்புக்களை பிரயோகித்தல், ஒரு இனத்தின் குழந்தைகளை அவர்களின் விருப்பமின்றியே மற்றொரு இனத்தவரிடம் கையளித்தல்”

என வரையறுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.1.4.1 நடவடிக்கைகள்:

ஸ்ரீலங்கா அரசானது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பது சந்தேகமற நிரூபிக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகள் இத்தீர்ப்பாயத்தின் கவனத்தை கவர்ந்துள்ளன.

அ) அக்குழுவின் அங்கத்தவர்களைக் கொல்லுதல் –

2010 ஜனவரியில் டப்ளின் இல் கூட்டப்பட்ட முதலாவது தீர்ப்பாயத்தின் அமர்வுகளில் ஈழத்தமிழ் மக்களிற்கு எதிராக கொடுங்கொலைகளும், கூட்டுக் கொலைகளும் இறுதிப் போரின் போது நிகழ்த்தப்பட்டதை உறுதிப்படுத்தும் விபரமான மெய்நிலைச்சான்றுகள் பல முன்வைக்கப் பட்டன.

தற்போது பிரீமனில் நிகழும் இவ்அமர்வுகளில் ஜூன் 1956 ஆம் ஆண்டிலிருந்து (இங்கினியாகல கூட்டுக்கொலைகள்) ஜூன் 2008 வரைக்கும் (புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு) நிகழ்ந்த மேலும் 149 கூட்டுக்கொலைகளையும் அவற்றால் கொல்லப்பட்ட 10,617 தமிழ் பொதுமக்கள் தொடர்பான விபரங்களும் ஆவணமாக்கப்பட்டுள்ளன.

மிகமுக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் 1986 இன் ஆரம்பகாலத்தில் "நாளொன்றுக்கு 7 தமிழர்களை அல்லது மாதமொன்றுக்கு 233 தமிழர்களை சராசரியாக ஸ்ரீலங்காப் படைகள் வடக்கிலும் கிழக்கிலும் கொலை செய்தன" என்பதே. டப்ளின் தீர்ப்பாய அமர்விற்கு வழங்கப்பட்ட ஆவணங்களிலிருந்து படுகொலை நிகழ்த்தப் படுகின்ற வடிவமானது இறுதிப்போர் நோக்கி பெருப்பிக்கப் பட்டிருப்பதை காண முடிகின்றது. அவ்விரிவாக்கத்தின் விளைவாக 2009 ஜனவரியில் சராசரியாக நாளொன்றில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 33 ஆக இருந்து அதே வருடம் ஏப்ரல் மாதமளவில் 116 பேராக அதிகரிக்கப் பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் இறுதி நாட்களில் அரங்கேறிய அரச பயங்கரவாத படுகொலைகளின் விளைவாக மே மாதம் 19 ஆம் திகதி வரை நாளொன்றுக்கு 1,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் தகவல் மூலங்களிலிருந்து வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இக் கூட்டுக்கொலைகளுக்கு மேலதிகமாக, பார்த்தும் பாராமலும் மேற்கொள்ளப்பட்ட செல் தாக்குதல்கள், மக்களை மொத்தமாக கொன்று குவிக்கும் தந்திரோபாய எண்ணத்துடன் மக்களை கூட்டமாக குவித்த "யுத்த சூனிய வலயங்கள்", நடைபெற்றுக் கொண்டிருந்த இனப்படு கொலையை சரியாக அடையாளப்படுத்தி ஆதாரங்களுடன் வெளியுலகுக்கு சொல்லக் கூடிய

ஜோர்ஜ் ஜெயராசசிங்கம் அடிகள் (13.12.1984), மரி பஸ்டியன் அடிகள் (06.01.1985), குமார் பொன்னம்பலம் (05.01.2000), சந்திரநேரு அரியநாயகம் (07.02.2005), தர்மரட்ணம் சிவராம் (28.04.2005), ஜோசப் பரராசசிங்கம் (24.12.2005) வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் (07.04.2006) சின்னத்தம்பி சிவமகாராசா (20.08.2006) நடராசா ரவிராஜ் (10.11.2006) பேராசிரியர். சிவசுப்ரமணியம் இரவீந்திரநாத் (15.11.2006), கே. சிவநேசன் (06.03.2008) எம்.எக்ஸ் கருணாரட்ணம் அடிகள் (20.04.2008) மரியாம்பிள்ளை சரத்ஜீவன் அடிகள் (18.05.2009)

ஆகியோர் உட்பட மேலும் பல தமிழ் முற்போக்கு அறிவாளிகளை இலக்குவைத்துக் கொலை செய்தமை போன்றவை நடந்தேறின.

இதே காரணங்களே முதன்மை ஊடகயிலாளர்களைக் கொலை செய்த அட்டூழியத்திற்குப் பின்புலமாக இருந்தன.

ஏப்ரல் 2004 தொடக்கம் ஜனவரி 2010 வரையான காலப்பகுதியில் அரச பயங்கரவாதக் குழுக்கள் மற்றும் அரசபடையினரால் கொல்லப்பட்ட 39 ஊடகவியலாளர் களில் 35 பேர் (89.7வீதம்) தமிழர்கள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) பாரதூரமான உடல் உளக்காயங்களை ஏற்படுத்துதல்.

சர்வதேசக் குற்றத்தீர்ப்பாயங்களின் வரையறுப்புகளுக்கு அமைவாகப் பாரதூரமான உடல் மற்றும் உளக்காயங்களை ஏற்படுத்துதல் என்பது

"சித்திரவதை, மனிதாபிமானமற்ற கீழ்மைப்படுத்துதல், வன்புணர்ச்சியு உட்பட பாலியல் வன்கொடுமைகள், கொட்டானால் தாக்கப்படல், சாவடிப்பதாக மிரட்டுதல், கடும் காயங்களை ஏற்படுத்தி அடையாளங்களை சிதைத்தல்

என்பவற்றைக் கருதுகின்றது. இங்கு செய்யப்படும் தீங்கு நிரந்தரமானதாக இருக்கவேண்டுமென்பதல்ல.

இனப்படுகொலை நடைமுறை வரைபை உருவாக்கும் காலத்தில் உலகம் தற்போதுள்ளதனை விட அதிக ஆணாதிக்கம் நிறைந்திருந்தது. அதனால் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்கொடுமைகள் "உடல் உளப்பாதிப்பை ஏற்படுத்தும் பாரதூரமான செயல்கள்" ஆகக்கொள்ளப் படவில்லை. பின் பல தசாப்தங்கள் கடந்த பின்னரே வன்புணர்வு சித்திரவதையின் ஓர் வடிவமாகவும், பாலியல் வன்கொடுமைகள் "தீவிர உளநலப்பாதிப்பு" ஏற்படுத்தும் காரணியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 1998 இலேயே வன்புணர்வு இனப்படுகொலையில் ஓர் அங்கமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டதைப் போல, தண்டனைக்குட்படாது செயற்படக்கூடிய ஆணையை அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ந்து இலக்குவைக்கப் பட்ட மக்கள் குழுவின் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமைகள், இனப்படுகொலை பன்னாட்டு வரைபிற்கு அமைவாக, தெளிவாக இனப்படுகொலைக்குரிய என்பது முடிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா அரசின் கொள்கையானது ஈழத்தமிழ் மக்களின் மீது பாரதூரமான உடல் உளக்காயங்களை ஏற்படுத்த வல்லது என்பதை இத்தீர்ப்பாயம் குறித்துக் கொள்கின்றது. வடக்கு,கிழக்கில் நிகழ்த்தப்பட்ட பெருமெடுப்பிலான இடம்பெயர்வுகளும் அதன் தொடர்ச்சியாக உடல் உளக் காயங்களை ஏற்படுத்துவதை நிரந்தரமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யுத்தத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரை, சுமார் 30 ஆண்டுகளாக, தொடர்ந்து நிகழ்த்தப்பட்டிருக் கின்றது. வலிந்துருவாக்கப்பட்ட பட்டினி, உணவு மற்றும் மருந்துப்பொருட்களின் மீதான பொருளாதாரத்தடை, வாழ்வாதார மற்றும் மனிதாபிமான உதவிகளின் மீது விதிக்கப்பட்ட தடுப்புக்கள் போன்றவை மேற்கூறிய பிரதேசங்களில் திகைக்கவைக்கும் நிலைமைகளை உருவாக்கி இருந்தன.

ஈழத்தமிழ்ப்பெண்களின் மீது பலாத்காரப் பாலியல் வன்கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதற்கான உண்மைச்சான்றுகள் பலவற்றை டப்ளின் மற்றும் பிறீமன் தீர்ப்பாயங்கள் தமது அமர்வுகளில் செவியுற்றுள்ளன. அவ்வாறு கட்டவிழ்த்து விடப்பட்ட பாலியல் வன்கொடுமை களை அனுபவித்தவர்கள் பாரதூரமான உடல் உளக்காயங் களுக்கு உள்ளாகி அவற்றிலிருந்து மீளமுடியாதவர்களாக உள்ளனர்.

அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்கொடுமை யின் பின்னர் அவர்கள் கொல்லப்பட்டுவிடுவதை உறுதிப் படுத்தக்கூடிய கொலைச் சான்றுகளாக

ஓகஸ்ட் 7, 1996 இல் கிரிசாந்தி குமாரசாமி, பெப்ரவரி 11, 1996 இல் அருமைத்துரை தாமலெட்சுமி, மே 17, 1997 இல் முருகேசபிள்ளை கோணேஸ்வரி, ஜூன் 12, 1999 இல் ஜூடா காமலிட்டா, டிசம்பர் 28, 1999 இல் சாரதாம்பாள் சரவனபவானந்தக் குருக்கள், மார்ச் 19, 2001 இல் விசிகலா நந்தன், ஜூலை 7, 2001 இல் தம்பிப்பிள்ளை தனலக்சுமி, டிசம்பர் 16, 2005 இல் இளையதம்பி தர்சினி, ஜூன் 8, 2006 இல் மேரி மெடலின், ஜூன் 30, 2006 இல் பிரேமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுஸ்கோடி, மே 2009 இல் இசைப்பிரியா என்றழைக்கப்படும் சோபா, ஜூலை 10, 2011 இல் சாந்தகுமாரி கிருஸ்ணபிள்ளை

ஆகியவை உள்ளன.

2013 ஆம் ஆண்டு மனித உரிமைக்கண்காணிப்பகம் வெளியிட்ட விரிவான அறிக்கையில் உறுதியான ஆதாரங்களுடன் கூடிய

"2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கா அரச படைகளின் தடுப்புக்குள்ளிருந்த 31 ஆண்கள், 41 பெண்கள், 18 வயதிற்கு கீழ்பட்ட 3 சிறார்கள் ஆகியோர் வன்புணர்வு மற்றும் ஏனைய பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகிய 75 குற்றங்கள்"

ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்அறிக்கையில் "தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் முன்னுரிமை இருக்கின்றது என்ற பின்புலத்திலேயே ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப்படைகள் வன்புணர்வு உட்பட ஏனைய அனைத்துக் குற்றங்களையும் நிகழ்த்தியுள்ளன" என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனைச் சான்றுப்படுத்தும் முகமாக

"யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த யோகலிங்கம் விஜித்தா என்ற 27 வயதுடைய பெண்ணை ஜூன் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நீர்கொழும்பு காவல்நிலையத்தில் தடுத்து வைத்து வாழைப்பூவைக் கொண்டு பாலியல் வன்கொடுமைகளை நிகழ்த்திப்பின் வன்புணர்விற்கு உள்ளாக்கியமை தொடர்பாக ஸ்ரீலங்காவின் மீயுயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் நட்டஈட்டையும் செலவுகளையும் குறித்த பெண்ணுக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டதே தவிர குற்றம் இழைத்தவர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை"

என்பதும் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்டவை என ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப்பதிவாளரால் பட்டியல்படுத்தப்பட்ட பல்வேறு வன்புணர்வுக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மேற்சொன்னவாறே தண்டனைக்கு உட்படுத்தப்பட வில்லை.

அவற்றுள் ஒன்றான

மயிலம்பாவெளி கொலனிக் குடியிருப்பில் வேலன் ராசம்மா மற்றும் அவரது சகோதரி வேலன் வசந்தா ஆகியோர் அருகிலிருந்த இராணுவ முகாமைச் சேர்ந்த நான்கு சிப்பாய்களால் தமது வீட்டில் வைத்து வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்ட குற்றமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இக்குற்றம் தொடர்பாக ஏறாவூர் இல் உள்ள ஸ்ரீலங்கா காவல் நிலையத்திலும், கிழக்குப்படை நடிவடிக்கைகளின் கூட்டுப்படைத் தளபதியிடமும் முறைப்பாடுகள் செய்யப் பட்ட போதிலும் விசாரணைகளை மேற்கொள்ள அவ் இருதரப்பும் மறுத்துவிட்டன.

அதைப்போல மட்டக்களப்பில் தனது வீட்டிலிருந்த மரத் தளபாடங்களைக் களவெடுத்த படையினர் தொடர்பான முறைப்பாட்டை மேற்கொண்ட

முருகேசப்பிள்ளை கோணேஸ்வரி உள்ளூர் காவல் துறையினரால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளனார். அதனையும் முறையிட்டதனால் குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறையினர் அவரது வீட்டினுள் புகுந்து அவரைப் பாலியல் வன்புணர்ந்ததுடன் அவரது பெண்ணுறுப்பினுள் கையெறிகுண்டைப் பொருத்தி வெடிக்கவைத்து அவரை கொலை செய்தனர்.

இக்கொலை தொடர்பாக எவரும் குற்றங்காணப்பட வில்லை.

ஸ்ரீலங்கா அரச இராணுவம் கடும் தாக்குதல்களை மக்களின் மீது மேற்கொண்டு கடுமையான உடற்காயங்களை ஏற்படுத் தியிருப்பதும் உறுதியாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக அறிக்கைகளின்படி "இறுதி யுத்தக் கடுந்தாக்குதல்களில் யுத்த சூனியப்பிரதேசம் என வரையறுக்கப்பட்ட இடங்களின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட செல்தாக்குதல்களினால் 30,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அங்கவீனமாகியுள்ளனர்" என தெரிவித்திருப்பதும் அங்கு பணியாற்றிய தொண்டு நிறுவனப்பணியாளரர் ஒருவர் "நான் கடந்த 20 வருடங்களாக உலகெங்கும் போரரங்குகளில் பணியாற்றியுள்ள போதிலும் இங்குள்ள இழிநிலைமைகள் போன்ற நிலைமை வேறு எங்கிலும் இருந்ததில்லை" எனத் தெரிவித்திருப்பதும் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசானது மிகத்திட்டமிட்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவு நிலப்பகுதியை கைப்பற்றி அதன் ஊடாக அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்கி உள்ளது என்ற எண்ணமே இத்தீர்ப்பாயத்திற்கு எழுந்துள்ளது.

சாதாரண வாழ்வியலை ஈழத்தமிழ் மக்கள் வாழக்கூடாது என்பதை கணக்கிலெடுத்து அவர்களது ஆழ்மனக்கிடக்கைகளில் மாறாத வடுவை இப்பெருமெடுப்பிலான இடம்பெயர்வு போரின் ஆரம்பக்காலம் தொட்டே ஏற்படுத்தத்தக்கவகையில் திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக டிசம்பர் 2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடித்தொகையின் 40.2 சதவீதமான மக்கள் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளாகியிருந்தனர். போர் முடிவடைந்த மூன்றாண்டுகள் கழிந்து ஒக்டோபர் 2012 இல் உள்ளக இடப்பெயர்விற்கு உள்ளான பெருமளவான மக்கள் 42 உள்ளக இடம்பெயர்வு முகாம்களிலோ அல்லது 11 வரையறுக்கப்பட்ட முகாம்களிலோ யாழ்ப்பாணத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நீண்டகாலம் முற்றுப்பெறாத போரினால், இடப்பெயர்வுகளால் இளந்தலைமுறைத் தமிழ்மக்கள் கடும் மனப்பிறழ்வுகளுக்கு உள்ளாகியிருந்தனர் என்பதை இத் தீர்ப்பாயம் கண்டுகொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை இழந்து, பழக்கப்படாத சூழல், குடும்ப கட்டமைப்பின் உடைவு, பெற்றோரிடமிருந்து, பழகிய சூழலிலிருந்து நட்புநிறைந்த அயலவரிடமிருந்து படித்த பாடசாலையில் இருந்து நண்பர்களிடமிருந்து பிரிந்திருத்தல், விளையாட்டுப் பொருட்களையும், சேர்த்து வைத்திருந்த பெறுமதியான வற்றினதும் இழப்பு, குடிநெருக்கமான விருப்பமில்லாத வதிவிடங்கள் சிறார்களின் மனநிலையில் அழுத்தங்களை உருவாக்கியுள்ளது.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தொடரும் உள்நாட்டுப் போர், செல்தாக்குதல்கள், வான் வழித்தாக்குதல்கள், சுற்றி வளைப்புகள், தேடுதல் வேட்டைகள், எண்ணிக்கணக்கற்ற சாவுகள், படுகாயங்கள், உடைவுகள், பேரெடுப்பில் நிகழும் கைதுகள், தடுத்துவைத்தல், சுடுதல், கையெறி குண்டு மற்றும் நிலக்கண்ணி வெடிப்புக்கள் போன்றன சிறார்களின் மனநிலையினை பெரும் அழுத்தத்திற்குள்ளாக்கியுள்ளது.

கனேடிய ஆய்வொன்று கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் சிறுவர்களிடையே போரினால் மனச்சிதறலும், மனநிலைப் பிறழ்வுகளும் பெருமெடுப்பில் உள்ளதை நிறுவியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசபடைகளினால் முன்னெடுக்கப்பட்ட தொடர் யுத்தத்தின் விளைவாக நீண்டகாலத்திற்கு விளைவின்ன உருவாக்கும் உளத்தீங்கு ஈழத்தமிழ் மக்களுக்குப் பரிசளிக்கப்பட்டதை பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் உறுதிப் படுத்தியிருப்பதுடன் 1986 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவில் பணியாற்றும் எல்லைகளில்லா மருத்துவர் குழுவும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. அக்குழுவின் ஏப்ரல் 27, 2002 இல் வெளியான அறிக்கையில் :

"பெரும் எண்ணிக்கையிலான மக்கள் போரினால் நிராதரவாகியுள்ளனர், தமது கிராமங்களின் மீது நடாத்தப்பட்ட வான் தாக்குதல், மோட்டார் பீரங்கித் தாக்குதல், இருபுறச் சூட்டுக்கு இடையில் அகப்பட்டவர்கள், வன்கொடுமைகளுக்கு ஆளானவர்கள் எனப் பலர் தாக்குதல்களுக்குச் சாட்சியாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வன்முறைக்கு ஆளானவர்களாக, படுகாயம் அடைந்தவர்களாக, வீட்டினுள்ளே வைத்து எரியூட்டப் பட்டு கொல்லப்படுவதைக் கண்டவர்களாகப் பலர் உள்ளனர்.

20 பேர் (12%) தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர், 28 பேர் (18%) கைது அல்லது கடத்தப்பட்டுள்ளனர், 27 பேர் (17%) பணயக் கைதியாகி அல்லது தடுப்புக்குள்ளாகியுள்ளனர், 28 பேர் (17%) காவல்துறையாலோ அல்லது இராணுவத்தின ராலோ தவறான நடத்தைகளுக்கு உள்ளாக்கப்பட்டு ள்ளனர் 17 பேர் (11%) வன்கொடுமைக்குள்ளாகியுள்ளனர். பெரும்பாலும் யாவரும் தமது வீடுகளையும் சொத்துக் களையும் இழந்துள்ளனர் (157 பேர்-97%) மற்றும் வறுமைக் குள்ளாகியுள்ளனர் (152-94 %). 88 வீதமானவர்கள் (142 பேர்) தாம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதான நிரந்தர உணர்விற்குத் தள்ளப்பட்டுள்ளனர். வன்முறைகளால் தமக்கு விருப்பமானவர்களை இழந்துள்ளனர். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்களில் 12 பேர் (7 %) தமது துணையை இழந்துள்ளனர், 14 பேர் (9%) குழந்தையையும், 20 பேர் (12%) பெற்றோரையும், 29 பேர் (18%) சகோதரர் களையும், 16 பேர் (10%) பேரர்களையும் இழந்துள்ளனர். மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் தமக்கு நெருக்கமானவர்களை இழந்துள்ளனர். இவ் இழப்புக்க ளின் சாட்சியாகவும் சிலர் உள்ளனர். 16 பேர் (10 %) தமது குழந்தை அல்லது தமது பாதுகாப்பிலிருந்த குழந்தை கொல்லப்படுவதை கண்களால் கண்ட சாட்சிகளாக உள்ளனர்.

சராசரியாக அரைவாசியினர் (78 பேர் - 48%) தமது குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். 39 பேர் (24%) தமது குடும்பத்திலுள்ள ஒருவர் தற்கொலைக்கு முயன்ற தாக தெரிவித்துள்ளனர். ஒரு இனக்குழுமமே போரின் வடுக்களைத் தாங்கிப் பிறழ்வுகளுக்கு உள்ளாகி யிருக்கின்றது என்பதை கற்பனை செய்து பார்ப்பதே பெரும் இடராக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களே இப்பெரும்போரில் பலியிடப்பட்டவர்களாகவும் சாட்சிகளாகவும் உள்ளனர், அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு தற்சார்பு நிலை மறுக்கப் பட்டவர்களாகவும் உள்ளனர் என்பதுடன் இழிந்த நிலையுள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது போருக்குப் பின்னரான மோசமான மனப்பிறழ்வுகளை உருவாக்கு வதற்கு போதுமானதாக அமைகின்றது''

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரில் தப்பிப்பிழைத்துள்ள ஈழத்தமிழ் மக்களின் மனநிலைப்பிறழ்வுகளில் ஏற்படும் விருத்திகளையும் இத் தீர்ப்பாயம் கவனத்திற் கொள்கின்றது. டப்ளின், பிரீமன் தீர்ப்பாயங்களுக்கு வழங்கப்பட்ட போதுமான விபரணங் களுடன் கூடிய கண்கண்ட சாட்சிகளின் தகவல்களுக்கும் அப்பால் இறுதிப்போரில் தப்பிப்பிழைத்தவர்களின் உளநிலையின் மீது தாக்கஞ் செலுத்தத்தக்க அரசின் கொள்கைகள் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு சான்றுகள் ஆவணங்களாக வழங்கப்பட்டுள்ளன. இதனை மேலும் வெளிப்படுத்தியுள்ள வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்ட அண்மைய ஆய்வு முடிவுகளின்படி

யாழ்ப்பாணத்தில் உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளான வர்களில் பிற்கால மன உளைச்சல் சீர்கேட்டினால் 13%, பதற்றத்தினால் 48.5%, மன அழுத்தத்தினால் 41.8% மானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்பாதிப்பானது போருக்கு பிந்தைய கொசோவா மற்றும் ஆப்கானின் நிலையுடன் ஒப்பிடத்தக்கது.... பருமட்டாக யாழ்ப்பாணத் திலுள்ள 68 வீதமானவர்கள் ஆகக்குறைந்தது ஒருதடவை யேனும் அதிர்ச்சியை அனுபவித்தவர்களாகவும் பெருமள வானவர்கள் பல தடவைகள் அதிர்ச்சிகளை அனுபவித்துக் கடந்தவர்களாகவும் உள்ளனர்

எனத் தெரிவித்துள்ளது.

ஆயுத மோதல் காலங்களில் இக்கொடிய விதிமீறல்கள் தமிழ்க்குடித்தொகையின் மீது நிகழ்த்தப்பட்டிருந்த போதிலும் தற்போதும், போருக்கு பின்னரான காலத்திலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் சில நிகழ்வதை அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

5.1.4.2 விசேட நோக்கங்கள்:

இனப்படுகொலைப் பன்னாட்டு நடைமுறைவரைபின் படி பாதுகாக்கப்பட்ட மனிதனையோ அல்லது மனிதக் குழுவையோ அழிக்கும் விசேட நோக்கம் இருந்தது என்பதை நேரடிச்சாட்சிகளுடன் நிருபிப்பது சற்றுக் கடினமானதே.

பன்னாட்டுக்குற்றவியல் தீர்ப்பாயங்களின் குறிப்புக்களின் படி "விசேட நோக்கம் இருந்தது என்பதை நிருபிப்பதற்கான நேரடிச்சாட்சிகள் இல்லாமலிருக்கும் சந்தர்ப்பங்களில் அனுமானிக்கக்கூடிய சான்றுகள் மற்றும் நிகழ்வுகளின் அடிப்படையில், பொதுவாகத் தெரியுமிடத்து திட்டமிட்ட வகையில் குறித்த குழுவின் மீது மேற்கொள்ளப்பட்ட மற்றைய குற்ற நடவடிக்கைகளின் அடிப்படையில், நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களின் அளவினைக்கொண்டு குறித்த குழுவின் மீதோ, அதன் அங்கத்தவர்களின் மீதோ திட்டமிட்டவகையில் அழித்தொழிப்பு நடவடிக்கை அல்லது பாரபட்சம் காட்டும் குற்ற நடவடிக்கை நிகழ்ந்ததாக கொள்ள முடியும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் "சூழ்நிலைச் சான்றுகளைக்" கொண்டு இனப்படுகொலைக்கான விசேட எண்ணம் இருந்தது என்பதை பின்வரும் உதாரணங்களின் ஊடாக நிருபிக்க முடியும்.

1. பொதுவாகவும் பரந்த அளவிலும் தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்கள்

2. அதற்கான செயல்களை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட பொதுவான அரசியல் எண்ணக்கரு

3. உண்மையான அல்லது முயற்சிக்கப்பட்ட அழிவின் அளவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கொலை செய்வதற்கென உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறையான திட்டம்

5. திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட கொலைகளும் உடலங்களை இல்லாதொழித்த முறையும்

6. பாரபட்சப்படுத்தவென பின்பற்றப்பட்ட திட்டமிட்ட அணுகுமுறைகள்

7. குற்றஞ்சாட்டப்பட்டவர்களிற் காட்டப்பட்ட பாகுபாடு

ஸ்ரீலங்கா அரசானது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை நிகழ்த்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்திய முதலாவது நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகள் தமிழ் மக்களின் மீது பொதுவாகவும் பரந்த அளவிலும் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களை ஆவணப்படுத்தி நிறுவியுள்ளது.

முள்ளிவாய்க்கால் போர்ச்செயற்பாட்டின் பிரதான பாத்திரங்கள் வெளிப்படையாகவே போருக்கு முன்னரும், போரின் போதும், போருக்குப்பின்னரும் வெளிப்படுத்திய கூற்றுக்கள் ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்யும் எண்ணம் அப்பாத்திரங்களுக்குள் புரையோடிப் போயிருந்ததை வெளிப்படுத்தியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்று வரை ஸ்ரீலங்கா அரசின் உயர்அதிகாரிகள், அரசியல் மற்றும் இராணுவத்தலைவர்கள், சிரேட்ட சிங்களப் பிரசைகள் ஆகியோரால் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கணக்கற்ற கூற்றுக்களில் தமிழரை இனப் படுகொலைக்கு உள்ளாக்கும் எண்ணம் உள்ளடங்கிக் கிடந்ததை அறியக்கிடைக்கின்றது.

அவ்வகைக் கூற்றுக்களை வரலாற்றுத் தொன்மைவாத அடிப்படையில் உருவாக்கிக் கொண்டு அதனை அடிக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது பேச்சுக்களிலும், பாடசாலைப்புத்தகங்களிலும் ஊடகங்களிலும் அவர்கள் வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கின்றோம்.

மேற்கூறியவற்றுக்கு எடுத்துக்காட்டாக:

"இன்று இங்கு அழைத்து வரப்பட்ட உங்களுக்கு ஒரு காணித்துண்டொன்று வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்களின் கிராமத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். பெரும் சமுத்திரத்தில் உள்ள சிறு மரத்துண்டாக நீங்கள் உள்ளீர்கள். ஆனால் நினைவில் வைத்திருங்கள். இந்த நாடே ஒருநாள் உங்களைத் திரும்பிப் பார்க்கும். சிங்களவர்களின் இறுதி யுத்தம் இந்த பதவியா நகரின் எல்லைகளில் தான் நிகழும். நீங்கள் ஆண்களும், பெண்களுமாக இந் நாட்டின் தலைவிதியை உங்களின் தோள்களில் சுமக்கின்றீர்கள். இந்நாட்டைப் பிரிக்க யாரேனும் சிந்திப்பார்களாயின் அவர்கள் உங்களையும் கருத்திற்கொள்ளவேண்டும். இந்நாடு சிலகாலத்திற்கு உங்களை மறந்துவிடலாம். ஆனால் சிங்கள மக்கள் தமது எல்லைக்கோட்டையாக உங்களை பார்க்கும் காலம் மிகவிரைவிலேயே உருவாகும்"

– ஸ்ரீலங்காவின் முதலாவது பிரதமராக 1947 – 1952 காலப் பகுதியில் பதவி வகித்த டி.எஸ். சேனநாயக்க இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் தமிழர்களின் பூர்வீக நிலமான பதவியாவில் சிங்கள ஆதிக்கவாதிகளைக் குடியேற்றிய போது நிகழ்த்தியஉரையிலிருந்து

– சர்வோதய வெளியீடாக 1988ல் வெளியிடப்பட்ட எச்.எம். குணரத்னவின் இறைமையுள்ள நாடு என்ற புத்தகத்தின் 201ஆம் பக்கம்–

"சமத்துவம் வழங்கப்படுவதென்பதன் கருத்து சிங்கள இனத்தின் பேரழிவு என்பதாகும். தமிழர்கள் தமது மொழி, கலாசாரம், மனத்திடம் என்பவற்றால் மிக வலுவான இனத்தவர்கள். அவ்வலுவை எம்மீது அவர்கள் திணித்துவிடுவார்கள்"

– 1955 நவம்பர் 13 ஆம் திகதி அப்போதைய பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தெரிவித்ததாக 1955 நவம்பர் 14 இல் சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான செய்தி –

"வடக்கு, கிழக்கில் உள்ள தமிழரசுக் கட்சியோ அல்லது அக்கட்சிக்கு துணைநிற்கும் மலையகத் தொழிலாளர்கள் உட்பட நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ளவர்களோ அனைவரும் ஒன்றாக இணைந்து பொருளாதாரத்தை செயலிழக்க செய்வோம் என அச்சுறுத்தி எமது அரசிற்கு ஆணையிடுவோராக மாற நாம் அவர்களை அனுமதிக்க முடியாது. அவ்வாறு நிகழுமாயின் அக்கணமே அனைவரும் தேசத்திற்காகவும் பொதுஎதிரிக்கெதிராகவும் ஒன்றுபட வேண்டும். தாய்நாட்டிக்கு கடமைசெய்யத் தயாராக இருக்க வேண்டும்"

– மொழி உரிமையை நிலைநாட்டும் பொருட்டு தமிழரசுக்கட்சி 26.04.1961ல் ஏற்பாடு செய்திருந்த வன்முறையற்ற எதிர்ப்பினை அடுத்து அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து - S. Ponniah, Satyagraha and the Freedom Movement of the Tamils in Ceylon. Jaffna: Kaniah, 1963, p182-186.

"தமிழர்களின் எண்ணமென்ன என்பது தொடர்பாக எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை. அவர்களைப் பற்றியோ அவர்களது உயிர்களைப்பற்றியோ அல்லது அவர்களது எண்ணங்களைப்பற்றியோ நாம் இப்போது கருத்திற்கொள்ளத்தேவையில்லை. எந்தளவுக்கெந்தளவு அதிக அழுத்தத்தை வடக்கின் மீது பிரயோகிக்கின்றோமோ அந்தளவுக்கந்தளவு மகிழ்ச்சியடையும் மக்கள் இங்கிருக்கின்றார்கள். உண்மையிலேயே தமிழர்களை நான் பட்டினி போட்டால் சிங்களவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்"

– சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் உரையிலிருந்து Daily Telegraph, 11 July 1983.

"இந்நாட்டின் பெரும்பான்மையினர் சிங்களவர்களே. ஆதலால் சிங்களவர்களே இந்நாட்டை ஆள வேண்டும். கடந்த காலங்களில் இந்நாட்டை அவர்கள் ஆண்டதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே எதிர்காலத்திலும் அவர்களே இந்நாட்டை ஆள வேண்டும். சிறுபான்மைகள் அவ்வாட்சிக்கு உதவியும் ஒத்தாசையும் நல்க வேண்டும்.

ஒரு பேச்சிற்கு வடக்கு, கிழக்கிற்கு ஈழத்தை வழங்கி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு பணித்தால் என்ன நிகழும்? அவர்கள் எதனை உண்பது? நிலத்திலுள்ள மண்ணைத்தான்.... பெரும்பான்மைச் சிங்கள இனம் ஒன்றுபட்டால் கொழுகொம்பைச் சுற்றிப்படரும் சிறு தாவரங்களைப் போலச் சிறுபான்மையினர் எம்மைச் சுற்றிப் படருவர்"

– சனாதிபதி. டி.பி. விஜயதுங்க (1993-1994) 05.02.1994 இல் மத்திய மாகாணத்தில் நிகழ்ந்த தேர்தல் பரப்புரையின் போது Sunday Observer, 6 February 1994.

"இந்நாடு சிங்களவர்களுக்கேயுரியது என்பதை நான் திடமாக நம்புவதுடன் எங்களுடைய மக்களாகவே இந்நாட்டில் சிறுபான்மைச்சமூகங்களும் வாழ்ந்து வருகின் றனர். இந்நாட்டில் 75 சதவீத சிங்களப் பெரும்பான்மை யினராகிய நாங்கள் ஒருபோதும் இந்நாட்டை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்பதுடன் இந்நாட்டைப் பாதுகா க்கும் உரிமை எம்மிடமே உள்ளது.... அவர்கள் எங்களுடன் இந்நாட்டில் வாழலாம். ஆனால் சிறுபான்மையினர் என்ற வகுதிக்குள் அடங்கலாமேயொழிய அதற்கும் அப்பால் மட்டுமிஞ்சிய உரிமைகளை கோரக்கூடாது"

– ஸ்ரீலங்கா இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா (டிசம்பர் 2005 – ஜூலை 2009) National Post, 23 September 2008.

"மூன்று வருடங்களுக்கு முன்பிருந்தே சிறுபான்மை மக்கள் என்ற வார்த்தையை எமது அகராதியில் நாம் நீக்கிவிட் டோம். இனி தமிழர்களோ, முஸ்லிம்களோ, பறங்கியரோ, மலாயரோ அல்லது வேறு எவருமோ இங்கே சிறுபான்மை யினரல்ல. இந்நாட்டில் இரண்டு வகையான மனிதர்களே உள்ளனர். இந்நாட்டை நேசிக்கும் ஒரு வகுதியினர். எஞ்சிய சிலர் தாம் பிறந்த நாட்டை நேசிக்கத்தெரியாதவர்கள். அவ்வாறான மனிதர்கள் மிகச்சிலரே உள்ளனர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சனாதிபதி மகிந்த ராசபக்ச (2009-) 19 மே 2009ல் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்து ஆற்றிய உரையில் இருந்து – The Sunday Leader, 24 May 2009

"பயங்கரவாதத்தை வெற்றிகொண்ட எந்தவொரு நாடும் அப்பயங்கரவாதத்திற்கு அரசியல் முகமொன்றை வழங்க அனுமதிக்கவில்லை. அவ்வாறான அரசியல் முகத்தை உருவாக்குவதற்கு எதிராக அரசியல் மற்றும் சட்ட நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அவ்வகையான எந்தவொரு எதிர் நடவடிக்கையையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அதன் பெறுபேற்றை தற்போதைய வடமாகாணசபைத் தேர்தலின் ஊடாக நாம் பெற்றுள்ளோம். வடமாகாண சபையில் பெற்றுக்கொண்ட வெற்றியினைக்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் தமிழ் மக்களின் இறைமையை பெற்றுக்கொள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பானது ஸ்ரீலங்கா அரசுடன் பொருதுமாயின் தமிழ்ச் சமூகமும் அதன் எதிர்காலச் சந்ததியும் மீண்டுமொரு நந்திக்கடல் ஏரியினைச் சந்திக்கவேண்டியிருக்கும்"

– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண வெற்றியைத்தொடர்ந்து தேசிய மரபுரிமைக் கட்சித் தலைவரும், தொழிநுட்பம் ஆராய்ச்சி மற்றும் அணு வளத்துறை அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்கவினால் 23.11.2013 இல் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை

5.1.4.3 குழு

தேசிய இனத்தை, இனக்குழுமத்தை, குலத்தவரை, அல்லது ஒரே சமயத்தை பின்பற்றுபவர்களை சார்ந்து ஒரு மக்கட் தொகுதியை வரையறை செய்யும் போது இத்தீர்ப்பாயமானது பாதிக்கப்பட்டவர்களை "ஈழத்தமிழ் இனத்தவராக" வரையறை செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வரையறை செய்யும் போது "தமிழ்த் தேசிய இனத்தின்" ஒரு பகுதியினராக அவர்கள் உள்ளனரா? (குற்றச்சாட்டில் உள்ளடக்கப்பட்டதைப்போல) அல்லது வெளிப்படையாகத் தீர்மானிக்கத்தக்க வகையில் "ஒரு தேசிய இனமாக ஈழத்தமிழர்கள்" இனப்படுகொலைக்கு உள்ளானார்களா? என்பதையும் இத்தீர்ப்பாயமானது மிகக்கவனமாக வரையறை செய்துள்ளது.

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் மற்றும் பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயங்களினால் "குழு" தொடர்பாக வரையறுக்கும்போது பின்பற்றப்படவேண்டிய புறநிலை மற்றும் அகநிலை ஏற்பிசைவுத்தத்துவங்களுக்கு அமைவாக காப்பளிக்கப்பட்ட குழுவானது "பொதுவானதொரு தேசிய அடையாளத்தைக் கொண்டிருப்பதுடன் தளம்பல் இன்றி தொடர்ந்தும் அவ் அடையாளத்தை நிரந்தரமாகத் தம்மிடையே பகிர்பவர்களாகவும் இருக்கும்". ஈழத்தமிழர்கள் தமிழ்த்தேசிய இனமாகத்தமை உணர்பவர்களாகவும் (புறநிலை அணுகுமுறை) தம்மை ஓர் குழுவாக அவர்கள் தம் அக உணர்வுகளில் உணர்பவர்களாகவும் (அகநிலை அணுகுமுறை) இருக்கின்றார்கள்.

ஈழத்தமிழர்கள் என்னும் அடையாளமானது குடாநாட்டின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களை அடையாளப்படுத்துவதுடன் மிக முக்கியமாக இவ் அடையாளமானது ஆயுதப் போராட்டத்திற்கு முற்பட்ட காலத்திலே அடையாளங் கொண்டு படிப்படியாக வளர்ச்சி கண்டு தம்மீது திணிக்கப் படும் அடக்குமுறைக்கு எதிராக அண்மைய ஆண்டுகளில் மிக எழுச்சியுடன் மேலெழுந்து தமது தாயகத்தில் தமக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் தம்மை அடையாளப்படுத்தி நிற்கின்றது.

"ஈழம்" என்ற சொல்லானது முன்னைய காலங்களில் ஒட்டு மொத்தக்குடாநாட்டையும் அடையாளப்படுத்தும் பெயராக இருந்தபோதிலும் சுதந்திர வடக்குகிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலேயே தற்போது பெருமளவில் பாவிக்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்ப்பாயத்திற்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் முன்னிலையான சாட்சிகள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள குழு யாரெனில் தமக்குரிமையான சுயநிர்ணயத்தின் அடிப்படையில் தமது கூட்டடையாளத்தை பேணிக்கொள்ளவும் பாதுகாத்துக்கொள்ளவும் குரலெழுப்புகின்ற குழுவெனத் தம்மை மிகத்தெளிவாக அடையாளங் காட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஐ.நா பாதுகாப்புச் சபையின் தலைவருக்கு வரைந்த 24 மே 1994 மடலில் "பெருமெடுப்பில் நிகழும் படுகொலைகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிவதன் ஊடாக ஒரு அடையாளப்படுத்தப்பட்ட குழுவை முற்றாக அல்லது பகுதியளவில் அழிக்கும் எண்ணம் கொண்டிருத்தலை இனப்படுகொலைக்கான ஏதுவாகக் கொள்ளமுடியும் என்பதுடன் கூட்டுவாழ்வு அல்லது சுபாவம் அல்லது இயலுமை போன்ற காரணிகளின் அடிப்படையில் கூட்டாக அடையாளப்படுத்தப்படுபவர்களின் மீது தனித்தனியாக நிகழ்த்தப்படும் குற்றங்கள் கூட இனப்படுகொலையினை அடையாளப்படுத்தவென உருவாக்கப்பட்ட பன்னாட்டு வரைபின் கீழ் இனப்படுகொலையாகும்'' என ஐ.நா செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதே அடிப்படையில் மனித மாண்பிற்கு எதிராக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் குற்றங்கள் தொடர்பான மாதிரி வரைபை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்த விசேட நிபுணர் தனது நான்காவது அறிக்கையில் ''ஒரு தேசியக் குழுவானது பல்வேறுபட்ட இனக்குழுக்களை தன்னகத்தே கொண்டிருக்கும்.... அதற்கமைய தேசம் என்ற எண்ணக்கருவானது ஒரு இனக் குழுமத்துடன் மட்டும் இணைத்து நோக்கற்பாலதல்ல. மாறாக ஒன்றாகக்கூடி வாழ்வதற்கான பொதுவிருப்பு, பொது அடையாளம், பொதுக்குறிக்கோள், பொதுக்கருத்தியலுடன் ஒன்றாக வாழவிரும்பும் வேறுபட்ட இனங்களை ஒரு தேசமாக நோக்குதல் வேண்டும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுத்தமிழினத்தையும் இலக்கு வைக்காதிருந்தாலும் கூட பொதுவிருப்பு, பொதுக்குறிக்கோள், பொதுக்கருத்தியலுடன் ஒன்றித்து வாழ நினைத்த ஈழத்தமிழினக்குழுவை இலக்கு வைத்து இவ் இனப்படுகொலையானது நிகழ்த்தப்பட்டது என்பது மிகத்தெளிவானதாகும்.

எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய இனக்குழு ஒன்று தனது தனித்துவ அடையாளத்தை அழிவடைய விடாமல் பாதுகாக்க வேண்டிநின்ற போது, அக்குழுவின் வலுமிக்க கலாசார, அரசியல், சமூக பொருளாதார மற்றும் சமயப்பண்புகளால் அக்குழு இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் பேரினவாத மிகை வலுவால் விடாத்துயரளிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

5.1.5 இனப்படுகொலைச் செயற்பாடுகளைத் தொடர்வதால் தொடர்ந்து நிகழும் இனப்படுகொலை

மேற்கூறப்பட்ட விடயங்களின்படி இத் தீர்ப்பாயமானது இனப்படுகொலையை ஒரு தொடர் செயற்பாடு என ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி தொடர்ந்து நிகழும் நடவடிக்கைகளின் மூலம் இனப்படுகொலை தொடர்கின்றது என்பதை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும். நிர்மூலமாக்கும் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டால், மிகப் பொதுவான நிர்மூல நடவடிக்கையாக குழுவின் அங்கத்தவர்களை கொல்வதைக் கருதலாம். (article 2.a UNGC-United Nations Genocide Convention).

யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஈழத்தமிழர்களின் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்ட படையினர் அகவிதி 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஏனைய சில இனப்படு கொலை நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிதி 2.b.

உடலியல் மற்றும் உளவியற் சிதைவுகளை குழுவின் அங்கத்தவர்களின் மீது நிகழ்த்துதல்.

இப்பிரிவானது உடலியல் மற்றும் உள்வியற் சிதைவுகள் தொடர்பான முடிவுகளை ஆதாரமாக முன்வைக்கத் தூண்டுகின்றது. அந்த அடிப்படையில் சிதைவு அல்லது தீங்கு என்பது "சித்திரவதை, வன்புணர்வு, விசாரணை களின் போது அடித்து கொடுமைப்படுத்துதல் போன்ற பாலியல் வன்முறைகள்" என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. உடலியல் மற்றும் உளவியற் சிதைவுகளை ஏற்படுத்தும் இடமொன்றாக முக்கியமாகக் கருதக்கூடிய இடம் "தடுப்பு முகாம்கள்" என நீதிக்கான பன்நாட்டு நீதிமன்றம் தீர்த்துள்ளது.

இந்த வழக்கில், மே 2009 இற்குப்பின்னிருந்து இன்று வரை அரச படைகளாலும், காவல்துறையினராலும் கொடுமைப் படுத்தல்கள் தொடர்கின்றன என்பதை இத்தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தடயங்கள், சாட்சிகளாகவும், பாதிப்பிற்கு உள்ளாகியவர்களாகவும் முன்னாகியவர்களின் வாக்குமூலங்களிலிருந்து தெளிவாகின்றது.

போராளிப்பெண்களின் மீதும், வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் பெண் உறவினர்களின் மீதும் பாலியல் வன்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2009 முதற் கொண்டே தமிழ்ப்பொதுமக்கள் அரச படைகளின் தடுப்புக் காவலின் போது பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் படுவதை பன்னாட்டு மனித உரிமைக் கண்காணிப்பகம் ஆவணப்படுத்தியுள்ளதுடன் அத்தகவலை மேற்கோள் காட்டி இவ்வன்முறைகள் "பரவலாகவும் நுட்பமாகவும்" நிகழ்கின்றன என்று ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகள் முகவரகத்தின் உயர்தஸ்தானிகர் டிசம்பர் 2012 இல் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். அத்துடன் ஏனைய நாடுகளில் தஞ்சக் கோரிக்கைகளை வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஏதிலிகளின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும் எனவும், பிற்போர்க்காலச் சூழலில் தடுப்பு முகாம்களில் உள்ள ஆண்களின் மீது வன்புணர்வுடன் மட்டும் நின்று விடாத பாலியல் வன்முறைகள் நிகழ்ந்திருப்பதை மிகப்பிந்திய அறிக்கைகள் ஆவணமாக்கியுள்ளன என்றும் தெரியப்படுத்தியிருந்தார்.

அவ்வாறே இத்தீர்ப்பாயத்திற்கு தரப்பட்ட புகைப்பட ஆவணத் தொகுப்புக்களில் உள்ள உறுதிப்படுத்தப்பட்ட புகைப்பட ஆதாரங்களின் மூலமும், தடயவியல் சான்றாதாரங்களின் மூலமும் 2009 போரிற்குப் பின்னரான காலப் பகுதியில் கொடுமைகள் நிகழ்வது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

ஒருசேரப்பார்க்கும் போது மேற்சொன்னவை யாவும் தவிர்க்கக்கூடிய சான்றுகள் அல்ல என்பதுடன் பன்னாட்டுத் தீர்ப்பாயமொன்று இச்சான்றுகளை இனப்படுகொலை நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பதையும் சந்தேகமின்றி நிரூபித்துள்ளன.

அகவிதி 2.c.

குழுவொன்றின் வாழ்வியற்பண்பினைப் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ பௌதீக அழிவிற்கு உட்படுத்தும் நோக்கத்துடன் திட்டமிட்டே அல்லற்படுத்துதல்.

இவ் அகவிதி 2.c. குழுவொன்றின் அங்கத்தவர்களை மெதுவாகக்கொல்லும் முறைகளை விபரித்துள்ளது.

அவ்வகை முறைகளாக:

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உணவினை வினியோகம் செய்தல், வாழ்விடங்கள் - இருப்பிடங்களில் இருந்து சூட்சுமமாக பெயர்த்தனுப்புதல், ஆகக்குறைந்த அளவிற்கும் குறைவான அளவில் மருத்துவ வசதிகளைக் கிடைக்கச்செய்தல்.

என்பவை வகுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம்

ஒழுங்கற்ற இருப்பிட வசதியும் ஆடையணிகலன்களும், மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள் மற்றும் அளவிற்கதிகமான வேலைப்பழு அல்லது பௌதீக வேலைச்சுமை

போன்றவையும் அகவிதி 2.c. இன் கடப்பாடுகளை திருப்திப்படுத்தப் போதுமானவை எனக் குறித்துள்ளது.

அவ்வாறே தமது இருப்பிடங்களிலிருந்து சூட்சுமமாக வெளியேற்றப்படுதலும் பாதுகாக்கப்பட்ட குழுவொன்றின் வாழ்வியற் பண்பினை பௌதீக அழிவிற்கு பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ உட்படுத்தும் நோக்கங் கொண்டது எனப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயங்கள் வரைந்துள்ளன.

இத்தீர்ப்பாயத்திற்கு தரப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப் படையில் ஈழத்தமிழர்களிற்கு சொந்தமான நிலபுலங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளமை தெளிவாகி யுள்ளது.

2009 இல் வெளியாகிய அறிக்கையொன்று

தமிழர்களின் சொந்த நிலங்களை கையகப்படுத்தும் அரசின் தந்திரோபாய உபாயமாக பெருமளவு நிலத்தினை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்து படைகளினால் நிலத்தைக் கையகப்படுத்துவது நிகழ்ந்து ள்ளது. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்தினுள் அதன் உரிமையாளர்கள் நுழையவோ அவர்களுக்கு உரித்துள்ள நீர் மற்றும் நில வளங்களைப் பயன்படுத் துவதையோ உயர்பாதுகாப்பு வலயத்தின் படையினர் அனுமதிப்பதில்லை. மீறுபவர்கள் கைதிகளாக் கப்படவோ அல்லது தண்டம் விதிக்கப்படவோ அல்லது சுட்டுக் கொல்லப்படவோ கூடிய நிலையுள்ளது.

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக வளம் நிறைந்த தமிழர்களின் நிலங்களிலும், கரையோரங்களிலும் பாரிய நிலப்பிரதேசங்களைக் கையகப்படுத்தி இராணுவமயமாக்கிக்கொள்வதன் ஊடாக அம்மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்பியும் வாழ்வாதாரங்களை மறுப்பதன் ஊடாகவும் அவர்களை உள்ளக இடம்பெயர்விற்குள்ளான மக்கள் ஆக்கிவிடவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டிருப்பது தெளிவாகின்றது.

இவ்வாறு உள்ளக இடம்பெயர்விற்குள்ளான தமிழ் மக்களை தம்முடன் வைத்துப்பராமரிக்க முன்வரும் தமிழ் மக்களும் வாழ்வாதாரச்சிக்கல்களையும், வாழ்கைச்செலவினைச் சமாளிக்க முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டு பெரும் சுமைகளையேற்க வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கையகப்படுத்தற் செயன்முறையானது ஒரு கிராமத்தில் வாழும் தமிழ்மக்களை ஒட்டுமொத்தமாக குறிவைத்து அவர்களின் மீது வன்முறைகளைத் திணித்து அவர்களை சிதைக்கவும் இடப்பெயர்விற்குள்ளாக்கவும் எண்ணங் கொண்டு செயற்படுத்தபட்டுள்ளது.

போர் முடிவடைந்து நான்காண்டுகள் கடந்தும் ஈழத்தமிழ் மக்கள் சமூகப்பாதுகாப்பற்றவர்களாகவும், போதுமான உணவற்றவர்களாகவும், குறைந்தளவு சுகாதாரவசதி களுடன் வாழ நிர்பந்திக்கப்பட்டிருப்பதை இத்தீர்ப்பாயம் குறித்துக்கொண்டுள்ளது. பிந்திய ஆய்வுத்தகவல்களின் படி நாடுமுழுவதும் போசாக்கின்மையானது 29 வீதமாக இருக்க வடக்கு கிழக்கில் மட்டும் அவ்வீதம் 50 வீதத்தையும் தாண்டிச்சென்றிருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 53 வீதமாகவும், நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப்பிரதேசத்தில் 51 வீதமாகவும் போசாக்கின்மை பதிவாகியுள்ளது. போசாக் கின்மையின் முக்கிய காரணியான வறுமைக்கோட்டு மட்டத்திற்கு கீழ் வாழும் 58.7 வீதமான மக்கள் வடக்குக் கிழக்கில் இருப்பது வெளியாகியுள்ளது. ஐ.நா.வின் உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுத்திட்டம் 2011 ஜூன் மாதம் வெளிப்படுத்தியுள்ள தகவல்களின் படி 63 சதவீதமான மீளக்குடியமர்த்தப்பட்ட தமிழ்மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக தெரிவித்துள்ளது.

விரிவுபடுத்தப்படும் இராணுவமயமாக்கல், ஈழத்தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் உருவாக்கப்படும் சிங்களக் குடியேற்ற ங்கள், சிங்கள பௌத்த சமயத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் பரப்ப முற்படுதல் போன்றவை நிகழ்த்தப்படுவது ஆதாரபூர்வமாக இத்தீர்ப்பாயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவை குழுவொன்றின் வாழ்வியல் பண்பினை பகுதியளவில் அல்லது முழுமையாக "பௌதீக அழிவிற்கு உட்படுத்தும் நோக்கத்துடன் திட்டமிட்டே" அல்லற்படுத்தும் செயற்பாடுகள் என நிரூபிக்கப்பட்டுள்ளன.

அகவிதி 2.d.

குழுவொன்றின் பிறப்பு வீதத்தை திட்டமிட்டுக் கட்டுப்படுத்துதல்

ஒக்டோபர் 2013 ஆம் ஆண்டில் வெளியான அறிக்கை யொன்றில் வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய மூன்று கிராமங்களிலும் நிர்பந்திக்கப்பட்டு குடும்பக் கட்டுப்பாடு நிகழ்த்தப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இதனை கிளிநொச்சி மாவட்டத்தில் களநடவடிக்கையை முன்னெடுத்த "த சோசியல் ஆர்கிடெக்ட்ஸ் ஒவ் கொகர்சிவ் கொன்றாசெப்சன்" என்ற நிறுவனம் வெளிப்படுத்தியிருந்தது. "ஐயத்திற்கிடமின்றி இச் செயற்பாடானது அரச சுகாதாரப் பணியாளர்கள் தமிழ்ப் பெண்களை வற்புறுத்தி -ஜாடெல் (Jadelle) - எனும் கருத்தடைச்சாதனத்தைப் பொருத்தப்பண்ணியுள்ளமை" தெளிவாகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் விசாரணைகளை முன்னெடுப்பதன் ஊடாக இக்கட்டாயக்கருத்தடை முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவின் ஏனைய பிரதேசங்களிலும் நிகழ்ந்துள்ளதா? அல்லது தமிழ் ஈழப்பிரதேசத்தினை மட்டும் இலக்கு வைத்து நடத்தப்பட்டதா? என்பது கண்டறியப்பட வேண்டும். இங்கு கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் இவ்வாறு கருத்தடைச்சாதனங்களை பொருத்துவது அச்சாதனத்தை வைத்தியர் ஒருவரின் உதவியுடன் அகற்றமுடியும் என்பதால் குழுவொன்றின் பிறப்புவீதத்தைக் குறைக்கும் இனப்படு கொலைச் செயற்பாடாக இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபு வரையறுக்கவில்லை என்பதே.

எனினும் "இவ்வாறு வைத்தியரொருவரின் உதவியுடன் கருத் தடைச்சாதனத்தை அகற்ற முடியும் என்பதை அதனைப் பொருத்த நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சேவையாளர்கள் தெளிவாகவும், உண்மையாகவும் விளங்கப்படுத்தவில்லை" எனவும் அவ்வாறு நீக்க முடியுமா? எனக் கேட்கப்பட்டபோது பொருத்திய கருத் தடைச் சாதனத்தை நீக்க வேண்டுமாயின் கட்டணங்களைச் செலுத்த வேண்டிவரும் என அம் மக்களிடம் கூறப்பட்டு இருப்பதையும் "த சோசியல் ஆர்கிடெக்ட்ஸ் ஒவ் கொகர்சிவ் கொன்றாசெப்சன்" அமைப்பு மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

நிறைவாக, இத்தீர்ப்பாயமானது ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராகத் தற்போதும் இனப்படுகொலைச் செயன் முறையானது தொடர்வதனை அடையாளப்படுத்தியுள்ளது, எனினும் முற்றுமுழுதான அவ் இனத்தின் அடையாளத்தை இனப்படுகொலைச் செயற்பாடுகளால் அழிக்க முடியாமல் போயிருக்கின்றது.

இனப்படுகொலைத்திட்டத்தின் கூட்டிணைக்கப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளும் மே 2009 இல் அதன் உச்சத்தை எட்டி நின்றன. இக்கூட்டிணைக்கப்பட்ட திட்டத் தின் ஊடாகத் தமிழினத்தின் ஒட்டுமொத்த அடையாளத்தை யும் அழிக்கும் எண்ணம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கருத்துருவாக வெளிப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அக்காலத்தில் அதனை நிறைவேற்ற முடியாமல் போனதனால் இனப்படுகொலைச் செயன்முறையை தொடரும் நிலை உருவாகியுள்ளதையடுத்து ஏலவே பின்பற்றிவந்த இனப்படுகொலைத் தந்திரோபாயத்தை ஸ்ரீலங்கா மாற்றியுள்ளது. படுகொலைகளை நிறுத்தி அதற்கொப்பான மற்றைய வடிவங்கள் ஸ்ரீலங்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக தமிழினக்குழுவின் அடையாளத்தை துடைத்தழிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படாமல் ஈழத் தமிழினக் குழுவின் அங்கத்தவர்களின் உடல், உள உரனைச் சிதைக்கும் கொடுந்தீவிர நடவடிக்கைகளின் ஊடாக இனப்படுகொலையைத் தொடர்ந்து அரங்கேற்று கின்றது.

5.2) குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல்

ஸ்ரீலங்கா அரசினாலும் அரச படைகளினாலும் இனப் படுகொலைக்குற்றம் நிகழ்த்தப்பட்டது என்பதும் இனப் படுகொலைச்செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படுகின்றன என்பதையும் வெளிப்படுத்தியபடி இத்தீர்ப்பாயம் மூன்று நாடுகளின் மீது (ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா) இவ் இனப்படுகொலைக் குற்றத்திற்கு உடந்தையாகச் செயற்பட்டதாகக் குற்றச் சாட்டை சுமத்தும் விடயத்தை கையிலெடுக்கின்றது.

விசேட குற்றங்களை தனித்தனியாக முன்வைக்கும் முன்பாக, இத்தீர்ப்பாயமானது பொதுவாக ஏன் இந்நாடுகள் குற்றத்திற்கு உடந்தையாக செயற்பட்டன என்பதை கண்டுகொள்வது சர்வதேசக்குற்றவியல் சட்டத்தில் தனியொருவர் மேற்கொண்ட குற்றங்களுக்கு உடந்தை யாகச் செயற்பட்டமைக்கான சுமத்துகைக்குப் பொருந்தாது என்பதையும் நினைவில் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபின் அகவிதி III இன் பந்தி (e) இன் படி "இனப்படுகொலைக் குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல்" தொடர்பான தேவைப்பாடுகளை இத்தீர்ப்பாயம் கவனத்திற் கொள்கின்றது. இவ்விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்படுவது 2007 ஆம் ஆண்டில் சர்வதேசச் சட்டத்தின் கீழ் நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட பொஸ்னியா- ஹேர்சிபோனியா எதிர் சேர்பியா- மொண்டிநீக்ரோ வழக்கில் வழங்கப்பட்ட முற்தீர்ப்பு ஆகும்.

இந்நீதிபரிபாலனத்தில்:

> " இனப்படுகொலைக்கான பன்நாட்டு வரைபின் அகவிதி III இன் பந்தி (e) மிகத்தெளிவாக குற்றத்திற்கு உடந்தையாகச் செயற்பட்டமை தொடர்பாக தெரிவித்திருப்பது என்னவென்றால் "குற்றத்தை நிகழ்த்துவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்துவதும் அதனை எளிதாக்குவதும் என்பதனையுமே இந்நீதிமன்றம் கருத்திலெடுத்து கொள்கின்றது. இதனடிப்படையில், உடந்தை தொடர்பாகப் பன்னாட்டுப்பொறுப்பு என்ன? என்பது பன்னாட்டுச் சட்ட ஏற்பாடுகளில் உத்தேசமாகக் குறிப்பிடப்படாதுள்ள நிலையில், உடந்தை தொடர்பான உள்நாட்டுப்பொறுப்பு தொடர்பாக வழக்காற்றுச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நாட்டின் குற்றவியலுக்கு மற்றொரு நாடு வழங்கும் "உதவி அல்லது ஒத்தாசை" என்பது கருத்திற்கொள்ளப் படுகின்றது" (419 ஆவது பந்தி)

இவ்விடயத்துடன் தொடர்புடைய, பன்னாட்டுச் சட்ட ஆணைக்குழு - அகவிதி 16 இன் படி வழக்காற்றுச் சட்டங்களின் அடிப்படையில் அரசொன்றின் பொறுப்பு என்பது தொடர்பான வரைபானது பன்னாட்டுப் பார்வையில் சட்டத்திற்குப் புறம்பான உதவி அல்லது ஒத்தாசை தொடர்பாக மிகத் தெளிவான வரையறுப்புக்களை முன்வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டுப் பார்வையில் சட்டத்திற்குப் புறம்பான உதவி அல்லது ஒத்தாசை

பன்னாட்டுப் பார்வையில் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை ஓர் அரசு நிகழ்த்துகின்ற போது அதற்கு மற்றொரு அரசு வழங்கும் உதவி அல்லது ஒத்தாசையினால்

1. ஏற்படப்போகும் பின் விளைவுகள் அனைத் தையும் அவ் அரசு நன்றாக தெரிந்து கொண்டுள்ளது
2. அவ்வாறு உதவி ஒத்தாசை செய்வதும் பன்னாட்டுப் பார்வையில் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையாக கருதப்படும் என்பதையும் அவ் அரசு நன்றாக தெரிந்து கொண்டுள்ளது

ஆகிய பன்னாட்டுப் பொறுப்புகளிற்கு உதவி வழங்கும் அரசு உள்ளாகுதல் வேண்டும்.

தீர்ப்பாயத்தினால் தனிநபரொருவருக்கு எதிராக குற்றங்களைச் சுமத்த முடியாதுள்ள நிலையிலும், மேற்குறிப்பிட்டதற்கு அமைவாகவும், தனிநபரொருவர் உடந்தையாக செயற்பட்டமைக்கான பொறுப்பானது சர்வதேசச் சட்டங்களின் அடிப்படையில் வேறுபட்டிருப்பதுடன், உடந்தையானது எவ்வெவ் வழிகளில் செயற்படுத்தப் பட்டுள்ளது என்பதை கண்டுகொள்வதற்கு ஏற்கனவே பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள் மேற்கொண்ட தீர்மானங்களை கருத்திற்கொள்ள வேண்டும். குறிப்பாக ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றத்தீர்ப்பாயம் தனது தீர்மானங்களில் குறித்துள்ள மூன்று விடயங்கள் இங்கு நிரற்படுத்தற்பாலது.

கொள்வனவின் மூலமான உடந்தை எனப்படுவது இனப்படுகொலைக்கு தேவையான ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய கருவிகளை கொள்வனவு மூலம் வழங்குதலும் அவ்வாறு வழங்கப்படுபவை இனப்படுகொலைக்கு பயன்படுத்தப்படும் என்பதை அறிந்திருத்தலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதும் துணைபோவதும் என்ற வகையிலான உடந்தை என்பது யாதெனில் இனப்படுகொலைக்கான திட்டமிடலிற்கும், இனப்படுகொலையை நிகழ்த்தி முடிக்கும் நடவடிக்கைகளுக்கும் உதவுவதும் துணை போவதும் ஆகும்

தூண்டுதல் உடந்தை என்பது இனப்படுகொலையில் நேரடியாக பங்குபற்றாத போதிலும், பரிசில்களையும் உத்தரவாதங்களையும் வழங்குதல் அச்சுறுத்துதல், அதிகாரப்பிறழ்வு, சூழ்ச்சி செய்தல், குற்றத்திற்கான யுக்திகளை வழங்குதல் என்பவற்றின் மூலம் இனப்படு கொலையை நிகழ்த்தத் தூண்டுதல்

மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களிலிருந்தும் உதவி ஒத்தாசை வழங்குவது தொடர்பாக மேலுமொரு பொதுப்பண்பைக் கருத்திற்கொள்ள முடியும்.

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட பொஸ்னியா- ஹேர்சிபோனியா எதிர் சேர்பியா- மொன்டிநீக்ரோ விசாரணைகளின் போது தீர்மானிக்கப் பட்டதன் படி படுகொலைக்கான “குறித்த எண்ணத்தினை” பிரதான சூத்திரதாரி தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதை வெளிப்படும் அளவைக் கொண்டே புரிந்துகொள்ள வேண்டும் எனவும் “குறித்த எண்ணத்தினை” பிரதான சூத்திரதாரி தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதை உதவி ஒத்தாசையினை வழங்கிய அரசொன்று தெரிந்து கொண்டிருப்பின்:

அந்நிலையில் வழங்கப்படும் உதவி ஒத்தாசையினை இனப்படுகொலையாக கொள்ள வேண்டுமேயொழிய இனப்படுகொலைக்கான உதவி ஒத்தாசையாக அதனைக் கருத முடியாது.

மாறாக தான் உதவி ஒத்தாசையினை வழங்கியவருக்கு இனப்படுகொலையை நிறைவேற்றும் “குறித்த எண்ணம்” உள்ளதென்று மிகக்குறைந்தளவில் அரசொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொண்டிருந்த நிலையில் வழங்கப்படும் உதவி ஒத்தாசைகள் மட்டுமே இனப்படுகொலைக்கான "உதவி ஒத்தாசை" எனத் தெளிவாகக் கொள்ளவேண்டும் என்பவற்றைக் கருத்திற் கொண்டும் மேற்சொல்லப்பட்ட அனைத்து ஆரம்பக்கட்ட அவதானிப்புக்களின் படியும் இத்தீர்ப்பாயமானது ஏனைய மூன்று அரசுகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், தற்போதும் ஸ்ரீலங்கா அரசும் அதன் ஆயுதப்படைகளும் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்திக் கொண்டிருக்கும் இனப்படுகொலைக்கு உதவி ஒத்தாசையினை வேறு நாடுகளும் வழங்கி வருகின்றனவா? என்பதையிட்டும் ஆராய முற்படுகின்றது.

5.2.1) பிரித்தானிய அரசின் மீது சுமத்தப்பட்ட உதவி ஒத்தாசைக் குற்றச்சாட்டு

1976 ஆம் ஆண்டில் இருந்து அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகப் பலகாலங்களிற்கு முன் ஆரம்பித்து, பின் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பல தசாப்தங்களாக தொடர்ந்து 2009 மே மாதம் நிறைவிற்கு வந்த ஸ்ரீலங்கா அரசின் யுத்தம் வரை ஈழத்தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப் பட்ட இனப்படுகொலைக்கு உதவி ஒத்தாசையினை பிரித்தானிய அரசு வழங்கியது என்பதைனை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களும் எழுத்துச்சாட்சியங்களும் இத்தீர்ப்பாயத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள பொருண்மையான ஆதாரங்களின் அடிப்படையில், "அகாய்செசு" வில் நிகழ்ந்த (Trail Chamber in Akaysesu) சர்வதேச விசாரணைச் சபையின் முடிவுகளில் அடையாளப்படுத்தப்பட்ட உதவி ஒத்தாசை தொடர்பான மூன்று வகைகளில் "கொள்வனவின் மூலமான உடந்தை" மற்றும் "இனப்படுகொலைக்கான திட்டமிடலிற்கும் அதனை நிகழ்த்தி முடிக்கும் நடவடிக்கைகளுக்கும் உதவுவதும் துணை போவதுமான உடந்தை" ஆகிய இரண்டு வகைகளின் கீழும் குற்றம் இழைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் முற்காலப் பகுதியில் அப்போதைய சிலோன் அரசானது கிளர்ச்சிகளை கருவருப்பதற்காக தெளிவான ஒருபுறச்சார்பான உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்பதனை பிரித்தானிய அரசானது சந்தேகமற தெரிந்திருந்தது. ஸ்ரீலங்கா (அப்போதைய சிலோன்) அரசிற்கு ஆயுதங்களை விற்பது தொடர்பாக பிரபுக்கள் சபையில் எழுப்பப்பட்ட நேரடிச் சவாலுக்கு பதிலளிக்கும் முகமாக அப்போதைய பிரித்தானிய வெளியுறவுச் செயலர் அலெக்ஸ் டக்ளஸ்கோம்

தீவிர கிளர்ச்சியாளர்களான ஜேவிபியினரைக் கருவருப் பதற்கான தெளிவான பக்கம் சார்ந்த முடிவைச் சிலோன் அரசாங்கம் முன்னெடுப்பதற்கு எம்மிடம் முடியுமானால் உதவுங்கள் எனக் கோருகின்றதேயொழிய ஜேவிபி மற்றும் சிலோன் அரசிற்கு இடையிலான மத்தியஸ்தர்களாக அல்ல

எனத் தனதுவாதத்தை முன்வைத்திருந்தார்.

மறுநாள் டாம் டெல்யெல் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் வெளியுறவுச்செயலாளர் அலெக் டக்ளஸ்கோம் மிற்கு எழுதிய கடிதத்தில்

சிலோன் அரசாங்கமானது மத்தியஸ்தம் தேவையில்லை என மொழிந்திருப்பது சற்றேனும் பொருத்தமானதல்ல. உலங்குவானூர்திகளை நாம் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம் எனில் ஏன் நாம் சிலோனின் இக்கருத்தை புறக்கணிக்காது ஏற்றுக்கொள்கின்றோம்?. மேலும் இவ்வுலகத்தில் "கருவருப்பது" எனும் வார்த்தை யின் ஊடாக நீங்கள் கருதுவது எதனை? யாரேனும் ஒருவரை, அவர்கள் தீவிர கிளர்ச்சியாளர்களாக இருந்தா லும், அவர்களை பிரித்தானிய ஆயுதங்களைக் கொண்டு கருவருப்பதற்கு உதவி செய்வதை விட அவர்களிடையே மத்தியஸ்தம் வகிப்பதே மிகச் சிறந்தது"

எனத் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே தினத்தில் தெற்காசியாவிற்கான பிரித்தானிய வெளியுறவு மற்றும் அணிசேரா நாடுகள் திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கு எழுதிய கடிதமொன்றில் சிலோன் அரசாங்கத்திற்கு பிரித்தானிய அரசு ஆயுதங்களை வழங்குவதன் பின்னுள்ள தந்திரோபாய நியாயத்தன்மைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

எமது பொது அரசியல் தந்திரோபாய கரிசனை மற்றும் பிரித்தானிய வர்த்தகக் கரிசனை ஆகியவற்றின் பார்வையில் நாங்கள் பொதுவாகவே உதவி செய்பவர்களாகவும் அனுதாபங்கொண்ட மனிதர்களாகவும் எமது பிம்பத்தை பேணுவதன் மூலம் எமது கரிசனையைத் தக்கவைத்துக் கொள்ளும் சரியான வழிமுறைகளைக்கண்டறிதல் எனும் பார்வையில், கொழும்பில் உள்ள பிரித்தானியத்தூதர் திரு. மக்கின்டோஸ் வழங்கிய ஆலோசனைப்படி, சிலோனுக்கு உண்மையாக தேவைப்படும் என நாம் கருதும் அளவு ஆயதங்களையும் உபகரணங்களையும் எம்மால் இயன்றளவிற்கு வழங்க வேண்டும்"

எனத் தெரிவித்திருந்தார்.

வரலாற்று ரீதியாகவும், தமிழ் மக்களுக்கு எதிராக தொடரப்பட்ட யுத்தத்திற்கும் அதன் இறுதி வடிவமான 2009 மே மாதம் வரையும், அதன் பின்னர் இன்று வரையும், யார் கொழும்பில் ஆட்சியிருந்தாலென்ன அல்லது புறக்காரணிகளில் எவ்வித மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலென்ன, ஸ்ரீலங்கா தொடர்பான பிரித்தானிய கொள்கை மட்டுமன்றி ஸ்ரீலங்காவின் உட்துறைச் செயற்பாடுகளும்கூட, பிரித்தானியாவின் தந்திரோபாய மற்றும் வர்த்தகக்கரிசனைகளின் மீதே நங்கூரமிடப்பட்டிருக்கின்றது. இப்பிரித்தானியக் கொள்கையினை யாராலும், சிங்கள ஒற்றையாட்சிக்கோட்பாட்டினை எதிர்த்துக் கலவரம் செய்பவர்களினைக் "கருவருக்கும்" கொழும்பின் நிலைப்பாட்டினாலோ அல்லது சிங்கள ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாலோ அல்லது தமது சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை முன்வைத்து போராடிய தமிழர்களாலோ மாற்ற முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உச்ச இரகசியமானது" என்ற அடையாளமிடப்பட்டு ஆங்கிலேய வான்படைத்தளபதியாலும், பேரரசின் பொதுச் சேவையாட்படையணித் தளபதியாலும், கடற்படை உதவி தளபதியாலும் சிலோனின் சுதந்திர தினத்தன்று, உருவாக்கப்பட்ட ஆவணமொன்றின் படி:

சிலோனின் உள்ளகப்பாதுகாப்பிற்கு சிலோன் அரசாங்கம் பொறுப்பாக இருந்தாலும் கூட, எமது கரிசனைக்கு ஆபத்து ஏற்படும் போதிலும் உள்ளக வாரியாக எழும் சவால்களைக் கட்டுப்படுத்தும் வலுவை சிலோன் இழக்கும் போதிலும் எமது படையணிகளை களத்தில் இறக்கும் உரிமையை நாம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதுடன் எமது கரிசனையை தக்கவைத்துக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமையும் எமக்குரித்தானதாக எப்போதும் இருக்க வேண்டும்

என தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய ரோயல் கடற்படைக்கான மிகமுக்கியமான கடற்படைத்தளமாக திருகோணமலைக் கடற்படைத் தளத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்பதே பிரித்தானியாவின் மிக அடிப்படையான தந்திரோபாய கரிசனையாகும்.

29 ஒக்டோபர் 1956 இல் சூயஸ் கால்வாயின் மீது மேற்கொள்ளப்பட்ட பிரித்தானிய, பிரான்சிய, இஸ்ரேலிய கூட்டுப்படையெடுப்பின் போது திருகோணமலையில் தளமிட்டிருந்த றோயல் கடற்படைத் தொகுதியை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இலண்டனும் கொழும்பும் கலந்தாய்வுகளில் ஈடுபட்டிருந்த போது பிரித்தானியக் கடற்படைத் தளகர்த்தர்கள் அணிசேரா நாடுகளின் அலுவலகத்திற்கு எழுதிய கடிதத்தில்:

திருகோணமலைக் கடற்படைத்தளத்திலிருந்து எரி பொருளை பெற்றுக்கொள்வதற்கும் ஆயுத மீள்நிரப்புகை மற்றும் ஆயுதங்களை களஞ்சியப் படுத்துவதற்கும் (எகிப்திற்குப்பிறகு) எழுந்துள்ள எதிர்ப்புக்களின் பெறுபேறாக உருவாகிவரும் தடைகளை கடற்படைப் பார்வையில் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடெனில் தரித்து நிற்கும் எமது நாசகாரிகளுக்கு தேவையான மீள்நிரப்பிகளை சிங்கப்பூரிலிருந்து அனுப்பும் போது அவை திருகோணமலையில் எரிபொருளை பெறாது விட்டால் ஏடெனுக்குச் செல்வது சாத்தியமற்றதாகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் 1971 இல் பிரித்தானியாவின் அமைச்சரவை, பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக்கொள்கைகள் குழுவின் வெளியுறவுச் செயலாளர் இலங்கை மீது பிரித்தானிய கரிசனையின் முக்கியத்துவத்தையும் அதற்காகத் தேவையான எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்றும் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

இந்தியப்பெருங்கடலின் ஊடாக நிகழும் வர்த்தகக் கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்புத் தொடர்பாக கண்ணுறும் போது, சிலோனில் உள்ள தளங்களை பாவிக்கும் எமது கரிசனையானது எதிர்ப்புணர்ச்சியினால் தடைகளை சந்திக்கும் போலுள்ளது.

சிலோன் தொடர்பாக எமது எதிர்காலக் கொள்கைகளை வகுக்கும் போது இவ் எதிர்ப்பு உணர்ச்சியைத் தணிப்பதற் கேற்படும் செலவினை கருத்திற்கொள்ள வேண்டும். இந்தியப்பெருங்கடலின் ஊடாக நிகழும் வர்த்தக கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் இத் துணைக் கண்டத்தின் உறுதிநிலை என்பவற்றை தகர்க்கும் இவ்வெதிர்ப்புணர்ச்சியினால் பிரித்தானியக் கரிசனைக்கு ஆபத்துக்கள் ஏற்படலாம்.

எனது முடிவாக, இவற்றை எதிர்கொள்வதற்கு, சிலோன் அரசாங்கத்துடனான இருதரப்பு உறவை மிகவலுவாக பேணுவதற்கு எவையெல்லாம் எம்மால் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் நாம் செய்ய வேண்டும்

என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருதரப்புறவை வலுவாக பேணுவதற்கு" கொழும்பு தனது மத்திய அரசிற்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ள, விசேடமாக சிங்கள, பௌத்த ஒற்றையாட்சியை அழிக்க எழும் ஆபத்துக்களிலிருந்து தப்பிக் கொள்வதற்காக சூளுரைத்த "கருவருப்பு" நடவடிக்கை களை அரச படைகள் மேற்கொள்ளத் தேவையான அனைத்தையும், பிரித்தானியா உதவி ஒத்தாசையாகப் புரிந்தது.

1983 இல் விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பானது தமிழ் மக்களிடமிருந்து அபரமிதமான ஆதரவைப் பெற்றுக் கொள்ளத்தொடங்கிய போது, ஸ்ரீலங்காவின் காவல்துறை யானது தன்னை ஓர் ஆயுதப்படையாக மாற்றும் (பரா மிலிட்டறி ரெயினிங்) பயிற்சி, "கமாண்டோ" நடவடிக்கை களுக்கான பயிற்சி உட்பட பல்வேறுபட்ட பதினாறு வகைப்பட்ட துறைகளில், தமக்குப் பயிற்சியை வழங்குமாறு பிரித்தானியாவிடம் கோரியது. இதற்கு பதிலளித்த பிரித்தானியாவின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம்

கோரப்பட்ட பயிற்சிகள் உட்பட தேவையான அனைத்து உதவிகளையும் எம்மால் இயன்ற அளவு ஸ்ரீலங்கா அரசிற்கு (காலமறிந்து) செய்யத்தயாராக இருக்கின்றோம்

என்பதாக இருந்தது.

பிரித்தானிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தினால் பேணப்பட்ட "ஸ்ரீலங்கா அரச காவல்துறைக்கான ஐக்கிய இராச்சியத்தின் உதவிகள்" எனத் தலைப்பிடப்பட்ட கோவையிலுள்ள தகவல்களின் படி சிரேஷ்ட பிரதிக் காவல் மா அதிபர் எச்.டபிள்யு.எச். வீரசிங்க மற்றும் உதவிக் காவல் அத்தியட்சகர் கே.எஸ் படிவிட்ட ஆகிய இருவரும் 1983 இல் "பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் காவல்துறை மற்றும் ஆயுதப்படைகளின் முதல் நடவடிக்கை" தொடர்பான கற்கைகளுக்காக கல்விச் சுற்றுலாவொன்றை பெல்பாஸ்ட் நோக்கி மேற்கொண்ட ஸ்ரீலங்கா காவல்துறையின் சிரேட்ட உறுப்பினர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கும் மேலதிகமாக இவ்விரு அலுவலர்களுக்கும் "ஸ்ரீலங்காவில் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கும் ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிய குழுக்களிற்கு எதிரான பயங்கரவாத தடுப்பு முன்னுணர்வுகளும் முயற்சிகளும்" தொடர்பாக இலண்டன் நகர காவல்துறை அலுவலகத்தில் உருவாக்கப்பட்டிருந்த விசேட காவல்துறைப்பிரிவிலும் கற்கைநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களது பயணக்காலமானது ஐரிஸ் விடுதலை இராணுவத்திற்கு எதிராக றோயல் காவல்துறைப் படையணி நெகிழ்வுப் போக்குடனான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத் திருந்த காலமாகவும், ஸ்ரீலங்காவின் இனமுரண்பாடுகளை உச்சமடையச் செய்த தமிழ் மக்களுக்கு எதிரான கறுப்பு ஜூலை நிகழ்வுகளிற்கு முன்னரான ஒரு மாத காலப்பகுதியும் ஆகும்.

பிரித்தானிய அரசதுறை முகவர் அமைப்புக்களின் நேரடிப் பங்குபற்றுதலுக்கு மேலதிகமாக பிரித்தானிய விசேட வான் படையணியின் ஓய்வுபெற்ற அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த "கீனி மீனி சேர்விசஸ் - கே.எம்.எஸ்" என்ற நிறுவனம் ஸ்ரீலங்காவின் விசேட அதிரடிப் படையினருக்கு ஆரம்பத்தில் கலவரங்களைக் கட்டுப் படுத்துதல், ஆயுதப்பயிற்சி, குறிசூட்டுப் பயிற்சி, பயங்கரவாத எதிர்ப்பு தேடுதல் பயிற்சி, வெடிப்பொருள் கையாளுகை, திசைகாட்டியைக்கொண்டு இடங்களைக்குறித்தலும் பாவனையும் மற்றும் முதலுதவிப்பயிற்சிகள் போன்றவற்றை வழங்கியதாக ஸ்ரீலங்காவின் விசேட அதிரடிப்படையின் வலையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உலகப்பிரசித்தம் பெற்றதும், "கீரீன் பரேட்" என்ற அமெரிக்க விசேட படையணியினால் பாவிக்கப்பட்டதும் உலகின் முன்னணி விசேட படையணிகளின் பாவனையில் இருந்ததுமான எம்-16 தன்னியக்கச் சுடுகலனையும் இப் பிரித்தானிய அமைப்பே ஸ்ரீலங்காவிற்கு அறிமுகப் படுத்தியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 2009 வரை ஈழத்தமிழர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட யுத்தத்திற்கு ஸ்ரீலங்கா அரசின் இராணுவ, புலனாய்வு மற்றும் காவல்துறைக் கட்டமைப்பை உருவாக்கி பலப்படுத்த பிரித்தானியாவின் உதவி ஒத்தாசைகள் தடையின்றிக் கிடைத்ததை இவ் ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

மேலும் பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் குறிப்பேடுகளின் படி ஏப்ரல் 2006 இல் பாதுகாப்புப்பிரிவுகளில் நிலை மாற்றத்தை உண்டுபண்ணும் பொருட்டுப் பின்வரும் உதவிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் கோரப்பட்டிருந்தன. உயர் பாதுகாப்பு முகாமைத்துவம், பாதுகாப்புக்கொள்கைகளில் விருத்தி செய்தல், புலனாய்வு மற்றும் நுட்பமாக்குதலும் ஆகியனவே அவை. தமிழ் மக்களுக்கு எதிராகக் கொழும்பினால் மேற்கொள்ளப்பட்ட இறுதி யுத்தத்திற்கு ஒருவருடத்திற்கு முன்னதாக பிரித்தானிய றோயல் கடற்படையினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன்களில் ஒருவருக்குப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

நிர்ணயிக்கப்பட்ட அரசின் பொறுப்பு என்பதன் கீழ் ஒரு அரசு குற்றத்தை நிகழ்த்துவதற்காக மற்றொரு அரசு உதவியையும் ஒத்தாசையையும் வழங்குவது தொடர்பாக அகவிதி 16 இன்படியானதும், சர்வதேசச்சட்ட ஆணையகத்தின் அகவிதியினால் கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகள் அனைத்தையும் ஆயுதப்போராட்டத்தின் போது ஈழத்தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கபட்ட அழித்தல் மற்றும் இனப்படுகொலைக்கான நடவடிக்கைகளிற்கு வழங்கிய உதவிகள், ஒத்தாசைகளின் மூலமாக, ஐக்கிய இராச்சியமானது பூர்த்தி செய்துள்ளதை இத்தீர்ப்பாயம் கண்டுகொண்டுள்ளது. மேலும் 2009 இல் நிகழ்ந்தவை இனப்படுகொலையை நிகழ்த்துவதற்காக காலனி ஆட்சிக்காலத்தில் இருந்து தற்போதைய சுதந்திர ஒற்றையாட்சி வரை தர்க்கரீதியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதாக இத்தீர்ப்பாயம் பாக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2.2) ஐக்கிய அமெரிக்காவின் பங்களிப்பு தொடர்பான குற்றச்சாட்டு

1951 ஆம் ஆண்டில் வானொலிச் சேவை நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கும், அதன் தொடர்ச்சியாக 1983 இல் பெரும் பாலான ஆசியப் பிரதேசங்களைச் சென்றடையக்கூடிய வகையில் சுமார் 500 ஏக்கர் சுற்றளவு நிலத்தில் உலகிலேயே மிகப் பெரிய சேவை நிலையங்களுள் ஒன்றானதுமாக உருவாக்கப்பட்ட "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" தொடர்பாக அமெரிக்கத் தகவல் முகவராண்மைக்கும் சிலோன் அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்காவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையே ஆழ்ந்த கட்டமைக்கப்பட்ட உறவு உருவாகிப் பலப்படத் தொடங்கியது.

1950 களில் அமெரிக்க இராணுவ அறிக்கைகளின் பிரகாரம் அவர்களின் இராணுவ கடற்படை நடவடிக்கைகளுக்குத் திருகோணமலைத் துறைமுகம் பாவனைக்குத் "தயாராக உள்ளது" என்பது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

1977 இல் ஐக்கியதேசியக் கட்சினால் நடைபெற்ற தேர்தலின் போது அமெரிக்காவிற்கான கதவுகளை மேலும் திறந்தது ஸ்ரீலங்கா. எனினும் அது இரகசியமானது.

1982 இல் இஸ்ரேலியக் கரிசனைப் பிரிவொன்றை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதராலயத்தில் திறந்து வைக்க வருகை தந்திருந்த தூதுவரும், அமெரிக்க புலனாய்வுத்துறையின் (சிஐஏ) முன்னாள் பிரதிப் பணிப்பாளருமான ஜெனரல் வெர்ணன் ஏ.வோல்டர் ஸ்ரீலங்காவிற்கும் இஸ்ரேலிற்கும் இடையிலே முறிந்து போயிருந்த இராஜதந்திர உறவினைப் புதுப்பித்தார்.

அதனையடுத்து ஸ்ரீலங்காவின் விசேட அதிரடிப்படைக்கான பயிற்சிகள் உட்பட மேலும் பல பயிற்சிகளை இஸ்ரேல் வழங்க வழிவகுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிப்பதில் ஸ்ரீலங்காவும் அமெரிக்காவும் பொதுக்கரிசனையை பலமாக வெளிப்படுத்தியுள்ளன. மேலும் தனது வான்பரப்பையும், வானூர்தி நிலையங்களையும் பாவனைக்கு தருவதுடன் போர்க்கப்பல்களையும் விமானங்களையும் ஆதரிப்பதும், தாக்குதல் நடவடிக்கைகளின் போது, விசேடமாக "டெசேர்ட் ஸ்ட்ரோம்", "டெசேர்ட் சீல்ட்", போன்றவை உட்பட மிக அண்மையில் நிகழ்ந்த "ஒப்பரேசன் என்டியூரிங் பிரீடம்" மற்றும் "ஒப்பரேசன் ஈராக்கி பிரீடம்" போன்ற நடவடிக்கைகளின் போது தனது ஆதரவையும் நல்கியிருந்தது" என்பதால் அமெரிக்கா வெளிநாட்டு இராணுவப்பயிற்சிகளைச் ஸ்ரீலங்காவிற்கு வழங்க வேண்டும் என்பதை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தியிருந்தது.

தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருந்த ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கைகளால் சிலவகையான அமெரிக்க உதவிகள் வழங்கப் படாதிருந்த போதிலும் ஸ்ரீலங்கா அரச படைகளின் திறனை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளை தொடர்ந்தும் அமெரிக்கா வழங்கியே வந்திருந்தது.

1996 இல் விடுதலைப்புலிகள் மரபு வழிப் படையணியாக வளர்ச்சியடைந்துள்ளதை வெளிப்படுத்திய முல்லைத்தீவு இராணுவ முகாம் கைப்பற்றுதலின் பின், அமெரிக்க விசேட படையணியானது "ஒப்பரேசன் பலன்ஸ்ட் ஸ்டைல்" என்ற தலைப்பில் கொரில்லாச் சண்டைகளை துவம்சம் செய்யும் பயிற்சிகள் உட்பட தொடர்பயிற்சிகள் பலவற்றை ஸ்ரீலங்காப் படையணிகளிற்கு வழங்கியது.

அமெரிக்க கிரீன் பரட் கொமாண்டோப் படையின் குழுவொன்று பயங்கரவாதச்சமர் முறியடிப்பு பயிற்சிகளை வழங்க ஸ்ரீலங்காவிற்கு வந்தது. இக்குழுவே "ஒப்பரேசன் பலன்ஸ்ட் ஸ்டைல்" என்ற தலைப்பில் வழங்கப்படும் தொடர் பயிற்சிகளை வழங்க வருகை தந்த மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கக் குழுவாகும். கடந்த வருடம் மார்ச் மாதம் தொடக்கம் பென்டகனினால் உருவாக்கப்பட்ட பயங்கரவாத முறியடிப்பு போர்ப்பயிற்சிகளை ஸ்ரீலங்காப் படைகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு அமைய இவ்வருகை நிகழ்ந்தது. அதுவரை காலமும் "சர்வதேச இராணுவக் கொடுக்கல் வாங்கல் மற்றும் பயிற்சித் திட்டத்திற்கு" அமைவாகவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன. எனினும் கடந்த புதன்கிழமை அமெரிக்கா விடுதலைப்புலிகளைச் சர்வதேசப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டதனால் மட்டும் இக்குழு பயிற்சிகளை வழங்க வருகை தரவில்லை. மாறாக கொழும்பிற்கும் வோஸிங்டனுக்கும் இடையிலான உறவு தலைகீழாகப்போகின்றதோ என நிகழ்த்தப்பட்ட சிறிய அளவிலான ஊடகப்பரப்புரையின் பாற்பட்டதுமாகும். மேலும் மூன்று பயிற்சிகளை நடாத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அவை 30 நாட்களுக்கு 12 தொடக்கம் 20 அமெரிக்கப் படை பயிற்சியாளர்களால் வழங்கப் படவுள்ளது"

என அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு அதிகாரி லெப்.கேணல் ஹரோல்ட் மைக்கல் பூரே சண்டே டைம்ஸ் ஆங்கில ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இரகசியமாக உருவாகிவரும் மேற்போந்த தொடர்பின் பரிமாணம் தொடர்பாக சமகாலத்தில் வெளியாகிய செய்தித்தாளொன்று அறிக்கையிட்டிருந்தது.

வன்னியை தமது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் விடுதலைப்புலிகளின் முயற்சிக்கு சற்று முன்பாக அமெரிக்கா " ஒப்பரேசன் பலன்ஸ்ட் ஸ்டைல்" என்ற பெயரில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு தனது பல்வகைப்பட்ட படையணிகளைக்கொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தது. இவற்றினை விட அமெரிக்க கடற்படையின் ஈரூடக சிறப்புப்பிரிவான ''சீல்'' அணியொன்றும் விசேட படகுப்படையணி ஒன்றும் பயிற்சிகளை வழங்க, 6 ஆவது விசேட நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்படையணியினர் ஸ்ரீலங்காவின் விமானப் படையினருக்குப் பயிற்சிகளை வழங்கினர். இதேவேளை அமெரிக்க இராணுவ உளவியற்துறை நடவடிக்கைப் பிரிவின் 3 ஆவது அணி ஸ்ரீலங்கா இராணுவத் தலைமை உளவியல் நடவடிக்கைப் பிரிவிற்கு பயிற்சிகளை வழங்கினர்.

ஆனால் மேற்கூறப்பட்ட அனைத்து முயற்சிகளும் களத்தில் தோற்றுப்போயின. விடுதலைப்புலிகள் மேலும் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளை விரிவுபடுத்தத் தொடங்கியதானது 2001 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட விக்ரமசிங்க தலைமையிலான ஸ்ரீலங்கா அரசு வேறுவழியின்றி 2002 இல் கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்திற்குச்செல்ல வழி செய்தது. எனினும் சமாதானக்காலத்திலும் கூட அமெரிக்க இராணுவத்தலையீடு ஸ்ரீலங்கா அரசுடன் மேலும் ஆழமா கிக்கொண்டேயிருந்தது.

மார்ச் 2002 இல் அப்போதைய அமெரிக்கத்தூதர் ஆஸ்லி வில்ஸ்

பயிற்சிகளுடன் மட்டும் நாம் நின்று விடவில்லை இராணுவப் போக்குவரத்து ட்ரக்குகளை இலவசமாக வழங்கியுள்ளதுடன் சில இராணுவத்தளபாடங்களை ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு விற்பனையும் செய்துள்ளோம் என்பதனை உறுதிப்படுத்தினார்.

இதேபோன்று பல அறிக்கைகளை அமெரிக்க அரசின் பிரதிநிதிகள், உள்துறைத்திணைக்களப்பேச்சாளர் ரிச்சாட் பௌச்சர், தென்னாசியாவிற்கான அமெரிக்க உள்துறை உதவிச்செயலாளர் கிரிஸ்டினா ரொக்கா, அமெரிக்க உள்துறைப்பிரதிச் செயலாளர் ரிச்சாட் ஆமிடேஜ் உட்பட பலர் வெளிப்படுத்தி அமைதிப் பேச்சுக்களை இலகுவாக நகரவிடாமல் செய்தனர். மார்ச் மாதம் ஸ்ரீலங்காவிற்கு வருகைதந்த உதவிச் செயலாளர் கிரிஸ்டினா ரொக்கா தன்னுடன் அமெரிக்க கடற்படை அதிரடிப்படையின் 3 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரியும் நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியுமான பிரிகேடியர் ஜெனரல் திமோத்தி கோர்ம்லியையும் அழைத்து வந்திருந்ததுடன் இவ்வருகையானது முக்கியமான இராணுவ ஒத்துழைப்பு மற்றும்பயிற்சிதொடர்பானதே என்றும் அறிவித்திருந்தார்.

2002 இன் இறுதிக்காலப்பகுதியில், சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகி ஏழு மாதங்களின் பின் அமெரிக்க பசிபிக்கட்டளை தலைமையகத்தில் இருந்து வருகை தந்திருந்த 26 பேர் கொண்ட குழுவினர் ஸ்ரீலங்காவின் காலாட்படை, கடற்படை, விமானப்படையினருக்குரிய "இயலுமைகள், தேவைகள் மற்றும் அவசியமானவைகள்" பற்றிய விரிவான ஆய்வொன்றை செய்திருந்தனர். அவர்கள் முக்கியமான தளங்கள் யாவற்றிற்கும் வருகை தந்து திருகோணமலைத் துறைமுகத்தின் தென்பகுதி விடுதலைப்புலிகளின் முகாம்களால் சூழப்பட்டுள்ளது. இக்கடற்படை முகாம் மிக முக்கியமானதாக இந்நாட்டிற்கு இருப்பதால், சமாதானச்செயன்முறை தற்போது வலுவிலிருந்தாலும் கூட, துறைமுகத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் மட்டுமே போரை வினைத்திறனுடன் தொடரக்கூடியதாக இருக்கும் எனத் தமது அறிக்கையில் குறிப்பிட்டனர்.

இத்தந்திரோபாயக் கடற்படை முகாம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் திருகோணமலை துறைமுகத்திற்கு தென்புறமாகவுள்ள விடுதலைப் புலிகள் முகாம் அமைந்துள்ள பகுதிகள் அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என இங்கு பயணம் செய்த திறன்மிகுந்த அமெரிக்க படைத் துறையினரால் அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்துடன் விடுதலைப்புலிகளின் நிலைகளானவை ஸ்ரீலங்காவின் பெரும்பாலான கடற்படைக் கலங்களை துவம்சம் செய்து விடும் ஆபத்தைத் தம்மகத்தே கொண்டமைந்திருப்ப தாகவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் அறிக்கையில்

இப்பிரதேசம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் படாவிட்டால் கடற்போரில் தோல்வி அடையவேண்டிய நிலையே ஏற்படும் என்பதுடன் போரைக்கொண்டு நடாத்தும் இயலுமையை இது மிகக்கடுமையாகப் பாதிக்கும்

எனவும் குறிப்பிடப் பட்டிருந்தது.

2006 ஜூலை மாதம் மீண்டும் போரில் குதித்த ஸ்ரீலங்கா அரசு திருகோணமலை கடற்படைத்தளத்தை சூழ்ந்திருந்த விடுதலைப்புலிகளின் முகாம்களை ஆரம்பத்திலேயே தாக்கியளித்தமையானது அமெரிக்க படைத்துறையின் ஆலோசனைக்கு அமையவே.

ஏப்ரல் 2003 இல், ஆறு சுற்றுப்பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவடைந்திருந்த நிலையில் எதிர்பாராத அறிவிப் பொன்று வோஸிங்டனில் அமெரிக்காவினால் வெளியிடப் பட்டது. அதாவது ஒக்டோபர் 8, 1997 இல் இருந்து பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகளை அமெரிக்கா பட்டியலிட்டிருந்ததால் தன்னால் சமாதானப் பேச்சுக்களில் ஒரு தரப்பாகப் பங்கேற்ற முடியாது என அறிவித்தது. "வோஸிங்டன் நிகழ்வு" எனப் பெயரிடப்பட்ட இவ் அமெரிக்க அறிவிப்பு சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றிய தரப்புகளுக்கிடையே சமநிலையை பாதித்ததால் சமாதானப் பேச்சுக்களில் சரிவை ஏற்படுத்தும் ஓர் அறிவிப்பாகியது.

சமாதான உடன்படிக்கையில் தெரிவித்திருந்ததன் படி சமாதான பேச்சுக்களில் பங்குபற்றும் இரு தரப்புக்களையும் சமதரப்பாக கருதினால் மட்டுமே சமாதானச்செயற்பாடுகள் பங்கமின்றி தொடரும் என்பதை அறிந்திருந்தும் கூட அமெரிக்கா தொடர்ந்தும் அச்சமநிலையை குழப்பும் வகையில் ஸ்ரீலங்கா அரசிற்குச் சாதமாக நடந்து கொண்டதுடன் நில்லாமல் தன்னுடன் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவையும் அவ்வாறே நடக்க வேண்டும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தியது. உதாரணமாக டிசம்பர் 8, 2003 அன்று ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தென்னாசியாவிற்கான அமெரிக்க உதவிச்செயலாளர் கிறிஸ்டினா ரொக்கா

விடுதலைப்புலிகளைச் சம தரப்பாக ஒருபோதும் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடுத்தக்கூடாது. ஏனெனில் ஒரு தரப்பானது பன்னாட்டு பயங்கரவாதி களாக பட்டியலிடப்பட்டுள்ள தரப்பாகவும் மற்றைய தரப்பு சட்டரீதியான அரசாகவும் இருப்பதே காரணம்

என வற்புறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியம் மே 29, 2006 அன்று விடுதலைப் புலிகளை பன்னாட்டு பயங்கரவாதிகளாக பட்டியலிட்டதால் சமாதானப் பேச்சுக்களில் சமதரப்பாக விடுதலைப் புலிகளைக் கருதும் வாய்ப்பு முற்று முழுதாக இல்லாமற் செய்யப்பட்டமையானது முழு அளவிலான யுத்தமொன்று உருவாக வழிசமைத்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இம்முடிவானது அப்போது ஸ்ரீலங்காவில் பணியில் இருந்த ஸ்கன்டிநேவிய சமாதான கண்காணிப்புக்குழுவினரின் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்களை கருத்திலெடுக்காமல் மேற்கொள்ளப் பட்டதுடன், அமெரிக்க வற்புறுத்தலினால் மேற்கொள்ளப் பட்டது என்பதனை அப்போதைய ஸ்ரீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் நாடாளு மன்ற உரையின் மூலமும், விக்கிலீக்சினால் வெளியிடப் பட்ட அமெரிக்க இராசதந்திரத் தொடர்பாடல்களின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டது.

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் 2006 இல் போரைத் தொடங்கிய ஸ்ரீலங்கா அரசிற்கு, அமெரிக்கா அமெரிக்க காங்கிரஸின் தடைகள் அமுலில் இருந்ததை கவனத்திலெடுக்காது, முழு அளவிலான இராணுவ ஒத்துழைப்பை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் 2006 இல் ஒகினாவா கடற்படைத் தளத்திலிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கக் கடற்படை அதிரடிப்படையினருடன் ஸ்ரீலங்கா கடற்படையினரையும் இணைத்து முன்னெப்போதும் இல்லாத வகையில் "அமெரிக்க - ஸ்ரீலங்கா" கூட்டுப்படைப் பயிற்சியை மேற்கொள்ள அமெரிக்கா வழிசமைத்தது.

2006 மற்றும் 2007 களில் வெளிநாட்டுப் படையினருக்கான பயிற்சித்திட்டத்தின் கீழ் சுமார் 387 ஸ்ரீலங்காப் படையினர் பல்வேறுபட்ட பயிற்சிகளைப் பல்வேறு அமெரிக்கப் படைத்துறை பாடசாலைகளில் பெற்றுக் கொண்டனர். இப்பயிற்சிகள் நோர்த் கரோலினாவில் போர்ட் பிராக் இல் அமைந்துள்ள ஜோன் எப். கென்னடி விசேட போரியல் நுட்பப்பாடசாலையிலும், அரிசோனாவில் அமைந்துள்ள அமெரிக்கப் புலனாய்வுப்படையகம், போர்ட் லவன் பேர்த்தில் அமைந்துள்ள இராணுவப்பயிற்சிப் பாடசாலை மற்றும் ஜியோர்ஜியாவின் பொரட் பென்னிங்கில் அமைந்துள்ள அமெரிக்க யுத்தப்பாடசாலை ஆகியவற்றிலும் 2,528,389 அமெரிக்க டொலர்கள் செலவில் வழங்கி வைக்கப்பட்டன.

மனிதக்கொலைகள் மலிந்து நடைபெற்றுக் கொண்டிருந்த 2007 இல், உலகில் வேறெந்த நாடும் மேற்கொள்ளாத ஒப்பந்தமான இரகசிய அமெரிக்க ஒப்பந்தம் "அக்சா" (அக்சஸ் அண்ட் குரொஸ் சேர்விசிங் அக்ரீமென்ட்) இனை அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுடன் மேற்கொண்டது.

வெளிக் கசிந்த அமெரிக்க இராசாங்கத் தொடர்பாடல் களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணமாக

இந்தியாவின் கதவாகவும் உலக கடற் போக்குவரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புள்ளியில் ஸ்ரீலங்கா அமைந்துள்ளதால் அது புதிய மிலேனியத்தில் ஆசியாவின் இராணுவ முன்னெடுப்புக்களிற்கு அரசியல் இராணுவ ரீதியில் பிரதான பாத்திரம் வகிக்கும் பிரதேசமாகும் என்பதாலும் இவ்வொப்பமிடலானது அமெரிக்க இராணுவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தின் பூகோள நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் மற்றொரு தகவுப்பொருத்தமான இடத்தினை பெற்றுக்கொண்டதால் அதன் ஆற்றலையும் இயலுமையையும் அதிகரிக்கச் செய்துள்ளது எனத்தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் மற்றொரு கசிந்த தகவல் தொடர்பாடலில்

இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை நாமாக ஒருபோதும் வெளிப்படுத்தமாட்டோம் என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்த ஸ்ரீலங்கா அரசு விரும்பினால் தடையேதும் இல்லை என்றாலும் இவ்வொப்பந்தத்தின் இணைப்புக்களை வெளிப்படுத்தாமலிருப்பது நன்று என்று ஸ்ரீலங்கா அரசிற்கு அறிவுரையும் வழங்கியிருந்தது.

ஆப்கானிஸ்தானில் போரை தொடங்கிய காலம் தொடங்கி தென்னாசியாவில் அமெரிக்காவின்கண் நிலைநிறுத்தப் பட்டதன் பின்புலத்திலேயே ஸ்ரீலங்கா அரசிற்கான மேற்போந்த உதவிகள் மட்டற்றுக் கிடைத்தன.

டியாகோ - கார்சியாவில் உள்ள அமெரிக்கத் தளமானது அளவிலும் அடைவுநிலையிலும் மட்டுப்பாடுகளைக் கொண்டிருந்ததால் இந்துமாகடலில் தனது கடற்படை மற்றும் இராணுவச் சொத்துக்களைப் பேணிப்பாதுகாப் பதற்கு திருகோணமலைத்துறைமுகம் அமெரிக்காவிற்கு இன்றியமையாததாக இருந்தது. அதற்காக விடுதலைப் புலிகளை தோற்கடிக்க வேண்டியதும் இன்றியமையாததாக அமைந்தது.

போரின் போது நிகழ்த்தப்படக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்ணோட்டம் செலுத்தவே அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுடன் இராணுவப்பிணைப்புக்களைக் கொண்டிருந்தது என்ற நம்பிக்கைகளுக்கும் அப்பால் வெளிக்கசிந்த இராசதந்திரத் தொடர்பாடல்கள் அத் தொடர்புகளுக்கான காரணங்கள் வேறு என்பதை நிறுவி யுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி 2008 இல் அனுப்பப்பட்ட கசிந்த அவ்வகைத் தொடர்பாடலொன்றில்

உச்சமடைந்துள்ள முரண்பாடுகள் மற்றும் நிகழக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எமது தற்போதைய கவனம் திரும்பியுள்ளதனைத்தவிர்த்து முக்கியமாக ஸ்ரீலங்கா அரசுடனான எமது தொடர்பாடல் வழிகள் யாவும் திறந்திருப்பதுடன் நாம் ஸ்ரீலங்காப்படைகளுடன் தொடர்ந்து தொடர்பாடல்களைப் பேணவும் வேண்டும். ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எம்முடன் தொடர்ந்து நிலையான தொடர்புகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் உருவாகும் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் அவர்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளையும் பயிற்சிகளையும் முன்னெடுப்பதை நாம் வரவேற்கின்றோம் என்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்

என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் மேற்கொண்ட இராசதந்திர தொடர்பாடல் வெளிக்கசிந்துள்ளது.

போரின் இறுதி மாதமான மே 2009 இல், அரசினால் தமிழ் மக்கள் பட்டிகளாக அடைக்கப்பட்ட "யுத்த சூனியப் பிரதேசங்களாக" பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களுக்குள் பொதுமக்களை மேய்த்துச்சென்று குவிக்கும் நடவடிக்கைகளின் போது அப் பிரதேசங்களின் செய்மதிப்படங்களை அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுடன் பகிர்ந்துகொண்டது.

மே 5 ஆம் திகதி சனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனும் வெளியுறவுச்செயலாளர் பாலித கொகனவுடனும் நிகழ்ந்த சந்திப்பின் போது, அமெரிகப் பிரதிநிதி சார்ஜ் செய்மதிப் படங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவை ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் அரசினால் புதிதாக பிரகடனப் படுத்தப்பட்ட யுத்த சூனிய வலயங்களில் செல்வீச்சுக்களால் நிகழ்ந்த சேத விபரங்களை வெளிப்படுத்தியிருந்தன. ஏப்ரல் 27 ஆம் திகதியில் யுத்த சூனிய வலயங்களைப் பிரகடனப் படுத்திய பின்னர் மே 3 ஆம் திகதி வரைக்கும் அப்பாதுகாப்பு வலயங்களுக்குள் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களின் சேதவிபரங்களை "முன்னரும் - பின்னரும்" என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செய்மதிப் படங்கள் காட்டியிருந்தன. அப்போதைய உண்மை நிலை தொடர்பான களநிலவரங்கள் தொடர்பாக மகிந்த ராஜபக்ச "என்னைவிட உங்களுக்கே உண்மையான விபரங்கள் கிடைக்கப் பெறுகின்றன" எனத் தெரிவித்தி ருந்தார் என விக்கிலீக்சின் கசிவு சொல்கிறது.

இறுதி யுத்தத்தின் போது நிகழ்த்தப்பட்ட யுத்தக்குற்றங்கள், மானுடத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் இனப்படு கொலை தொடர்பான நேரடியானதும் உடனடியானதுமாக தகவல்களை அமெரிக்கா பெற்றிருந்தது என்பது மிகத்தெளிவானது. இதனைத் தெரிந்திருந்தபோதும் அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுடனும் அதன் படைகளுடனும் கொண்டிருந்த நெருக்கமான தொடர்புகளின் மீது இத்தகவல்களினால் எவ்வித தாக்கத்தையும் செலுத்த முடியவில்லை.

ஆறு மாதங்களின் பின்னர் அமெரிக்க அரசினால் அமெரிக்க செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட "ஸ்ரீலங்கா - யுத்தத்தின் பின்னர் அமெரிக்கத்தந்திரோபாயத்தை மீள் அட்டவணைப்படுத்தல்" எனத் தலைப்பிடப்பட்ட அறிக்கை யொன்றில்

> ஸ்ரீலங்காவுடனான எமது தொடர்புகளை ஒருபோதும் இழக்க முடியாது. ஏனெனில் மாறிவரும் அமெரிக்காவின் ஆசியப் பார்வையில் இவ் உறவு மிக முக்கியமானது. நாம் திருகோணமலைத்துறைமுகத்தின் உள்ளேயும் வெளியே யும் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைந்து பல கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளோம்

எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு வழிகளில் போரின் தொடக்கம் முதல் முடியும் வரை அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசிற்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது. ஆனால் அவ்விபரங்கள் பொதுவெளியில் மிகக்குறைந்தளவே தெரிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாண்டஸ்ர்ட்டிலுள்ள றோயல் இராணுவப் பாடசாலை, ஐக்கிய இராச்சியத்தின் இணைந்த படைக் கட்டளையகம் மற்றும் அலுவலர் பயிற்சிப் பாடசாலை ஆகியவற்றின் பயிற்றுனரும், கிளர்ச்சியடக்கும் வல்லுனருமான போல் மூர்கிராவ்ட் தெரிவித்துள்ளதன் படி

விசேடமாக வான்படையினர் பறப்பு மின்னணுவியல் மற்றும் வழிகாட்டித்தாக்குதல் நுட்பங்களையும் இணைத்த, இரவில் தாக்குதலை மேற்கொள்ளும் நுட்பங்களை ஸ்ரீலங்கர்கள் விருத்தி செய்ய வேண்டும் என்றே அமெரிக்கர்களும் வலியுறுத்தினார்கள்

என்று தெரிவித்துள்ளார். அத்துடன்

கொத்துக்குண்டுகளை பாவிப்பதற்கான ஆலோசனைகளையும் அமெரிக்க பசுபிக்கட்டளைப் பணியகமே வழங்கியது

என்றும் தெரிவித்துள்ளார்.

கொத்துக்குண்டுகளால் உருவாகும் காயங்களை ஒத்த காயங்களுடன் போரின் இறுதிக்காலப்பகுதியில் இருந்த தடயங்கள் தடயவியலாய்வு செய்யப்பட்டு இத்தீர்ப்பாயத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் டப்ளின் தீர்ப்பாயத்தின் பக்கம் 13 இல் உள்ள தீர்ப்பின் படி

போர் விமானங்களால் கொத்துக்குண்டுகள் வீசப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன

என்பதையும் இத்தீர்ப்பாயம் கருத்திற் கொள்கின்றது.

அதேவேளை மே 5, 2008 இல் ஏற்றுக்கொள்ளப் பட்டு ஒகஸ்ட் 1, 2010 முதல் பிரயோகத்திலிடப்பட்ட கொத்துக்குண்டுகள் தொடர்பான பன்னாட்டு நடைமுறை வரைபில் அமெரிக்க மற்றும் ஸ்ரீலங்கா அரசுகள் பங்கேற்கவில்லை என்பது இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது.

இனப்படுகொலையில் ஸ்ரீலங்கா அரசிற்கு உதவியாயிருந்த குற்றச்சாட்டு அமெரிக்காவின் மீது சுமத்தப்படுவதன் அடிப்படையில், இராணுவப் பயிற்சிகளை ஸ்ரீலங்காவிலும் அமெரிக்காவிலும் வழங்கியதன் மூலம் ஸ்ரீலங்கா இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமையானது அதிகரிக்க அமெரிக்கா ஏதுவாயிருந்தமை தெளிவாகின்றது. மேலும் "அக்சா" ஒப்பந்தத்தை உருவாக்கி அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்க விசேட படையினருக்குரிய பயிற்சிகளையும் கொமாண்டோக்களுக்குரிய பயிற்சிகளையும் வழங்கியமை யால் ஸ்ரீலங்காப்படையினரின் ஆளுமையில் மாற்றங்களை ஏற்படுத்த அமெரிக்கா ஒத்தாசையாக இருந்துள்ளது.

புதுப்பலத்துடனும் வீரியமிக்க தலைமைகளுடனும் ஸ்ரீலங்காப்படையணிகள் போர்க்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு சமாதான பேச்சுக்களுக்கு முன்பாக பலவீனமாகவிருந்த படையினரை சமாதானக் காலப்பகுதியில் அமெரிக்கப்படை பயிற்சிகளை வழங்கி வலுப்படுத்தியிருந்தது.

போரின் பின்னரும் அதிக எண்ணிக்கையிலான கூட்டுப் பயிற்சிகளை, விசேடமாக கிழக்குத்துறைமுகமான திருகோணமலையினைக் குறிவைத்து பசுபிக் விசேட நடவடிக்கைக் கட்டளையகத்தின் அமெரிக்கப்படை அலுவலர்கள் ஸ்ரீலங்காப் படைகளுடன் மேற்கொண்டு வருகின்றதுடன் வருடாந்தம் "ஒப்பரேசன் பிளாஸ் ஸ்டைல் - Operation Flash Style" *மற்றும் "ஒப்பரேசன் பசுபிக் ஏன்ஜல் -* Operation Pacific Angel" *போன்ற சங்கேதப்பெயர்களுடன் பயிற்சிகளை தொடர்கின்றனர்.*

போரின் இறுதி மாதங்களில் இனப்படுகொலை முயற்சிகளை முன்னெடுத்தவர்களுடனும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் வலுவையும், வினைத்திறனையும் பேண்தகு விருத்திக்குள்ளாக்கும் அமெரிக்க முயற்சியால் இனப்படுகொலையில் அமெரிக்கா மிகச்சுறுசுறுப்பாக உதவி வழங்கியமை, அமைதியை உருவாக்கும் முயற்சிகளைத் தடுத்தமை, அரசியல் மற்றும் இராசதந்திர முயற்சிகளை தலைகீழாக்கி யமை, புலம்பெயர்தமிழர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் முன்னெடுத்த உலகளாவிய போராட்டங்களையும் இறுதி யுத்தத்தின் உண்மைத்தகவல்களையும் இருட்டடிப்புச் செய்தமை ஆகியன முக்கியமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படை மற்றும் படை சாரா நடவடிக்கைகள் நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தினால் வரையறுக்கப்பட்ட இனப்படுகொலைக்கான "உதவி" என்பதன் கீழான ஏற்பாடுகளைப்பூர்த்தி செய்திருப்பதால் குற்றத்தை செய்வதற்குத் தேவையான உதவி வழங்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

5.2.3) இந்திய அரசின் உதவிகள் மீதான குற்றச்சாட்டு

இத்தீர்ப்பாயமானது "இந்திய நடுவன் அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட இனப்படுகொலைக்கு உதவி வழங்கிக் குற்றமிழைத்ததாக" சுமத்தப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக கவனத்தை செலுத்துமாறு கேட்கப்பட்டது.

1980 களின் கடைசியில் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ் மக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இந்தியாவின் தந்திரோபாயச்சொத்தாக மாற்றிக்கொள்ளும் நோக்குடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக களமிறங்கிய இந்தியப் படை நடவடிக்கையால் பன்னீராயிரம் சாவுகள் நிகழ்ந்திருந்தன. 1990 களில் அமெரிக்க தந்திரோபாயக்கூட்டின் இளம் பங்காளருக்குரிய பணியைச் செய்து களித்த இந்தியா, அமெரிக்கப் போர்முன்நகர்த்தல் சமன்பாடுகளுக்கு ஏற்ப ஸ்ரீலங்கா அரசுடனான தனது தந்திரோபாயக் கூட்டாண் மையைக் கொண்டேகியது.

இந்தியாவின் மாறுபட்ட பங்களிப்புக்களால் ஸ்ரீலங்காவில் எழுந்துள்ள சிக்கல் நிலைகளாலும், இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக போதுமான சான்றுகளின்மை மற்றும் அதனை பெற்றுக் கொள்ள தீர்ப்பாயத்திற்குப் போதுமான நேரமின்மை என்பவற்றை கருத்திற்கொண்டும் நீதிபதிகள் குழாம் இக்குற்றச்சாட்டினைக் கேள்விக்குள்ளாக்குவதை தள்ளிவைக்கும் முடிவை எடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2.4) முடிவுகள்

ஸ்ரீலங்கா அரசினால் தனித்து தனது இனப்படுகொலைக் குறிக்கோளை எய்துவிட முடியாது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் இத் தீர்பாயத்திற்கு முன்வைக்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியன இனப்படுகொலை க்கான உதவிகளை வழங்கி குற்றம் இழைத்துள்ளதாகவே இத்தீர்ப்பாயம் நம்புகின்றது.

மேலும், ஐக்கிய இராச்சியமும், ஐக்கிய அமெரிக்காவும் ஸ்ரீலங்காவின் இனப்படுகொலை நடவடிக்கைகளில் மிகத் தெளிவாக தம் பங்களிப்பை நல்கியுள்ளதாக இத்தீர்ப்பாயம் தீர்ப்பளிக்கின்றது. இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பாக மேலதிகச்சான்றுகள் பெறப்படும்வரை தனது தீர்ப்பைத் தள்ளி வைப்பதுடன், சீனா போன்ற ஏனைய அரசுகளின் பங்களிப்பு தொடர்பாகவும் ஆராய்வுகளை மேற்கொள்ளும் பொறுப்பையும் தனதாக்கிக்கொள்கின்றது.

6. பரிந்துரைகள்

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் விசேட பங்கும் குறிக்கோளும் பொறுப்பாளிகளான தனிநபர்களையோ அல்லது நிறுவனங் களையோ பழித்துரைத்து சிறையிடத்தக்கதாக்குவதல்ல.

மாறாக மாந்தரின் தனியுரிமைகளைப்பேணி அவர்களின் மீறப்பட்டுள்ள கூட்டுரிமைகளை வெளிப்படுத்துவதன் ஊடாக நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அவர்களுக்கு உரித்தான வெளியை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்கள் தமது சுயமரியா தையுடனான வாழ்வை தீர்மானிக்கத்தக்கவர்களாக்குவதே.

இங்கு பரிந்துரைக்கப்படுபவை, நடந்தவைகள் தொடர்பான உறுதியான வரையறுப்புக்களை ஒருபுறமும், விசாரணைகளின் தொடர்ச்சியாக உடனடித் தேவைகள் எவையென்பதை மறுபுறத்திலும் கொண்டமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகவே இப்பரிந்துரைகள் இனப்படுகொலை செயன் முறைக்கு பொறுபானவர்களாக அடையாளம் காணப்பட்ட வர்களைப் பொறுப்புக்கூற வைக்கும் அவாவையே மிக அடிப்படையாக வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் ஈழத்தமிழர்கள் மிக நீண்டகாலமாக இழந்திருக்கும் உரிமைகளைஅவர்கள் இற்றைவரை இழந்தவைகளுக்கு ஈடாக திருப்பியளிப்பதையும் அதனை உடனடியாக நிகழ்த்துவதையும் கோரி நிற்கின்றன.

1.

ஐக்கிய நாடுகள் சபைக்கு : (ஐ.நா)
ஐ.நா சபையானது அதன் வரைபுகளால் "திட்டமிட்ட" என்னும் பதத்தால் உத்தியோகபூர்வமாக வரையறுக்கப்பட்டவை எவையோ அவற்றின் படி நிழ்ந்தவற்றையும், ஈழத்தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை செயன் முறைகளையும் தடுத்து நிறுத்தாமல் தோல்வியடைந்துள்ளது.

- அமைதி முயற்சிகளில் தடை ஏற்படுத்தப் பட்டமைக்கான தீர்மானங்கள் தொடர்பாக நம்பத்தகு பொறுப்பை கொண்டிருப்பது யாரென்பதை குறுகிய காலத்திற்குள் கண்டுபிடிக்க வேண்டும்
- தற்போதும் தொடரும் இனப்படுகொலை செயன்முறைகளை தடுக்கும் நோக்கத்துடன் தந்திரோபாயமொன்றை வகுத்துக்கொள்ள அதிதீவிர கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் அமைதியாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் ஈழத்தமிழர்கள் வாழும் உரிமையைப் பெற்றுக்கொள்ள உறுதியான அடித்தளங்களை இட வேண்டும்.
- இவற்றைச் செய்வதற்கு முதற்படியாக சர்வதேச விசாரணை குழுவொன்றை அமைக்க வேண்டும். இக்குழுவில் இவ் இனப்படுகொலையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ அல்லது இருவகையிலுமோ சம்பந்தப்பட்டிருக்கும் நாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு (ஐ.ஒ):

சமாதானச்செய்முறையினை முதலில் ஆதரித்து, முன்னே ற்றப்பாதையில் இட்டுச் செல்ல பெரும் பங்காற்றிய ஐ.ஒ பின்னர் அமெரிக்கப் பார்வையான ஈழத் தமிழர்கள் "பயங்கரவாதிகள்" எனும் பார்வையைத் தாமும் பற்றிக்கொண்டதால் இனப்படு கொலை செயன்முறைக்குப் பங்காற்றத் தொடங்கியது.

- சமாதானச்செயற்பாடுகள் ஏன் தோல்வியடைந்தன என்பதனை இம்மை மறுமையின்றி வெளிப்படுத்தும் வகையிலான அறிக்கையொன்றை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்தல்.
- ஸ்ரீலங்கா அரசினால் மறுக்கப்படுவதாலோ அல்லது தடுக்கப்படுவதாலோ உருவாகும் விசேட நிலைமைகளில் ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை பெற்றுக்கொள்வதை உறுதிப் படுத்தும் வகையில் தனது வெளியுறவுக் கொள்கையினை மீளாய்வு செய்தல்.
- விடுதலைப்போராளிகளையும் தற்காப்புக்காக போராடுபவர் களையும் உரிய பொறிமுறையின்றியும், உரிய வகையில் பகுத்தாராயாமலும் அமெரிக்கா எவ்வாறு பட்டியலிடு கின்றதோ அதே வகைக்கட்டுப்பாடுகளுடன் ஐரோப்பிய ஒன்றியமும் வகைப்படுத்தாமல் தமக்கெனவொரு உறுதியான பட்டியலிடும் முறையை கணித்துக்கொள் வதற்கான பாதுகாப்பு கொள்கையை அதிமுக்கியத்துவம் கொடுத்து உருவாக்கிக்கொள்தல்.

3.

ஜேர்மனிய அரசிற்கு:

இத்தீர்ப்பாயத்தின் அமர்வுகளைக்கொண்டு நடாத்த அனுமதி யளித்ததுடன் ஸ்ரீலங்காவின் சமாதானப் பேச்சுக்களின் முதற்காலப்பகுதியைக் கொண்டுநடாத்த உதவியமை மற்றும் இராணுவத்தீர்வின்றி ஓர் அரசியல் தீர்வே கண்டுபிடிக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற வகையில் கலந்துரையாடல்களை நடாத்தியதுடன் ஏனைய நாடுகளுடனும் நன்மதிப்புடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்தமை:

- ஐரோப்பிய ஒன்றியத்தினால் எடுக்கப்படவேண்டிய மேலே கூறப்பட்ட பரிந்துரைகள் நிகழ்த்தப்படுவதை சுறுசுறுப்பாக கவனிக்கும் பங்கையாற்றுதல். இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தில் பேணப்படும் பன்னாட்டு நன்மதிப்பைப் பெற்ற மனித உரிமைகளை ஸ்ரீலங்காவில் வாழும் மக்களும் மிகக் குறைந்தகால அவகாசத்திற்குள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்.
- ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழர்களில் யாரெல்லாம் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற உண்மைகளை வெளிப்படுத்தக்கூடியவர்களாகவும் உண்மைத்தகவல் களஞ்சியங்களாகவும் உள்ளனரென்பதை அடையாளம் காணல்.

4.
ஸ்ரீலங்கா அரசிற்கு:

- இத்தீர்ப்பாயத்தின் பரிந்துரைகளையும் கண்டுபிடிப்புக்களையும் சனநாயகத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் பொதுவெளியில் கதைப்பதன் ஊடாக ஈழத்தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்படும் அடையாள அழிப்பு மற்றும் இருப்பை கேள்விக் குறியாக்குதல் ஆகியன நடைபெறாத மனித மற்றும் குடிமக்களின் உரிமையை மதிக்கின்ற சூழலில் வாழ்வதனை உறுதிப்படுத்துதல்.
- அலுவலகச்செயற்பாடுகளில், நடவடிக்கைகளில் ஈழத்தமிழ் மக்களை மரியாதையீனமாக நடாத்துவதனை நிறுத்துதல், தேசிய, பன்னாட்டு, தனியார் மற்றும் அரச வளங்களை பயன்படுத்தி நடைபெறும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் கூட அடிப்படை மனித உரிமைகள் ஈழத்தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறாத வண்ணம் நிகழும் திட்டமிட்ட வகையான புறக்கணிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.
மிகக்காத்திரமாக ஒன்றுபட்டுப் பல தன்னார்வப் பணிகளை முன்னெடுத்துவரும் அரச, அரச சார்பற்ற பன்னாட்டு முகவரகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு:

- ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைச்செயற்பாடுகளை மிகச்சரியாக அடையாளங்காணவும் அதனை வெளிப் படுத்தக்கூடியமையையும் தம்மகத்தே கொண்டிருத்தல்.
- தங்களது வருகை, முதலீடுகள் மற்றும் இடையீடுகள் எவ்விதத்திலும் நேரடியாகவோ அல்லது சிந்தாந்த ரீதியிலோ ஸ்ரீலங்கா அரசினால் முன்னெடுக்கப்படும் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு துணை போகாதிரு ப்பதை உறுதிப்படுத்துதல்.
- ஸ்ரீலங்காவிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் ஈழத்தமிழர்கள் தம் அடையாளத்தை மீளநிறுவுவதற்கும், பாதுகாத்து அவற்றை முன்னெடுப்பதற்கும் தேவையான அமைதி வழி எதிர்ப்பு நடவடிக்கைகளை இயலுமானவரை ஒருங்கிணைத்தல்.
- உலகம் முழுவதிலும் நடைபெற்ற இனப்படுகொலைக்கு ஆளான மக்களின் புனருத்தாரணம், உரிமைகளுக்கான பாதுகாப்பு மற்றும் சட்டப்பாதுகாப்பு போன்ற நடைமுறை களை நகர்த்தும் நோக்கம் கொண்டு வினைத்திறன் வாய்ந்த இணைப்புச்செயற்பாடுகளையும் கூட்டுச்செயற்பாடு களையும் அதியுச்ச முன்னுரிமையின் கீழ் துரிதகதியில் முன்னெடுத்தல்.
- மூன்றாம் உலகநாடுகளில் பிரயோகிக்கப்படும் தண்டனைக்கு ட்படாத உரிமைகளுக்கு எதிராகப் பன்னாட்டுச்சட்ட வரை முறைகளின் கீழ் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, ஈழத்தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகியதையும் அதன்பால் கடும் மனவிரக்தியையும் அதிர்ச்சியையும் அனுபவித்து வருவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் இனப் படுகொலைக்கு உள்ளாகியதை உலகளாவிய வகையில் நினைவு கூறும் தினமாக மே, 18 ஆம் திகதியினை "முள்ளிவாய்க்கால் நினைவு நாள்" எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் நிறுவனங்களையும் இத்தீர்ப்பாயம் கோருகின்றது.

இவ்வடையாளமிடும் செயற்பாடானது பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகளை மீட்டுக்கொள்ளும் செயற்பாட்டிற்கு பூகோள சமூகங்கள் தயாராக உள்ளது என்பதனை வெளிப்படுத்தும்.

இனப்படுகொலைக்குள்ளானவர்களுக்கும், மிக இக்கட்டான காலங்களில் அவர்களுடன் சிவில் சமூகக்குழுக்களை இயங்குநிலையில் பேணியமை உட்பட பல பணிகளையாற்றிய நிறுவனங்களுக்கும், தமக்கான முழு மனித உரிமைகளும் மீளக்கிடைக்கும் என்னும் நம்பிக்கையினை மேற்கூறப்பட்ட பரிந்துரைகள் சிலவேளைகளில் ஏற்படுத்தலாம்..

7. நிறைவுக் குறிப்புக்கள்

இத்தீர்ப்பாயத்தின் முன்தோன்றி தமக்கு நிகழ்ந்தவற்றையும் தம்மால் இனி எக்காலத்திலும் மறக்க முடியாதவையுமான கண்கண்ட சாட்சியங்களை முன்மொழிந்தவர்களின் சிறந்த பங்களிப்பினாலேயே இத் தீர்ப்பாயம் தனது பணியை சிறப்பாக செய்து நிறைவுக்குக்கொண்டுவர முடிந்துள்ளது.

அவர்களே பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக, பாதிக்கப் பட்டவர்கள் இன்னும் சரியாக எத்தனை பேர்கள் என்றுகூடத் தெரியாத நிலையில், அவர்களின் துன்ப,துயரங்கள் எத்துணை வலியது என்பதை முழுவதுமாக வார்த்தைகளில் வடிக்க முடியாதுள்ள போதிலும், மிகச் பொருத்தமான சரியான சாட்சிகளாகவும் உள்ளனர். அம்மக்களின் உண்மை நிலையினை ஏற்றுக்கொள்வதும், அவர்களின் உரிமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதுமே இத் தீர்ப்பாயத்தின் உருவாக்கத்திற்கும் செயற்பாடுகளிற்கும் வழிகோலியது.

தமது நாட்டில் நடைபெற்ற கொடுமைகளின் கண்கண்ட சாட்சிகளான இச்சாட்சிகளின் தற்போதைய நிலைமை, உரிமை அவர்களது தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் உயிர்வாழ்வு ஆகியன மேலும் சிக்கலாகக்கூடிய, பாதுகாப்பற்றதுமான நிலைமை களுக்குள்ளாவதையும், அவர்களின் குடும்பங்களின் ஊடாக அவர்களுக்கும் இதேநிலை தோற்றுவிக்கப்படக்கூடும் எனவும் இத்தீர்ப்பாயம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளது.

ஆதலால், அவர்களிற்கும் அவர்களின் குடும்பங்களிற்கும் இவ்வாறு ஏதேனும் நிகழுமாயின், எமது தீர்ப்பில் குறிப்பிடப் பட்டுள்ளவர்களே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். தகவல் சேகரிப்பில் சாட்சியமளித்தவர்கள் உட்பட இச்சாட்சிகளின் பாதுகாப்புத்தொடர்பாக நாம் மிகக் கவனமான எமது கண்காணிப்பை செலுத்துகின்றோம். இவர்களிற்கு ஏதேனும் நிகழும் பட்சத்தில் அதற்கான முழுப் பொறுப்பையும் ஸ்ரீலங்கா அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் எமது இச்செயற்பாட்டிற்கு பங்களிப்புச்செய்த சாட்சிகள் எச்சந்தர்ப்பத்திலும் அவதியுறாமல் இருப்பதை கண்காணிக்கவும் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக் கவும் இத்தீர்ப்பாயம் எப்போதும் பங்களிக்க தயாராகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

செம்டெம்பர் 16, 2015

மார்ச் 27, 2013

ஆகிய திகதிகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இலங்கைத் தமிழர்களின் நீண்ட நெடிய உரிமைப் போராட்டத்தை உருக்குலைக்கும் வண்ணம் இலங்கைத் தமிழினத்தையே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கில் பல்லாண்டுகளாகத் திட்டம் தீட்டி அதனை வெற்றிகரமாக 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு.

2009 ஆம் ஆண்டு, இலங்கைப் உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தில் இருந்த நிலையில் சர்வதேசச் சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதி முறைகளை முற்றிலும் மீறி, லட்சக்கணக்கான அப்பாவித் தமிழர் களைக் கொன்று குவித்து. ஓர் இனப்படுகொலையை இலங்கை அரசாங்கம் நடத்தியது.

இலங்கை உள்நாட்டுப் போர் நடைபெற்ற போது மனித உரிமை மீறல் உடபட பல்வேறு மனிதாபிமானமற்ற செயல்கள் அடங்கிய குற்றங்களை இலங்கை அரசு நிகழ்தியதாக ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு கண்டறிந்தது.

இதன் அடிப்படையில், இலங்கையில் போர்க் குற்றங் களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்த வும் இலங்கை முகாம்களில் இருந்த தமிழர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி சிங்களர் களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்வதோடு அனைத்துக் குடியுரிமைகளையும், தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த மாமன்றத்திலே *08.06.2011* அன்று என்னால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இலங்கை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இலங்கை இனப்போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமா,நியாயமான சர்வதேசப் புலன் விசாரணை நடத்திடவும் இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில், போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள், சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு,. அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்கு முறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்திடவும், ஈழத்தமிழர்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு "தனி ஈழம்" குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொதுவாக்கெடுப்பு நடாத்தி டவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் *27.03.2013* அன்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இது மட்டுமில்லாமல், இலங்கை நாட்டின் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்களுக் கான கூட்டம் மற்றும் காமன்வெல்த் கூட்டமைப்பின் உச்சி மாநாடு ஆகியவற்றை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டும், பெயரளவிற்குக்கூட இந்தியா சார்பில் பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது, இது குறித்து இந்தியாவின் முடிவை உடனடி யாக இலங்கை நாட்டிற்கு தெரியப்படுத்த வேண்டும், இலங்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்க்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பேரரசை வலியுறுத்தும் தீர்மானம் இந்த மாமன்றத்திலே என்னால் *24.10.2013* அன்று கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு எதிராக அப்போதைய மத்திய அரசு செயல் பட்டபோது, மத்திய அரசின் நடவடிக்கைக்கு வருத்தும் தெரிவித்து *12.11.2013* அன்று இதே பேரவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நான் நிறைவேற்றினேன்.

இதுமட்டுமல்லாமல், இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள், மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐ.பி.எல். கிரிக்கட் போட்டிகள் தமிழ்நாட்டில் நடாத்தப்படக்கூடாது என்றும், தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்றும் ஐ.பி.எல் அமைப்பாளர்களை வற்புறுத்துமாறு இந்தியக் கிரிக்கட் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசு அறிவுரை வழங்க வேண்டும் என்று நான் அப்போதைய பாரதப் பிரதமரை *26.03.2013* தேதியிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்க மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை ஐ.பி.எல் அமைப்பாளர்கள் அளித்தால் மட்டுமே ஐ.பி.எல் விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற தமிழக அரசு அனுமதியளிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன்.

எனது வேண்டுகோளினைப் பரிசீலித்த ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு, சென்னையில் நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்ற முடிவை எடுத்தது. அது இன்னமும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது எனது தலைமையிலான அரசின் வற்புறுத்தலுக்குக் கிடைத்த வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக , 2012 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக்குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அப்போதைய மத்திய அரசை நான் வலியுறுத்தினேன். 2013 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்த போது, அதற்கு வலுவூட்டும் விதமாக இந்தியப் பேரரசு என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டி அப்போதைய பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன். மேலும், 2013 ஆம் ஆண்டு மேதகு ஆளுனர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய போது, ஐ.நாசபையின் மனித உரிமைக்குழு கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டுவருவது ஒரு புறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், இவற்றிற் கெல்லாம் அப்போதைய மத்திய அரசு செவிசாய்க்கவில்லை.

இதன் விளைவு, தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இலங்கை உள்நாட்டுப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலை குறித்து இலங்கை நாட்டிற்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு, எந்த அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்ததோ, அந்த அமெரிக்கா தற்போது இலங்கைப் போர்க்குற்றத்திற்க உள்நாட்டு அளவில், அதாவது இலங்கை அரசே குற்றவாளிகளை விசாரித்து நடவடிக்கை எடுத்தால் போதும் என்ற கூற்றை தனது வெளியுறவுத் துறைத் துணைச் செயலாளர் மூலம் முன்வைத்திருக்கின்றது. இதற்கேற்றாற்போல், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு ஒரு தீர்மானத்தினை அமெரிக்கா கொண்டு வர இருப்பதாகவும் தகவல்கள் வருகின்றன. இது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் என்னை 07.08.2015 அன்று எனது இல்லத்தில் சந்தித்த போது, 19 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினை நான் அளித்தேன். அதில் கோரிக்கை எண் 17 இல், இலங்கை உள்நாட்டுப் போரின்போது அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஓர் இனப்படுகொலையை நிகழ்த்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தர, சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

10.02.2015 அன்று. இலங்கை வடக்கு மாகாண சபையில், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நிகழ்த்தப் பட்டது குறித்து இலங்கை அரசு விசாரணை மேற்கொண்டால் நீதி கிடைக்காது என்பதால், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர், திரு விக்னேஸ்வரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இலங்கை நாட்டில் 21.02.2002 முதல் 15.11. 2011 வரை இலங்கைத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான, சர்வதேச விசாரணை முறை மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை வடக்கு மாகாண சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அளித்த அறிக்கைகளின் அடிப்படையிலும், இலங்கை வடக்கு மாகாணத்தைத் தங்களின் தாய்வீடாகக் கருதும் பாதிக்கப்பட்ட வர்களின் கோரிக்கையை ஏற்கும் வண்ணமும், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உலகெங்கும் பரவியிருப்பதைக் கருத்திற் கொண்டும், சர்வதேசச் சமுதாயம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில், உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில், 01.09.2015 அன்று இலங்கை வடக்கு மாகாண சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யது. அந்தத் தீர்மானத்தில், சர்வதேசக் குற்றங்கள் புரிந்தவர்கள் மீது இலங்கையிலே விசாரணை மேற்கொள்வது என்பது நீதியைப் பரிகசிப்பது போன்ற செயல் என்றும், இலங்கை மக்களைக் காத்து அவர்களுக்குச் சேவை புரிய வேண்டிய இலங்கை நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான தூண்கள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி நியாயம் வழங்கத் தவறி விட்டன என்றும் தெரிவித்து, நீதி கிடைக்கும் வகையிலும், அர்த்தமுள்ள இணக்கப் பாதையில் இலங்கை நாடு செல்லும் வகையிலும், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, சர்வதேச குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேசத் தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சர்வதேச சமுதாயத்தைக் கேட்டுக் கொள்வதோடு, சர்வதேச சமுதாயத்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை நாட்டுத்தலைவர்கள் முன்வரவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக்கூட்டம் 14.09.2015 முதல் 02.10.2015 வரை நடைபெறுகிறது. 30.09.2015 அன்று இலங்கையில் இணக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் பொறுப்புடமை பற்றிய மனித உரிமைக் குழுவின் ஆணையர் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு விவாதிக்கப்படும். வரைவுத் தீர்மானத்தின் மீது நடவடிக்கை 01.10.2015 மற்றும் 02.10.2015 ஆகிய தேதிகளில் எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது. இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவினுடைய அறிக்கை மீது இலங்கையின் கருத்து கேட்கப்பட்டு இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இலங்கை அரசு அளிக்கும் பதிலின் அடிப் படையில் இலங்கையே போர்க் குற்றங்கள் பற்றி விசாரித்துக் கொள்ளலாம் என்ற ஒரு தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில் நிறைவேற்றக்கூடிய சூழல் தற்போது எழுந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை இந்தியப் பேரரசுக்கு உண்டு.

இந்தச் சூழ்நிலையில், போர்க்குற்றங்கள் நிகழ்த்தியோர் மீது சர்வதேச விசாரணை மேற்கொள்ளத் தேவையான நடவடிக் கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழு மூலம் இந்தியப் பேரரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படுவது அவசியம் என நான் கருதுகிறேன். இதைத்தான் ஒட்டுமொத்தத் தமிழினமும் எதிர்பார்க் கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், கீழ்க்காணும் தீர்மானத்தினை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம்:

"ஒரு லட்சியத்தைப் பெறுவதும், அதனை ஈடேற்ற எத்தகைய தியாகம் செய்யவும் தயாராகிவிடுவது என்ற உள்ள உரம் பெறுவது என்பதும் சாமான்யமான காரியமல்ல! அந்தச் சாதனையில் நாம் வெற்றி வாகை சூடுவோம் என்ற திட நம்பிக்கை இருக்க வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுத மொழிக்கு ஏற்ப, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் லட்சியத்திற்கும், இலங்கை வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களுக்கும் வலு சேர்க்கும் வகையிலும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யும் வகையிலும், இலங்கை உள்நாட்டுப் போர் நடைபெற்ற போது சர்வதேசச் சட்டம் மற்றும் ஜெனீவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை நிகழ்த்தியவர்கள் அனைவர் மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு வரவேண்டும் என்றும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திரரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கேட்டுக் கொள்கின்றது"

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மீது மாண்பு மிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், இந்தத் தீர்மானத்தினை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம்:

"தமிழன் யாருக்கும் தாழாமல் - யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் - எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் - உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தி தர வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு,

1. இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ;

2. இலங்கை இனப்போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன்விசாரணை நடத்திடவும்; இந்தச் சர்வதேச விசாரணையின் அடிப் படையில் போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்குரிய தண்டனை பெற்றுத்தந்திடவும்; தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத்தடையை விதித்திடவும்; ஈழத்தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு "தனி ஈழம்" குறித்து இலங்கைவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களிடமும், இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து பிறநாடு களில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புக்குழுவில் தீர்மானத்தினை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

தமிழ்நாடு சட்டப்பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது."

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, என்னால் முன்மொழி யப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,

இலங்கைத் தமிழர்களின் பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை கருத்திற் கொண்டும், நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கின்றது என்பதை மனதில் வைத்தும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ - மாணவியர் தங்களுடைய அறப் போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக்கொண்டு, எனது இந்த வேண்டுகோளிற்கு அனைத்துக்கட்சிகளை சார்ந்தவர் களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைத் தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைத் தீர்மானம் பெப்ரவரி 10, 2015.

இத்தீர்மானமானது தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கும் இனப்படு கொலைகளுக்கான சான்றுகளை வெளிப்படுத்துவதுடன் தற்போது நடைபெறும் "ஸ்ரீலங்கா மீதான ஐ.நா. மனித உரிமைச்சபை உயர்ஸ்தானிகரின் விசாரணை" இனப்படு கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாகப் பொருத்தமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் கீழ் தண்டனை களையும் வழங்க வேண்டும் எனவும் மதிப்புடன் வேண்டுகின்றது.

ஐ.நா.வின் பொதுச்சபையில் 9 டிசம்பர் 1948 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஸ்ரீலங்காவால் 1950 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான பன்னாட்டு நடைமுறைவரைபானது இனப்படுகொலை என்பது - ஒரு தேசிய இனத்தை, இனக்குழுமத்தை, குலத்தவரை அல்லது சமயத்தவரை முழுமையாக அல்லது பகுதியளவில் நிர்மூலமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுபவையான:

அ) அக்குழுவின் அங்கத்தவர்களைக் கொல்லுதல்

ஆ) அக்குழுவின் அங்கத்தவர்களுக்குக் கடுமையான உடல், உளக்காயங்களை ஏற்படுத்துதல்.

இ) பௌதீகப் பாதிப்புக்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்படுத்தும் என்பதை கணக்கில் எடுத்து, அம்மக்கள் குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டு ஊடுறுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) அம்மக்கள் குழுவின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தடுப்புக்களை பிரயோகித்தல்.
உ) அம்மக்கள் குழுவின் குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் பிரித்து மற்றொரு குழுவிடம் ஒப்படைத்தல்.
என்பவை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

"ஸ்ரீலங்கா மீதான ஐ.நா. மனித உரிமைச்சபை உயர்ஸ்தானிகரின் விசாரணை" யானது பெப்ரவரி 2002 தொடக்கம் நவம்பர் 2011 வரையான காலப்பகுதிக்கானது என மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், தமிழர்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசு முன்னெடுக்கும் இனப்படுகொலையானது ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே நிகழ்ந்து வருகின்றது.

அன்றிலிருந்து தமிழர்கள் விசேடமாகத் தமது வரலாற்றுக்காலத் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்குப் பிரதேசமுட்பட ஸ்ரீலங்கா எங்கிலும் அநியாயமாகவும், ஒழுங்குமுறையிலும் மனித உரிமை மீறலுக்கு உட்படுத்தப்பட்டு, அதியுச்ச நிலையாக 2009 இல் பாரிய அட்டூழியத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அறுபது வருட காலமாய் நீளும் நீண்ட வரலாற்றைக்கொண்ட ஸ்ரீலங்காவின் அரச ஆதரவு தமிழ் எதிர்ப்பு வரம்புமீறல்களும் நிகழ்ச்சிகளும் படுகொலைகளையும், பாலியல் வன்புணர்வுகளையும், அரசு முன்னெடுத்த கலாசார மொழியழிப்பு நடவடிக்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வட்டூழியங்கள் தெளிவாக தமிழ் மக்களை நிர்மூலமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டு வந்திருப்பதால் அவை இனப்படுகொலைக்கு உரியவையாக உருக்கொண்டுள்ளன.

1948 ஆம் ஆண்டு தொடக்கம் குடியுரிமைச்சட்டம் மூலம் தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினரின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது முதல் இன்றையநாள் வரை அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா அரசுகளால் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனை நிரூபிக்கத்தக்க வகையில் இனப்படுகொலையை நிகழ்த்தும் ஐந்து வழிமுறைகளென இனப்படுகொலை பன்னாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை வரைபு வெளிப்படுத்தியவற்றில் நான்கு வழிமுறைகள் தமிழர்கள் மீது ஏவி விடப்பட்டதற்கான வலுவான சான்றுகள் வெளிப்பட்டுள்ளன.

1. அக்குழுவின் அங்கத்தவர்களைக் கொல்லுதல்

1.1 வரலாற்றுத் தொடர்ச்சியாக இனப்படுகொலை

1956 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச்சட்டம் அல்லது அலுவலக மொழிச்சட்டத்தின் ஊடாக, சிங்களவர் களுக்கு எதிராக தமிழர்களின் வன்முறைகள் நிகழ்வதாக புனையப்பட்ட வதந்திகளையும் பகுதியாகக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான தொடர் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பமானது. இச்சட்டத்தினை எதிர்த்து அமைதி வழியில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்த தமிழர்களின் மீது சிங்கள தேசியவாதிகளின் பின்புலத்துடன் சிங்களக் காடையர்கள் 1956 ஜூன் 5 ஆம் திகதி தாக்குதலைத் தொடுத்தனர். கொழும்பில் தமிழர்களின் வணிகங்கள் சூறையாடப்பட்டன. இத்தகவல் கல்லோயாக் குடியேற்றப் பகுதியில் தமிழர்கள் சிங்களவர்களைத் தாக்கியழிக்கின்றார்கள் என்ற வதந்தியாகப் பரப்பப்பட்டதைத் தொடர்ந்து ஜூன் 11 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை 150 தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயப்படுத்தப்பட்டதுடன் தமிழர்களின் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. காவல்துறையினர் இந்நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டு வாளாவிருந்ததுடன், வன்முறைகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காதும் இருந்தனர்.

இவ்வாறு காவல்துறையினர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த வன்முறையின் போது பிரசன்னமாகியிருந்தமை மற்றும் நிகழ்ந்த வன்முறைகளை தடுக்கும் முனைப்பற்றிருந்தமையும் ஸ்ரீலங்கா அரசானது தமிழர்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அழிப்பதற்கு எண்ணங்கொண்டிருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத்தொடர்ந்து இருவருடங்களாக வன்முறையற்ற–காந்தியின் அகிம்சா முறையிலான– போராட்டங்களை தமிழர்கள் தொடர்ந்து மேற்கொண்டிருந்தனர். 1958 மே 22 தொடக்கம் 27 வரை பௌத்த பிக்குகளும் சிங்கள தேசியவாதிகளும் வடமத்திய மாகாணம், கொழும்பு, மத்திய மாகாணம், கடலோரப்பகுதிகள் உட்பட வடக்கு கிழக்கிலும் தமிழர்களுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைக் கப்பட்ட வகையில் நிகழ்த்தினர். ஸ்ரீலங்காவின் அப்போதைய பிரதமரோ சிங்களவர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தமிழர்கள் முதலில் வன்முறைகளை கையிலெடுத்ததாலேயே அதனை தடுக்க சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை முன்னெடுத்தனர் என்ற தவறான வதந்தி களைப் பரப்பத்தொடங்கினார். 1958 இல் நிகழ்ந்த தமிழர் களுக்கு எதிரான வன்முறைகளின் போது 300 தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும், 1000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகாயப்படுத்தப்பட்டதாகவும், 200 தமிழ்ப் பெண்கள் வன் புணர்வுக்கு உள்ளாகியதாகவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

1974 இல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தின் கோட்டை மைதானத்தில் நிகழ்ந்தது. அம் மாநாட்டின் கடைசி நாளில் போது முஸ்லிம் – தமிழ் அறிவுசீவியான பேராசிரியர் நைனா முகம்மது அவர்களின் உரை நிகழ்ந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு திடீரெனப்புகுந்த ஸ்ரீலங்கா காவல்துறை மேற்கொண்ட அகோரத் தாக்குதல்களில் 9 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

1974 இல் கொழும்பில் நிகழ்ந்த அணிசாரா மாநாட்டிற்கு வருகை தந்திருந்த நாடுகளின் தலைவர்களுக்கு மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் இந்நாடு சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர்களுக்கு நிகழ்த்தி வரும் மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டு ஆவணமாக வழங்கியிருந்தாரென்பதை இம் மாகாணசபை இக்கணத்தில் குறித்துக்கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 ஒகஸ்ட் 12 தொடக்கம் 20 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்துகள் அனுராதபுரம் தொடக்கம் கொழும்பு வரை தாக்குதலுக்குள்ளாகிய அதேவேளை மலைநாடுகளில் பயணித்த தொடருந்துகள் மீதும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிங்களவர்களுக்கு எதிராகத் தமிழர்கள் தாக்குதலை நடாத்துவதாக கிளப்பி விடப்பட்ட வதந்திகள் தமிழர்களுக்கு எதிரான கலவரத்துக்கு மீண்டும் தூபமிட்டது. கிட்டத்தட்ட 300 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகாயமடைய 25 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தமது வாழ்விடங்களில் இருந்து வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்டனர். இந்நிகழ்வானது ஜே.ஆர். ஜெயவர்த்தன ஸ்ரீலங்காவின் பிரதமராக பதவியேற்ற ஒரு மாத காலத்தினுள் நிகழ்ந்தது. சாவுகளிற்காகக் கவலை கொள்வதாக தெரிவித்திருந்த ஜெயவர்த்தனா பிரிவினை வாதத்திற்கான இயற்கையான விருப்பையும் வெளிப்படுத்தத் தயங்கவில்லை. 1977 ஆம் ஆண்டுத்திட்டமானது தமிழ் மக்களிடையே கடும் சீற்றத்தை உருவாக்கியிருந்ததுடன் படுகொலைகளினால் தடுமாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்த நிலையில்

> "நீங்கள் சண்டையிட விரும்பினால் சண்டை நடக்கும், நீங்கள் சமாதானத்தை விரும்பினால் சமாதானம் இருக்கும்"
> (ஹன்சாட் அத்தியாயம் 23, இல 2, பந்தி 246)

என ஜெயவர்த்தன ஸ்ரீலங்கா நாடாளுமன்றில் முழங்கினார். அவரின் "பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளியாக்கும்" இச் செயற்பாடானது தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முயல்வதற்கு பதிலிறுக்கும் முகமாக இனப்படுகொலையை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதையே அரசு தனது மனவெண்ணமாக கொண்டிருந்தது என்பதை விவாதப் பொருளாக்கியது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே படுபயங்கரமான தமிழர் அழிப்பு நடவடிக்கையான "கறுப்பு ஜூலை" நிகழ்வு பதிவானது. தமிழர்களையும் அவர்களது சொத்துக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்தொழிக்கும் நடவடிக்கையானது அரச ஆதரவுடன் சிங்களக்காடையர்களால் கொழும்பில் ஆரம்பமாகி நாடு முழுவதும் பரவியது. அவ்வாரத்தின் முடிவில் கொழும்பில் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளனர் என புனையப்பட்ட வதந்தியை அடுத்து அவ்வாறு ஊடுருவியவர்களை இல்லாமல் செய்வதற்காகவே சிங்கள காடையர்களால் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. சிங்களக் காடையர்கள் வாக்காளர் புத்தகத்தின் பிரதிகளைக் கையில் வைத்திருந்து தமிழர்கள் எங்கு வாழ்கின்றனர் என்பதை அடையாளப்படுத்தியிருந்தமையானது அரசாங்கம் இத்தாக்குத லின் பின்புலமாகச் செயற்பட்டதை வெளிப்படுத்தும் பிரதான சான்றாக அமைந்தது. இத்தாக்குதலில் 3000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட சுமார் 500 பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாகினர். 8000 வீடுகள் மற்றும் 5000 வணிகங்கள் துடைத்தழிக்கப்பட்டன. 500,000 தமிழர்கள் நாட்டைவிட்டு தப்பியோடினர். இதற்கும் மேலதிகமாக ஸ்ரீலங்காவின் சிறைகளில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த 37 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். தப்பிய தமிழ்க்கைதிகள் வழங்கிய தகவல்களிலிருந்து கொலைகளைச் செய்வதனை எளிதாக்கும் பொருட்டு சிறைக்கூடத்தினை திறப்பதற்குத் தேவையான திறப்புக்களை ஸ்ரீலங்கா அரசின் சிறைக் காவலரே கொலையாளிகள் பெற்றுக்கொள்ளத் துணைபுரிந்தனர் என்ற தகவல் வெளியாகியது.

கறுப்பு ஜூலைக்கு முன்னைய நாட்களில், ஜூலை 11 ஆம் திகதி டெய்லி டெலிகிராப் ஊடகத்தில் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ஜெயவர்த்தனே தெரிவித்தவை வெளியாகியிருந்தது.

> "தமிழ் மக்களின் எண்ணங்களையிட்டு நான் வருந்த வில்லை.... நான் இப்போது அவர்களையிட்டு, அவர்களது உயிர்களையிட்டு, அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதையிட்டு யோசிக்க முடியாது... உண்மையிலே நான் தமிழ் மக்களை கடுந்துன்பத்திற்கு உள்ளாக்குவேனாகில் சிங்கள மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்"

என தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இக்கூற்றானது தமிழ் மக்களை துடைத்ழிக்கும் நோக்கத்துடன் தமிழ் மக்களை கொல்லுதல், அவர்களுக்கு கடுமையான உடல், உளக்காயங்களை ஏற்படுத் துதல். முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தமிழ் மக்களுக்கு பௌதீகப்பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை கணக்கிலெடுத்து, தமிழர்களின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டு ஊடுறுத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசே முன்னெடுக்கின்றது என்பதை வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

குழுவொன்றின் மீது வன்முறைகளைத் தொடக்கிவைக்க தவறான வதந்திகளைப் பரப்புதல் இனஅழிப்பின் குறியீடாக வரலாற்றில் உருவாகியிருப்பதை ஜெர்மனியில் நாசிகளின் படுகொலைகள், ரூவாண்டாவின் படுகொலைகள், முன்னாள் யூகொஸ்லாவியப்படுகொலைகள் போன்றவற்றின் ஊடாக இச் சபை குறித்துக்கொள்கின்றது. ஸ்ரீலங்கா அரசாங்கமும் இதே குறியீட்டை பாவித்து தமிழ் மக்களின் மீது இன அழிப்பைச் செய்ய பொய்யான வதந்திகளைப் பரப்பி சிங்களக்காடையர் களைத் திட்டமிட்டுத் தூண்டி இனப்படுகொலையினை நிகழ்த்தியுள்ளது.

இலங்கையில் போரொன்றை ஆரம்பித்து வைத்தது கறுப்பு ஜூலை. இனப்பிரச்சினையானது எப்போதோ ஆரம்பித்துவிட்ட நிலையில், பரந்தளவிலும் திட்டமிட்ட வகையிலும் சட்டத் திற்கு அப்பாற்பட்டவகையில் தமிழ் மக்களை கொன்றொழிக்கும் தமது நடவடிக்கைக்கு கொடுஞ்சட்டமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் அரசுகள் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அரச பயங்கரவாதத்தை தமிழ் மக்களின் மீது ஏவுவதை இச்சபையானது குறித்துக் கொள்கின்றது.

2008 ஆம் ஆண்டிற்கு முன்பதாக 50 இற்கும் மேற்பட்ட தனித்தனிப் படுகொலைகளின் ஊடாக அரசியல்தலைவர்கள், பொதுத் தலைவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் இலக்கு வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் வலிந்து காணாமற் போகச் செய்யப்பட்டனர். சித்திரவதைக்கு உள்ளாகினர். சண்டையின் நுட்பமொன்றாக பாலியல் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். உணவுக்கும் தேவையான அடிப்படை மருத்துவ வசதிகளுக்கும் கடும் தடை விதிக்கப்பட்டனர். வடக்குக் கிழக்குக் கரையோரங்களில் வாழ்ந்த மீனவ சமூகத்தமிழர்கள் உட்பட தமிழர்கள் வலிந்து இடம்பெயர்த்தப்பட்டனர்.

வன்னியில் 2008-2009 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் நிகழ்த்தப் பட்ட இனப்படுகொலைக்கான ஒத்திகை எலவே கிழக்கு மாகாணத்தில் பரீட்சித்து பார்க்கப்பட்டது. வாகரையிலிருந்து சம்பூர் வரை நீண்டிருந்த விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தின் மீது 28 ஒகஸ்ட் 2006 அன்று பன்முனைத் தாக்குதல்களை ஸ்ரீலங்காவின் படைகள் ஆரம்பித்தன. கடுமையான குண்டு மழையினால் மக்கள் வாகரைக்கு வலிந்து இடம்பெயரச் செய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரசானது முதலில் பன்னாட்டு தொண்டு மற்றும் உதவி நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் குறித்த பிரதேசங்களிற்குள் செல்வதற்கு அனுமதிக்கவில்லை எனவும் அதன் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவு மற்றும் மருந்துப்பொருள் நிவாரணங்களை ஸ்ரீலங்கா அரசு தடுத்தது என்பதையும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளிப் படுத்தியுள்ளது.

பாதுகாக்கப்பட்டவை என எப்போதும் கருத்திற்கொள்ளப்படும் பாடசாலைகள் மற்றும் வைத்திசாலைகளின் மீது கடுமையான குண்டு வீச்சுக்களும் சுடுகலச்சூடுகளும் நிகழ்ந்தன என்பதை ஐ.நா. மற்றும் மனித உரிமைக் கண்காணிப்பகங்கள் அறிக்கை யிட்டுள்ளன. பட்டினியாலும், காயங்களைக் குணப்படுத்தவகை ஏதுமின்றியும், குண்டு வீச்சுக்களாலும், சுடுகலச்சூடுகளாலும் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் மாண்டனர். 2007 ஜனவரி 19 ஆம் திகதி சிறியளவு எதிர்ப்பை முறியடித்துக்கொண்டு வாகரைப் பிரதேசத்தினுள் நுழைந்த ஸ்ரீலங்கா இராணுவம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைக்காலங்களில் வேண்டுமென்றே தரை, வான், கடல் வழி குண்டுத்தாக்குதல்களை ஸ்ரீலங்காவின் முப்படைகளும் பொதுமக்கள் கூடியிருந்த நிலைகளின் மீது மேற்கொண்டது. அக்குண்டுகளுள் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் உட்பட பன்னாட்டுத் தடைக்குள்ளான ஆயுதங்களையும் ஸ்ரீலங்கா பாவித்திருந்தது.

ஐக்கியநாடுகள் அறிக்கைகளின் மதிப்பீடுகளின் படி 60,000 தொடக்கம் 100,000 வரையான தமிழ் மக்கள் முதல் 27 ஆண்டு காலப்போரில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டுப் பலவந்த மாக வெளியேற்றப்பட்ட நிலையில் தமிழ்நாட்டிலும், மேற்கு நாடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர் என்பதும் தெளிவாகு கின்றது.

1.2 அண்மைய இனப்படுகொலை

ஸ்ரீலங்கா அரசானது திட்டமிட்டு தமிழ் மக்களை யுத்தமற்ற சூனியப்பிரதேசங்கள் என்ற அடைப்புக்குள் இழுத்து வந்து சாத்தியமான அனைத்துத் தமிழர்களையும் அப்பட்டிக்குள் வைத்து மிகத்துல்லியமாகக் கணக்கிட்டு 2009 இல் அழித்தது.

பொறுப்பளிதகமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்தினால் தேர்வுசெய்யப்பட்ட வல்லுனர்கள் குழு

அடுத்தடுத்துத் திறக்கப்பட்ட மூன்று யுத்தச்சூனிய வலயங்களின் மீதும் பெருமெடுப்பில் குண்டுத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இங்குதான் மக்கள் பாதுகாப்பாக இருக்க முடியம் என ஒன்றாக்கப்பட்டிருந்தனர். இப்பிரதேசங் களில் பாரிய சுடுகல ஆயுதங்களை பாவிப்பது முற்றாகத் தடுக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபை மையங்களின் மீது, உணவுத் தொடரணிகள் மீது, கடற்கரையோரங்களில் கிடந்த காயப்பட்டவர்களையும் அவர்களைப் பராமரிப்பவர் களையும் மருத்துவ உதவி பெறுவதற்காக ஏற்றிச் செல்ல வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் களின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. தனது புலனாய்வுத் தகவல்கள் மூலமும், ஐ.நா, செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் ஏனைய வழிகளிலும் பெற்றுக்கொண்ட தகவல்களினால் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தினால் ஏற்படும் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதை கருத்திலெடுக்காமல் இக்குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர். பெருமளவான மக்கள் இவ் இறுதி யுத்தத்தில் பலியாவதற்குக் காரணம் அரசாங்கத்தின் குண்டு வீச்சுக்களே

என தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கியராச்சியத்தின் சனல் - 4 ஆவணப்பட தொகுப்புக்களில் ஸ்ரீலங்காவின் விடயங்களை தொகுத்து புகழ் பெற்றவரும் பரிசில்களை வென்ற இயக்குனருமான கலம் மக்கரே

"மிகத்துல்லியமாக இலக்குவைக்கப்பட்டே பொது மக்களை கொன்றொழிக்கும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன"

எனத் தெரிவித்துள்ளார்.

2009 ஜனவரி முடிவின் போது நாளொன்றுக்கு சராசரியாக 33 தமிழ் மக்களை கொன்றொழிக்கத்தொடங்கிய ஸ்ரீலங்கா அரச படைகள் 2009 ஏப்ரல் முடிவில் நாளொன்றுக்கு 119 தமிழர்களைக் கொன்றொழித்தனர் எனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்காவிற்கான நிரந்தரத் மக்கள் தீர்ப்பாயம் "பின்னர் 2009 மே வரையில் நாளொன்றுக்கு 1000 தமிழர்கள் கொல்லப் பட்டனர்" எனத் தெரிவித்துள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு தனது அறிக்கையை கையளித்த மன்னார் மறை மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய கலாநிதி. இராயப்பு யோசப் அவர்களின் அறிக்கையானது "அரசாங்கச்செயலகங்களின் அறிக்கைகளின் படி 2008 ஒக்டோபர் மாதத்தின் ஆரம்பத்தில் வன்னிப் பிராந்தியத்தில் இருந்த மக்களின் தொகைமதிப்பு 429,059 ஆக இருந்த போதிலும் வன்னியில் இருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தந்த மொத்தத்தமிழ் மக்களின் எண்ணிக்கை ஐ.நா.வின் ஓ.சி.எச்.ஏ அமைப்பின் தரவுகளின் படி 282,380 மட்டுமே. எனில் 146,679 தமிழ் மக்கள் 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டூழியங்களின் பின்னர் கணக்கிற் கொள்ளப்படாமல் போயுள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் பொறுப்பளிதகமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்தினால் தேர்வுசெய்யப்பட்ட வல்லுனர்கள் குழு தனது அறிக்கையில்

பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்சவின் கட்டளைக்கு இணங்கியொழுகத்தக்க விசேட அதிரடிப் படையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரைக் கொண்ட சிறப்பு படையணியொன்று இயங்கியுள்ளது

எனத் தெரிவிக்கின்றது.

இக்குழுவே தனிநபர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுப் பின்னர் காணாமலாக்கப்பட்ட "வெள்ளை வான்" நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ளது என இந்நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

நிர்வாணமாக்கப்பட்ட போராளிப்பெண்களின் மீது பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்ட உடலங்களும், கைகள் பிணைக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, இரத்த வெறியுடன் படுகொலை செய்யப்பட்டுக்கிடப்பவர்களின் ஆதாரங்களும் இவ் அத்துமீறல்களும் கொலைகளும் திட்டமிட்டவகையில் அரங்கேறியிருப்பற்கு சான்றாகின்றன

எனக் கலம் மக்கரே அறிக்கையிட்டுள்ளார்.

2009 இன் பெப்ரவரி - மார்ச் காலப்பகுதியில் ஆகக்குறைந்தது 200 தமிழ் பெண்களினதும் இளைஞர்களினதும் சிதைக்கப்பட்ட உடலங்களை, அரசாங்க வைத்தியசாலை ஒன்றின் பிண அறையில் தான் கண்டதாகச் சர்வதேசத் தொண்டு நிறுவனப் பணியாளர் ஒருவர் அறிக்கையிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆபத்தான உடல், உளப்பாதிப்பை ஏற்படுத்துதல்.

2.1 வரலாற்றுத் தொடர்ச்சியாக இனப்படுகொலை

1979 இல் அப்போதைய சனாதிபதி ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்படி சந்தேக நபர்களைத் தேடுதல், தடுத்து வைத்தல், கைது செய்தல் தொடர்பாக விரிவான அதிகாரங்கள் பாதுகாப்பு படைகளுக்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரங்களின் கீழ் வகைதொகையற்ற கைது, தடுத்துவைத்துச்சித்திரவதை செய்தல். கொலைகள் என்பன தமிழ் பொதுமக்களுக்கு எதிராக அரங்கேறின. ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசியலமைப்புச் சட்டமூல திருத்தமொன்றின் ஊடாக பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறித்தார். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பதவியிழந்தனர். (6வது திருத்தம் 1983). சுதந்திரமாகக் கருத்துக்கூறும், வெளிப்படுத்தும் உரிமையை தடைசெய்ததன் ஊடாகத் தமிழ் மக்களின் தன்னாட்சி அதிகார உரிமையை ஸ்ரீலங்கா தடைசெய்தது.

அக்காலத்தில் 70 வீதமான மக்கள் பேசிவந்த ஆங்கிலம் அல்லது சிங்களம் என்பதை இல்லாதொழித்து அன்று, 1956 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி தனிச்சிங்களச்சட்டத்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசு அமுலாக்கியதன் ஊடாக கலாசார இனப்படுகொலை ஆரம்பமாகியது. இச்சட்டமானது தமிழை அரச அங்கீகாரமற்ற மொழியாக்கியது. 1972 இல் உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு யாப்பு "ஏனைய மதங்களைத் தவிர்த்து பௌத்த மதத்திற்கு அதியுயர் ஸ்தானத்தை" வழங்கியது.

கலாசார இனப்படுகொலை என்ற பதம் இனப்படுகொலை பன்னாட்டு வரைபில் இல்லாதிருந்தாலும், முதற்கட்டமாக தயாரிக்கப்பட்ட வரைபு நகலில் இவ்வார்த்தை உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் கலாசாரம் மற்றும் மொழியை அழித்துவிடும் செயற்பாடுகளானவை இனப்படுகொலைக்கு பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காற்றுவதைச் சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயங்கள் அடையாளப்படுத்தியுள்ளன. தனிச்சிங்களச்சட்டமும், பௌத்தத்திற்கு அதியுச்ச இடமும் தமிழ் மக்களை, அவர்களது மொழி மற்றும் அவர்களில் பெரும்பாலானவர்கள் பின்பற்றும் இந்து மதம் ஆகியவற்றால், கீழ்நிலைப்படுத்தியது.

அதன் சுமார் 10 வருடங்களின் பின்னர், 1981 மே 31 தொடக்கம் ஜூன் 2 வரையான காலத்தில் ஸ்ரீலங்காவின் காவல்துறை மற்றும் ஒட்டுக்குழுக்களின் திட்டப்படி நான்கு தமிழர்கள் அங்கொன்று இங்கொன்றாகக் கொல்லப்பட்டனர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச்செயலகம் மற்றும் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லம் ஆகியன அழிக்கப்பட்டன. யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாகியது. கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீண்டும் பெறவே முடியாத ஆவணங்கள், சுவடிகள் உட்பட 97,000 புத்தகங்கள் இக்கடுங்கொடிய கலாசார இனபடுகொலையால் சாம்பலாகின. பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள், அரசாங்க அமைச்சர்கள் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குழுமியிருக்க பாதுகாப்பு படைகளால் நிகழ்த்தப்பட்ட மேற்படி அட்டூழியங்கள் மற்றும் சொத்து அழிப்புக்கள் அரச பின்புலத்துடனேயே இயங்கியதை எடுத்துக்காட்டுகின்றது.

1990 செப்டெம்பர் 5ஆம் திகதி வந்தாறுமூலையில் அமைந்திருந்த அகதி முகாமிலிருந்து 158 பொதுமக்கள் அங்கு வந்த இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர். ஐந்து நாட்களின் பின், செப்டெம்பர் 10 ஆம் திகதி சத்துருக் கொண்டான் மற்றும் இரண்டு அயற்கிராமங்களைச் சேர்ந்த 10 வயதிற்கும் குறைந்த 38 சிறுவர்கள் உட்பட 184 பொதுமக்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டதாக தப்பிவந்த ஒரேயொரு சாட்சி வெளிப்படுத்தினார். பல்வேறு ஆணைக் குழுக்கள் இவ்விடயம் சார்பாக விசாரணைக்கு அமைக்கப்பட்ட போதும், கொண்டு செல்லப்பட்ட பொதுமக்களுக்கு நடந்தது என்ன என்பது இன்று வரை வெளிவரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்காவில் அடுத்தடுத்து ஆட்சிபீடமேறும் அரசுகளால் மொத்தமாகவும் திட்டமிட்ட வகையிலும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதும் அதனூடாக வரலாற்றுக்காலம் தொடங்கி தற்போதும் நிகழ்த்தப்படும் இனஅழிப்பு நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மனங்களில் பாரதூரமான வடுக்களை ஏற்படுத்துகின்றதனை இச்சபை குறித்துக்கொள்கின்றது.

சர்வதேச சட்ட ஆணையக வரையறைகளின் படி உடல், உளத் தீங்கு என்பது "முழுவதுமாக அல்லது பகுதியளவாக அழித்து விடும் அச்சத்தை இயற்கையாக குழுவொன்றின் அங்கத்தவர் களிடம் பரவச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் உடல், உளதீங்கு நடவடிக்கைகளே" என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே தமிழர்களின் மீது நிகழ்த்தப்படும் பௌதீக, கலாசார, மொழியியல் ரீதியான வன்முறைகள் இனப்படுகொலைக்கு நிகரானவை என்பதுடன் உளத்தீங்கை ஏற்படுத்தி தமிழ் மக்களின் கலாசாரத்தின் மீதும் மொழியின் மீதும் அச்சத்தை உருவாக்கி இத்தீவில் தமிழ் மக்களின் வாழ்வியலைக் கேள்விக்குறியாக்குதல் நிகழ்கின்றது.

2.1 அண்மைய இனப்படுகொலை

தமது வாழ்விடத்தை விட்டு வெளியேறிய மக்களை உள்ளக இடம்பெயர்வு முகாம்களில் அனுமதிக்கும் போதும், இடைத்தங்கல் முகாம்களில் இருந்தபோதும் ஸ்ரீலங்காப் படை யினர் தமிழ் பொதுமக்களின் மீது வன்புணர்வையும் பாலியல் அத்துமீறல்களையும் நிகழ்த்தியமைக்கான நம்பத்தகு சான்று கள் இருப்பதாக ஸ்ரீலங்காவின் பொறுப்பளிதகமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைச்செயலாளர் நாயகத்தினால் தேர்வு செய்யப்பட்ட வல்லுனர்கள் குழு அறிக்கையிட்டுள்ளது.

இவ்வல்லுனர் குழுவில் அங்கம் பெற்றிருந்த அம்மையார் யஸ்மின் சூக்கா அவர்கள் தமது அறிக்கையை மார்ச் 2014 இல் வெளியிட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் கடத்தல், கொடுங்கோன்மையான தடுத்துவைத்தல், சித்திரவதை, வன்புணர்வு, பாலியல் வன்முறைகள் அதிகரித்திருக்கின்றன..... இவ்வகை திட்டமிடப்பட்ட, பரவலான வன்முறைகள் ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருப்பதை பார்க்கும் போது மிகத் துல்லியமாக ஒழுங்கமைக்கப்பட்டு, முறையாக தீட்டப்பட்ட திட்டமொன்றை படையினர் நிகழ்த்துவதற்கு ஸ்ரீலங்காவின் அரச உயர்மட்டம் அனுமதியளித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது

எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்

சித்திரவதைகளும், வன்புணர்வுகளும் பரவலாக நிகழ்ந்திருப்பதுடன் தமிழ் மக்களை கடத்தி சட்டத்திற்குப் புறம்பாக கொடுங்கொன்மையாக அடைத்து வைத்திருப்பது ஒரே மாதிரியாக நடைபெறுவதை இவ்வறிக்கை கண்டு பிடித்துள்ளது. 2009 மே மாதம் தொடக்கம் 2014 பெப்ரவரி மாதம் வரை ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு படைகளால் கடத்தப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு அல்லது பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகியுள்ள 40 சாட்சிகளின் மிக உண்மையான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த அறிக்கையின் அடிப்படையில் சிலிர்க்க வைக்கும் உண்மையாக தமிழ் இனச்சமூகத்தின் மீது தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் வன்முறைகளின் ஊடாக தமிழர்களைப் பயங்கரங்களுக்கு உள்ளாக்கி சீர்குலைக்கும் நடவடிக்கைளே முன்னெடுக்கப்படுகின்றன. வன்புணர்வையும் பாலியில் துன்புறுத்தல்களையும் தொடர்ந்து பயிற்சி செய்வது ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் சாதாரண செயற்பாடாக நிறுவனமயப்படுத்தப் பட்டுள்ளதுடன், ஸ்தாபிக்கப்பட்டும் உள்ளது.

எனத் தெரிவித்துள்ளார்.

தப்பி வந்துள்ளவர்களின் சாட்சியங்கள் தாம் சீருடை அணிந்த ஆண் ஸ்ரீலங்காப் படையினரால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாகச் சாட்சியம் அளித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 பெப்ரவரியில் வெளியான மனித உரிமைக் கண்காணிப்பக அறிக்கையின் அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் மீது அரசினால் உந்தப்பட்ட பாலியல் வன்முறை களை ஸ்ரீலங்காப்படையினர் முன்னெடுத்திருந்த 75 முறைப் பாடுகள் பதியப்பட்டிருந்தன.

மனித உரிமைக் கண்காணிப்பகம் தனது அறிக்கையில்

> அமைதியைக் குலைக்கும் முறையானது பரவலாகவும் ஒழுங்குமுறையாகவும் பயிற்றப்படுகின்றது. வன்புணர்வோ சித்திரவதையின் மிகப் பரவலான விடயமாக பிரயோகிக்கப் படுகின்றது என இவ்வறிக்கை முடிவாக தெரிவிக்கின்றது...; இதன் உள்நோக்கமானது... பயங்கரத்தைச் சிறிது சிறிதாக ஒவ்வொரு தனித் தமிழர்களிடமும், பரவலாகத் தமிழ் மக்கள் கூட்டத்திற்கும் கொடுப்பது; இவ் அறிக்கை குறிப்பிடுவது என்னவெனில் பாலியல் துன்புறுத்தல்களுட்பட அனைத்து அகோர சித்திரவதைகளையும் ஸ்ரீலங்காப் படையினர் செய்வதற்கு அடிப்படையாக அமைவது அவர்களுக்குரிய தண்டனைக்கு உட்படாத விலக்களிப்பு உரிமையே

எனத் தெரிவித்துள்ளது.

மேலும், 2009 ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளின் மீது மேற் கொள்ளப்பட்ட ஒழுங்குமுறையான இராணுவத் தாக்குதல்கள் தமிழ் மக்களின் மனங்களிலும் உடல்களிலும் சொல்லெணாத் தீங்குகளை ஏற்படுத்தியுள்ளன.

2008 டிசம்பர் மாதத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் நிரந்தர மற்றும் இடம்பெயர்த்தப்பட்டு தற்காலிகமாக உருவாக்கப்பட்ட வைத்தியசாலைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட 30 தாக்குதல் களை மனித உரிமைக் கண்காணிப்பகம் பதிவு செய்துள்ளது. இத்தாக்குதல்களில் தப்பிப் பிழைத்து வாழ்ந்து வரும் மக்களின் மனங்களின் மீது மாறாத வடுக்களை இத்தாக்குதல்கள் பதிந்துள்ளன. அமெரிக்காவைத் தளமாக கொண்டியங்கும் நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிறுவன ஆய்வாளர்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெவ்) ஆகியவற்றுடன் இணைந்து ஸ்ரீலங்காவின் போசணை மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரப்பராமரிப்பு அமைச்சு 2009 யூலை தொடக்கம் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் யாழ்ப் பாணத்திலுள்ள மக்களிடம் ஆய்வொன்றை மேற்கொண்டனர். இவ்ஆய்வின் பெறுபேறுகளின் படி புற அதிர்ச்சி மனஅழுத்த ஒழுங்கின்மை இனால் 13 சதவீத மக்களும், மனஉளைச்சலினால் 48.5 சதவீத மக்களும், உளச்சோர்வினால் 41.8 சதவீத மக்களும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று கண்டறிந்ததுடன், தற்போது இடம்பெயர் ந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களிற்குள்ள குணங்குறிகள் போரின் பின்னரான காலப் பகுதியில் ஆப்கானிலும், கொசோ வாவிலும் வாழும் மக்களின் குணங்குறிகளுடன் பெரிதும் ஒத்திருக்கின்றன எனவும் தமது ஆய்வின் முடிவறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்காவிற்கான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணைக் குறிப்புக்களின் படி

தொடர்ந்து இடம் பெயர்த்தப்பட்டதாலும், மிகநீண்ட காலப் போரினாலும் ஏற்பட்ட பேரதிர்ச்சி தமிழ் மக்களின் உள நலனில் அழிவு தரத்தக்க பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. மேலும் இதுகால வரையிலும் தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டிய உளநல உதவிகளை ஸ்ரீலங்கா அரசு தடுத்தும் வருகின்றது. இவை யாவும் பாரதூரமான உளநலப் பாதிப்புக்களை உருவாக்கும் உள்நோக்குடையவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பௌதீக பாதிப்புக்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்படுத்தும் என்பதை கணக்கிலெடுத்து, அம் மக்கள் குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டு ஊடுறுத்தல்

3.1 வரலாற்றுத் தொடர்ச்சியாக இனப்படுகொலை

தனிச்சிங்கள சட்டத்தின் வருகையுடன் சிங்களத்தில் ஆற்றல் இல்லாத ஆயிரக்கணக்கான தமிழ் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் பதவிகளை துறக்க நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் 1970 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அரச சேவையானது முற்று முழுதாக சிங்களவர்களின் வசமாகியது. இதனால் அக்காலப் பகுதியில் தமிழர்கள் அரச சேவைகளைப் பெறுவது ஒன்றில் சாத்தியமாகாமலோ அல்லது மிகக்கடுமையானதாகவோ போயிருந்தது.

1970 களில் தமிழர்களை தவிர்த்து சிங்களவர்களை பேரளவில் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையாக பல்கலைக்கழக அனுமதிகளில் தரப்படுத்தும் திட்டம் உள்வாங்கப்பட்டது, இதனால் பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பை தமிழ் மக்கள் பெறுவது படிப்படியாகக் கடுமையான துடன் தமிழ் மக்களின் மூன்றாம் நிலைக்கல்வியில் பெரும் வீழ்ச்சியும் ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகளின் குறிப்புக்களின் படி

> அரசொன்று திட்டமிட்ட வகையில் தன் குடிமக்களின் ஒரு சாரார் அனுபவிக்கும் உரிமைகளை மற்றொருசாராருக்கு வழங்க மறுக்குமாயின் இவ்வாறு அம்மற்றையசாராருக்குத் துயர்மிகு வாழ்வை பரிசளிக்கவிளையும் சட்டவிரோத, வஞ்சகத்தனமாக, சுயவிருப்புடன் செயற்படுபவர்களை ஐ.நா. வன்மையாகக் கண்டிக்கின்றது

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிச்சிங்கள சட்டத்தினால் தமிழ் அலுவலர்களில் பலர் தமது பதவிகளை துறந்ததும், தமிழ் மக்கள் அரச சேவைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வதில் எழுந்த பேரிடர்களும், தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டிய மிக அடிப்படையானவைகள் கூட அவர்களுக்கு மறுக்கப்பட்டதைச் செப்புகின்றன. அதே போலவே 1970 களில் அறிமுகமான தரப்படுத்தல், பல்கலைக் கழக அனுமதித் தகைமைகளைக் கொண்ட தமிழ் மாணவர்கள் மீது பாரபட்சத்தை காட்டியதுடன் தொழில் வாய்ப்புக்களின் போது அவர்கள் பின்னடைவை சந்திப்பதற்கும் ஏதுவாகியது.

ருவாண்டாவின் சர்வதேசக்குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதி பரிபாலனத்தில்

> பௌதீக அழிவு என்பது ஒரு அழிவாகக் கட்டாயமாக கொள்ளப்படுவதுடன், அவ்வழிவை ஏற்படுத்த முனைபவர் குழுவொன்றின் அங்கத்தவர்களை உடனடியாக கொலை செய்யாமலிருந்தாலும் அக்குழுவின் அங்கத்தவர்கள் அழிந்து போய்விடுவதை முடிவில் வேண்டுபவர்களாக இருப்பார்கள். அதற்கமைய குழுவொன்றின் அங்கத்தவர் களின் நாளாந்த உணவைக்குறைத்தல், ஒழுங்குமுறைக்கு அமைவாக அவர்களைத் தமது வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்துதல், சாதாரண தேவைக்கும் மிகக்குறைவாக மருத்துவ வசதிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை பௌதீக அழிவாக உள்ளடக்கலாம்

எனத் தெரிவித்துள்ளது.

தனிச்சிங்களச் சட்டமும் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தலும் தொழிற்படையிலிருந்து தமிழர்களை அகற்றி அவர்களின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பற்ற நிலைக்குள் தள்ளி, கடைசியாகத் தமிழ் மக்களை, ஆகக்குறைந்தது பகுதியளவிலேனும் அழித்துவிடும் “மெல்லக் கொல்லும் இன அழிப்பு” நடவடிக்கைகளாக அரங்கேற்றப்பட்டன.

தொடர்ந்த போர்க்காலங்களில் ஆட்சியிலிருந்த ஸ்ரீலங்கா அரசுகளால் மனிதாபிமான உதவிகளின் மீது ஏற்படுத்தப்பட்ட கடுமையான தடைகளையும், அத்தியாவசியப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடைகளையும், அடிப்படைப் பொருட்கள் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களுக்கு கிடைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமல் தடுத்த நடவடிக்கைகளையும் இச்சபை கணக்கில் எடுத்துக்கொள்கின்றது.

3.2 அண்மைய இனப்படுகொலை

1990 ஆம் ஆண்டு முதற்கொண்டே தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சமாதான காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்கள் முழுவதும் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட தடைகளால் பல்லாண்டுகால வறுமையையும் தனிமையையும் தமிழ்ச்சமூகம் எதிர்கொண்டு வந்துள்ளது. இத்தடையானது அடிப்படை வசதிகளான அடிப்படை மருந்துப்பொருட்கள், புத்தகப்பைகள், சீமேந்து, எரிபொருட்கள், மெழுகுதிரிகள், சொக்கலேற்றுக்கள் போன்றவை கூட தமிழ் பிரதேசங்களை சென்றடைவதைத் தடுத்து நிறுத்தியது. இனப்போராட்டமானது உச்சமடைந்த சில காலங்களில் அனைத்து மனிதாபிமானப் பொருட்களையும் இராணுவம் தடுத்து நிறுத்தும் கொடிய மனநிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்காவின் பொறுப்பளிதகமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைச்செயலாளர் நாயகத்தினால் தேர்வுசெய்யப்பட்ட வல்லுனர்கள் குழுவின் அறிக்கையின் முடிவானது ஸ்ரீலங்கா அரசானது

வன்னிக்கு அனுப்பப்படும் பொருட்களின் அளவைக் குறைப்பதற்கான தந்திரோபாயமாக அங்கு வாழும் தமிழ் மக்களின் குடித்தொகையை வேண்டுமென்றே குறைவாகக் கூறியது. இதற்காகவே குடித்தொகை மதிப்பீடுகள் குறைக்கப்பட்டன என்பதை அரசின் சிரேட்ட அலுவலர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும் இவ்வாறு தமிழ்க்குடித்தொகை கணிப்பீட்டை குறைத்துக்கூறியதால் இறுதி யுத்தத்தின் போது அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பொதுமக்களை யும் இணைத்துக்கணக்கிட ஏதுவாயிற்று

என்றும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசக்குற்றச் சான்றுகள் திட்டத்தின் கூற்றுப்படி

வன்னியில் உள்ள மக்களை பெரும் அழிவிற்குள்ளாக்கும் எனத் தெரிந்து கொண்டே அம்மக்களுக்கான அடிப்படை மருந்துச்சாதன மற்றும் உணவு வழங்கலை ஸ்ரீலங்கா அரசு மறுத்தமையானது அம்மக்களை விடாத்துயரளிப்பிற்கு உள்ளாக்குவது அல்லது மனிதாபிமானமற்ற செயலாக அல்லது இரண்டுமாகக் கொள்ளப்போதுமானது

என தெரிவித்துள்ளது.

இவ்வகை உள்நோக்கப் பட்டினியுருவாக்கம் பௌதீக அழிவை மக்களுக்கு ஏற்படுத்தும் என்பதை தெளிவாகத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே அவ்வழிவை ஏற்படுத்துபவற்றை ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் வாழ்வியலுக்கு உட்புகுத்தியுள்ளது.

கலம் மக்கரேயும்

மிக விநோதமாக, தவறாக பெயரிடப்பட்ட போர்த்தவிர்ப்பு வலயங்களுக்குள் மக்களை சிக்கவைத்து அவர்களுக்குத் தேவையான மிக அடிப்படையான, போதுமான மருத்துவ உணவு வசதிகளை வழங்க அரசு திட்டமிட்டே மறுத்து விட்டது

என வெளிப்படுத்தியிருந்தார்.

அடிப்படை வசதிகளை குறைத்து வழங்குவதை நியாயப்படுத்த, அரசு இவ்வலயங்களுக்குள் அகப்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையை ஓர் ஒழுங்குமுறைக்கமைய குறைத்துக் கூறியது. உதாரணமாக, 2009 ஏப்ரல் மாத முடிவில் சி.என்.என் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் அண்ணளவாக 5,000 பொதுமக்கள்... ஆகக் கூடினால் 10,000 பொதுமக்களே யுத்த சூனிய வலயங்களுக்குள் இருக்கின்றனர் என அன்றைய சனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். ஆனாலும் ஐ.நா.வின் கணிப்புக்கள் அப்போதே அண்ணளவாக 125,000 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான மக்கள் அங்குள்ளார்கள் எனத் தெரிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதி ராஜபக்ச இவ்வாறு பிழையான தகவல்களை வழங்கியமை "நியாயமாகப் பார்த்தால் ஓர் போர்க்குற்றத்திற்குப் போதுமான சான்றாகின்றது: பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவோ தண்ணீரோ இன்றி அல்லலுற வைத்த ஓர் குற்றமாகவும்; அடிக்கடி நகர்த்தப்பட்ட தற்காலிக வைத்திய சாலைகளில் தேவையான குருதி, மயக்க மருந்து உட்பட மருத்துவ பொருட்களின் பற்றாக்குறையினால் நூற்றுக்கணக் கான மக்களைச் சாவடித்தமையாகவும்" அமைந்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியாவிற்கான பணிப்பாளர் சாம்ஸவ்ரி

> உதவிகளைத் தடைசெய்த ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கை யானது வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்டதுடன் சட்ட விரோதமானதும் கூட என்று தெரிவித்திருப்பதுடன் இராணுவ வெற்றியொன்றினை ஈட்டிக்கொள்வதற்காக குடிமக்களை பசியிலும், பஞ்சத்திலும் நோயிலும் விட்டு வைப்பதை சர்வதேச சட்டங்கள் தடைசெய்கின்றன

என்பதைக் கணக்கிலெடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இன்று தமிழ்ச்சமூகம் சுகநலனிலும், உணவு மற்றும் சமூகப் பாதுகாப்பிலும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கி லும் போசாக்கின்மையானது 50 சதவீத்தினை எட்டியுள்ளது. இப்பிரதேசங்களில் 58 சதவீதமாகவுள்ள வறுமையின் ஆபத்தான விளைவுகளில் ஒன்றாக இப்போசாக்கின்மை ஆபத்து மணியை ஒலிக்கச்செய்கின்றது.

ஓர் ஒழுங்கு முறையில் மக்களை அவர்களின் வாழ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடுதலானது பௌதீகப்பாதிப்புக்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்படுத்தும் என்பதை கணக்கிலெடுத்து, அம்மக்கள் குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டு ஊடறுக்கும் செயற்பாடுகளில் ஒன்றாக அமைகின்றது என்பதைச் சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயங்கள் தெரிவிக்கின்றன. தமிழ் மக்களுக்குரித்தான நிலத்திலிருந்து அவர்களை அகற்றும் இச் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா அரசானது தொடர்ந்து பின்பற்றி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 மே மாதத்தில் தமது 6,381 ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி புதிய இராணுவ வலையமொன்றை யாழ்ப்பாணத்தில் உருவாக்க அரசு முனைவதாக அக்காணி களுக்கு சொந்தமான 1,474 வடபிராந்தியத் தமிழ்மக்கள் முறைப்பாடொன்றை செய்திருந்தனர். இவ்வாறு முறையிட்ட வர்களுள் பெரும்பாலானவர்கள் தமது சொந்த நிலங்களுக்கு திரும்பிச்செல்ல அனுமதிக்கப்படாமல் இடைத்தங்கல் முகாம்களில் வாழவைக்கப்பட்டவர்களே. இவ்வாறு இடைத் தங்கல் முகாம்களில் தங்கிய மக்களின் காணிகளை கையகப் படுத்த அரசு வெளியிட்ட அறிவித்தலில் அக்காணிகளுக்குரிய உரிமையாளர்களை அடையாளங்காண முடிய வில்லை எனத் தெரிவித்திருந்தது.

போர் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும், 2014 இல் முன்வைக்கப்பட்ட பாதீட்டில் ஸ்ரீலங்கா அரசு பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கிய தொகை 1.95 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (அரசின் 2014 ஆம் ஆண்டுக்கான மொத்தப் பாதீட்டின் 12 சதவீதம்). காவல்துறையின் அதிகாரங்களையும் ஸ்ரீலங்கா இராணுவம் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், தேடுதல் நடாத்தவும், தடுத்து வைக்கவுமான அதிகாரங்களை கொண்டதாகவுமுள்ளது.

மேலும் தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் தனது பொருளாதாரச் செயற்பாடுகளை விருத்திசெய்து, காணிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிரந்தரமாகத் தங்கிவிடும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அதீத இராணுவப் பிரசன்னமானது அப்பிரதேசங்களில் சிங்களவர்கள் வந்து குடியேற வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன் காணிகளை கையகப்படுத்தவும் புத்த கோயில்களை நிர்மாணிக்கவும் கிராமங்களினதும் தெருக்களினதும் பெயர்களைத் தமிழில் இருந்து சிங்களமாக மாற்றவும், சிங்கள வாணிபங்களை தடையின்றி முன்னெடுக்கவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் குடித்தொகையில் பெரும் பிறழ்வுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தவும் அதனால் இனங்களுக்கிடையே முறுகல் நிலையை உருவாக்கவும் ஏதுவாகின்றன

என இனநெருக்கடி தொடர்பான சர்வதேசக் குழு அறிக்கை யிட்டுள்ளது.

உலகெங்கும் நிகழும் மனித உரிமை மீறல்களை ஆய்வு செய்யும் சுதந்திர பன்னாட்டு அமைப்பான நிரந்தர மக்கள் தீர்ப்பாயம், ஸ்ரீலங்காவிற்கான தனது ஆய்வில்

அதிகரிக்கும் சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ மயமாக்கல் மற்றும் பலாத்காரமாகத் தமிழ்ப்பிரதேசங்களில் திணிக்கப்படும் சிங்களக் கலாசாரங்கள் ஆகியவை இனப்படுகொலை தொடர்பான முடிவையே தருகின்றதாக

அறிக்கையிட்டுள்ளது.

4. அம்மக்கள் குழுவின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் தடுப்புக்களைப் பிரயோகித்தல்.

4.1 வரலாற்றுத் தொடர்ச்சியாக இனப்படுகொலை

1990 ஆம் ஆண்டுக்கு முன்பாக மலைநாட்டு மக்களின் சனத்தொகை பெருக்கத்தை மட்டுப்படுத்துவதற்கான வலுக்கட்டாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதற்கான அறிக்கைகள் பதிவாகியுள்ளன. ரூபா 500.00 தருகின்றோம் என ஆசை வார்த்தை காட்டப்பட்டு இளமையும் வறுமையும் கொண்ட மலைநாட்டு தமிழ்த்தொழிலாளர்கள் நகரும் வைத்திசாலைகளுக்கு கூட்டிவரப்பட்டு, அவர்களின் கருத்துக் களுக்கு மதிப்புக்கொடுக்கப்படாமல், சூழகக் குழாக் கட்டு முறையில் கருத்தரிப்புத்தடை செய்யப்பட்டுள்ளனர். குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் என்ற போர்வையில் அரசால் முன்னெ டுக்கப்பட்ட இத்திட்டமானது மத்திய மாகாணத்தில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாட்டின் அங்கமாக தமிழ் மக்களின் சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் உள்நோக்கம் கொண்டிருந்தது. இத்திட்டத்தின் பின்னர் தமிழ் மக்களின் சனத்தொகைப் பெருக்கமானது ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் பெரும் வீழ்ச்சியை கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையங்கள் பல பூட்டப்பட்டமையானது இப்பிரதேசத்தில் நிகழ்த்தப்பட்ட கட்டாய கருத்தடை நிகழ்வின் எதிரொலியாகும். இருபத்தியாறு வயதிற்குட்பட்ட பெரும்பாலான பெண்கள் கருத்தடைக்கு உள்ளாக்கப்பட்டமையானது ஸ்ரீலங்காவின் சட்டங்களிற்கு முரணானவையாகும். வடக்கிலும், கிழக்கிலும் போரால் தமிழினம் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்த போது, ஸ்ரீலங்கா அரசானது தனது இனஅழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக மலைவாழ் தமிழர்களை கருத்தடைக்கு வலுக் கட்டாயப்படுத்தியதுடன் நின்றுவிடாது அதனைத் தொடர்ந்து நிறைவேற்றியும்பிருந்தது.

4.2 அண்மைய இனப்படுகொலை

ஸ்ரீலங்காவின் வைத்தியசாலைகளில் ஸ்ரீலங்கா அரசுக்கு சார்பான வைத்தியர்கள் பெண்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களுக்குக் கருக்கலைப்பை மேற்கொண்டனர்.

2007 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பிலிருந்து அமெரிக்கத் தூதரகம் அனுப்பிய இரகசியத்தொடர்பாடலில்

> ஈழ மக்கள் சனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) வைத்தியரான வைத்தியர் சின்னத்தம்பி விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உடைய தாய்மையடைந்த பெண்களுக்கு வலுக்கட்டாய கர்ப்பக்கலைப்பை சாதாரண பரீட்சிப்பு என்ற போர்வையில் நிகழ்த்தியதாக வணக்கத்திற்குரிய பேர்ணாட் அடிகளார் தெரிவித்தார்

என்ற தகவலைத் தொடர்பாடியுள்ளது.

2013 ஒகஸ்ட் மாதத்தில் வட மாகணத்திலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் பெண்களை சுகாதார சேவையாளர்கள் கருத்தடைச் சாதனங்களை பொருத்த வலுக்கட்டாயப் படுத்தி யுள்ளனர். அதனை ஏற்றுக்கொள்ளாதுவிட்டால் எதிர்காலங் களில் அரச வைத்தியசாலைகளில் பண்டுவம் பெற முடியாது என தாதிகள் அத்தாய்மாரை அச்சுறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 ஆம் ஆண்டில் வெளியான சுகாதார அமைச்சின் அறிக்கையில் கருத்தடைச்சாதனங்களைப் பொருத்திக் கொண்ட முல்லைத்தீவில் வாழ்கின்ற தமிழ் பெண்களின் எண்ணிக்கையானது எப்போதுமில்லாதவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 30 மடங்கு அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

மனித உரிமை இல்லத்தின் கூற்றுப்படி ஸ்ரீலங்காவின் மத்திய மாகாணத்தில் வாழும் 80 சதவீத தமிழ்ப் பெண்களிடம் கருத்தரிப்பை கைவிட ஒரு தொகைப்பணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் வெறும் 500 ரூபாவைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கருத்தடைக்கு சென்றுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. விசேடமாக மலைநாட்டில் வாழும் மக்களுக்கு இப்பணத் தொகை முக்கியமானது.

மலைவாழ் தமிழ் மக்களின் சனத்தொகைப் பெருக்கமானது வருடாந்தம் 5 சதவீத விழுக்காட்டை பதிவு செய்ய ஸ்ரீலங்காவின் மொத்த சனத்தொகையானது 14 சதவீதத்தால் பெருகியதாக 1996 ஆம் ஆண்டின் அறிக்கைள் தெரிவிக் கின்றன. எதிர்முரணாக காவல்துறை மற்றும் இராணுவத்தினர் மூன்றாவது குழந்தையை பெற்றெடுத்தால் ரூபா 100,000 அரசினால் வழங்கப்படும் என்று ஊக்கப்படுத்தப்பட்டனர். காவல்துறை மற்றும் இராணுவத்தில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்கள் என்பதால் முதல் சொல்லப்பட்ட பணஊக்கு விப்பால் பயன்பெறுபவர்களும் சிங்களவர்களாகவே இருந்தனர்.

மலைவாழ் தமிழின மக்களின் சனத்தொகையில் அழிவை ஏற்படுத்தும் எண்ணம் கொண்டு அரசினால் ஓர் ஒழுங்கு முறையாக திணிக்கப்பட்ட திட்டம்

என குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை மனித உரிமை இல்லம் வகைப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குறித்துக்கொள்ள வேண்டியவைகள் –

ஸ்ரீலங்காவில் நிறுவனமயமாக்கப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படாத உரிமை:

தமிழ் மக்களுக்கு எதிராக தாக்குதல்கள் உச்சமடைந்திருந்த மே 2009 காலப்பகுதியில் பாதுகாப்புத்துறை பதில் அமைச்சராக சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்காற்றியதை இச்சபை கணக்கிலெடுத்துக்கொள்கின்றது.

அதன்படி தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பிற்கான பொறுப்புக் கூறுதலையும் அதற்கான நீதியையும் பெற்றுத்தருதலை முன்கொண்டு செல்லவும் நடைமுறைப் படுத்தவும் சர்வதேச சமூகத்தினால் மட்டுமே முடியும் என்பதனை முடிவாகச் சொல்வதற்கு சிறிசேன பங்காற்றியது ஏதுவாகின்றது.

ராஜபக்சவின் ஆட்சியாலோ, சிறிசேனவின் ஆட்சியாலோ அல்லது அதற்குப்பின் ஆட்சிக்கட்டில் ஏறும் எவராலுமோ நீதியை வழங்கவென நடாத்தப்பட இருக்கின்ற உள்ளகப் பொறிமுறையின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர்.

மேலும் லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, சனாதிபதி மகிந்த ராசபக்சவின் ஆட்சியில் இராணுவத்தளபதியாக இறுதிப்போர்க்காலம் வரை கடமையாற்றி தற்போது பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாகத் தற்போதைய சனாதிபதி சிறிசேனவின் ஆலோசகராக உள்ளார்.

சர்வதேச ஊடகங்களுக்கு செவ்வியளித்த பொன்சேகா இந்நாடானது சிங்கள சமூகத்திற்குரியதாகவே நான் நம்புகின்றேன். இங்கு சிறுபான்மையினர் வாழ்கின்றார்கள். அவர்களை நாம் எமது மக்களாகவே எண்ணுகின்றோம். 75 சதவீதமாக வாழும் நாங்கள் இந்நாட்டைப் பாதுகாக்கும் உரிமையை கொண்டவர்கள். நாங்கள் ஒரு உறுதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தேசத்தவர்களும் கூட, அவர்களும் எங்களுடன் இந்த நாட்டில் வாழலாம். ஆனால் சிறுபான்மையினர் என்ற தகுதிக்கு மேற்பட்ட எதனையும் பெற முயற்சிக்கக்கூடாது" (நெசனல் போஸ்ட், 23 செப்டெம்பர் 2008)

எனத் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த காலந்தொட்டே நிலவி வருகின்ற சிங்கள குறுந்தேசியவாதத்தின் உச்சமே பொன்சேகாவின் இச்செவ்வி.

சிங்கள தேசியவாதமானது இந்நாட்டில் தமிழருக்கு எதிரான இனப்படுகொலையை தனது நிறுவனமயமாக்கத்துக்குள் உள்வாங்கிக்கொண்டு அதற்கமைய இனப்படுகொலைச் செயற்பாட்டை நிகழ்த்துபவர்களை தண்டனைக்குட்படா நிறுவனமயமாகிய உரிமையினை வழங்குவதுடன் அர்த்தம் மிக்க வழிகளில் அரசியல் தீர்வொன்று வழங்கப்படுவதையும் தடுத்து நிற்கின்றது.

2009 இல் நிகழ்ந்த படுகொலைகள் தொடர்பான விசாரணை களில் சிறிதளவே முன்னேற்றம் காணப்படுகின்றமைக்கான முக்கியமான காரணம் யாதெனில் தற்போதைய சனாதிபதியும், அப்போதைய இராணுவத் தளபதியும் அக்கொலைகளுக்குப் பெருமளவில் பொறுப்பாக்கப்பட்டவர்கள் என்பதனாலேயே என இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் மேனாள் தூதுவர் பற்றீசியா புட்டின்ஸ் உள்ளக இராசதந்திரத் தொடர்பாடல் தெரிவித்திருந்தார்.

> போர்க்குற்றம் தொடர்பான முழுமையான விசாரணையை தனது இராணுவத்தினருக்கோ அல்லது சிரேட்ட அலுவலர் களுக்கோ எதிராக நடாத்துவதற்கு போர்க்குற்றங்கள் செய்த அதே அரசு ஆட்சியிலிருக்கும் வரை முன்வரும் என்பதற்கான எந்தவொரு உதாரணங்களையும் நாம் கண்டதில்லை.
>
> ஸ்ரீலங்காவில் இந்நிலை மேலும் சிக்கலானது. ஏனெனில் போரக்குற்றங்களில் பெரும்பாலானவற்றை நிகழ்த்தியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் இந் நாட்டின் முக்கிய பிரசைகளும், இராணுவத்தலைமை மற்றும் சனாதிபதி ராஜபக்ச, அவரது சகோதரர்கள் உட்பட தற்போது எதிரணி வேட்பாளராக களமிறங்கியிருக்கும் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகாவுமே (விக்கிலீக்ஸ் தந்தி – ஸ்ரீலங்காவின் சனாதிபதி தமிழினப் படுகொலைக்கு பொறுப்பானவர் – எனப் பதியப்பட்டு 2010 டிசம்பர் 1 ஆம் திகதி வெளியான கார்டியன் ஊடகம்)

எனவும் தெரிவித்திருந்தார்.

புட்டீமன்ஸ் அவர்களின் ஆய்வான எந்தவொரு அரசும் தனது தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்தாது என்ற கருத்து மிகவும் உண்மையானதும் சரியானதும் என்பதை தற்போது ஆட்சியிலுள்ள சிறிசேன அரசாங்கம் பொன்சேகாவிற்கு வழங்கியுள்ள முன்னுரிமைகளும், இராணுவத் தலைமைப் பாங்கும் நிரூபித்துள்ளது.

எண்ணிக்கணக்கற்ற சனாதிபதி விசாரணைக்குழுக்கள் அந்தந்த ஆட்சிக்காலத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீறல்களை நடாத்தியவர்களுக்கு எதிரான குற்ற விசாரணைகளோ அல்லது நீதியோ வழங்க்கப்படவோ இல்லை என சர்வதேசமன்னிப்புச்சபை (Sri Lanka - Twenty Years of Make- Believe. Sri Lanka Commissions of Inquiry, 11 June 2009)

தெரிவித்துளளதனை இச்சபையானது கணக்கிலெடுத்துக் கொள்கின்றது.

இறுதித் தீர்மானமாக:

இனப்படுகொலை பன்னாட்டு நடைமுறை வரைபின் கீழ் இனப்படுகொலை நடைபெறாமல் தடுப்பதற்கும் அவ்வாறு நடந்தவற்றிற்கு தண்டனையை வழங்குவதற்கும் உள்ள பொறுப்பானது அரசியல் தீர்மானமொன்றாலோ அல்லது அரசியல் கணிப்பீடுகளாலோ நடைமுறைப்படுத்தப்படுவதல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அனைவரையும் கட்டுறுக்கும் சர்வதேசச்சட்ட நடைமுறையாகும்.

2015 மார்ச் மாதம் ஐ.நா.வின் மனித உரிமைச் சபை அமர்வுகளில் தமது அறிக்கையை கையளிக்கவுள்ள OISL ஆனது இனப் படுகொலைக்கான தண்டனைகளை வெளிப்படுத்தும் முகமாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிட வேண்டும் என இச்சபை வேண்டுகின்றது.

அத்துடன் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையானது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்கு ஸ்ரீலங்காவின் விசாரணையைப் பாரப்படுத்தி போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பாக விசாரணை களை நடாத்தி தண்டிக்கும் பொறுப்பை அச்சபைக்கு வழங்கவேண்டும்.

அத்துடன் இப்பொறிமுறைக்கு சமாந்தரமாக அல்லது பதிலாக மேற்கூறப்பட்ட குற்றங்கள் தொடர்பாகவும் அதனை நிகழ்த்திய குற்றவாளிகள் தொடர்பாகவும் சர்வதேச நீதி பரிபாலன முறையை தமது உள்ளக நீதி பரிபாலன முறைக்குள் உள்வாங்கியிருக்கும் நாடுகள், அமெரிக்கா உட்பட இக் குற்றங்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனவும்,

ஸ்ரீலங்காவில் தொடரும் இன அழிப்பினால் தற்போதும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சொல்லெணாத் துயரம் அனுபவித்து வருகின்றனர். போர் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கழிந்து ள்ள நிலையிலும் ஒவ்வொரு மூன்று தமிழ் மக்களுக்கும் ஒரு படைவீரன் என்ற அடிப்படையில் நிகழ்ந்துள்ள இராணுவ மயமாக்கல் என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

மேலும் தமிழ்ப்பிரதேசங்களில் தமக்கென நிரந்தரமாக வாழ்விடங்களை இராணுவம் உருவாக்கிவருவதுடன் அதற்குத் தேவையான காணிகளை கையகப்படுத்தியும் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வியலுக்குள் தனது தலையீட்டை இராணுவம் தொடர்ந்து அதிகரித்தும் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்திரிபால சிறிசேனவின் தேர்தலின் பின்னரும் கூட அடக்கு முறையுடன் கூடிய இராணுவப்பிரசன்னம் வடக்குக்கிழக்கில் ஓயவில்லை. அதியுச்ச மட்டத்தில் உள்ள இராணுவப் பிரசன்னம் தமிழ் மக்களின் வாழ்வியலிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

போரிற்குப் பின் சுமார் **90,000** பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் வடக்கிலும் கிழக்கிலும் உள்ளன. இவர்கள் இராணுவத்தினரின் பாலியல்முறைகேடுகளை எதிர்கொள்ளும் பயங்கரமுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் பொருத்தமான தும் நிரந்தரமானதுமான பாதுகாப்புத்திட்டம் ஒன்றின் ஊடாக அவர்களுக்கு எதிராக நிகழும் இனப்படுகொலையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என இச்சபை சர்வதேச சமூகத்திடம் அவசரமாக கோரிக்கை விடுக்கின்றது.

ஸ்ரீலங்காவில் நிகழும் இனப்படுகொலையானது வரலாற்றில் பதிவாகியுள்ள ஏனைய இனப்படுகொலைகளிலிருந்து முற்றாக வேறுபட்டது.

ஏனெனில் பல ஆண்டுகளாகப் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் இன அழிப்பு நடவடிக்கையானது சட்டதிட்டங்களுக்கு உட்படாத மூன்று தசாப்தகாலப்போர் ஆரம்பிக்கும் முன்பிருந்தே ஆரம்பிக்கப் பட்டு **2009** இல் உச்சநிலையடைந்து ஈழத்தமிழ் மக்களைப் பேரழிவிற்குள் இட்டுச்சென்றது.

2009 ஆம் ஆண்டுத் தாக்குதல்களுடன் முக்கியமாக தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்காவில் ஆண்டாண்டு காலமாக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் இனப்படுகொலை நடவடி க்கையைக் கருத்திலெடுத்து ஸ்ரீலங்காவினால் நிறுவனமயப் படுத்தப்பட்டுள்ள தண்டனைக்குட்படாத உரிமைக்கு எதிராக இயங்கக்கூடிய சர்வதேசப்பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டியது முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் வலுப்படுத்துவதிலும் சர்வதேசத்தின் தலையீடு இருப்பதுடன் சுயநிர்ணய உரிமையுடன், அமைதியாக, நீதியுடனும் ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் வாழ்வதற்கான நிலைத்து நிற்கக்கூடிய வழிவகைகளை சர்வதேசத் தலையீட்டுடன் நிகழ்த்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் 3 ஆவது அமர்வுகள் 2022 மே 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை ஜெர்மனியின் பேர்லின் இல் நடந்தேறியுள்ளது.

முன்னைய இரு தீர்ப்பாயங்களை நடாத்தி முடித்த இலங்கையின் அமைதிக்கான ஐரிஸ் மன்றம் மற்றும் பிரீமன் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஆகிய இரண்டும் இம் மூன்றாவது அமர்வை நடாத்தி முடித்துள்ளன.

அம் மூன்றாவது அமர்வில்

1. ஈழத்தமிழர்களுக்கு எதிராகத் தொடக்கப்பட்ட போரின் சூத்திரதாரிகள் யார்?

2. அச்சூத்திரதாரிகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை சூழ்ச்சித்திறத்துடன் கையாளப்பட்டதா?

3. ஈழத்தமிழர்களின் அழிவுப்போர் இந்து மாகடலின் அமைதிக்கு பங்கம் விளைவித்ததா?

4. தமிழ்ச் செயற்பாட்டாளர்களை பன்னாட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாக்குவதின் முக்கியத்துவம் என்ன?

5. இனப்படுகொலையின் ஓர் அங்கமாகவா தமிழ் ஈழத்தின் சமூக முன்னேற்றம், விசேடமாக பெண்களின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டுள்ளது.?

6. தற்போதும் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வெளியகச் சூத்திரதாரிகளால் ஆதரிக்கப்படுகின்றதா?

ஆகிய ஆறு விடயங்கள் தொடர்பாகத் தனது அமர்வை வழிப்படுத்தியுள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகள் இப் பொத்தகம் அச்சேறும்வரை வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்திரட்டு

அ

அதிகார அலகுகள் - Authorities

அகோரம் - Brutal

அடக்குமுறை - Oppressive

அட்டூழியம் - Outrage/Atrocities

அங்கொன்றிங்கொன்றாக - Random

அற்பமானதாக - Banalize

அதிலிருந்து - Thereof

அத்துமீறி நுழைந்தவர்கள் - Invaders

அந்நியப்படுத்து - Alienate

அழித்தொழிப்பு - Extermination

அனுமானித்தல் - Inferred

அமைப்புக்களை உருவாக்குதல் - Institution Building

அதிர்ச்சி - Trauma

அரசியல் தத்துவக் கோட்பாடு - Doctrine

ஆ

ஆக்கிரமிப்பு - Aggression

ஆள்புலக்கட்டுறுதி - Territorial Integrity

ஆவணம் - Instrument

ஆற்றுப்படுத்துதல் - Healling

இ

இனப்படுகொலையின் சமூகப் பயிற்சி - Genocidal Social Practice

இனப்படுகொலை - Genocide

இருதரப்பு - Bilateral

இரவலாக - Borrow

இணைத்துக்கணக்கிட - Conflated

இரத்தவெறியுடன் - Cold blooded

இனம் அல்லது குலம் - Ethnic

இனச்சுத்திகரிப்பு - Ethnic cleansing

இதுகாலவரையிலும் - Hitherto

இரகசியச்சதித்திட்டம் - Conspiracy

இழப்பீடுகள் Reperation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிந்த - Squalid

உ

உதவி ஒத்தாசை - Aiding and Abetting
உடன்பாட்டுடன் - Acquiescence
உடந்தை - Complicity
உடன்பாடு - Concurrence
உச்சநிலை - Culminate
உளச்சோர்வு - Depression
உண்மையில் - Indeed
உள்நோக்கம் - Intentional
உச்ச இரகசியமானது - Top-Secreat
உண்மைகள் / உண்மைச் சான்றுகள் - Facts
உற்சாகமூட்டுதல் - Encouraging

ஊ

ஊக்குவித்து - Encourage

ஒ

ஒருங்கிணைந்த - Coordinate
ஒழுங்குமுறையான - Methodical
ஒட்டுக்குழு - Paramilitary
ஒழுங்குமுறை - Systematic
ஒன்றிணைக்கப்பட்ட - Unified
ஒத்தாசை - Succor
ஒத்திகை அல்லது பழக்கம் - Practice

ஓ

ஓரினப்படுத்தும் - Homogeneous
ஓரங்கட்டப்பட்ட - Marginalised

எ

எளிதாக - Facilitate
எரிச்சலூட்டும் - Exacerbate

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க

கடுங்கொடிய - Heinous

கடுந்துன்பத்திற்கு உள்ளாக்குதல் - Starve

கருத்தொருமிப்பு - Consensus

கட்டவிழ்த்து - Unleash

கா

காட்டுமிராண்டித்தனமான - Draconian

கி

கிளர்ச்சி - Insurgent

கு

குறுந்தேசியவாதம் – Chauvinism

குற்றத்திற்குரிய - Culpable

குறியீடு–மைல்கல் - Hallmark

குடியரசு - Republican

குணங்குறிகள் - Symptoms

குற்றத் தத்துவங்கள் – Elements of Crime

குடிசார் – Civil

கூ

கூட்டிணைவுத் தத்துவம் - Principle of Cooperation

கூட்டுக்கொலை - Massacres

கொ

கொள்ளையடித்தல் - Pillage

கொடுந்துன்பம் – Distress

கொடிய - Gruesome

கொடுங்கோன்மையான - Arbitrary

கொடுமைகள் - Atrocities

கோ

கோமான் - Lord

கோட்டை மைதானம் - Esplanade

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச

சந்தேகமற தெரிந்திருத்தல் - Fully aware

சதியாலோசனை - Conspiracy

சட்ட ஆட்சி - Rule of Law

சட்டபூர்வம் - Legitimate

சட்டதிட்டங்களுக்கு உட்படாத - No-holds-barred

சா

சார்புநிலை - Pro-Active

சி

சிதைக்கப்பட்ட - Mutilated

சிதைத்தல் - Dislodging

சிதைத்தல்கள் Mutilation

சிக்கவைத்தல் -Implicate

சிறையிடத்தக்க - Confined

சிந்தனாவியல் - கருத்தியல் - Ideology

சித்திரவதை - Torture

சீ

சீர்குழைந்து - Deterioration

சூ

சூழ்நிலை - Circumstantial

சூறையாடுதல் - Pillage

சூழகக்குழாய்கட்டு - Tubal ligation

சூழ்நிலைச் சான்று - Circumstantial evidence

த

தளகர்த்தர்கள் - Admiralty

தடையின்றி உடன்படுதல் - Acquiescence

தசாப்தம் - Decade

தண்டனைக்குட்படாத உரிமை - Impunity

தன்விருப்பின்றி - Involuntary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்கப்பட்ட - Marginalized
தத்துவம் - Principle
தற்சார்பு - Self-reliance
தகுதிக்கு மேலான - Undue
தவிர்க்க முடியா அழிவு - Collateral damage

தா

தாபிக்கப்பட்டது - Entrenched

தி

திகைக்கவைக்கும் - Appalling
திருத்தப்பட்ட / சேர்க்கப்பட்ட - Amended
தினத்தன்று - Eve

தீ

தீண்டாமை / இனவெறி - Apartheid

து

துணைக்கண்டம் - Subcontinent
துடைத்தழித்தல் - Annihilate
துன்புறுத்துதல் - Persecutions

தூ

தூண்டுதல் – incitement

தெ

தெளிவான / ஒருபுறச்சாய்வான முடிவு - Determination

தே

தேர்ந்தெடுக்கப்பட்ட - Elite
தேசிய இனம் - National Race

தொ

தொன்மைவாதம் - Mythological

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாட்டுக்குழு - Working Group
தொடர்ச்சி - Sequence
தொல்பொருள்-இயல் - Archaeology

தோ
தோற்றுவாய் - Preamble

ந
நட்டஈடு - Reparation
நம்பிக்கை துரோகமாக - Treacherously

நா
நாடுகடத்தல் - Expulsion

நி
நிர்மூலமாக்குதல் - Extermination
நிறுவனமயமாகி - Institutionalized
நிவாரணம் - Relief
நிகரான - Tantamount
நிலைமாற்றுதல் - Transform

நீ
நீண்டகாலத்திற்கு - Prolonged
நீதிபரிபாலனம் - Jurisprudence

ப
பறப்பு மின்னணுவியல் - Avionics
பட்டயம் - Charter
பரிந்துரைகள் - Recommendations
பங்கு - Role
பழித்துரை, கண்டனம் - Condemn
பலியானவர்கள் - Victim
பலமான தாக்குதல் - Onslaught
பட்டறிவு - Experience

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிநிற்றல் - Uphold

பன்முகத்தன்மைகொண்ட - Multifaceted

படுபயங்கரமான - Horrific

பணயக் கைதிகள் - Hostages

பரவியுள்ள - Prevalence

பரிசாரணை - Redress

பன்னாட்டு வழக்குத் தொடுனர் - Prosecutor

பத்திரம் - Safety

பயங்கரவாத எழுச்சியூட்டல் - Terror-inspiring

பன்னாட்டு பிரகடனம் – International Convention

பா

பால்நிலைப்பட்ட - Gender Based

பாரபட்சம் - Discriminate

பி

பின்பற்றுகின்ற - Pursuant

பின்சந்ததியார் - Descendants

பிளவு - Rupture

பிரகடனம் - Declaration

பிடுங்கிக்கொள்தல் - Deprivation

பே

பேரதிர்ச்சியினால் மனஅழுத்த ஒழுங்கின்மைப் பேரதிர்ச்சி ஃ

பிற்கால மன உளைச்சல் சீர்கேடு - Post Traumatic Stress Disorder

பொ

பொறுப்பனிதகமை – Accountablity

பொருளாதாரத்தடை - Embargo

பௌ

பௌதீக அழிவு - Physical destruction

பௌதீக இனப்படுகொலை - Physical Genocide

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம

மனஉளைச்சல் - Anxiety / Tension

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் - Crimes against Humanity

மந்தைக்கூட்டம் - Herd

மன அழுத்தம் - Stress

மா

மானுட-இயல் - Anthropology

மி

மிரட்டல் - Intimidation

மிகநீண்ட - Protracted

மிருகத்தனமான - Inhumane

மீ

மீளஞாபகப்படுத்தல் / மீளெழுப்புதல் -

மீளமைத்தல் - Reorganize

மீட்டுக்கொள்கின்ற - Redemptive

மீளுறுதிப்படுத்தல் – Reassure

மு

முக்கியமான - Crucial

முன்னெப்போதுமில்லாத - Unprecedented

முன்னிறுத்தி - Paradigm

மெ

மெய்நிலை - Substantial

மெச்சுதல் Commend

மே

மேலதிக நடபடிமுறை – Additional Protocal

மை

மையம் - Hub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொ

மொழிச்சிறுபான்மை - Linguistic Minority

மோ

மோசமாக்கு - Exacerbate

வ

வரைபு - Convention

வலுவிருத்தி Capacity building

வரலாற்று எழுத்தாண்மை - Historiography

வரைமுறை - Protocol

வற்புறுத்தி - Urge

வன்முறை - Violence

வரவேற்று - Welcome

வலியுறுத்தல் –

வா

வாக்குமூலம் - Testimony

வி

விரிவான - Comprehensive

விளக்கம் கொள்ளத்தக்கது - Construed

விடாத்துயரளிப்பு - Persecution

விரோதம் - போர்நடவடிக்கைகள் - Hostilities

விஸ்தரிப்பு - Escalation

வினோதமாக - Grotesquely

விளக்கி - Elucidate

விசேட பதிவாளர் - Special Rapporteur

விலக்கீடு - Impunity

வெ

வெளிப்படையாக - Overt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Webs :

1. https://academic.oup.com/ejil/article/29/2/373/5057075
2. https://www.un.org/securitycouncil/content/repertoire/international-tribunals
3. https://research.un.org/en/docs/law/courts
4. https://www.icty.org/x/cases/krstic/cis/en/cis_krstic.pdf
5. https://www.ola.org/sites/default/files/node-files/bill/document/pdf/2021/2021-05/b104ra_e.pdf
6. https://tbinternet.ohchr.org/Treaties/CCPR/Documents/LKA/INT_CCPR_CSS_LKA_18262_E.pdf MSF
7. https://reliefweb.int/report/rwanda/doctors-cannot-stop-genocide
8. https://www.doctorswithoutborders.org/what-we-do/news-stories/research/nobel-prize-acceptance-speech
9. https://www.icrc.org/en/doc/assets/files/other/irrc_857_henckaerts.pdf
10. https://openyls.law.yale.edu

Dictionaries :

1. https://www.merriam-webster.com/dictionary
2. https://www.dictionary. tamilcube.com

Books, Writings and Reports :

1. Study on customary international humanitarian law: A contribution to the understanding and respect for the rule of law in armed conflict, Volume 87 Number 857 March 2005
2. The international Crime of Genocide, The case of the Tamil people in Sri Lanka - Tamil Information Center December 1997
3. Report of the Secretary-General on children and armed conflict in Sri Lanka, Security Council Report, S/2009/325
4. Ibid., S/2011/793
5. Ibid., S/2007/758
6. CHARTER OF THE UNITED NATIONS AND STATUTE OF THE INTERNATIONAL COURT OF JUSTICE, SAN FRANCISCO • 1945
7. The Crime of Aggression within the Rome Statute of the International Criminal Court, Coalition for the International Criminal Court, Fact Sheet
8. An Open Letter To The High Commissioner For Human Rights, By Brian

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Senewiratne, Colombo Telegraph.com
9. Command Responsibility for War Crimes, The Yale Law Journal, Vol. 82: 1274, 1973
10. The Denning Law Journal 2008 Vol 20 pp 151-171, REVIEW ARTICLE, CRIMES AGAINST HUMANITY: THE STRUGGLE FOR GLOBAL JUSTICE, Geoffrey Robertson (3rd ed, Penguin Books, London 2006) Paperback, pp 627, ISBN 10: 0 141 02463 1
11. Elements of Crimes, Published by the International Criminal Court ISBN No. 92-9227-232-2 ICC-PIDS-LT-03-002/11_Eng
12. Rollins College Rollins Scholarship Online Master of Liberal Studies Theses, Spring 2011 Evil: Genocide in the 21st Century James L. Pigmon Rollins College, JLPIGMON@Rollins.edu
13. "The Protection of Human Rights through the International Criminal Court as a Contribution to Constitutionalization and Nation – Building" 21 January 2011, German –Southeast Asian Center of Excellence for Public Policy and Good Governance (CPG), Thammasat University - Faculty of Law.
14. Harvard International Law Journal / Vol. 58, Volume 58, Number 2, Spring 2017, What Is an International Crime? (A Revisionist History) Kevin Jon Heller
15. RULE-OF-LAW TOOLS FOR POST-CONFLICT STATES Maximizing the legacy of hybrid courts, UNITED NATIONS New York and Geneva, 2008.
16. LAWS OF KENYA, INTERNATIONAL CRIMES ACT No. 16 of 2008 Revised Edition 2012 [2008] Published by the National Council for Law Reporting with the Authority of the Attorney-General www.kenyalaw.org
17. THE LEGAL CASE OF THE TAMIL GENOCIDE, By UNROW Human Rights Impact Litigation Clinic 1, Human Rights Brief - hrbrief.org
18. Moscow Declaration on Atrocities by President Roosevelt, Mr. Winston Churchill and Marshal Stalin, issued on November 1, 1943
19. Human Rights Council, Thirtieth session, Agenda item 2, Annual report of the United Nations High Commissioner for Human Rights and reports of the Office of the High Commissioner and the Secretary-General Report of the OHCHR Investigation on Sri Lanka (OISL).
20. No. 1021, AUSTRALIA, BULGARIA, CAMBODIA, CEYLON, CZECHOSLOVAKIA, etc. Convention on the Prevention and Punishment of the Crime of Genocide. Adopted by the General Assembly of the United Nations on 9 December 1948 Official texts: on 12 January 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. Report of the Secretary General's Panel of Experts on Accountability in Sri Lanka
22. United Nations Audiovisual Library of International Law, CONVENTION FOR THE PREVENTION AND PUNISHMENT OF THE CRIME OF GENOCIDE, By William A. Schabas Professor of International Law, National University of Ireland, Galway Director of the Irish Centre for Human Rights
23. From "a Theology of Genocide" to a "Theology of Reconciliation"? On the Role of Christian Churches in the Nexus of Religion and Genocide in Rwanda by Christine Schliesser ' Institute for Social Ethics, Zurich University, Zollikerstr. 117, 8008 Zurich, Switzerland.
24. Genocide. The Crime of Crimes, Presentation for the: United Nations Audiovisual Library of International Law, Prof. William A. Schabas OC MRIA Director, Irish Centre for Human Rights National University of Ireland, Galway.
25. Some Questions and Answers, http://legal.un.org/icc/statute/iccq&a.htm
26. "Sons of the Soil" A Model of Assimilation and Population Control Avidit Acharya, David D. Laitin and Ruxi Zhang, Department of Political Science, Stanford University June 14, 2017
27. THE HAGUE PEACE CONFERENCES AND OTHER INTERNATIONAL CONFERENCES CONCERNING THE LAWS AND USAGES OF WAR TEXTS OF CONVENTIONS WITH COMMENTARIES
28. WAR & GENOCIDE: a concise history of the Holocaust, First Edition, Bergen, Doris L
29. GROUNDWORK GENOCIDE by Jane Springer, First Edition

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமான விளக்கங்களுடன். எளிமையான மொழிநடையில் மக்களால் மிக இலகுவாக உள்வாங்கக்கூடிய இலக்குடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணம். இனப்படுகொலைதான் நடைபெற்றது என்பதை நிரூபணம் செய்வதற்காக நீதி தேடும் மக்கள் குரலை இன்னமும் புரிதலுடன் முன்னகர்த்த உதவும் என்பதில் சந்தேகமில்லை.

பேராசிரியர். சி. ரகுராம்

துறைத் தலைவர்.

ஊடகக் கற்கைகள் துறை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ISBN 978-955-44132-3-8

9 789554 413238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org